# வந்த நாள் முதலாய் !

சத்யா இராஜ்குமார்



# வந்த நாள் முதலாய்!

## 1



அதிகாலை நேரம்.

காற்றில் மிதந்து வந்த கந்தர் சஷ்டி கவசத்தின் வரிகள் மனதை நிரப்ப, அதைக் கேட்டவாறே, சமையலறை வேலைகளை கவனித்துக் கொண்டிருந்தார் தனலட்சுமி.

கணவனுக்குக் காபியைக் கலந்து கொடுத்து விட்ட தோடு, தானும் எடுத்துக் கொண்டாயிற்று.

இனி ஏழு மணிக்கு வேலைக்குக் கிளம்பப் போகும் மகளுக்குக் காலை டிபனும், மதியத்துக்கு சாப்பாடும் தயார் செய்தாக வேண்டும்.

அதற்கடுத்ததாக எட்டரைக்கு மகன் கல்லூரிக்கும், அதற்கும் அடுத்ததாக ஒன்பது மணிக்குக் கணவன் அலுவலகத்திற்கும் கிளம்பும் வரை வேலையே கதி யென பம்பரமாகச் சுழன்றால் தான் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகக் கொடுத்தனுப்ப வேண்டியவற்றை யெல்லாம் எந்தக் குறையுமில்லாமல், நல்ல விதமாகக் கொடுத்தனுப்ப முடியும்.

ஒரு சில நாட்கள் பக்கத்தில் ஏதாவது வேலையி லிருந்து கணவன் உணவிற்கு வீட்டிற்கே வந்து சென்று விட்டாலும் கூட பெரும்பான்மை நாட்கள் அவருக்கும் மதிய உணவு கொடுத்தனுப்ப வேண்டியதாகத் தான் இருக்கும்.

''தனம்.''

கணவன் அழைக்கத் திரும்பிய தனலட்சுமி ''என் னங்க?'' என்று கேட்டார்.

''எனக்கு இன்னைக்கு லஞ்ச் வெச்சுக் குடுக்க வேண் டாம்மா, ஒரு வேலையா இந்தப் பக்கம் வர வேண்டிய திருக்கு அப்படியே வீட்டுக்கே வந்து சாப்டுட்டுப் போய்க்கறேன்.''

''சரிங்க, அப்படியே செஞ்சுட்றேன்.''

''அப்புறம்...''

''என்னங்க சொல்லுங்க?''

''நானொரு வாரம் வெளியூர் போக வேண்டியதிருந் தாலும் இருக்கும். அப்பிடிப் போக வேண்டியதிருந்தா நாளைக்கு நைட் கிளம்ப வேண்டியதிருக்கும்.''

''என்னங்க திடீர்னு வெளியூர் பயணம்?''



''ஆமாம்மா முக்கியமான வேலை சிலது இருக்கு. அப்படியே வெளியூர் ஆடர்ஸ் சிலதையும் பாத்துட்டு வரலாம்னு இருக்கேன்.''

''சரிதான்.''

''குட்மார்னிங் டாடி.''

''வாடாம்மா... குட்மார்னிங், என்ன இன்னைக்கு நேரத்துலயே எழுந்துட்ட போல?'' என்று மகளைப் பார்த்துக் கேட்டார் சேதுராமன்.

''இல்லையே, யூசுவல் டைம் தான்'' என்று தந்தைக்கு பதில் சொன்ன அனுரேகா தாய் கொடுத்த காபியை வாங்கிக் கொண்டாள்.

''காபின்னா நீங்க குடுக்கறதுதாம்மா காபி'' என்று புகழ்ந்து கொண்டே ஒரு வாய் குடித்தவள்.

''அப்ப நாளைக்கு நைட் நீங்க வெளியூரா டாடி?'' என்று தந்தையைப் பார்த்துக் கேட்டாள்.

''அப்படித்தான் நினைக்கறேன், ஏம்மா?''

''என் பாஸ் ஸன்னுக்குக் கல்யாணம் நாம ரெண்டு பேரும் போலாம்னு சொல்லிட்டிருந்தேனே மறந்துட்டிங் களா?''

''ஓ, அது நாளைக்குதானா?''

''பின்ன?''

''வெளியூர் ட்ரிப் இன்னும் கன்பார்ம் ஆகலமா. அதுக்கும் மேல போக வேண்டியது வந்தாலும் உங்கூடக் கல்யாணத்துக்கு வந்துட்டு அதுக்கப்புறமாக் கிளம்பிக் கறேன்.''

"உங்களுக்கு லேட் ஆயிடாது?"

"ஆகாது, எப்பிடியும் ட்ரெய்ன் பத்தரைக்குத்தான்."

"அப்ப சரிதான் டாடி அதுக்கு மேல முடியலேன் னாலும் ஒண்ணும் பிரச்சனையில்ல விடுங்க. நான் மட்டும் போய்ட்டு வந்துட்றேன்."

மீண்டும் மகள் அனுரேகா சொல்ல, "சரிதாம்மா நாளைக்குப் பாக்கலாம்" என்றார் சேதுராமன்.

"நாளைக்கு தான் விசாலாட்சி ஆன்ட்டி வீட்டு கிரஹப்பிரவேசமும், அது உங்க ரெண்டு பேருக்கும் ஞாபகமிருக்கா?" என்று தனலட்சுமி கணவனையும் மகளையும் பார்த்துக் கேட்க, "அதெல்லாம்" என்றாள் அனுரேகா.

"அதுக்கு நீ நாளைக்கு லீவு போட்டுக்கோ அனு."

"லீவா?"

"ம்."

"என்னம்மா விளையாட்றீங்களா?"

"என்ன நீ இப்படிக் கேக்க..."

"பின்ன, நாளைக்கு என் பாஸ் மகனுக்குக் கல்யாணம், நானெப்பிடி லீவு போட முடியும் சொல்லுங்க? அதோட யாரும் நாளைக்கு லீவ் எடுக்கக் கூடாதுன்னு ஸ்ட்ரிக்ட் ஆடர் வேற..."

"என்ன அனு நீ, திடீர்னு இப்படிச் சொல்ற?"

தாய் அலுத்துக் கொள்ள, "ம் நானும் விசாலாட்சி ஆன்ட்டி வீடு கிரஹப்பிரவேசம் முடிவாகறதுக்கு முன்னாடியிருந்தே சொல்லிட்டு தான் இருக்கேன். அத மறந்துடாதீங்க" என்றாள் அனுரேகா.



மனைவியும், மகளும் பேசிக் கொண்டிருக்க இடை மறித்தார் சேதுராமன்.

"கிரஹப்பிரவேசம் காலைல நேரத்துல அத அட் டெண்ட் பண்ணிட்டுக்கூட அனு ஆபீஸ்க்குக் கிளம்பிக் குவா. அது புரியாம நீ ஏன் ஏதேதோ சொல்லிட்டிருக்க?" என்று மனைவியைப் பார்த்துக் கேட்டார்.

"ம், அப்படிக் கேளுங்க டாடி."

"என்னங்க நீங்களும், சும்மா வந்ததும் போறதுக்கா நான் இவ்வளவு பேசிட்டிருக்கேன். ஒரு நாளைக்கு இவ லீவு போட்டா எவ்வளவு நல்லார்க்கும் எல்லாரையும் விடக்கூட அனுன்னா அவங்களுக்கும் பிடிக்கும்..."

தாய் சொல்ல இல்லாத காலரைத் தூக்கி விட்டுக் கொண்டாள் அனுரேகா.

"என்ன?"

தாய் கேட்க "மேடம யாருக்குத்தான் பிடிக்காது சொல் லுங்க?" என்று விளையாட்டுக்குப் பெருமை பொங்கக் கேட்டாள்.

"அந்த எண்ணம் நிறைய இருக்கத்தான் யாரையும் மதிக்க மாட்டேங்கற போல?"

தாயின் வார்த்தைகளில் கன்னத்திலேயே அறை வாங்கியதைப் போலத் துடித்துப் போனாள் அனுரேகா.

ஆனாலும் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் பார்த்தாள்.

மகளின் நிலை சேதுராமனுக்கும் புரியாமல் இல்லை.

மனைவியின் மேல் கோபம் வந்தது.

ஆனாலும் மகளுக்கு முன்பாக அதைக் காட்டிக் கொள்ள வேண்டாமே என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார்.

''என்னமா அப்பிடித்தான?''

மீண்டும் தனலட்சுமி மகளைப் பார்த்துக் கேட்க இப்பொழுது பேசியவர் சேதுராமன்,

''ஏன் தனம் சின்ன விஷயத்த ஸீரியஸாக்கிட்டிருக்க?''

கணவன் கேட்க ''யாரு நானா?'' என்று கேட்டார் தனலட்சுமி.

''பின்ன?''

''அட, அப்படி நானென்னத்தக் கேட்டுட்டேன்.''

''இன்னும் என்ன கேக்கணும், அனுதான் லீவு போட முடியாது கஷ்டம்னு சொல்றாளே விட்ரு.''

''அது சரி, சும்மாவே அவ யார் சொல்றதையும் கேக்க மாட்டா, இனி நீங்களும் இப்படியே பேசிட்டிருந்தீங் கன்னா ஃபங்ஷனுக்கே கூட வர முடியாதுன்னு சொன் னாலும் சொல்லுவா.''

''அதெல்லாம் சொல்ல மாட்டா'' என்று சேதுராமன் சொல்ல, ''அதான அதுக்கு தான் என்ன டிரஸ் போட்டா நல்லார்க்கும்னு கூட பாத்துப் பாத்து எல்லாத்தையும் தயாரா எடுத்து, வெச்சுட்டிருக்கேனாக்கும் மம்மி?'' என்று கேட்டாள் அனுரேகா.

''இன்னைக்கு நைட்டே அவங்க டின்னருக்குக் கூப்புட்டிருக்காங்க...''

''நிச்சயம் போலாம் மம்மி நானும் வேல முடிஞ்சதும் உடனே வந்துட்றேன்.''



''சரிதான்'' என்ற தனலட்சுமி ''நீங்க?'' என்று கண வனைப் பார்த்தார்.

அதே நேரம் ''சரி நான் போய் இனி கிளம்பினா தான் சரியா இருக்கும்'' என்று அனுரேகா அங்கிருந்து நகர, எதுவும் பேசாமல் மனைவியைப் பார்த்தார் சேதுராமன்.

''என்னங்க?''

''நீ பேசற விதத்தக் கொஞ்சம் மாத்திக்கணும் தனம்...''

''ஏன், நானென்ன...''

''பொறு எதுக்கு முகத்துலடிச்ச மாதிரி அனுவ அப்பிடிக் கேட்ட?''

''ம் கேளுங்க, இப்பதான் இன்னும் ஒண்ணும் கேக்காம இருக்கீங்களேன்னு நினைச்சேன்...''

''புரிஞ்சுக்கிட்டு பேசு தனம் குழந்தை விளை யாட்டுக்கு சொன்ன வார்த்தைக்குத் தப்பர்த்தம் பண்ணிக் கிட்டதே தப்பு. அதுக்கும் மேல என்னவெல்லாம் பேசிட் டிருக்க. அதுவும் அவ லீவு போட முடியாததுக்கான காரணத்தையும் சொல்றாதான?''

''நீங்க சொல்றதெல்லாம் சரிதான். அவங்க அவ் வளவு கட்டாயப்படுத்திச் சொல்லியிருக்கலேன்னா நானும்தான் ஏன் இப்படியெல்லாம் கேக்கப் போறேன் சொல்...''

''சரி சரி வேலயப் பாரு, அப்புறம் லேட் ஆயிடும்...''

''அதான நான் சொல்றத நீங்க என்னைக்குக் கேட் டிருக்கீங்க'' என்று வழக்கம் போல அலுத்துக் கொண்டே மனைவி அவருடைய வேலைகளில் கவனத்தை

செலுத்தத் தொடங்கியிருக்க, பணம், பணக்காரர்கள் என்றெல்லாம் வந்து விட்டால் மனைவி ஏன் தான் இப்படியெல்லாம் மாறி விடுகிறாளோ என்று சேது ராமனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

என்னதான் அவர்களும் மிகவும் நல்ல மாதிரியே என்றாலும், எதற்கும் ஒரு வரைமுறை என்று ஒன்று இருக்கிறதல்லவா, அழைப்பவர்கள் அழைக்கத்தான் செய்வார்கள்.

அதற்கு மகள் விடுமுறை எடுக்க வேண்டிய அவசிய மென்ன,

கோபம் வந்தால் என்ன வேண்டுமென்றாலும் கேட்டு விடுவதா.

அப்படியெல்லாம் மகளொன்றும் யாரையும் மதிக் காமல் பேசுபவள் அல்லவே.

சற்றும் நியாயமே இல்லாமல் மனைவி சொன்ன வார்த்தைகளே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வர, மிகவும் முயன்றே சேதுராமனால் தனது வேலையில் கவனத்தைச் செலுத்த முடிந்தது.

## 2



''மம்மி.''

''வாம்மா, எல்லாம் ரெடி.''

''நேரமாயிட்டே இருக்கு, சீக்கிரம் கிளம்பணும்.''



''சரிதான் நீ உக்காந்து டிபன் எடுத்துக்கோ. நான் அதுக்குள்ள லஞ்ச்சுக்கு வெச்சுட்றேன்.''

''கொஞ்சமா வைங்க மம்மி பாதிக்கும் மேல கட்டாயத்துக்கு தான் சாப்புட்றேன்.''

''அது சரி இத விடக் கொஞ்சமா வைக்க என்னால முடியாதுடியம்மா.''

ஏற்கனவே அனைத்தையும் தயாராக எடுத்து வைத்து விட்டிருந்ததால் சில வினாடிகளிலேயே லஞ்ச் பாக்ஸை பேக் செய்து விட்டிருந்த தனலட்சுமி ''இன்னும் ஒரு இட்லி வெச்சு சாப்புடு'' என்று மகளுக்குப் பரிமாற வந்தார்.

''போதும்மா, காலைல மூணு இட்லி தான் கரெக்ட். அதுக்கு மேல சாப்டா அப்புறம் வேலை மந்தமாயிடும்'' என்று சொல்லிக் கொண்டே வேகமாகச் சாப்பிடும் மகளைப் பார்த்தார்.

மகளின் அழகில் அவருடைய கண்ணே பட்டு விடும் போலிருக்க கவனத்தை வேறு விஷயத்திற்கு மாற்றிக் கொண்டார்.

அழகு மட்டுமா.

அனைவரிடமும் இதமாகப் பேசும் குணம், பொறுமை...

கணவனே சொன்னதைப் போலத் தான் சற்று முன்பு மகளை அப்படிக் கேட்டிருக்கக் கூடாது தான்.

''என்ன மம்மி, ரொம்ப யோசனைல இருக்கீங்க?''

''என்னமா அதுக்குள்ள எழுந்துட்ட?''

''அது சரி, உக்காந்து பொறுமையா ஒரு கை பாத்துட்டு அதுக்கப்புறம் தான் எழுந்திருக்கேன்...''

''அப்புறம் அனு...''

''என்ன சொல்லுங்க?''

''முடிஞ்சா நாளைக்குக் காலைல ஒரு ஒன் அவர் பர்மிஷன் போட்டுக்கோயேன்.''

''சரி முயற்சி பண்றேன்.''

''ஏன் சொல்றேன்னா பவனுக்கு செமஸ்டர் நடந்துட்டிருக்கறதால அவன் வர முடியாது. உங்கப்பாவும் டான்னு ஒன்பது மணிக்குக் கிளம்பிடுவார். அதான் நாம ரெண்டு பேரும் மட்டுமாவது கொஞ்ச நேரம் இருந்து....''

''புரியுது மம்மி. விசாலாட்சி ஆன்ட்டிக்காகவாவது நானும் நாளைக்குக் காலைல கொஞ்ச நேரம் இருந்துட்டு தான் போவேன் போதுமா?''

''சரிதான்மா அதுக்காக பாவம் நீ சிரமப்படாத. எனக்கும் நாளைக்குன்னு பாத்து நம்ம சொந்தத்துல தவிர்க்க முடியாத ஒரு விசேஷம். அதுக்குப் போயே ஆகணும். இல்லன்னாக்கூட நானாவது நாளைக்கு திரும்பவும் கொஞ்ச நேரம் இருந்துட்டு வருவேன்...''

தாயின் வருத்தம் அனுரேகாவிற்கும் புரியவே செய்தது.

சென்னையிலிருந்து வந்து தங்களுக்குப் பக்கத்து வீட்டில் கடந்த மூன்று வருடங்களாகக் குடியிருக்கும் விசாலாட்சி ஆன்ட்டியையும், அவருடைய குடும்பத்தையும் அவளுக்கு மிகவும் பிடிக்கும்.



என்னதான் விசாலாட்சி ஆன்ட்டியைப் போல மற்ற குடும்ப உறுப்பினர்களிடம் அவளுக்கு அவ்வளவாகப் பழக்கமில்லையென்றாலும் கூட, பார்த்தால் புன்னகை புரியுமளவிற்கும் ஒரு வார்த்தை பேசும் அளவிற்கும் அனைவரையும் தெரிந்தே இருந்தது.

மிகுந்த வசதி படைத்தவர்களாக இருந்தும் அந்த பந்தா துளியும் இல்லாமல் வெகு இயல்பாக அவர்கள் பழகும் விதம், தனது குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களைப் போலவே அனுரேகாவிற்கும் அவர்களின் மீது மிகுந்த மரியாதையை வரவழைத்திருந்தது.

மிகுந்த அக்கறையுடன் அந்த ஆன்ட்டியும், அங்கிளும் வந்து ஒவ்வொருவரையும் அழைத்து விட்டுப் போனதால் தான் பாவம் தாயே இவ்வளவு பார்க்கிறார் என்பதும்,

''சரிதான் மம்மி நான் கிளம்பறேன், ஈவினிங் நேரத்துலயே வந்துட்றேன். நீங்களும் ரெடியா இருங்க வந்ததும் கிளம்பிடலாம்'' என்றவள் மீண்டுமொரு முறையும் சொல்லிக் கொண்டு வேலைக்குக் கிளம்பி விட்டிருந்தாள்.

''நிகில்.''

''என்னமா சொல்லுங்க?''

''எங்கயோ கிளம்பிட்டிருக்க போல?''

''ஆமாம்மா, பிஸினஸ் சம்பந்தமா ஒரு சின்ன வேலை போய்ட்டு மதியம் லஞ்ச்சுக்கு வந்துட்றேன்.''

''இது உனக்கே நல்லார்க்காப்பா?'' என்று மிகுந்த ஆதங்கத்துடன் பெரிய மகன் நிகிலேஷைப் பார்த்துக் கேட்டார் விசாலாட்சி.

''என்னமா?''

''யோகேஷ் காலேஜ் போயாச்சு. கமல் ஏதோ கிரிக்கெட் டோர்னமெண்ட்னு கிளம்பிட்டான். நீயும் இப்பக் கிளம்பித்தான் ஆகணுமா?''

''முக்கியமான வேலை, அதுவும் உடனே செஞ்சாக வேண்டியது. இல்லன்னா கிளம்புவேனா சொல்லுங்க.''

''சரிதான். அப்புறம் உன் இஷ்டம்.''

தாயின் ஆதங்கம் கலந்த கோபம் புரிய, ''இப்ப நான் என்ன செய்யணும்னு சொல்றீங்க சொல்லுங்க?'' என்று கேட்டான் நிகிலேஷ்.

''பாவம் உங்கப்பா ஒருத்தர் எத்தன வேலைகளப் பார்ப்பார். நீயும் அவரு கூட இருந்து நாளைக்கு ஃபங் ஷனுக்கு ஆக வேண்டிய வேலைகளைப் பாருப்பா.''

அப்படிச் சொல்லிக் கொண்டிருந்த மனைவியை இடைமறித்தார். அப்பொழுது அங்கு வந்த மகேந்திரன்,

''அட என்னமா நீ, ஏற்கனவே நிகில் கிரஹப்பிரவேச வேலைகளைப் பார்த்துட்டு நேத்து நைட் ரெண்டு மணிக்கு மேலதான் தூங்கவே போனான். இப்பவும் தவிர்க்க முடியாத வேலைங்கறதால தான் கிளம்பறா...''

''அதெல்லாம் சரிதான். ஆனா பிஸினஸ்னு வந் துட்டா இவனுக்கு நேரம் போறதே தெரியாது. அதனால தான் சொல்றேன்...''



''அடடா, இதுதான் உங்க கவலையா எனக்கு வேலையே ரெண்டு மணி நேரந்தான். அது கூட இப்பவே கிளம்பினா அதுலயும் பாதி நேரத்துலயே முடிஞ்சாலும் முடிஞ்சுடும்...''

''அப்ப சரிதான் கண்ணா போய்ட்டு வா. ஆனா அதுக் கப்புறம் இனி நாளைக்கு மறுநாள் தான் நீ வேலையப் பத்தியே பேசணும்.''

''நிச்சயமா, ஏன்னா காலைல ஃபங்ஷன் முடிஞ்சதும் ஃப்ரண்ட் மேரேஜ்க்குக் கிளம்பணும். போனா அப்புறம் நைட் தான திரும்ப முடியும்.''

அப்படிச் சொன்ன மகனை எதுவும் பேசாமல் புன்னகையுடன் பார்த்தார் விசாலாட்சி.

''என்னமா, ஏன் சிரிக்கறீங்க?''

''ஒண்ணுமில்லப்பா...''

''அப்ப என்னவோ இருக்கு. சொல்லுங்க?''

''இல்ல மத்தவங்களுக்காகவெல்லாம் தன் வேலை களையும் ப்ரொகிராமையும் மாத்திட்டா. அப்புறம் அது நிகிலேஷா இருக்க முடியாதே...''

''அட என்னமா நீங்க இப்ப நான் போகல விடுங்க. போன்லயே பேசிட்றேன்...''

''அச்சச்சோ, நான் சும்மா விளையாட்டுக்கு தாம்பா சொன்னேன், நீ போய்ட்டு வந்துடு'' என்று சொல்லி விட்டு விசாலாட்சி உள்ளே செல்ல தந்தையிடம் சில வார்த்தைகள் பேசிவிட்டுக் கிளம்பியிருந்தான் நிகிலேஷ்.

விசாலாட்சி மகேந்திரன் தம்பதிக்கு மூன்று பிள்ளைகள்,

அதில் நிகிலேஷ் மூத்தவன்.

படித்து முடித்து விட்டுத் தந்தையின் தொழிலைத் தனது திறமையாலும் சீரிய உழைப்பாலும் மேலும் பல மடங்கு வெற்றிகரமாக நடத்திக் கொண்டிருந்தான்.

அது மட்டுமல்லாமல் சொந்தமாகவும் ஒரு தொழிலைத் தொடங்கி அதையும் சிறப்பாகச் செய்து கொண்டிருந் தான்.

தான் இத்தனை வருடங்கள் முயன்று ஓரளவு நல்லவிதமாகச் செய்து வந்திருந்த தொழிலை ஒரு சில வருடங்களுக்குள்ளேயே அதை விடப் பல மடங்கு மகன் முன்னேற்றியிருந்ததில் மகேந்திரனுக்கும் எல்லை யற்ற சந்தோஷம்.

முக்கியமாக நிம்மதி.

அதை மகனிடமே வெளிப்படுத்தவும் செய்தார்.

அப்படி அவர் வெளிப்படுத்தியபோது தான் இன்னும் என்னவெல்லாம் செய்ய வேண்டுமென்று மகன் நினைத்து வைத்திருக்கிறான் என்பதையும் அவர் அறிய நேர்ந்தது.

அப்படி அறிய நேர்ந்ததில் இப்பொழுது மேலும் கவலையற்றுப் போனார் எனலாம்.

அனைத்திற்கும் மேலாக சென்னையிலிருக்கும் தொழில், வீடு, என அனைத்தையும் அப்படியே மக னிடம் விட்டுவிட்டு இங்கு கோயம்புத்தூரில் ஒரு



பண்ணை வீட்டைக் கட்டிக் கொண்டு நிம்மதியாகக் குடியேறவும் முடிந்திருக்கிறதே என்று நினைத்து நினைத்துப் பெருமைப்பட்டுக் கொள்வார்.

ஆனாலும் ஒரு சிறு ஆதங்கம்.

அவசியத்திற்குக் கூட சென்னையை விட்டுவிட்டு வெளியே வர நிகிலேஷ் விரும்பவில்லை என்பது தான் அது.

இப்பொழுதுகூட நண்பனின் திருமணத்திற்காகத் தான் முக்கியமாகக் கிளம்பி வந்திருக்கிறானோ என்பதும்,

# 3



தாய் சொன்னது போலவே மாலை வேலை முடிந்து வந்ததும் விசாலாட்சி ஆன்ட்டி வீட்டிற்குக் கிளம்பி வந்திருந்தாள் அனுரேகா.

''ஹலோ ஆன்ட்டி.''

வீட்டிற்குள் வந்த அனுரேகாவை ''வாடாம்மா இப்பதான் வர்றியா?'' என்று வரவேற்றார் விசாலாட்சி.

''ஆமா ஆன்ட்டி, எப்படியிருக்கீங்க?''

''இங்க எல்லாரும் நல்லார்க்கோம்மா நீ எப்படி யிருக்க? அப்புறம் அம்மா, அப்பா, தம்பி.''

''எல்லாரும் நல்லார்க்காங்க ஆன்ட்டி.''

''அவங்கெல்லாரும் வரலையா?''

"வருவாங்க ஆன்ட்டி, வேறொரு சின்ன வேல அத முடிச்சுட்டு வர்றோம்னு என்ன இறக்கி விட்டுட்டுப் போனாங்க."

"அப்படியா, வாடாம்மா உக்காரு."

அவருடைய வார்த்தைக்காக அமர்ந்தவள் உடனே "ஏதாவது வேலையிருந்தா சொல்லுங்க ஆன்ட்டி" என்றாள்.

"வேலையா?"

"ஆமாம் ஆன்ட்டி நாளைக்கு ஃபங்ஷன் வெச்சுக் கிட்டு எல்லா வேலைகளையும் நீங்களே தனியாப் பாத்துக் கஷ்டப்பட்டுட்டிருக்கீங்க..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லடாம்மா எல்லா வேலைகளையும் எடுத்து செய்ய ஆளுங்க இருக்காங்க, நீ எங்கூட உக்காந்து பேசிட்டிரு போதும்."

"ஜாலியா உக்காந்து பேசவா ஆன்ட்டி நான் வந் தேன்..."

"ஏம்மா உனக்கும் எங்கூடப் பேசப் பிடிக்கலையா?"

"அச்சச்சோ என்ன ஆன்ட்டி நீங்க..."

"பின்ன என்னடாம்மா இங்க எல்லாருமே தடிப்பசங்க. அவங்க சொல்றதத்தான் நான் செய்யணுமே தவிர நான் சொல்றத யாரும் கேக்க மாட்டாங்க..."

"என்ன ஆன்ட்டி கோபமா இருப்பீங்க போலிருக்கு?"

"எனக்கென்னடாம்மா கோபம், இருக்கறத சொல் றேன்."

"அங்கிள்..." என்று அனுரேகா ஏதோ கேட்க வர அதே நேரம் "வாம்மா" என்று ஹாலுக்கு வந்தார் மகேந்திரன்.



"அனும்மா வா... வா..."

"நல்லார்க்கீங்களா அங்கிள்?"

"நல்லார்க்கேம்மா நீ எப்படியிருக்க?"

"எனக்கென்ன அங்கிள், ரொம்ப நல்லார்க்கேன்."

"அப்புறம் உன் வேல எப்படிப் போயிட்டிருக்கு?"

"நல்லாப் போகுது அங்கிள்."

"வேலைக்குப் போறதுக்கு பதிலா அப்பாவுக்கு பிஸினஸ்ல ஹெல்ப் பண்ணலாமில்லையா?"

"பண்ணலாம் அங்கிள் ஆனா..."

"என்னமா?"

"மத்தவங்க தலையீடு அப்பாவுக்குப் பிடிக்காது. அதோட நானும் போய் பாத்துக்கற அளவுக்கு பிஸினஸ் ஒண்ணும் ரொம்பப் பெரிய அளவுலயும் போகலையே அங்கிள்."

"அதனாலென்னமா நீ தொழில்ல இறங்கினா அது தானா பெரிசாயிடப் போகுது..." என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே அவருடைய கைபேசிக்கு அழைப்பு வர, "சரிடாம்மா இருந்து சாப்டுட்டு அப்புறமா தான் கிளம்பணும். காலைல நேரத்துல வந்துடணும் சரியாம்மா..." என்று வெளியே கிளம்ப ஆயத்தமானார்.

"திரும்ப லேட்டாகும் எனக்காகப் பாத்துட்டிருக்காம நீங்க சாப்டுட்டு தூங்கப் போயிடுங்க" என்று மனைவி யிடம் சொன்னவர் அனுரேகாவிடமும் சொல்லிக் கொண்டு வெளியே சென்றிருந்தார்.

''அனும்மா.''

''ஆன்ட்டி சொல்லுங்க.''

''இந்த காபி டிபன மேல நிகில் இருக்கான் குடுத்துட்டு வந்துட்றியாம்மா?''

''குடுங்க ஆன்ட்டி, நிகில் யாரு...''

''என் பெரிய மகன் அனும்மா சரிதான் நீ இன்னும் அவனப் பாத்திருக்க மாட்டேன்னு நினைக்கறேன்...''

''சரிதான் ஆன்ட்டி குடுங்க குடுத்துட்டு வந்துட்றேன்'' என்று விசாலாட்சியின் கையிலிருந்த ட்ரேயை வாங்கிக் கொண்டு சென்றாள் அனுரேகா.

மேலே வந்தவள், அனுமதி பெற்றுக் கொண்டு அதற்குப் பிறகே அறைக்குள் வந்தாள்.

ட்ரேயுடன் நிற்கும் தன்னை அந்த நிகில் பார்க்க ''காபி டிபன் உங்களுக்குக் குடுக்கச் சொல்லிக் குடுத்தனுப்பி னாங்க'' என்றாள்.

''நீ எப்ப வேலைக்கு வந்த, ஐமீன் இங்க எங்க வீட்டுக்கு?''

''என்னது வேலைக்கா?''

''ம்.''

என்ன கேட்கிறான் இவன் மூளை ஏதாவது குழம்பிப் போயிருக்குமோ, அல்லது வேறு யாரையேனும் தானென்று தவறாகப் புரிந்து கொண்டு விட்டானா...

''உன்னத்தான் காதுல விழல?''

மீண்டும் அவன் கேட்க, அந்த சந்தேகம் இப்பொழுது உறுதியாகி விட்டிருந்தது அனுரேகாவிற்கு.



''ஓ காதும் ரிப்பேரா?'' என்று மீண்டும் அந்த நிகில் கேட்க, ''எனக்காவது காதுதான் ரிப்பேர் ஆனா அங்க மூளையே இல்ல குழம்பிப் போயிருக்கு'' என்று ஏளனத் துடன் பார்த்தாள்.

என்னது தன்னைப் பைத்தியம் என்கிறாளா.

நம்ப மாட்டாதவனாய்த் தான் நினைத்ததையே கேட்டான் அந்த நிகில் அதாவது நிகிலேஷ்.

''பின்ன, முட்டாள்த்தனமாப் பேசறவங்கள வேற எப்படி நினைக்க முடியுமாம்?'' என்றாள் அனுரேகா.

''அடடா, அப்ப சொல்லுங்க மேடம். நீங்க யாரு?''

''அது உங்களுக்கு அவசியமில்லாதது.''

கோபத்தில் வெடுக்கென பதில் சொன்னாள் அனு ரேகா.

''அட கோபம் போல?''

நிகிலேஷ் கேட்க,

''இல்ல ரொம்ப சந்தோஷம்'' என்றாள்.

கோபத்தில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கத் தன்னை உருத்து விழித்தவளை அதற்குப் பிறகு தான் முழுமை யாகக் கவனித்தான் நிகிலேஷ்.

'எவ்வளவு அழகாக, ஏன் நாகரீகமாகவும் இருக் கிறாள்.'

தான் அப்படிக் கேட்டிருக்கக் கூடாது தான்...

ஆனால் எங்கே முகத்தை நன்றாகப் பார்ப்பதற்கு முன்னரே தன்னையறியாமல் கேட்டு விட்டாயிற்றே.

வேலைக்கு சிறு பெண் ஒருத்தியை வரச் சொல்லியிருக்கிறேன், அவள் மட்டும் வந்து விட்டால் வேலைக்குக் கூடமாட ஒத்தாசையாக இருப்பாள் என்று தாய் சில நாட்களாக சொல்லிக் கொண்டே இருந்ததில் வந்தவள் தாய் சொல்லிக் கொண்டிருந்த அந்தப் பெண்ணாகத் தான் இருப்பாளென்று நினைத்து விட்டிருந்தான் நிகிலேஷ்.

அதாவது முழு கவனமும் செய்து கொண்டிருந்த வேலையிலிருக்க அவளைச் சரியாகக் கூடப் பார்க்காமல் அப்படிக் கேட்டு விட்டிருந்தான்.

கையில் ட்ரேயுடன் விட்டால் அடித்து நொறுக்கி விடுவாள் போல நின்றிருந்தவளை இப்பொழுது ரசனை பொங்கப் பார்த்தான் நிகிலேஷ்.

''அப்ப சரியாப் பாக்காம அப்பிடி சொல்லிட்டேன்...''

''உன் கோபமும் நியாயமானது தான். ஏன்னா பாக்க நல்லா அழகாத்தான்...''

''உங்க சர்ட்ஃபிகேட் எனக்கு அவசியமில்லாதது.''

''சரிதான் அந்த ட்ரேய ஏன் இன்னும் சுமந்துட்டே இருக்கணும் எங்கிட்டக் கொடுக்கலாமில்லையா?''

நிகிலேஷ் கேட்டுக் கொண்டிருக்கும் போதே, அதை டொக்கென்று அங்கிருந்த டேபிளின் மீது வைத்திருந்தாள் அனுரேகா.

''உன் பேர் தெரிஞ்சுக்கலாமா?''

நிகிலேஷ் கேட்க, அவனுடைய கேள்வி காதில் விழாதது போல வெளியே வந்திருந்தாள்.



ஏனோ என்ன முயன்றும் அவளால் கோபத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

என்ன திமிர் இருந்திருந்தால் தன்னிடம் அப்படி நடந்து கொண்டிருப்பான்.

''என்ன அனும்மா?''

விசாலாட்சி ஆன்ட்டியின் கேள்வியில்தான் தான் கீழே இறங்கி வந்து விட்டிருந்ததையே உணர்ந்தாள் அனுரேகா.

''ஆன்ட்டி...''

''கோபமா இருக்கற மாதிரியிருக்...''

''அச்சச்சோ அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே ஆன்ட்டி'' என்றவள் உடனே நடப்பிற்கு வந்து தனது முக பாவனையை இயல்பாக்கிக் கொண்டாள்.

''சரி வாடாம்மா நீயும் உக்காந்து டிபன் எடுத்துக்கோ'' என்று அவர் கொடுத்ததை வாங்கிக் கொண்டு அமர்ந்தவள் ''உங்களுக்கு ஆன்ட்டி?'' என்றாள்.

''எனக்கு இப்ப வேண்டாம்மா, நான் லஞ்சே லேட்டா தாம்மா சாப்டேன்.''

''நீங்களே எல்லா வேலைகளையும் பாத்து சிரமப் பட்டிருப்பீங்க போலிருக்கு ஆன்ட்டி?''

''சரிதான் அனும்மா, பெரிய வேலைகளுக்கெல்லாம் வேலைக்காரங்க இருக்காங்க. சின்னச் சின்ன வேலைகளுக்குக் கூப்புட்ட குரலுக்கு ஓடி வரத்தான் ஒரு சின்னப் பொண்ண வரச் சொல்லியிருக்கேன்.''

..............

''அந்தப் பொண்ணும் இன்னைக்கு நாளைக்குன்னு லேட் பண்ணிட்டிருக்கா.''

விசாலாட்சி சொல்ல வாயடைத்து நின்றாள் அனு ரேகா.

''அதுவும் வெறும் வேலைகள்னாக் கூடப் பரவா யில்ல. மாடியேறி இறங்கறது சின்னச் சின்ன வேலை களுக்கெல்லாம் கூட ஓட்றதுன்னு நான் எல்லாத்தையும் பாத்துட்டிருந்தா மத்தவங்க எப்படியோ நிகிலேஷ் டென்ஷனாயிடுவாம்மா.''

அப்படியானால்...

அதனால் தான் அந்த நிகிலேஷ் அப்படிக் கேட் டானோ,

அது தெரியாமல் தான் என்னவெல்...

''என்னமா?''

மீண்டும் விசாலாட்சி ஆன்ட்டியிடம் வசமாக மாட்டிக் கொண்டு விட்டது புரிய, சமாளித்து வைத்தாள்.

''இல்ல சின்னப் பொண்ணு தான் வேணும்னு என்ன ஆன்ட்டி...''

''ஆமாம் அனும்மா எனக்கு தான் மூட்டு வலி இருக்கே. தினமும் எண்ணெய் தேய்ச்சு சுடு தண்ணில ஒத்தடம் குடுத்தாகணும், அப்புறம் வாக்கிங் போறதுக்கு அது இதுன்னு சின்னப் பொண்ணா இருந்தாப் பரவா யில்லன்னு பாத்தேன்.''

''சரிதான் ஆன்ட்டி எப்ப வர்றேன்னு சொல்லியிருக் காங்க...''



''அதான் சரியா தெரியலடாம்மா...''

''அந்தப் பொண்ணு வர்ற வரைக்கும் நான் வேணும்னா வந்து உங்களுக்கு ஹெல்ப் பண்ணவா ஆன்ட்டி?''

''சந்தோஷம் அனும்மா ஆனா அதுக்கு அவசியமிருக் காது. அந்தப் பொண்ணு. நாளையிலிருந்து வந்துடு வான்னு நினைக்கறேன்.''

''சரிதான் ஆன்ட்டி.''

அதற்குப் பிறகு மறுநாள் காலை விசேஷத்திற்கென அப்பொழுதிருந்தே ஒவ்வொருவராக வரத் தொடங்கி யிருக்க, விசாலாட்சி ஆன்ட்டியிடம் மீண்டும் பேச வாய்ப்புக் கிடைக்கவில்லை.

அதாவது ஓரிரு வார்த்தைகளுக்கு மேல்,

எங்க அந்த நிகிலேஷை இன்னொரு முறை பார்க்க நேர்ந்து விடுமோ என்ற எண்ணமே அவளை சற்றும் நிம்மதியில்லாமல் தவிக்கச் செய்து விட்டிருந்தது.

நல்லவேளையாக ஏதோ அவசர வேலையென்று இரவு உணவு முடிந்த கையோடு கிளம்பிய பெற்றவர் களுடன் தானும் கிளம்பி விட்டிருந்தாள் அனுரேகா.

எப்படியோ அந்த நிகிலேஷை மீண்டுமொரு முறை பார்க்க நேரவில்லையென்பதே அவளை மனம் நிம்மதி யடையச் செய்திருந்தது.

ஆனால் காலையில் மீண்டும் வர வேண்டுமே.

அப்பொழுது பார்க்க நேர்ந்தால்,

சரிதான் அதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம்.

"என்ன நீ ஏதோ யோசனையிலேயே இருக்க?"

தாயின் கேள்வியில் நடப்பிற்கு வந்தவளாய் "இல்ல நாளைக்கு என்னவெல்லாம் வேலையிருக்குன்னு யோசிச்சுட்டிருந்தேன் மம்மி" என்றாள்.

"அதெல்லாம் சரிதான் ஆனா காலைல நேரத்துல கிளம்பணும் பாத்துக்கோ."

"சரிதான் மம்மி."

இரவு முடிவு செய்ததை விடக்கூட அதிகாலையிலேயே எழுந்து குளித்துக் கிளம்பியிருந்தாள் அனுரேகா.

தொடர்ந்து சில நிமிடங்களில் பெற்றவர்களும் கிளம்பி வர கைப்பையுடன் அவர்களுடன் நடந்தாள்.

"அப்புறம் அனும்மா..."

"டாடி."

"நைட் நான் வெளியூர் கிளம்பறது முடிவாயிடுச்சுமா. உங்கூடக் கல்யாணத்துக்கு வந்துட்டு அப்புறமா தான் கிளம்புவேன்."

"சரிதான் அத அப்பப் பாக்கலாம் இப்ப சீக்கிரம் கிளம்பற வேலயப் பாக்கலாமே."

தனலட்சுமி சொல்ல, "சரிதான் வாங்க" என்று முதலில் தான் ஏறி அமர்ந்து காரை ஸ்டார்ட் செய்திருந்தார் சேதுராமன்.

என்னதான் தான் ஏற்கனவே சிறந்த அழகியென்றாலும் தோற்றத்திலும் மிகுந்த அக்கறை செலுத்தியிருந்தாலும் அன்று ஏனோ எதுவோ அனுரேகாவை இயல்பாக இருக்க விட்டிருக்கவில்லை. எதுவோ குறைவது போலவே இருந்தது.



இன்னதென்று விளக்கிச் சொல்ல முடியாத வண்ணம் மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

# 4



தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் அனுரேகாவின் குடும்பத்தினர், மகேந்திரன் குடும்பத்தினரின் புது மனையை வந்தடைந்திருந்தனர்.

அனுரேகா அஞ்சியது போலவே தான் நடந்தது.

விசேஷ வீடென்பதால் நிறையப் பேர் இருந்தாலும் அந்த நிகிலேஷ் முதல் ஆளாய்ப் பார்வைக்குப் படும்படி வரவேற்பறையில் நின்றிருப்பதைக் கண்டாள்.

அவன் வெகு இயல்பாக அனைவரிடமும் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அதே போல அவனிடம் மற்றவர்களும்,

"வாங்க அங்கிள் எப்படியிருக்கீங்க?"

புன்னகையுடன் அந்த நிகிலேஷ் தனது தந்தையை வரவேற்க, அதற்கு சரியாகத் தந்தையும் ஏற்கனவே நன்கு பழக்கப்பட்டதைப் போல அவனிடம் பேசுவது தெரிந்தது.

தான் மனதிற்குள் எண்ணிக் கொண்டிருந்தது போலவே இப்பொழுது அதே புன்னகையுடன் அந்த நிகிலேஷ் தன்னைத் திரும்பிப் பார்க்க, என்ன முயன்றும் அந்தப் பார்வையை அனுரேகாவால் இயல்பாக எதிர் கொள்ள முடிந்திருக்கவில்லை.

''வாங்க, வாங்க.''

நிகிலேஷின் வரவேற்பில் நூலளவு புன்னகையுடன் லேசாகத் தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

முதல் நாள் மாலை நடந்தது தான் அப்பொழுது அவளுடைய மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

அந்த நிகிலேஷ் இவ்வளவு இயல்பாக இருக்க தனக்கு மட்டும் ஏன் இப்படியிருக்கிறதென்று அவளால் எண்ணாதிருக்க முடியவில்லை.

அது மட்டுமா.

வெகு கம்பீரமாக ஆறடிக்கும் மேலாக உயர்ந்து நிற்கும் அவனுடைய தோற்றமும், வா வந்து என்னுடன் சேர்ந்து கொள் என்று அழைப்பு விடுப்பதைப் போன்று ரசனையுடனான புன்னகையும் அவனுடைய பார்வை படாத தூரத்திற்கு அதாவது அடுத்த அறைக்கு வந்து விட்ட பிறகும் கூடத் தன்னைத் துரத்திக் கொண்டே வருவதைப் போல மனம் படபடத்துப் போனாள்.

என்ன இது.

நியாயமாகப் பார்த்தால் இவன் மீது தனக்குக் கோபமல்லவா வரவேண்டும்.

ஆனால் தனக்கு ஏன் இப்படி இருக்கிறது.

வேலை விஷயமாக நாளொன்றுக்கு எத்தனை அதுவும் தன் வயதொத்த ஆண்களைப் பார்க்கவும் ஏன் அவசியத்திற்குப் பேசவும் கூட நேரிடுகிறது.

ஆனால் இப்பொழுது போன்று வேறு எப்பொழுதும் தான் உணர்ந்ததில்லையே.



சில மணி நேரங்கள் சென்றிருக்க, இனி கிளம்பினால் சரியாக இருக்குமென்று தோன்றியது அனுரேகாவிற்கு.

தாயைத் தேடினாள்.

அவர் பக்கத்து அறையில் இருக்க, பார்த்து விஷயத்தைச் சொன்னாள்.

''இன்னும் பத்து நிமிஷத்துல டிபன் பரிமாறிடுவாங்க. சாப்டுட்டுக் கிளம்பிக்கோயேன் அனு.''

''இல்லமா இப்பவே கிளம்பினா தான் டைமுக்கு போய்ச் சேர முடியும்'' என்று கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு வெளியே வந்தவளை விசாலாட்சி பிடித்துக் கொண்டு விட்டிருந்தார்.

''என்னம்மா எழுந்துட்ட?''

''என்னாச்சு?''

''வேலைக்கு, நேரமாச்சு.''

''இன்னைக்கு நீ போயாகணுமா?''

கடவுளே இதென்ன இப்படிக் கேட்கிறார்கள்.

''ஆமா ஆன்ட்டி.''

''என்னடாம்மா, இன்னைக்கு ஒரு நாளைக்கு நீ லீவு போட்டுக்கலாமில்லையா?''

மிகுந்த அக்கறையுடன் விசாலாட்சி ஆன்ட்டி கேட்க, விடுமுறை எடுக்க முடியாததற்கான காரணத்தைச் சொன்னாள் அனுரேகா.

''சரிதான் கண்ணம்மா, வா சாப்டுட்டு அப்புறமாப் போவியாம்.''

''இல்ல ஆன்...''

''முதல்ல வா நீ'' என்று கைப்பிடித்து அழைத்துக் கொண்டு போனவர், மேலே மாடிக்குச் செல்லும் படிகளில் நின்று யாருடனோ பேசிக் கொண்டிருந்த பெரிய மகனை அழைத்தார்.

அதாவது நிகிலேஷை,

''என்னமா சொல்லுங்க?''

''அனுவுக்கு லேட்டானதால டிபன் சாப்பிடாமக் கூடக் கிளம்பிட்டா, சாப்பிட என்ன ரெடியாகியிருக்கோ. பாத்துப் பரிமாறி சாப்பிட்டதும் தான் போக விடணும் சரியாப்பா...''

''சரிதாம்மா நான் பாத்துக்கறேன் நீங்க போங்க'' என்று நிகிலேஷ் தாய்க்கு பதில் சொல்ல, கடவுளே இருந்திருந்து இவனிடம் போய் இப்படி மாட்டிக் கொண்டு விட்டோமே என்றிருந்தது அனுரேகாவிற்கு.

ஏற்கனவே பேசிக் கொண்டிருந்தவரிடம் விடை பெற்றுக் கொண்டு தன்னைப் பார்த்தவனிடம் எனக்கு ''லேட்டாச்சு நான் கிளம்பணும்'' என்றாள்.

''தாராளமா, ஆனா சாப்டுட்டுக் கிளம்பலாம் வா'' என்றவன் அதற்கு மேல் அவளுடைய பதிலுக்காகக் காத்திருக்காமல் டைனிங் ஹாலை நோக்கி நடந்தான்.

நேராக வந்து ''டிபன் தயாராயிற்றா?'' என்று விசாரித்தவன் தயாராகி உள்ளதை உடனே எடுத்து ஒரு ப்ளேட்டில் பரிமாறச் சொன்னான்.

''இல்ல வேண்டாம் நான் கிளம்பணும்...''



''ஒரு டூ மினிட்ஸ் இப்பப் பரிமாறிடுவாங்க'' என்று நிகிலேஷ் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ''ஒரு நிமிஷம்'' என்று எதிரே காபி கப்கள் அடங்கிய ட்ரேயுடன் சென்றவனை நிறுத்தி ஒரு கப்பை எடுத்துக் கொண்டு ''தேங்க்ஸ்'' என்று அவனை அனுப்பினாள்.

''டிபன் சாப்பிடாம காபி.''

நிகிலேஷ் முடிப்பதற்குள் ''உங்களுக்கு வேலை நிறைய இருக்கும்னு நினைக்கறேன். நீங்க வேணும்னா கிளம்பிக்கோங்களேன்...'' என்றாள்.

''நான் ஒண்ணு சொல்லலாமா?'' என்றவனை எதுவும் பேசாமல் பார்த்தாள் அனுரேகா.

''நீ ரொம்ப அழகா இருக்க, கோபப்படும் போது இன்னும்.''

ஓ இதற்கு தான் உச்சி குளிர்ந்து பல்லை இளிக்க வேண்டுமாக்கும்.

தனது எண்ணப் போக்கை உணர்ந்தவனைப் போல ''ஜஸ்ட் எம் மனசுக்குப் பட்டத சொன்னேன் அவ்வளவு தான்'' என்றான் நிகிலேஷ்.

''உங்க மனசுக்கு உருப்படியா எதுவும் படாதா?''

''ஓ உன்னப் பத்திக் கூட நல்லவிதமா சொன்னதால சொல்றியா?''

அப்படிக் கேட்டவனை இப்பொழுது இன்னும் அதிகமான ஏளனத்துடன் பார்த்த அனுரேகா, ''எனக்குப் புகழ்ச்சியே பிடிக்காது, அதுவும் உங்கள மாதிரி பர்ஸன்ஸ் கிட்டிருந்துன்னா வேண்டாம்டா சாமி'' என்று காலி காபி

கப்பை அங்கிருந்த டஸ்ட்பின்னில் போட்டுவிட்டு நிற்காமல் கிளம்பிச் சென்று விட்டிருந்தாள்.

அனுரேகாவின் செய்கையில் புன்னகையுடன் அவள் சென்ற திசையையே பார்த்தபடி நின்று விட்டிருந்த நிகிலேஷ், உண்மையிலேயே இவள் சற்று வித்யாச மாகத் தான் இருப்பாள் போலிருக்கிறதென்று தனக்குள் சொல்லிக் கொண்டான்.

## 5



''வா அனு.''

''என்ன டாடி இந்த நேரத்துல வீட்ல இருக்கீங்க?''

''ஆமாம்மா, வெளியூர் போறதுக்காக எல்லாத்தையும் ரெடி பண்ணிட்டிருக்கேன்...''

''அப்பக் கல்யாணத்துக்கு?''

''முதல்ல நீ போய் கிளம்பி வா. நான் ரெடி.''

''எப்படி கல்யாணத்துக்கு வந்துட்டு அப்படியே கிளம்பிடுவீங்களா?''

''ம்கூம் உன்னக் கொண்டு வந்து வீட்ல விட்டுட்டு அதுக்கப்புறமா கிளம்பிக்கறேன்.''

''அப்புறம் உங்களுக்கு லேட்டாயிடாது?''

''ஆகாது, எதுக்கும் என் திங்க்ஸ நான் இப்பவே எடுத்துக் கார்ல வெச்சுக்கறேன்.''



''அடுத்த ஒரு மணி நேரத்தில் திருமணத்திற்கு செல்லப் பிரமாதமாகக் கிளம்பி வந்தாள் அனுரேகா.

பச்சையில் பட்டுச்சேலை அதற்குப் பொருத்தமாகக் கல் நகைகள் எனத் தன்னை பார்த்துப் பார்த்து அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தாள்.

நீண்டு தொங்கும் பின்னலுக்கு மேலும் அழகு சேர்க்கும் விதமாக அப்பொழுதுதான் செடியிலிருந்து எடுத்துக் கட்டிய குண்டு மல்லிகைச் சரத்தைக் கொண்டு வந்து தனலட்சுமி மகளுக்குச் சூட்டி விட ''இதெல்லாம் எதுக்குமா?'' என்று சலித்துக் கொண்டாள் பெண்.

''அது சரி மத்த நாள் தான் வெச்சுக்க மாட்ட. கல்யாணத்துக்குப் போகும்போது என்ன வந்தது?''

''பட்டிக்காடு மாதிரி தெரியமாட்டேன்?''

''ஓ, இந்த அளவுக்கு யோசிக்கறவ சேலைக்கு பதிலா ஏதாவது மாடர்ன் டிரஸ்ஸப் போட்டுக்கிட்டிருக்கணும்...''

''அப்பிடின்னா நான் போய் டிரஸ்ஸ மாத்திட்டு வந்துடட்டுமா?''

''அடி இவள...''

''ஏம்மா?''

''அதெல்லாம் இப்பவே பாக்கப் பிரமாதமா இருக்க, பாக்கறவங்க கண்ணு படாம இருந்தா சரி.''

''என்ன அம்மாவும் மகளும் மும்முரமாப் பேசிட்டிருக்கீங்க?''

தந்தை வர, ''பாருங்க டாடி அப்பிடியே பூ வெச்சு விட்டாலும் கொஞ்சமா வைக்க வேண்டியது தான நாலு

முழம் வெச்சு விட்டிருக்காங்க'' என்று குறைபட்டுக் கொண்டாள் பெண்.

''அவ்வளவு இருக்காது. அதுல பாதிதான், ஏன் நல்லாத்தான இருக்கு...''

''ம், நீங்களாவது சொல்லுங்க'' என்று தாய் தந்தையைப் பார்த்துச் சொல்ல, ''அது சரி சும்மாவே இந்த அம்மா பேச்சு தான் எடுபடும் இனி நீங்களும் அவங்க கூட சேர்ந்துட்டிங்களா டாடி சரி சரி வாங்க கிளம்பலாம் அப்புறம் லேட்டாயிடும்'' என்று மற்றதை மறந்து கிளம்புவதில் கவனத்தை செலுத்தினாள்.

தந்தையும் மகளும் கிளம்ப, அவர்களுடைய கார் கண்ணை விட்டு மறையும் வரை பார்த்திருந்து விட்டு அதற்குப் பிறகே வீட்டிற்குள் வந்தார் தனலட்சுமி.

மகளின் அழகைப் பார்க்கப் பார்க்க அவருக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

இந்த அழகுக்கும், குணத்திற்கும் பெரிய இடத்திலிருந்து தான் மகளைப் பெண் கேட்டு வர வேண்டும்.

ஏன் அந்த மாதிரி வந்தால் தான் திருமணம் செய்து கொடுக்கத் தாங்கள் சம்மதிக்க வேண்டுமே தவிர, மற்ற எதற்காகவும் பார்க்கக்கூடாது என்று எப்பொழுதும் போல மனதிற்குள் தனக்குத் தானே உறுதியுடன் நினைத்துக் கொண்டார்.

ஆனால் அதற்கு இன்னும் எத்தனை மாதங்கள் ஏன் வருடங்கள் கூட ஆகலாமோ என்னவோ,

எப்படியோ கடவுளின் புண்ணியத்தில் அப்படியொரு நல்ல வாழ்க்கை மகளுக்கு விரைவில் கூடி வந்தால் சரிதான்.



அதிலும் இப்பொழுதெல்லாம் படித்து வேலைக்குப் போகும் பெண்கள் பெற்றவர்களைக் கூட மதிக்காமல் காதல், கத்தரிக்காய் என்றெல்லாம் வந்து நின்று விடுவதை நினைத்தால் தான் தனலட்சுமிக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

தன் மகள் அனு அப்படியெல்லாம் செய்கிறவள் இல்லையென்றாலும் கூட நாலு பேர் நாலு விதமாகச் சொல்லும் போது தினம்தினம் அஞ்சிக் கொண்டல்லவா இருக்க வேண்டியிருக்கிறது.

என்னதான் நம் வீட்டுப் பெண் நெருப்பென்றாலும் ஊர் உலகம் நாளுக்கு நாள் எப்படி வேண்டுமானாலும் மாறிக் கொண்டே அல்லவா இருக்கிறது.

சரிதான் கணவன் வெளியூரிலிருந்து வந்ததும் இதைப் பற்றிப் பேசிவிட வேண்டும்.

மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டவராய் சென்று தனது வேலைகளைப் பார்க்கத் தொடங்கினார் தனலட்சுமி.

''அனும்மா.''

''டாடி.''

''நீ வேணும்னா இவரு கூடப் போய் நம்ம வீட்ல இறங்கிக்கறையாம்மா?''

தந்தை காட்டிய இடத்தில் நின்றிருந்த நிகிலேஷைப் பார்த்த அனுரேகாவிற்கு அவருடைய கேள்விக்கு என்ன பதில் சொல்வதென்று தெரிந்திருக்கவில்லை.

ஆனாலும் ஒரு சிறு புன்னகையில் தன்னை சமாளித்துக் கொண்டு இருவரையும் பொதுவாகப் பார்த்தாள்.

"என்னமா?"

மீண்டும் தந்தை, கேட்க, "என்னால மத்தவங்களுக் கேம்பா சிரமம்?..." என்றாள்.

"அதெல்லாம் ஒன்னுமில்ல, ஆன் தி வே இறக்கி விட்டுட்டுப் போப் போறேன். ஒருவேளை எங்கூட வரப் பிடிக்கலேன்னாப் பரவாயில்ல விட்டுடுங்க..."

நிகிலேஷின் வார்த்தைகளில் இப்பொழுது சேது ராமனே முந்திக் கொண்டு விட்டிருந்தார்.

"உங்க கூடத் தான் வரப் போறா நிகில். அதோட நீங்க எனக்கு செய்யப் போறது இந்த சமயத்துல பெரிய உதவி அதுக்கு ரொம்ப நன்றி" என்று தன்னிடமும் சொல்லிக் கொண்டு தந்தை கிளம்பியே விட்டிருக்க செய்வதறியாது திகைத்து நின்றாள் அனுரேகா.

இப்பொழுதும் ஒன்றும் ஆகிவிடவில்லை.

வெளியே எத்தனை கால் டேக்ஸிகள் கிடைக்காது.

அல்லது பஸ்...

"நான் நினைச்சது சரிதான்."

திடீரென்று அந்த நிகிலேஷிடமிருந்து வந்த வார்த்தை களில் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

"இல்ல வீரமெல்லாம் வாயில தான்னு புரியுது..."

"புரியல?"

"எங்கூட வர பயம். அதனால தான வர மாட் டேங்கற..."

"ஹலோ மிஸ்டர் உங்களப் பாத்து நான் ஏன் பயப்படணும்? நீங்க என்ன சிங்கமா இல்ல புலியா?"



"அப்புறமென்ன தயக்கம், கிளம்பலாமே."

ஓ இதற்காகத் தான், தான் இந்த வார்த்தையைச் சொல்ல வேண்டுமென்று தான் அப்படிக் கேட்டானா,

சரிதான் இவனைத் தான் சாதாரணமாக எண்ணுவது தவறு.

இவன் வெகு எளிதாக யாரையும் தன்னுடைய இஷ் டந்திற்கு வளைத்து விடுவான் போலல்லவா தெரி கிறான்.

ஆனால் தன்னை யாரென்று நினைத்துக் கொண்டிருக் கிறானாம்.

இவனுடைய ஜாலமெல்லாம் தன்னிடம் நடக்கா தென்பதை இவனுடன் செல்லும் வழியிலேயே இவனுக்கு உணர்த்திவிடத் தான் வேண்டும்.

"ரெண்டு நிமிஷம் இரு வந்துட்றேன்."

மாப்பிள்ளையின் தோழன் என்று தந்தை சொன்னது தான் நினைவிற்கு வந்தது.

அதாவது தனது சிறிய எம்.டி.யின் நண்பன்.

அவர்கள் வசதியில் எவ்வளவு பெரிய ஆட்கள்.

அவர்களுடனே இவன் சரிசமமாகப் பழகுகிறான் என்றால்,

ஆனால் தான்.

அவர்களிடம் வேலை செய்யும் ஊழியர்களில் ஆயிரத்தில் ஒருத்தி.

தொடர்பே இல்லாமல் தனது எண்ணம் போகும் போக்கை நினைத்து எரிச்சல் தான் வந்தது.

அவன் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தால் தான் என்ன முதலில் மற்றவர்களிடம் பழகும் நாகரீகம் கூடத் தெரியவில்லையே.

ஆள் பார்க்க நன்றாயிருப்பதால் அவனைப் பார்த்ததும் பெண்கள் மயங்கி விடுவதே இத்தனை நாளும் அவனுடைய வழக்கமாய் இருந்திருக்கும்.

அவர்களைப் போலத் தன்னையும் எண்ணி விட்டான் போலிருக்கிறது பாவம்.

சரிதான் பார்த்து விடலாம்.

''போலாமா?''

புன்னகையுடன் நிகிலேஷ் கேட்ட விதத்தில் ஒரு சில வினாடிகள் தானென்றாலும் செயலற்று நின்று விட்டிருந்தாள் அனுரேகா.

இவனுடைய ஒரு சிறு புன்னகைக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா.

ஏனோ நம்ப முடிந்திருக்கவில்லை.

ஆனாலும் முயன்று அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

நல்லவேளை அவன் கவனித்திருக்கவில்லை.

அப்படி மட்டும் கவனித்திருந்தால் தன்னைப் பற்றி என்ன நினைத்திருப்பான்.

ஏற்கனவே ஏளனமாகப் பார்ப்பவன் முன் இப்பொழுது மேலும் கீழிறங்கிப் போயிருக்க மாட்டோமா.

ம்கூம், அப்படிக் கீழிறங்கிப் போய் விடவே கூடாது.



இவனிடம் தான் இனி மிகுந்த எச்சரிக்கையுடன் தான் நடந்து கொண்டாக வேண்டும்.

# 6



''ஏறிக்கோங்க மேடம்.''

முன்பக்கக் கார்க் கதவைத் திறந்து ஒரு சேவகனைப் போலப் பணிவுடன் குனிந்து அவன் சொன்ன விதத்தில், சற்று முன்போல ஏன் அதைவிட அதிகமாகவே திகைத்து செய்வதறியாது நின்று விட்டிருந்தாள் என்று சொன்னால் அது சற்றும் மிகையல்ல.

இவ்வளவு எச்சரிக்கையுடன் இருந்தும் இது எப்படி நிகழ்ந்தது.

ம்கூம், இவனிடம் ஏதோ காந்த சக்தி இருக்கிறது.

மற்றபடி தன்னுடைய முயற்சியெல்லாம் இவனுடைய சிறு பார்வைக்கு முன்னால் தவிடு பொடியாகி விட சாத்தியமில்லையே.

தான் முதலில் ஏறி அமர்ந்தவள், அவன் சுற்றி வந்து காரில் அதாவது டிரைவர் ஸீட்டில் ஏறி அமர்வதற்குள்ளான அந்த சிறு அவகாசத்தில் முகபாவனையைச் சீராக்கிக் கொண்டாள்.

ஆனாலும் புலி குகைக்குள் தனியாக மாட்டிக் கொண்டு விட்டதைப் போல உள்ளுக்குள் மனம் கிடந்து அடித்துக் கொள்வதை என்ன முயன்றும் அவளால் தடுக்க முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து வந்த சில வினாடிகளில் நிகிலேஷ் காரை ஸ்டார்ட் செய்து செலுத்தத் தொடங்கி விட்டிருக்க, வெளியே வேடிக்கை பார்க்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதாவது அப்படிக் காட்டிக் கொண்டாள்.

அது நிகிலேஷிற்கும் புரியாமல் இல்லை,

ஆம்,

அனுரேகாவின் அப்போதைய நிலை அவனுக்கும் புரிந்தே இருந்தது.

அது புரிந்ததாலேயே அந்த நிமிடங்களை அவன் மிகவும் ரசித்தான் எனலாம்.

''ஏதோ அங்கிள் கேட்டுக்கிட்டாரேன்னு வீட்ல கொண்டு போய் விட சம்மதிச்சது தப்பாப் போயிடுச்சு போலிருக்கே.''

நிகிலேஷின் வார்த்தைகளில் அவனைத் திரும்பிப் பார்த்தாள் அனுரேகா.

''பின்ன, நானென்ன டிரைவரா நீ பாட்டுக்கு ஜாலியா வெளிய பாத்துட்டு வர்ற...''

அவன் கேட்க வருவது புரிய, இப்பொழுது அனுரேகாவிற்கும் சிரிப்பு வந்து விட்டிருந்தது.

''இதக் கொஞ்சம் முன்னாடி யோசிச்சிருக்கணும்'' என்று புன்னகையினூடே சொன்னாள்.

ஓ, தானாகக் கட்டாயப்படுத்தி அழைத்து வந்ததைச் சொல்கிறாளாம்.

''அதனாலென்ன உனக்கொரு உதவி செய்யணும்னு தோணுச்சு அதனால சரின்னு சொன்னேன். அப்படி



வலிய வந்து உதவி செய்யறவங்க மனசு சங்கடப்படாத மாதிரி நடந்துக்கற கடமை உதவிய அனுபவிக்கறவங்களுக்கும் இருக்கலாம் இல்லையா?''

நிகிலேஷின் கேள்வியில் இப்பொழுது நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் அனுரேகா,

சற்று முன் அவனுடைய புன்னகையில் தான் செயலற்று நின்று விட்டிருந்ததைப் போலவே தனது புன்னகையில் அவனும் திகைத்து விட்டிருந்ததை அனுரேகா கவனித்திருக்கவில்லை.

முயன்று சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு தன்னைப் பார்த்தவளிடம் என்னவென்று கேட்டான்.

''இதுதான் வலிய வந்து பிரச்சனைல மாட்டிக்கிறதோ, எப்படியோ உங்கள டிரைவராக்கிப் பாக்கற விருப்பம் எனக்கும் இல்ல பாருங்க'' என்றவள் வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு வருவதைத் தவிர்த்து விட்டு நேராக அமர்ந்தாள்.

''நானொன்னு சொல்லலாமா?''

அப்படிக் கேட்டவனை சற்றும் சுவாரஸ்யமே இல்லாதவளைப் போலத் திரும்பிப் பார்த்தாள்.

அதாவது முயன்று அப்படிக் காட்டிக் கொண்டாள்.

கடவுளே என்ன சொல்லப் போகிறான்.

நிச்சயம் இவன் விபரீதமாகத் தான் எதையோ சொல்லப் போகிறான்.

''ம், சொல்லலாமா?''

''வேண்டாம்னு சொன்னா பேசாம வரப் போறீங்களா என்ன? உங்க வாய் உங்க கருத்து சொல்லிட்டுப் போங்க...''

''குட், இந்த மாதிரி தான் ஃப்ரீயா எடுத்துக்கணும்'' என்றவன் சொல்லப் போகிறேன் என்பதைப் போலப் பார்த்தான்.

ஏனோ அவனுடைய பார்வையை அவளால் நேருக்கு நேர் எதிர்கொள்ள முடிந்திருக்கவில்லை.

நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது,

மனம் கிடந்து தவித்தது.

ம்கூம், இவன் நடந்து கொள்வது சரியில்லை.

சந்தேகமே இல்லை, தன்னைச் சீண்டிப் பார்க்கிறான்.

தன்னைப் பற்றிய அனைத்தையும் தெரிந்து கொண்டவனைப் போல

இவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காகத் தான் உயிரைப் பிடித்துக் காத்துக் கொண்டிருப்பதை சர்வ நிச்சயமாய் உணர்ந்தவனைப் போலல்லவா நடந்து கொள்கிறான்.

''என்னடா இவன் சொல்றேன் சொல்றேன்னு சொல்லிட்டு எதையும் சொல்லாமே வர்றானேன்னு பாக்கறியா?''

''நான் ஏன் அப்பிடி...''

''அப்ப சரிதான் சொல்லிட்றேன். எனக்கு உன்னப் பிடிச்சிருக்கு'' என்று சொல்லிவிட்டுத் தனது முக பாவனையை ஆராய்ந்தவனை உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் பார்த்தாள்.

என்னதான் வெளியே அப்படிக் காட்டிக் கொண்டாலும், அவளுடைய உள்மனம் வேறு எண்ணிக் கொண்டிருந்தது.



''என்ன மேடம்...''

''சந்தேகமே இல்ல, உறுதியாயிடுச்சு.''

''என்ன உறுதியாயிடுச்சு?''

''இப்பிடி விளையாட்டுக்கு ஜாலியாப் பேசறது உங்களுக்கு சாதாரணமா இருக்கலாம், ஆனா...''

தன்னுடைய வார்த்தைகளுக்குக் கோபமும் படாமல், அதே சமயம் வெளியே மட்டும் தானென்றாலும் தான் சொன்னதை வெகு சாதாரணமாகக் காட்டிக் கொண்ட அனுரேகாவின் சாமர்த்தியத்தில் மனதிற்குள் இப்பொழுது சபாஷ் போடாமல் இருக்க முடியவில்லை.

''நான் விளையாட்டுக்கு தான் பேசறேன்னு உனக்கென்ன அவ்வளவு நிச்சயம்?''

...............

''என்ன...''

''வண்டிய நிறுத்துங்க நான் இறங்கிக்கறேன்.''

..............

''உங்களத்தான் நிறுத்துங்க...''

''இந்த நேரத்துல நடு வழிலயா?''

''நிறுத்துங்க...''

''மணி என்னன்னு தெரியுமா...''

''சொன்னது காதுல விழல?''

''சரிதான் எனக்கு இப்ப உறுதியாயிடுச்சு. உனக்கு என்னப் பார்த்து பயம் அப்பிடித்தான?''

.....................

"மௌனம் சம்மதத்துக்கு அறிகுறி..."

"ஹலோ மிஸ்டர் என்ன விளையாட்றீங்களா? உங்களப் பாத்து அதுவும் நான் ஏன் பயப்படணும்?"

"அப்ப இல்லையா?"

"உங்க..."

"கூல்... கூல் டவுன், இனி நான் எதுவும் பேசல சரியா?"

................

"ம், அழகான பொண்ணுக்கு முன்னாடி கொஞ்சம் பந்தாவா பேசலாம்னு பாத்தேன், ஆனா இப்படி ஒரே யடியா வாய மூடிக்க வேண்டிய நிலம வரும்னு தெரிஞ் சிருந்தாக் கொஞ்சம் அடக்கியே வாசிச்சிருப்பேன்."

நிகிலேஷின் புலம்பலில் வந்த சிரிப்பை வெளியே வேடிக்கை பார்ப்பதைப் போலத் திரும்பிக் கட்டுப் படுத்திக் கொண்டாள் அனுரேகா.

தொடர்ந்து சில நிமிடங்கள் அமைதியாகக் கழிந்தன.

அதைத் தொடர்ந்து அனுரேகாவின் வேலை குறித்து நிகிலேஷ் விசாரிக்க, பிறகு அதைப் பற்றி சில நிமி டங்கள் பேச்சு சென்றது.

நிகிலேஷ் சாதாரணமாகப் பேசியதில் தன்னையறி யாமலேயே அவனுடைய கேள்விகளுக்கு வெகு இயல் பாக பதில் சொன்ன அனுரேகா அதற்குப் பிறகு தான் அதை உணரவே செய்தாள்.



நாம் ஏன் அப்படி அடிபணிய வேண்டுமென்ற எண்ண மெல்லாம் அவனுடைய கனகச்சிதமான வார்த்தை களிலும், மனதை உறுத்தாத வண்ணம் இயல்பான மிடுக்குடன் கூடிய அணுகு முறையிலும் இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டிருந்ததையும்,

"காலை நீ சாப்பிடாமக் கிளம்பினதுக்கு அம்மா ரொம்ப வருத்தப்பட்டாங்க."

"ஏன், நீங்க காரணத்த சொல்லியிருக்க வேண்டியது தான?"

திடீரென்று அப்படிக் கேட்டவளைப் பார்த்தான் நிகிலேஷ்.

"என்ன பாக்கறீங்க, எம்மேல இருந்த வெறுப்புல தான் சாப்புடாமக் கூடப் போய்ட்டாங்கன்னு உண்மைய சொல்லியிருக்க வேண்டியது தான?"

"அடடா, இப்பதான் எனக்கு சந்தோஷமா இருக்கு."

"என்னது?"

"என்னோட வார்த்தைகளுக்கும் நீ இந்த அளவுக்கு மதிப்புக் குடுத்திருக்கியே, முக்கியமா நான் உன்னோட எண்ணங்கள்ல இவ்வளவு அக்கிரமிச்சிருக்கேன்னா..."

"போதும்..."

"என்ன போதும்?"

"பேசாதீங்க, வாய மூடுங்க..."

"அட, இருக்கறத சொன்னேன் அதுக்கு ஏன் இவ் வளவு கோபம்..."

"ம், உங்களப் பாத்தாலே எனக்குப் பிடிக்கல..."

''ம்கூம், என்னால நம்ப முடியல.''

''என்ன நம்ப முடியல?''

''வாய் மட்டும் தான் அதுவும் கட்டாயத்துக்குத் தான் அப்படிச் சொல்லுது. ஆனா இருக்கற நிலமையே வேற...''

''என்ன வேற?''

''வேண்டாம், அப்புறம் சொல்லிடுவேன்.''

''உண்மையிலேயே அப்படி ஏதாவது இருந்தா சொல்ல வேண்டியது தான...''

''வேண்டாம் விடு...''

என்ன இவன் தன் பாட்டுக்கு ஏதேதோ பேசுகிறான். என்னென்னவோ சொல்கிறான். இன்னும் சிறிது நேரம் இவனுடன் பேசிக் கொண்டிருந்தால் பைத்தியம் ஏதாவது பிடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை போலிருக்கிறதே.

நேரம் ஆக ஆக எப்பொழுது வீடு போய்ச் சேருவோம் என்றாகி விட்டிருந்தது அனுரேகாவிற்கு.

''ஆனாலும்... நான் உன்ன எந்த விதத்துலாவது ஹர்ட் பண்ணியிருந்தா ஸாரிமா...''

நிகிலேஷிடமிருந்து அப்படியொரு வார்த்தை வருமென்று உண்மையிலேயே அவள் எதிர்பார்த்திருக்கவில்லை.

வெளியே எதையும் காட்டிக் கொள்ள விட்டாலும் மனதிற்குள் சற்று ஆச்சரியமாகக் கூட உணர்ந்தாள் எனலாம்.



ஆனால் அதற்கு ஆயுள் அதிகம் இருக்கவில்லை.

''எது எப்படியோ எனக்கு உன்ன ரொம்பப் பிடிச்சிருக்கு... இரு உன் மனசக் கஷ்டப்படுத்தணுங்கறதோ, சீண்டணுங்கறதோ என் நோக்கம் கிடையாது. எம் மனசுக்குப் பட்றத அப்படியே சொல்லிட்றது தான் இத்தனை நாளும் என் வழக்கமா இருந்தது, இப்பவும்.''

அப்படிச் சொன்ன நிகிலேஷை கண்களில் கோபம் மின்னப் பார்த்த அனுரேகா. ''நீங்க கூட இந்த மாதிரி இருப்பீங்கன்னு நான் எதிர்பாக்கல'' என்றாள்.

''எனக்கு நடிக்கத் தெரியாது.''

''ரொம்ப சந்தோஷம். ஆனாலும் உங்க... நீங்களும் ஒரு சராசரி மனுஷன்தான்னு காட்டிட்டிங்க பாருங்க...''

''நீ ஏன் இவ்வளவு கோபப்பட்றேன்னு எனக்குப் புரியல'' என்றவனை இப்பொழுது இன்னும் அதிக கோபத்துடன் பார்த்தாள் அனுரேகா.

''நீங்க இத்தனை நாளும் பாத்துப் பழகின சராசரி பொண்ணுங்கள மாதிரி என்னையும் பாக்கறீங்கன்னு நினைக்க...''

''சின்ன திருத்தம், உன்ன மாதிரி எந்தப் பொண்ணு கிட்டயும் இந்தளவுக்கு நான் பேசினது கிடையாது.''

''ஏதோ நல்ல நேரம் தப்பியிருக்கீங்க.''

அனுரேகா என்ன சொல்ல வருகிறாள் என்பது புரிய இப்பொழுது சிரித்து விட்டிருந்தான் நிகிலேஷ்.

தொடர்ந்து சில வினாடிகளில் தனது வீட்டு வாசலில் கார் வந்து நின்றிருக்க காரை விட்டு இறங்கினாள் அனுரேகா.

இறங்கியவள் சற்றே குனிந்து காருக்குள் இருந்தவனிடம் மொட்டையாகத் ''தேங்க்ஸ்'' என்றாள்.

இவ்வளவுதானா என்பதைப் போலப் பார்த்தவனைத் தானும் சளைக்காமல் பார்த்தாள்.

''வீட்டுக்குள்ள கூப்புட மாட்டியா?''

இனி அது ஒன்று தான் குறைவு என்று அவள் நினைத்துக் கொண்டிருக்கும்போதே கார் நிற்கும் ஓசை கேட்டதில் வெளியே வந்திருந்தார் தனலட்சுமி.

வந்தவர் காரில் நிகிலேஷைப் பார்த்து விட்டு மிகுந்த அக்கறையுடன் கூடிய சந்தோஷத்துடன் வரவேற்றார்.

முதலில் மறுத்து விடத்தான் நினைத்திருந்தான் நிகிலேஷ்.

மீண்டும் என்ன தோன்றியதோ காரை விட்டு இறங்கி வீட்டிற்குள் வந்தான்.

உள்ளே வந்தவனை ''வாங்க தம்பி உக்காருங்க'' என்று மரியாதையுடன் உபசரித்த தனலட்சுமி உள்ளே செல்லத் திரும்ப, ''ஒரு நிமிஷம் ஆன்ட்டி எங்க போறீங்க?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு சாப்பிட...''

''ம்கூம், கல்யாண வீட்ல சாப்பிட்ட கையோட வர்றோம் எதுவும் வேண்டாம்'' என்று மறுத்திருந்தவன், தன்னை நோக்கி வந்த அனுரேகாவின் தம்பி பவனை நோக்கித் திரும்பினான்.

நிகிலேஷ் நன்றாகப் பேசியதில் பவனும் அவனுடன் தயக்கம் நீங்கித் தோழமையுடன் பேசத் தொடங்கி விட்டிருந்தான்.



பவனுடன் பேசிக் கொண்டே யதேச்சையாகத் திரும்பிய நிகிலேஷ் எரிச்சலும் வெறுப்பும் ஒன்றுக்கொன்று போட்டி போட நின்றிருந்த அனுரேகாவின் பார்வையை எதிர்கொண்டான்.

நிகிலேஷின் பார்வையைத் தொடர்ந்து தானும் மகளைப் பார்த்த தனலட்சுமிக்கு மிகுந்த கோபம் வந்து விட்டிருந்தது.

''அனுரேகா.''

தாயின் அழைப்பில் அவரைத் திரும்பிப் பார்த்தாள் மகள்.

''ஒரு நிமிஷம் இங்க வாம்மா.''

முயன்று வரவழைத்த இனிமையான குரலில் தாய் அழைக்க (அது அனுரேகாவிற்கும் புரியாமலில்லை.) அருகில் சென்றாள்.

''ஏன் இப்படிப் பண்ற?''

கோபத்தை உள்ளடக்கிய மெல்லிய குரலில் தாய் கேட்க, ''என்னமா?'' என்று ஒன்றும் அறியாதவளைப் போல அப்பாவியாகக் கேட்டாள்.

மகளின் கேள்வியில் ஒருவேளை தான் தான் தவறாகப் புரிந்து கொண்டு விட்டோமோ என்று தனலட்சுமிக்கே ஒரு நிமிடம் சந்தேகம் வந்து விட்டிருந்தது.

ஆனாலும் ''போதும் எங்கிட்டயே உன் வேலையக் காட்டாத'' என்றார்.

''என்னமா?''

அதே நேரம் ''சரி ஆன்ட்டி நான் கிளம்பறேன்'' என்று நிகிலேஷ் எழுந்திருக்க, ''ஒரு நாள் சவுகர்யமா ஒருவேள

சாப்டுட்டுப் போற மாதிரி வாங்க தம்பி'' என்றார் தன லட்சுமி.

''நிச்சயம் வர்றேன்'' என்றவனின் பார்வை தன் மேல் விழ, அப்போதைக்குத் தப்பிக்கும் வழியாக ''சரிமா நான் போய் வழியனுப்பிட்டு வர்றேன்'' என்று அவனுடன் வெளியே வந்திருந்தாள் அனுரேகா.

கார் வெளி வாசலையும் தாண்டி கேட்டுக்கு வெளியே நின்றிருக்க, மனமே இல்லாமல் தானும் அது வரை சென்றாள்.

''என்ன மேடம் விட்டா அடிச்சிடுவீங்க போலிருக்கு?''

.................

''பேசவும் மாட்டிங்களா?''

''கிளம்பறீங்களா?''

''சரிதான் இப்பக் கிளம்பறேன். ஆனா உன்ன விட மாட்டேன்...''

''என்ன உளர்றீங்க?''

''என்ன பண்றது, உன் அழகு என்ன உளறக்கூட வெச்சுடுச்சுன்னாப் பாத்துக்கோயேன்.''

என்ன இவன் உண்மையிலேயே உளறியல்லவா கொட்டுகிறான்.

என்னவாயிற்று இவனுக்கு. ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறான்.

அதே நேரம் ''சரி நாளைக்குப் பாக்கலாம்'' என்று நிகிலேஷ் காரில் ஏறப்போக ''எனக்கு உங்களப் பாக்கவே



வேண்டாம்'' என்று எரிச்சலுடன் மொழிந்தாள் அனுரேகா.

ஒருவிதமான புரிந்து கொள்ள முடியாத பார்வையுடன் அடுத்த சில வினாடிகளில் அவன் கிளம்பியே இருக்க, வீட்டை நோக்கித் திரும்பினாள்.

அப்படித் திரும்பியவள் வீட்டு வாசற் படியில் தாய் நின்றிருக்கக் கண்டு முக பாவனையை இயல்பாக்கிக் கொண்டாள்.

''ஏன் இப்படிப் பண்ற?''

.............

''என்ன பாக்கற?''

''என்னமா சொல்றீங்க?''

''திரும்பவும் ஒண்ணுமே தெரியாதவ மாதிரி கேக்காத.''

''நிஜமாவே தெரியாம தான் கேக்கறேன். சொல்லுங்க என்ன விஷயம்?''

''நீ பண்றது உனக்கே நல்லார்க்கா?''

''ஏன் நான் அப்பிடி என்ன செஞ்சேன்?''

''அந்தத் தம்பி இருக்கும்போது ஏன் முகத்த அப்பிடித் தூக்கி வெச்சுட்டிருந்த?''

''நானா? இல்லையே.''

''பொய் சொல்லாத.''

''நிஜம்.''

''நாங்க உன்ன இந்த மாதிரி வளர்க்கவே இல்லமா பாத்துக்கோ.''

அப்படிச் சொல்லி விட்டுத் தாய் உள்ளே சென்றிருக்க எதுவும் தோன்றாமல் அப்படியே நின்று விட்டிருந்தாள் அனுரேகா.

தானுண்டு தனது வேலையுண்டு என்றிருக்கும் தனக்கு ஏன் இப்படியொரு வேதனை.

சரிதான்.

நீ நினைப்பதைப் போன்ற பெண் நானில்லை என்பதை இனி அந்த நிகிலேஷிடம் முகத்திலடிப்பது போல வெளிப்படையாகவே சொல்லி விட வேண்டியது தான்.

அப்படியும் மாறா விட்டால் ஜாடை மாடையாக வேனும் அவனுடைய தாயிடம் அதாவது விசாலாட்சி ஆன்ட்டியிடம் சொல்லவும் தான் தயங்கக் கூடாது.

அப்படியொரு முடிவுக்கு வந்த பின்னரே அனுரேகா வால் ஓரளவிற்கேனும் நிம்மதியாக இருக்க முடிந்த தெனலாம்.

ஆனால் அதற்கெல்லாம் அவசியமே இல்லாமல் போகப் போகிறது என்பது அப்பொழுது அவளுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அது மட்டுமா, அதற்கு மேலும் மற்றவர்கள் ஆட்டு விக்கத் தான் பொம்மையாக ஆட நேரிடும் என்பதும்,

# 7



சில நாட்கள் சென்றிருந்தன.



அனுரேகாவின் தந்தையும் வெளியூர் பயணத்தை முடித்துக் கொண்டு திரும்பியிருந்தார்.

அப்படித் திரும்பியிருந்தவர் தன்னிடம் இயல்பாய் பேசாதது அனுரேகாவின் கவனத்தில் படத் தவற வில்லை.

தந்தைக்கு என்ன ஆயிற்று.

ஏன் இப்படித் தீவிரமான யோசனையுடன் காணப் படுகிறார்.

''அனு.''

தந்தை அவராகவே அழைக்க அருகில் சென்றாள்.

''என்ன டாடி?''

''ஏதாவது முக்கியமான வேலையா இருக்கியாம்மா?''

''ஏன் டாடி, என்ன விஷயம்?''

''ஏன்னா உங்கிட்ட கொஞ்சம் பேசணும்.'' என்று தாயும் வர ''என்னாச்சு பீடிகையெல்லாம் ரொம்ப பலமா இருக்கே'' என்று ஆவலுடன் பெற்றவர்களைப் பார்த்தாள் அனுரேகா.

''அது ஒண்ணுமில்லம்மா...''

ஏதோ சொல்ல வந்த தந்தை சற்றே தயங்க, ''அட என்னாச்சு உங்களுக்கு சந்தோஷமான விஷயத்தச் சொல்ல இவ்வளவு தயங்கறீங்க'' என்று தானே விஷ யத்தைச் சொன்னார் தனலட்சுமி.

அதைக் கேட்ட அனுரேகாவிற்கு மிகுந்த கோபம் வந்து விட்டிருக்க, அதை வெளிப்படையாகவே காட்டி னாள்.

''என்ன விளையாட்றீங்களா? இதெல்லாம் எங்கிட்ட வேண்டாம் சொல்லிட்டேன்...''

''எவ்வளவு சந்தோஷமான விஷயம், ஏன் இப்படி எரிஞ்சு விழற அனு?''

தாயின் கேள்வியில் மீண்டும் நடப்பிற்கு வந்திருந்த அனுரேகா ''எனக்கு இதுல இஷ்டமில்ல'' என்றாள்.

''ஏன், எதனால?''

மீண்டும் தனலட்சுமியே கேட்க ''இதுக்கெல்லாம் என்ன காரணம் சொல்ல முடியுமாம்?'' என்று கேட்டாள்.

''இருக்கறத சொல்லு.''

''பிடிக்கல அவ்வளவுதான்.''

''அதான் ஏன்?''

''தெரியல.''

''என்ன அனும்மா நீ. சின்னக் குழந்ததனமா காரணமே இல்லாம மறுத்தா எப்பிடி.''

.........

''அட என்னங்க நீங்க, அவதான் புத்தியில்லாமப் பேசிட்டிருக்கான்னா நீங்களும்...''

''வேண்டாம், எனக்கு இதுல சம்மதமில்ல இனிமேல் யாரும் இதப்பத்திப் பேசாம விட்டுடுங்க'' என்று ஒரே யடியாக முடித்து விட்டிருந்தாள் அனுரேகா.

''ம் சொல்ல மாட்ட, உன் தகுதிக்கு பத்தோ, பதி னஞ்சோ மாச சம்பளத்துக்குக் கையேந்திட்டிருக்கறவனா இல்லாம கோடீஸ்வர சம்பந்தம் இல்ல அமைஞ்சிருக்கு உனக்கு கசக்கத்தான் செய்யும்.''



''தனம்.''

கோபமான கணவனின் அதட்டலில் ''ம் என்னச் சொல்லுங்க, தேடி வந்த சொர்க்கத்தக் காலால எட்டி உதைக்கிறாளே அவளக் கேளுங்க பாக்கலாம்...''

''எது எப்படியோ, இது மனசு சம்பந்தப்பட்ட விஷயம் எப்பக் குழந்தையே வேண்டாம்னு சொல்றாளோ...''

''ம் இப்படியே சொல்லிட்டிருங்க, இப்படி சொல்லிச் சொல்லித் தான் அவ உருப்படாமப் போயிட்டிருக்கா'' என்று தனலட்சுமி ஆதங்கத்துடன் கண்களைத் துடைத் துக் கொள்ள, செய்வதறியாது திகைத்தார் சேதுராமன்.

விஷயம் இவ்வளவுதான்.

அனுரேகாவைத் தனக்கு மிகவும் பிடித்திருப்பதாகவும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகவும் தனது பெற்றவர்களின் வாயிலாக அனுரேகாவின் பெற்றவர் களுக்குத் தெரியப்படுத்தியிருந்தான் நிகிலேஷ்.

அதைக் கேட்டதில் மகளுக்குப் பெரிய இடத் திலிருந்து தான் மாப்பிள்ளை அமைய வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்த தனலட்சுமிக்கு தலைகால் புரியாத ஆனந்தம்.

ஆனால் அது தனலட்சுமிக்கு மட்டும் தான்.

சேதுராமனுக்கோ மகளின் விருப்பமொன்றே அனைத் தையும் விட முக்கியமானதாய் இருந்தது.

மகளிடம் அதைக் கேட்டுத் தெரிந்து கொள்ள ஒரு விதக் கோபமென்றால், மேலும் மகள் அவளாகச் சொல்ல வருவதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் தான் நினைப்பதே நடந்தாக வேண்டுமென்பதைப்

போல நடந்து கொண்ட மனைவியின் மேல் எரிச்சல் தான் வந்தது அவருக்கு.

அதை வெளிப்படுத்தவும் செய்தார்.

ஆனால் அதற்கு முன் கண்ணீர் சிந்தவே தொடங்கி விட்டிருந்தாள். அவருடைய மனைவி தனலட்சுமி.

நல்ல இடம், நன்கு தெரிந்த பழக்கப்பட்ட மனிதர்கள், எந்தக் குறையுமில்லாத ராஜா போன்ற மாப்பிள்ளை, எல்லாவற்றிற்கும் மேலாக செல்வத்திலும் செல்வாக் கிலும் தாங்களே நினைத்தாலும் கூட எட்டிப் பிடிக்க முடியாத உயர்ந்த சம்பந்தம்.

''இதெல்லாம் மகளுக்குத் தெரியாததில் ஆச்சரிய மில்லை. உங்களுக்குமா?'' என்று மிகுந்த ஆதங்கத் துடன் கேட்ட மனைவியைப் பார்த்தார்.

''நீ சொல்றதெல்லாம் சரிதான். ஆனா எல்லாத்துக்கும் மேல முக்கியமான தகுதியொன்று வேணும். அதுதான் மனப் பொருத்தம் அதுவே இங்க இல்லையே.''

''அது கல்யாணமாயிட்டா தன்னப் போல வரும் உங்களுக்கே அது புரியலேன்னா இனி மகள சொல்ல என்ன இருக்கு...''

மனைவி வருத்தப்படுவதற்காக என்றில்லா விட் டாலும் மறுக்க என்ன காரணமென்று மகளிடமே கேட்டார் அவர்.

அவர் எண்ணிப் பயந்தது போல மகளின் மறுப்புக்கு வேறு எந்தக் காரணமும் இல்லாதது அவருக்கு மிகுந்த நிம்மதியைக் கொடுத்திருந்ததென்று தான் சொல்ல வேண்டும்.



காரணமே இல்லாமல் மறுப்பதில் அர்த்தமில்லை யென்று மகளுக்கும் எடுத்துச் சொன்னார்.

அதையே மேலும் சிலமுறை சொன்னதின் விளைவு சரிதான் உங்கள் விருப்பம் என்னும் மன நிலைக்கு வந்திருந்தாள் அனுரேகா.

இது வாழ்க்கை விஷயம்.

அப்படிப் போனால் போகிறதென்று விட்டுக் கொடுக்கக் கூடியது அல்ல என்பதும் புரியாமலில்லை.

ஆனாலும் அவளுடைய இம்மென்ற ஒரு தலையசைப் பிலேயே திருமண ஏற்பாடுகளனைத்தும் ஜரூராய் நடக்கத் தொடங்கி விட்டிருந்தன.

ஏனோ அனைவரும் மிகவும் சந்தோஷமாக இருக்க தான் மட்டும் பலிகடா ஆகி விட்டதைப் போல உணரத் தொடங்கி விட்டிருந்தாள்.

அதிலும் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் தன்னைத் தலை மேல் தூக்கி வைத்துக் கொள்ளாத குறையாக நடந்து கொண்டதில் எரிச்சல் இன்னும் அதிகம் தான் ஆனது.

இடையில் இரண்டு முறை நிகிலேஷிடமும் பேச நேர்ந்தது.

அதுகூட சம்பிரதாய நடைமுறைகள் சிலவற்றிற்காகத் தான்.

அந்த நேரத்தில் அனாவசியப் பேச்சுக்கள் எதற்கும் ஏன் அவசியமானவற்றிற்கே இடமிருக்கவில்லை.

ஒருவேளை நிகிலேஷ் தான் வேண்டுமென்றே தவிர்த்தானோ எனும் எண்ணம் அனுரேகாவிற்கு.

தன்னிடம் அவன் ஒரு வார்த்தை கூடப் பேசாததில் அது உறுதியும் ஆனது.

இப்படி எந்த விதத்திலுமே பொருத்தமில்லாத விரும்பாத, முக்கியமாகத் தான் வெறுக்கும் ஒருவனா தனக்குக் கணவனாக வரவேண்டுமென்று நினைத்ததில் வெறுப்பும் வேதனையும் மட்டுமே இருந்த இடத்தில் இப்பொழுது விரக்தியும் சேர்ந்து கொண்டு விட்டிருந்தது அனுரேகாவிற்கு,

இதற்கெல்லாம் சேர்த்து வைத்துப் பிறகு பார்த்துக் கொள்கிறேனென்று எப்பொழுதும் போல மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

அவன் செய்த தவறை மனதார உணர்ந்து வேதனைப் பட வேண்டும்.

மற்றவர்களுக்கும் மனம் இருக்கிறது.

அதில் விருப்பம் ஆசை எதிர்பார்ப்புகள் என அனைத்தும் இருக்கிறது என்பதைக் காட்ட வேண்டும்.

தன் வழியில் வந்து தனது விருப்பத்திற்கு சற்றும் மதிப் பளிக்காததோடு அவனுடைய விருப்பத்திற்கும் தன்னை ஆட்டுவித்த மகிழ்ச்சியனைத்தும் காணாமல் போய் எதற்கடா இப்படிச் செய்தோமென்று அவன் மனதளவில் துடிக்க வேண்டும்.

அப்படிச் செய்தால் தான் இனியேனும் மற்றவர்களின் வாழ்க்கையில் அவர்களுடைய அனுமதியில்லாமல் தலையிட யோசிப்பான்.

அப்படியெல்லாம் நினைத்துக் கொண்ட பிறகு தான் ஓரளவேனும் அனுரேகாவால் இயல்பாக இருக்க முடிந்த தெனலாம்.



திருமண நாளும் இனிதே விடிந்தது.

பார்ப்பவர்கள் அனைவரும் வியக்கும் வண்ணம் திருமணமும் படு விமரிசையாக நடந்து முடிந்தது.

அந்த நிமிடங்களில் மற்றதனைத்தும் மறந்து போக இனி எனது சுக துக்கம் சந்தோஷம் என அனைத்தும் உன் னோடு தான் என்பதைப் போன்றதொரு உன்னதமான மனநிலையில் கணவனின் கரம் பற்றியிருந்தாள் அனுரேகா.

தொடர்ந்து சிறிது நேரமும் கூட அந்த நிலையே நீடிக்கவும் செய்தது.

தொடர்ந்து பெரியவர்கள் பெற்றவர்களின் பாதங் களில் பணிந்து ஆசி பெற்றுக் கொண்டனர்.

தன்னைப் பெற்றவர்களின் பாதங்களில் பணிந்த போது மட்டும் மீண்டும் அனுரேகாவிற்கு மனம் இறுகிப் போனது.

சொந்தப் பெண்ணின் விருப்பத்தை விடக் கூட உங் களுக்கு பணம் பணக்கார சம்பந்தம் இவை தான் முக்கிய மாகிப் போயிற்று இல்லையா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

சாஸ்திர சம்பிரதாயங்களென்றெல்லாம் பார்த்த பெரியவர்களின் மனம் நோகாதவாறு புன்னகையுடன் எடுத்துச் சொல்லி விட்டு முக்கியமான வேலையிருக்கிற தென்று அன்று மாலையே தனது மனைவியுடன் கிளம்பி விட்டிருந்தான் நிகிலேஷ்.

மகனின் குணமறிந்த விசாலாட்சி தம்பதியருக்கு அதில் பெரிதாக ஒன்றும் தோன்றவில்லை என்றாலும்

அனுரேகாவின் தாய் தந்தைக்குத் தங்களுடைய மாப்பிள்ளையின் செயல் மிகப்பெரிய ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டிருந்ததென்னவோ உண்மை.

ஆனாலும் அதைத் துளியும் வெளியே காட்டிக் கொள் ளாமல் மற்றவர்களுடன் இணைந்து சிரித்த முகத்துடன் புதுமணத் தம்பதியை வழியனுப்பி வைத்தனர்.

பணக்கார மாப்பிள்ளை தானே வேண்டும் என்றீர்கள் அனுபவியுங்கள் என்பதைப் போன்ற மன பாவனை யுடன் எந்தவொரு உணர்ச்சியையும் வெளிக்காட்டாது இயல்பாக இருந்தாள் அனுரேகா.

மறறவர்களுக்கு எப்படியோ ஒரு சிறு ஆட்சேபணை கூட இல்லாமல் வெகு இயல்பாகத் தன்னுடன் கிளம்பி விட்டிருந்த மனைவியின் செய்கையில் நிகிலேஷிற்குக் கூட சற்று ஆச்சரியம்தான்.

ஆனாலும் சற்று கூர்ந்து கவனித்த போது அவனுடைய கழுகுப் பார்வைக்கு அனைத்தும் விளங்கிப் போயின.

எப்படியோ இதுவே நல்ல தொடக்கமாக இருந்தால் சரிதான் என்று மனதார மனதிற்குள் சொல்லிக் கொண்டான்.

# 8



அன்று மாலையே விமானத்தின் மூலமாக சென்னை வந்து சேர்ந்திருந்தவர்கள் அடுத்த ஒரு மணி நேரத்தில் விமான நிலையத்தில் தயாராக நிறுத்தப்பட்டிருந்த



காரை எடுத்துக் கொண்டு வீடு வந்தும் சேர்ந்திருந் தனர்.

அவர்கள் வருவதற்கு முன்னரே தயாராக இருந்த வர்கள் ஆலம் சுற்றி புதுமணத் தம்பதியை வீட்டிற்குள் அழைத்துக் கொண்டனர்.

உள்ளே வந்ததும் திரும்பி மனைவியைப் பார்த்தான் நிகிலேஷ்.

அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொள்ள மாட்டாதவளாய்ப் பார்த்தாள் அனுரேகா.

''குளிச்சு ஃப்ரஷ் ஆயிட்டு வா டிபன் சாப்புடலாம். மணி ஏழாயிடுச்சு'' என்றான்.

அது சரி இனி அது ஒன்று தான் குறைவு. திட்டம் போட்டு சதி வேலை செய்தாற் போல வேரோடு பிடுங்கிக் கொண்டு வந்து விட்டுக் கரிசனம் காட்டுகிறா னாமே,

யாருக்கு வேண்டும் இவனுடைய கரிசனம்.

ஆனாலும் அவளையறியாமலேயே தலையை ஆட்டி விட்டிருந்தாள்.

அவனுக்காக என்றில்லா விட்டாலும் அதிகபட்ச நகைகள் பட்டுப்புடவை புது சூழல், என அனைத்தும் ஒன்று சேர்ந்து. மன இறுக்கமாய் கசகசவென்றிருக்க சென்று குளித்து விட்டு மெல்லிய க்ரேப் சேலை ஒன்றை அணிந்து கொண்டு வெளியே வந்தாள்.

வேண்டுமென்றே மிகவும் மெதுவாகக் கிளம்பி பொறுமையாக வெளியே வந்தவள் ஹால் சோபாவில் தனக்காகக் காத்திருந்த கணவனை எதிர் கொண்டாள்.

அவனும் குளித்து முடித்து வேறு ஆடையில் இருந்தது தெரிந்தது.

''சாப்புடப் போலாமா?'' என்று கேட்டவனின் பார்வை தன்னை ஒரு முறை முழுமையாகக் கணக்கிட, அந்த வினாடிகளில் தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள சற்று சிரமப்பட்டுத் தான் போனாள்.

''எனக்குப் பசியில்ல...''

வேண்டுமென்றே பொய் சொன்னாள்.

''பசிக்கற அளவுக்கு சாப்டுட்டு வந்துடு'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தவனைத் தொடர்ந்து தானும் சாப்பிடச் சென்றாள் அனுரேகா.

எதைப் பற்றியும் யோசிக்காமல் சாப்பிடத் தொடங்கியிருந்தவளுக்கு அதற்குப் பிறகு தான் பசி தெரிந்தது.

சொன்னதற்கு நேர் மாறாகச் செய்கிறோமே, தன்னைப் பற்றி என்ன நினைப்பான் என்று நினைத்துக் கொண்டே உண்டு முடித்தவள் எழுந்து சென்று கைகளைக் கழுவிக் கொண்டு மீண்டும் ஹாலுக்கு வந்திருந்தாள்.

வந்தவள் அவள் பாட்டுக்கு அங்கிருந்த மாத இதழ் ஒன்றை எடுத்துப் புரட்டத் தொடங்கியிருந்தாள்.

கைதான் அனிச்சையாக அப்படிச் செய்ததே தவிர மனம் பாட்டுக்குக் கிடந்து தவித்துக் கொண்டிருந்தது.

இனி அடுத்து என்ன என்ற எண்ணமே மனதிற்குள் சங்கடத்தை ஏற்படுத்தியிருந்தது.

''அனு.''



கணவனின் அழைப்பில் முடிந்த அளவு தன்னை இயல்பாகக் காட்டிக் கொண்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''ஆபீஸ்ல ஒரு வேலை, அத முடிச்சுட்டு வர எவ்வளவு நேரமாகும்னு தெரியல. முடிஞ்ச அளவுக்கு சீக்கிரம் வர முயற்சி பண்றேன், எனக்காக பாத்துட்டிருக்காம நீ போய் படுத்துக்கோ.''

''ஏதாவது வேணும்னாலோ, இல்ல தெரிஞ்சுக்கணும்னாலோ அன்னம்மாவக் கேளு. இருபத்தஞ்சு வருஷமா நம்ம வீட்ல தான் வேல செஞ்சட்டிருக்காங்க. நல்ல நம்பிக்கையானவங்க. அதுக்கும் மேல வீட்டு வேலைக்கு எடுபிடிக்குன்னு நாலு பேர், தோட்ட வேலைக்கு ஒருத்தர், டிரைவர் ரெண்டு பேர், செக்யூரிட்டின்னு பத்து பேருக்கும் மேலயே எப்பவும் வீட்ல இருப்பாங்க. புது இடம்னு பயந்துக்க வேண்டிய அவசியமில்ல. எல்லாத்துக்கும் மேல உனக்கு, எப்ப, என்ன வேணும்னாலும் என்னக் கூப்புட்லாம்'' என்று சொல்ல வந்தவன் அதை மட்டும் சொல்லாமல் விடுத்தான்.

தன்னுடைய தயக்கம் தனக்கே ஆச்சரியமாய் இருக்க, அதற்கு மேல் நிற்காமல் கிளம்பி விட்டிருந்தான்.

சரிதான், துரைக்கு மற்றவர்களை அடக்கியும் ஆட்டி வைப்பதும் தானே வழக்கம் என்று ஏளனத்துடன் நினைக்கத் தோன்றியது அனுரேகாவிற்கு.

மேலும் அருகில் வரட்டும் பேசிக் கொள்ளலாம் என்பதைப் போல ஏதேதோ யோசித்து வைத்திருந்தவளுக்கு கணவனின் இந்தச் செய்கையில் ஏமாற்றமே மிஞ்சியது.

ஆனாலும் கடந்த சில நாட்களாக முடிவே இல்லாத எண்ண ஓட்டங்களுடன் போராடி மனதளவில் களைத்துப் போயிருந்தவளுக்கு, பல நாட்களுக்குப் பிறகு வயிறு நிறைய உண்டதனால் ஏற்பட்ட உடல் சோர்வும் சேர்ந்து கொள்ள மெல்ல தூக்கம் கண்களைத் தழுவத் தொடங்கியிருந்தது.

தூய வெண்ம நிறத்தினாலான நுரை மெத்தையில் விழுந்தவள் தான், நன்கு தூங்கிப் போய் விட்டிருந்தாள்.

மீண்டும் அவள் விழித்தது மறுநாள் காலையில் ஆறு மணிக்குத்தான்.

விழித்து எழுந்தவளுக்குக் கணவன் அலுவலகத்திலிருந்து வந்து விட்டானா, இப்பொழுது அவன் எங்கே என்று எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

நிச்சிந்தையான தூக்கம் உடல், மனம் இரண்டையும் புத்துயிர் பெறச் செய்திருந்தது தெரிந்தது.

தயக்கத்துடன் என்றாலும் எழுந்து சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தாள்.

''எடுத்துக்கோங்கம்மா'' என்று அன்னம்மா காபி டம்ளருடன் வந்து நிற்க ஒரு சிறு தயக்கத்திற்குப் பிறகு எடுத்துக் கொண்டாள்.

கணவனுக்குக் கொடுத்தாயிற்றா என்று கேட்க வேண்டுமோ.

தான் அப்படி நினைப்பதற்கும் கணவன் வீட்டிற்குள் வரவும் சரியாக இருக்க, ''ஐயாவுக்கும் காபி எடுத்துட்டு வர்றேம்மா'' என்று அங்கிருந்து நகர்ந்தாள் அன்னம்மா.



யதேச்சையாகக் கணவனை நிமிர்ந்து பார்த்தவளுக்கு அப்பொழுது அவனும் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது.

''நல்லாத் தூங்கினியா?'' என்ற கணவனின் கேள்விக்கு ஆமாம் என்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

''வா உக்காரு.''

சிறு தயக்கத்திற்குப் பிறகு அமர்ந்தவள். அதற்குப் பிறகு தான் கணவனின் முகத்தை நன்றாகப் பார்த்தாள்.

முகத்தில் ஏன் இவ்வளவு அசதி,

என்னவாயிற்று.

ஏதாவது பிரச்சனையோ....

மனம் தான் கேள்விகளை அடுக்கியதே தவிர ஒன்று கூட வார்த்தைகளாக வெளிவரவில்லை.

அதே நேரம் அன்னம்மா கணவனுக்கு காபியைக் கொண்டு வந்து கொடுக்க, ''உங்க காபிய சாப்புட்டு எவ்வளவு நாளாச்சு அன்னம்மா. நானும் எத்தனையோ இடத்துல பாத்துட்டேன். உங்க காபியோட டேஸ்ட் எங்கயுமே வந்ததில்ல'' என்று உணர்ந்து சொன்னான்.

முதலாளி ஐயாவின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளில் சந்தோஷமே உருவாகிப் போனாள் அன்னம்மா. ''ரொம்ப நன்றிங்கய்யா'' என்று உணர்ந்து சொன்னாள்.

கணவனிடம் ஒரு புது முகத்தைக் கண்டாள் அனுரேகா, ஆனாலும் உடனே இதற்கெல்லாம் நானொன்றும் மயங்கிவிட மாட்டேன் என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

''புது இடத்துல தனியா இருக்கற மாதிரி கஷ்டமா இருந்திருக்குமில்லையா?''

கணவனின் கேள்வியில் ''அப்படிக் கரிசனத்துடனான கணவனின் கேள்வியில் ''அப்படிக் கஷ்டப்படணும்னே எல்லாத்தையும் செஞ்சுட்டு இதென்ன கேள்வின்னு தான் புரியல'' என்றாள்.

''கொஞ்சம் புரியற மாதிரி பேசினா நல்லார்க்கும்.''

''நிஜமாவே புரியாதவங்களுக்கு விளக்கிக் கூடச் சொல்லலாம், நடிக்கறவங்களுக்கு எப்பிடி...'

''நடிக்க வேண்டிய அவசியம் எனக்கில்ல.''

''அது சரிதான். முகத்துலடிக்கிற மாதிரி செயல்லயே காட்றவங்களுக்கு நடிக்க வேண்டிய அவசியமில்ல தான்.''

''எங்கிட்ட கொஞ்சம் யோசிச்சுப் பேசறது நல்லது.''

''இல்லன்னா கழுத்த நெறிச்சுடுவீங்களா?''

''ஏன் இப்புடியெல்லாம் பேசற?''

''பின்ன எப்படிப் பேச முடியும்? அதுவும் என்னால சும்மா பேச மட்டும் தான முடியும் உங்கள மாதிரி செயல்ல எதையும் காட்ட முடியாதே...''

''ஏன் அனு...''

கணவன் ஏதோ கேட்க வருவது புரிந்தாலும், அதற்கு மேல் அங்கே இருந்தால் எங்கே உடைந்து விடுவோமா என்று தோன்றி விட்டிருக்க ''நான் குளிக்கணும்'' என்று எழுந்து உள்ளே வந்து விட்டிருந்தாள்.

சொன்னது போலவே குளிக்கச் சென்றவள் வேண்டு மென்றே நேரத்தைக் கடத்திவிட்டு வெகுநேரம் கழித்தே வெளியே வந்தாள்.



அப்படி வந்தவள் மீண்டும் எங்கோ செல்லத் தயாராகக் கிளம்பியிருந்த கணவனை அசுவாரஸ்யமாகப் பார்த்தாள்.

''நான் கம்பெனிக்குக் கிளம்பறேன், வேல முடிஞ்சதும் வந்துடுவேன். அதுக்கு முன்னாடி டிபன் சாப்பிடலாம் வா'' என்று மனைவியை அழைத்தான் நிகிலேஷ்.

''நான் அப்புறமா சாப்புட்டுக்கறேன்.''

''இப்பவே மணி எட்டரைக்கு மேலாச்சு.''

''ஒன்பது மணிக்கு மேல சாப்புட்டுக்கறேன்.''

''சரிதான் சாப்டுட்டு வீட்ட சுத்திப் பாரு. தோட்டத் துக்குள்ள போனாலும் நல்லாப் பொழுது போகும். அந் தளவுக்கு பெரிய தோட்டம். அதுவும் பிடிக்கலேன்னா டிரைவரக் கார எடுக்கச் சொல்லி எங்காவது வெளிய போயிட்டு வா...''

தான் சொல்வதை வேண்டா வெறுப்பாகக் கேட்டபடி நின்றிருந்த மனைவியைக் கண்டவன், ''சரி நான் கிளம்பறேன்'' என்று கிளம்பி விட்டிருந்தான்.

அந்த நேரத்தில் ஒன்றும் தோன்றா விட்டாலும் கணவன் சாப்பிடாமல் சென்று விட்டிருந்தது அதற்குப் பிறகு மனதை உறுத்தவே செய்தது.

''ஐயா சாப்பிடாம கிளம்பிட்டாரு போலிருக்குமா'' என்று அன்னம்மா கேட்டதற்கும் அவளால் பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

''நீங்க வாங்கமா சாப்புட்லாம்.''

''பசியில்லமா வேண்டாம்.''

"அச்சோ என்னமா இப்படிச் சொல்றீங்க, ஐயா தொழில் சம்பந்தமா வெளிய சாப்புட வேண்டியிருக்கும்னு அடிக் கடி இப்படி தான் செய்வார். அதுக்காக நீங்க வயித்தக் காயப் போடலாமா?"

கணவன் சாப்பிடாமல் சென்று விட்டதால் தான் தான் உணவை மறுக்கிறோமென்று அன்னம்மா புரிந்து கொண்டது அனுரேகாவிற்கு ஒருவிதக் குற்ற உணர்ச் சியை ஏற்படுத்தியிருந்தது.

உடனே கணவன் ஏன் சாப்பிடாமல் சென்றான் என்னும் விதத்தில் எண்ணம் ஓடியது.

இது என்ன புதுக் கொடுமை.

ஏற்கனவே செய்தது போதாதென்று இப்படியெல்லாம் கூட வாதித்தால் இனி என்ன செய்வது. இப்பொழுது தான் என்ன செய்ய வேண்டும், கணவனை அழைத்துப் பேச வேண்டுமோ? சாப்பிடாமல் சென்றது குறித்துக் கேட்க வேண்டுமா?

இந்த நல்ல பெண்மணி அதை எதிர்பார்ப்பார் போலல்லவா தெரிகிறது.

"என்னமா, வாங்கமா சாப்பிட்லாம்."

"வர்றேம்மா, நீங்க போங்க..."

அனுரேகா சொல்ல நிம்மதி கலந்த ஒரு பாவனை யுடன் நகர்ந்தாள் அன்னம்மா.

என்ன செய்வதென்று தோன்றாமல் சிறிது நேரம் அப்படியே அமர்ந்து விட்டிருந்தவள் மீண்டும் அழைக்க அன்னம்மா வந்து விட்டால் என்ன செய்வதென்று எழுந்து சாப்பிடச் சென்றாள்.



மிகுந்த மன உளைச்சலுக்குப் பிறகு இந்த சாப்பாட்டு விஷயங்களையெல்லாம் தான் கண்டு கொண்டது போலவே காட்டிக் கொள்ளக் கூடாதென்ற முடிவுக்கு வந்திருந்தாள்.

என்னதான் அப்படியொரு முடிவுக்கு வந்து விட்டிருந் தாள் என்றாலும் அதற்குப் பிறகும் ஏனோ அவளால் இயல்பாக இருக்க முடியவில்லை.

தனக்கும் சாப்பிடவே பிடிக்கவில்லை என்றாலும் அன்னம்மாவிற்காகச் சென்று உண்டதாகப் பெயர் செய்து விட்டு வந்திருந்தாள்.

தெளிந்த நீரோடை போல எவ்வளவு இயல்பாகச் சென்று கொண்டிருந்தது வாழ்க்கை.

நிம்மதியைக் கெடுப்பதற்கென்றே எங்கிருந்து வந்து சேர்ந்தான்.

நிம்மதியைக் கெடுத்தது மட்டுமா,

தங்கக் கூட்டிலல்லவா கொண்டு வந்து சிறை வைத்து விட்டான்.

என்னதான் தங்கத்தினால் ஆனதென்றாலும் சிறை சிறை தானே.

நினைக்க, நினைக்க மனம் ஆற மறுத்தது.

கோபமும், துக்கமும் மேலும் மேலும் பொங்கிக் கொண்டு வந்தன.

ம்கூம், இவனை சும்மா விடக் கூடாது.

விடவே கூடாது.

ஏதாவது வாய்ப்புக் கிடைக்கட்டும். அப்பொழுது பார்த்துக் கொள்ளலாமென்று அதற்கான நேரம் பார்த்துக் காத்திருக்கலானாள் அனுரேகா.

# 9



மதியம் பன்னிரண்டு மணிக்கு கம்பெனியிலிருந்து வீடு வந்து சேர்ந்திருந்தான் நிகிலேஷ்.

வந்தவன் ஆவலாக மனைவியைத் தேடினான்.

ஏனோ தான் செய்வது சற்றும் முறையல்ல என்று அவனுக்கே தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

மனைவியின் கோபம் நியாயமானது தான்.

என்னதான் இப்போதைக்குத் தள்ளிப் போட்டாலும் இது பேசிச் சரி செய்யப்பட வேண்டிய ஒன்றே.

ஏனோ பார்த்த முதல் பார்வையிலேயே அனுரேகாவை மிகவும் பிடித்துப் போய் விட்டிருந்தது நிகிலேஷுக்கு.

கடந்த சில வருடங்களாக வீட்டிலும் திருமணம் செய்து கொள்ளச் சொல்லி வற்புறுத்திக் கொண்டே இருந்ததும் சேர்ந்து கொள்ள, இந்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது. அனுரேகாவையே தனது வாழ்க்கைத் துணையாக்கிக் கொள்ள வேண்டுமென்ற முடிவுக்கு வந்திருந்தான்.

அனுரேகாவின் மீது அவனுக்கிருந்த நேசம் உடனே அவனுடைய மனதைப் பெற்றவர்களிடமும் திறந்து காட்டச் செய்திருந்தது.



அதுவரை தான் அவன் செய்தது,

அதற்குப் பிறகு அவனே எதிர்பாராத வண்ணம் அனைத்தும் சுபமாய் நடந்தன.

ஆனாலும் ஒன்று மட்டும் கடைசி வரை ஏன் இப்பொழுதும் கூட அவன் மனதை உறுத்திக் கொண்டே தான் இருக்கிறது.

அது தன்னை மணக்க சம்மதமா என்று அனுரேகாவிடம் அவன் ஒரு வார்த்தை கேட்காததே.

பெரிய பெரிய விஷயங்களையெல்லாம் கடுகாய் நினைத்து செய்து முடிப்பவனுக்கு ஏனோ அதற்கு மட்டும் தைரியம் இருக்கவில்லை.

தான் கேட்கப் போய் எங்கே எனக்கு சம்மதமில்லையென்று அனுரேகா சொல்லி விடுவாளோ என்பதே அவனுடைய அந்தப் பயத்திற்குக் காரணம்.

அப்படிச் சம்மதமில்லாமல் இருந்திருந்தால் இன்று தனது மனைவியாகவே ஆகியிருப்பாளா இதென்ன முட்டாள்த்தனமான பயமென்று மனம் ஒரு பக்கம் ஏளனம் செய்தாலும், இன்னொரு பக்கம் முன்னை விட கூட நிலைமை மோசம் தான் ஆகியிருந்தது.

எது எப்படியோ இனியும் தள்ளிப் போடாமல் மனைவியிடம் இன்றே பேசி விட வேண்டியது தானென்ற முடிவுக்கு வந்திருந்தவன் தொடர்ந்து மனைவியைத் தேடினான்.

என்ன தேடியும் வீட்டிற்குள் மனைவியைக் காணாது போக அப்பொழுது அங்கு வந்த அன்னம்மாவிடம் விசாரித்தான்.

''அம்மா எங்க அன்னம்மா, எங்காவது வெளிய போயிருக்காங்களா?''

''தோட்டத்துக்குள்ள மரத்தடில உக்காந்து என்னவோ கதப்புத்தகம் படிச்சுட்டிருந்தாங்கய்யா, இப்பதான் அதுவும் அம்மா கேக்கலையேன்னு நானே தான் கொண்டு போய் காபி குடுத்துட்டு வந்தேன். மதியம் பசிக்கும் போது நானே வந்து சாப்புட்டுக்கறேன். எனக்காகப் பாத்துட்டிருக்க வேண்டாம்னு சொன்னாங்கய்யா. பெரியம்மா மாதிரி சரித்திர புக்கெல்லாம் ரொம்ப விரும்பிப் படிப்பாங்க போலிருக்குய்யா. நிறைய புத்தகங்கெல்லாம் அடுக்கி வைச்சிருந்த புத்தக ரூமப் பாத்ததும் அவங்களுக்கு ரொம்ப சந்தோஷமாயிடுச்சுங்க. நான் வேணும்னா போய் நீங்க வந்துட்டிங்ன்னு அம்மாவ அழைச்சுட்டு வரட்டுங்ளா?''

''வேண்டாம் அன்னம்மா, நானே போய்ப் பேசிக் கறேன்.''

''நானும் கூட அவங்களுக்குப் புடிக்குமோ என்னவோன்னு தான் புக் ரூமக் காட்டினேன்யா, ஆனா அம்மாவுக்கு துள்ளிக் குதிக்காத குறையா ரொம்ப சந்தோஷம். இனி நீங்க இல்லாத நேரத்துல அம்மா தனியா என்ன பண்ணுவாங்கன்ற கவலையே உங்களுக்கு வேண்டாங் கய்யா. அந்த அளவுக்கு புத்தகத்த எடுத்தா அதுக்குள்ளேயே மூழ்கிப் போயிட்றாங்க...''

''அப்படியா அன்னம்மா, சரிதான் அப்ப நாம இப்ப அவங்கள தொந்தரவு பண்ண வேண்டாம். காலைல டிபனுக்கு வந்துடலாம்னு தான் போனேன். வேல பிஸில



நேரம் போனதே தெரியல. லஞ்ச் ரெடியாயிடுச்சா அன்னம்மா...''

''ஐயோ முக்கால்வாசிக்கும் மேல தயாராயிடுச்சுங் கய்யா, இன்னொரு பத்து நிமிஷம் கால் மணி நேரத்துல எல்லாத்தையும் எடுத்து டேபிள் மேல வெச்சுட்றேன். நீங்க போய் குளிச்சுட்டு வர்றதுக்குள்ள எல்லாமே ரெடியாயிடுங்கய்யா'' என்று அன்னம்மா திரும்ப, ''மெதுவா அன்னம்மா முக்கியமான வேல ரெண்டிருக்கு அத முடிச்சுட்டு குளிச்சுட்டும் வர எப்பிடியும் அரை மணி நேரத்துக்கு மேலாகும் ஒண்ணும் அவசரமில்ல'' என்று மீண்டுமொரு முறையும் குறிப்பிட்டுச் சொன்னான்.

காலையில் சாப்பிடாததோடு இப்பொழுதும் தனது முதலாளியையே வாயைத் திறந்து கேட்கச் செய்து எவ்வளவு பெரிய பாதகம் செய்து விட்டோமென்பதைப் போல வயதில் மூத்த அந்தப் பெண்மணி குற்ற உணர்ச்சியுடன் உள்ளே செல்ல, அது நிகிலேஷிற்கும் புரியாமலில்லை.

அன்னம்மாவின் குணம் தெரிந்தும் தான். இப்படிச் சொல்லியிருக்கக் கூடாதென்று தன்னைத் தானே நொந்து கொண்டான்.

குளித்து விட்டு மனைவியை நாடிச் சென்றான் நிகிலேஷ்.

அரவம் செய்யாமல் சற்றுத் தூரத்திலேயே நின்று பார்த்தவன், அன்னம்மா சொன்னது போல மனைவி வெகு மும்முரமாக புத்தகத்தில் மூழ்கியிருப்பதைக் கண்டான்.

ஏனோ தொந்தரவு செய்ய மனம் வராது போக, திரும்பி மீண்டும் வீட்டிற்குள் வந்திருந்தான்.

அவன் உள்ளே வரவும் அன்னம்மா சாப்பிட அழைக்கவும் சரியாக இருக்க சாப்பிடுவதற்காக சென்று அமர்ந்தான்.

அன்னம்மா பரிமாற சாப்பிட்டுக் கொண்டே ''காலைல அம்மா சாப்டாங்க தான அன்னம்மா'' என்று கேட்டான்.

''ஆமாங்கய்யா'' என்றவள் சும்மா சாப்பிட்டதாகப் பெயர் செய்ததைச் சொல்லவில்லை.

பாவம் அதைக் கேட்டால் இந்தத் தங்கமான மனிதனின் மனம் என்ன பாடு படுமென்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

''போதும் அன்னம்மா, நானே பரிமாறிக்கறேன் நீங்க போய் ஏதாவது வேலையிருந்தாப் பாருங்க.''

''அப்புறம் அன்னம்மா...''

''சொல்லுங்கய்யா.''

''அம்மாவ மதியம் நேரத்துக்கு வந்து சாப்பிடச் சொல்லிடுங்க. நேத்து நைட்டெல்லாம் சுத்தமாத் தூக்கமில்ல ஒரு குட்டித் தூக்கம் போட்டாப் பரவாயில்லைன்னு நினைக்கறேன்.''

''சரிங்கய்யா நான் பாத்துக்கறேன்.''

அன்னம்மா ஏதும் நினைத்து விடக் கூடாதென்று தோன்ற, ''சின்னப் பொண்ணு அன்னம்மா அதுவும் அம்மாகிட்ட செல்லமா வளர்ந்த பொண்ணு கொஞ்ச நாள்ல இங்க சூழ்நிலைக்குப் பழகிடுவாங்க'' என்றான்.



''அச்சோ அம்மா தங்கமுங்கய்யா எவ்வளவு அன்பா ஏன் என்ன உட்பட எல்லாரையுமே ரொம்ப கௌரவமா நடத்தறாங்க தெரியுமாங்கய்யா. இவ்வளவு ஏன் என்னக்கூட சாப்டாச்சாமான்னு கேக்கறாங்க. அழகுலயும் சரி குணத்துலயும் சரி உங்களுக்கு ஏத்த தங்கமான மகராசிங்கய்யா.''

விட்டால் அன்னம்மா இன்னும் சொல்லிக் கொண்டே போவாளென்பது புரிய ''சரிதான் அன்னம்மா உங்களுக்கே புடிச்சுப் போச்சுன்னா அப்புறம் சொல்லவா வேணும்'' என்று புன்னகையுடன் முடித்தான் நிகிலேஷ்.

மனைவி தன்னுடன் ஒருடல் ஈருயிராக இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்குமென்று ஏனோ அந்த நேரத்தில் மிகவும் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது அவனுக்கு.

அப்படி நினைத்தவனுக்கு உடனே சிரிப்பு வந்து விட்டிருந்தது.

வெறும் வார்த்தைக்கே இடமில்லாதபோது தான் சற்று அதிகப்படியாகத் தான் ஆசைப்படுகிறோம் என்றிருந்தது.

உண்டு முடித்தவன் மனம் கேட்காமல் மீண்டுமொரு முறையும் மனைவியைச் சென்று பார்த்தான்.

முன்பு போலவே அவள் அப்பொழுதும் புத்தகத்தில் மூழ்கிக் கிடக்க, அரவம் செய்யாமல் திரும்பி வந்து விட்டிருந்தான்.

வயிறு நிறைய உண்டதற்கும், முதல் நாள் இரவு சுத்தமாகத் தூங்காததற்கும் சேர்த்துக் கண்கள் தூக்கத்திற்காக இறைஞ்ச, வந்து படுத்தவன் தான் மீண்டும்

தூக்கம் கலைந்து எழுந்தபோது மணி மாலை ஆறுக்கும் மேலேயே ஆகியிருந்தது.

இவ்வளவு நேரமா தூங்கி விட்டோமென்று ஆச்சரியப் பட்டுக் கொண்டே படுக்கையை விட்டு எழுந்தான், சென்று முகம் கை கால் சுத்தம் செய்து கொண்டு வெளியே வந்தான்.

கண்கள் மனைவியைத் தேட, அவள் ஹால் ஜன்னல் கம்பிகளில் முகம் புதைத்து வெளியே வெகு தூரத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்தது தெரிந்தது.

ஜன்னலின் மேலேயே சாய்ந்தபடி தலையைச் சாய்த்த வாறு நின்றிருந்த கோலமும் கண்கள் நிலை குத்தினாற் போல அவ்வளவுதான் அனைத்துமே முடிந்து விட்டது என்பதைப் போன்ற பாவனையுடன் கண் இமைக்காமல் வெகு தூரத்தில் எதையோ பார்த்துக் கொண்டிருந்த விதமும் ஏனோ நிகிலேஷின் மனதை உருகச் செய்து விட்டிருந்தன.

அவளுடைய அமைதியைக் கலைக்க மனமில்லாது போக பேசாமல் சோபாவில் அமர்ந்தான்.

ஏதோ அரவம் கேட்டுத் திரும்பிய அனுரேகா அங்கு வந்து அமர்ந்திருந்த கணவனைக் கண்டாள்.

ஏனோ அந்த நேரத்தில் அனைத்துமே வெறுப்பாகிப் போக மீண்டும் தோட்டத்திற்குள் தஞ்சம் அடைந்திருந் தாள்.

என்னதான் நன்கு சுத்தம் செய்து, மேடை அமைத்து மின்சார விளக்குகளும் ஆங்காங்கே பொருத்தப்பட் டிருந்தாலும் மாலை ஆறு மணிக்கு மேல் அதாவது



வெளிச்சம் குறைந்த பிறகு தோட்டத்திற்குள் யாரும் செல்வதில்லை.

அந்த அளவிற்கு தோட்டத்திற்குள் செடி கொடி மரங்கள் என அனைத்தும் அடர்ந்து வளர்ந்திருந்தன.

நல்ல வேளையாகத் தான் சொல்வதற்கு முன்னரே அன்னம்மா மனைவி தோட்டத்திற்குள் செல்வதை கவனித்து விட்டு அழைத்து வருவதற்காகச் செல்வது தெரிந்தது.

# 10



இரவு உணவை முடித்துக் கொண்டு முதல்நாள் போல படுக்கையறைக்கு வந்த அனுரேகா, அங்கு ஏற்கனவே வேஷ்டி பனியனுடன் படுக்கையில் சாய்ந்த வாறு எதையோ படித்துக் கொண்டிருந்த கணவனை எதிர்கொண்டாள்.

ஏனோ திக்கென்று விட்டிருக்க மருட்சியுடன் விழித்தாள்.

மனைவியின் அப்போதைய நிலையைக் கண்டான் யதேச்சையாக நிமிர்ந்த நிகிலேஷ்,

ஏதோ தோன்ற கையிலிருந்த புத்தகத்தை மூடி வைத்து விட்டு எழுந்து சென்று கதவை உட்புறமாகத் தாழிட்டு விட்டு வந்தான்.

கணவனின் அந்தச் செய்கையில் நெஞ்சுக்கூடே காலியாகி விட்டாற் போலிருக்க, அனுரேகாவின் உடல் லேசாக நடுங்கத் தொடங்கி விட்டிருந்தது.

மனைவியின் அருகில் வந்த நிகிலேஷிற்கு அவளுடைய அந்த நிலை தெளிவாகப் புரிந்தது.

"உங்கிட்ட கொஞ்சம் பேசணும்" என்ற கணவனைப் பார்த்தாள்.

"வா இங்க வந்து உக்காரு."

..............

"உன்னத்தான் அனு."

...............

கணவன் சொல்வதெல்லாம் காதில் விழவே செய்தாலும் கால்கள் வேரோடி விட்டாற்போல அவளால் அந்த இடத்தை விட்டுத் துளியும் நகர முடிந்திருக்கவில்லை.

அதற்குள் "உன்னத்தான் என்னாச்சு?" என்று மனைவியின் அருகிலேயே வந்திருந்த நிகிலஷ் அவளுடைய முகவாயைப் பிடித்து நிமிர்த்த தீப்பட்டாற்போல இரண்டடி பின்னால் நகர்ந்திருந்தாள் அனுரேகா.

மனைவியின் மருட்சியும், நடுக்கமும் முக்கியமாக உதாசீனம் ஒரு முழுமையான ஆண் மகனான நிகிலேஷிற்குத் தாங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்கவில்லை. அவனை அவமதிப்பாக உணர்ந்தான்.

"நீ இன்னும் சின்னக் குழந்தையில்லேன்னு நினைக்கறேன் அனு."

"என்ன அப்படிக் கூப்புடவோ இல்ல தொடவோ உங்களுக்கு எந்த உரிமையுமில்ல."

"யாருக்கு எனக்கா? சரிதான் கொஞ்சம் முன்னாடி நான் சொன்னத நீ நிரூபிக்கற. ஆனா பாரு நீ இப்ப என் மனைவி..."



"ஓ, அந்தத் திமிர்ல தான் இந்தப் பேச்சா?"

"கொஞ்சம் யோசிச்சுப் பேசறது உனக்கு நல்லதுன்னு நினைக்கறேன்."

"இல்லன்னா தலையைக் கிள்ளி எறிஞ்சுடுவீங்களோ?"

"ஏம்மா இப்படியெல்லாம் பேசற?"

"லுக், எனக்கு உங்களப் பிடிக்கல. சுத்தமாப் பிடிக்கல..."

"உனக்கு பொய் சொல்ல வரல விட்டுடு."

"பேச்ச மாத்தாதீங்க. நீங்க எம் பக்கத்துல வர்றது கூட எனக்கு வெறுப்பா இருக்கு..."

"கண்ண மூடிட்டு வார்த்தைகள விடாத அப்புறம்..."

"உங்களுக்கு ஒரு தடவ சொன்னாப் புரியாதா?"

"எம் பொறுமைய ரொம்பவும் சோதிக்கற பாத்துக்கோ."

அப்படிச் சொன்ன கணவனை இப்பொழுது கோபத்தில் கண்கள் மின்னப் பார்த்தாள் அனுரேகா.

"யாரு நானா?" என்று கேட்டாள்.

"பின்ன நானா, நான் ஒரு சராசரி மனுஷனா தான் நடந்துக்கறேன். அதுவும் என் இயல்புக்கு மாறா" என்றான்.

"நீங்க?" என்று ஏளனத்துடன் பார்த்த மனைவியை "அப்படித்தான் நான் என்ன சொல்ல வர்றேன்னு கொஞ்சம் காது குடுத்துக் கேளேன்" என்று ஆதங்கத்துடன் சொன்னான்.

"உங்க விளக்கமெல்லாம் எனக்குத் தேவையில்ல, செத்த பிணத்துகிட்ட விளக்கம் சொல்றது முட்டாள்த்தனமும் கூட."

"அனுரேகா."

முதன் முறையாகக் கணவனின் கோபத்தை எதிர் கொண்டவளுக்கு ஏனோ மீண்டும் உடல் நடுங்கி விட்டிருந்தது.

ஆனாலும் நிமிர்ந்து நேருக்கு நேராகப் பார்த்தாள்.

மனைவியின் அந்தப் பார்வையில் மீண்டும் மனம் இளகி விட்டிருக்க, ''எம்மேல இருக்கற கோபத்துல உன்னையே நீ வருத்திக்கலாமா?'' என்று கேட்டான்.

''கூடாதுதான். ஆனா பாருங்க உண்மையிலயே எம்மேல உங்களுக்கு அக்கறையிருந்தா எங்கூட எதுவும் பேசாம என்னக் கொஞ்சம் தனியா விடுங்களேன்'' என்றாள்.

அப்படிச் சொன்ன மனைவியை அருகில் இழுத் திருந்த நிகிலேஷ் அவளுடைய கண்களை நேருக்கு நேராகப் பார்த்து ''எம் மனசு புரியலையாடா உனக்கு. நான் உன்ன எவ்வளவு விரும்பறேன் தெரியுமா? நான் என்ன செஞ்சா நீ அதப் புரிஞ்சுக்குவ?'' என்று உணர்ந்து கேட்டான்.

கணவனின் அந்தப் பார்வையிலும், அருகாமையிலு மாக ஒரு வினாடி தன்னிலை மறந்து போன அனுரேகா பிறகு அதற்கும் சேர்த்துத் தன் மீதே கோபம் கொண்ட வளாய் திமிறிக் கொண்டு அவனுடைய கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டிருந்தாள்.

''சபாஷ், பேசிப் பணிய வைக்க முடியாதுன்னு இப்படி யொரு நாடகமா?'' என்று ஏளனம் தொனிக்கக் கேட்டாள்.

மனைவியின் வார்த்தைகளில் ஓங்கிக் கன்னத்திலேயே அறை வாங்கியதைப் போலத் துடித்துப் போனான் நிகி லேஷ், என்ன வார்த்தை சொல்லி விட்டாள் என்றிருந்தது.



ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''எம்மேல இவ்வளவு வெறுப்பா உனக்கு?'' என்று கேட்டான்.

''பின்ன? உங்களுக்கு மட்டும் தான் மனசிருக்கா, அதுல ஆசைகள் எதிர்பார்ப்புகள், விருப்பு, வெறுப்பு எல்லாம் இருக்குமா, எனக்கும் அதெல்லாம் இருக்கக் கூடாதா?''

அப்படிக் கேட்ட மனைவியை நிகிலேஷ் புரியாமல் பார்க்க, ''நான் ஒருத்தர உயிருக்குயிரா விரும்பறேன். அவரத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசப்பட் டேன்'' என்றாள்.

மனைவியின் வார்த்தைகளில் மனதளவில் ஆடிப் போய் விட்டிருந்தான் நிகிலேஷ்.

இப்படியொரு கோணத்தில் கனவிலும் நினைத்துப் பார்த்திருக்காதவன் என்பதால் இப்பொழுது செய்வதறி யாது திகைத்து நின்று விட்டிருந்தான்.

பரவாயில்லையே. இவனைக்கூட வாயடைக்கச் செய்து விட்டோமே என்று நினைத்தவளுக்கு என்ன இருந் தாலும் நாம் இவ்வளவு பெரிய பொய்யைச் சொல்லி யிருக்கக் கூடாதோ என்று மனம் உறுத்தவே செய்தது.

''இதை நீ ஏன் முன்னாடியே சொல்லல.... ஐ மீன் கல்யாணத்துக்கு முன்னாடி....'' நிகிலேஷ் கேட்க,

''எப்படிச் சொல்ல முடியும்?'' என்று கேட்டாள் அனுரேகா.

''ஏன்?''

''இது ஒன் ஸைட் லைவ், அவருகிட்ட சொல்ல ணும்னு நான் இருந்தபோதுதான் நடுவுல நீங்க வந்தீங்க. நீங்க எங்கிட்ட முதல்ல கேட்டிருந்தீங்கன்னாக் கூடப்

பரவாயில்ல. ஆனா எடுத்த உடன அம்மா அப்பாக்கிட்டப் போவீங்கன்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல...''

..............

''அதுக்கப்புறமும் தான் வீட்ல என்ன எங்க பேச விட்டாங்க. இல்ல என் விருப்பத்துக்குதான் முக்கியத்துவம் குடுத்தாங்க...''

''எப்படியாவது எங்கிட்ட ஒரு வார்த்த சொல்லியிருக்கலாமே'' என்று கணவன் கேட்க, ''அதுக்கு நானும் எவ்வளவோ முயற்சி பண்ணினேன். ஆனா நீங்க என்ன அவாய்ட் பண்ணத்தான் பாத்தீங்க...'' என்று முயன்று வரவழைத்த சோகக் குரலில் சொன்னாள்.

''காரணமே இல்லாம நீ முட்டாள்த்தனமா ஏதாவது சொல்லிடுவியோன்னு தான் அவாய்ட் பண்ணினேன். இப்படின்னு தெரிஞ்சிருந்தா...''

''இப்ப என்ன பேசி என்ன பலன், ரெண்டு பேரோட வாழ்க்கையுமில்ல கேள்விக் குறியாயிடுச்சு'' என்று ணவனின் முகத்தைப் பார்த்தாள்.

பார்த்த அளவில் ஆடிப் போனாள்.

ஒரு சில நிமிடங்களில் முகத்தில் இவ்வளவு அயர்வும் சோகமும் குடி கொள்ள முடியுமா, கூடவே தீவிர யோசனையும்,

"ஒன் ஸைட் லவ்னுன்னு சொல்றியே. ஒரு வேள... அவ... அவருக்கு உம்மேல எந்த ஈர்ப்பும் இல்லாமிருந்தா.''

ஏதோ பெரிய தீர்வைக் கண்டு பிடித்து விட்டதைப் போல ஆவலை மறைத்துக் கொண்டு கேட்டவனைப் பார்த்தவளுக்கு சிரிப்பு தான் வந்தது.



ஆனாலும் அதைக் கணவன் அறியாமல் மறைத்துக் கொண்டாள்.

தான் சொன்னதை அவன் அப்படியே நம்பி விட்டது தெரிந்தது.

சரிதான் இந்த விஷயத்தில் பொய் சொல்வோமென்று அவனும் எதிர்பார்த்திருக்க மாட்டானல்லவா கணவனின் கேள்வியில் அவனை சோகமே உருவாகப் பார்த்தாள் அனுரேகா.

''என்ன பண்றது, உங்கள மாதிரி போல்டா என்னால எதுவும் செய்ய முடியலையே நாந்தான் பொண்ணாப் பொறந்துட்டேனே'' என்றாள்.

மனைவியின் ஆதங்கமும் வேதனையும் இன்னும் தாங்கிக் கொள்ள முடியாததாய் இருக்க ''சொல்லு. இப்ப உனக்காக நான் என்ன செய்யணும்? என்னால எதாவது செய்ய முடியுமா?'' என்று கேட்டான்.

....................

''உன்னைத்தான்...''

''வேண்டாம் இது என் பிரச்சன நானே பார்த்துக்கறேன். நீங்க இதுல இன்வால்வ் ஆகாம விட்ருங்க. அதுக்கு மேல ஏதாவது உதவி தேவைப்பட்டாலும் நானே கேக்கறேன்'' என்று முடித்து விட்டிருந்தாள் அனுரேகா.

# 11



ஒரு வாரம் சென்றிருந்தது.

திருமணத்திற்கு முன்பு போலவே எந்த மாற்றமுமின்றி வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது அனுரேகாவிற்கு.

முதலிரண்டு நாட்களைப் போல அல்லாமல் கணவன் இப்பொழுது தன்னுடன் பேசுவதையே நிறுத்தியிருந்தது அவளுக்கு ஒருவித நிம்மதியைக் கொடுத்திருந்தது.

அனுமதியின்றி என் வாழ்க்கையில் நுழைந்தாயல்லவா அனுபவி என்று ஒருவிதத் திருப்தியுடன் நினைத்துக் கொண்டாள்.

மிகவும் நியாயம் பார்ப்பவள் என்பதால் ஒரு சில சமயங்களில் தன் செயலில் தானே அருவெறுப்புக் கொண்டாள்.

அதிலும் கணவனிடம் தெரிந்த லேசானத் தளர்ந்த நடை, உணர்ச்சியே இல்லாதது போன்ற முக பாவனை என அனைத்தும் அவளை மேலும் குற்றக் குறுகுறுப்பில் தள்ளியிருந்ததெனலாம்.

மேலும் வெகுநேரமும் கூடத் தோட்டத்திற்குள் அமர்ந்திருந்தவள், பிறகு அதுவும் வெறுத்துப் போக எழுந்து வீட்டிற்குள் வந்தாள்.

''அம்மா.''

அன்னம்மா அழைக்க ''சொல்லுங்கம்மா'' என்றாள்.

''இப்ப ரெண்டு நிமிஷத்துக்கு முன்னாடி ஐயா போன் பண்ணியிருந்தாருங்கம்மா, உங்களப் பேசச் சொன்னார். நான் வந்து சொல்லலாம்னு இருக்கறப்ப சரியா நீங்களும் வந்துட்டிங்க.''

''எதுக்குன்னு சொன்னாரா?''



''இல்லைங்கம்மா...''

''சரி நான் பேசிக்கறேன்'' என்று சொல்லிவிட்டு வந்தவளை, அன்னம்மாவிடம் சொன்னது போலவே வந்து கணவனின் மொபைலுக்கு அழைத்தாள்.

கடைசி ரிங் வரை சென்று துண்டானதே தவிர இணைப்பு கிடைத்திருக்கவில்லை.

மேலும் சில முறை முயன்ற பிறகும் அதே நிலையே நீடிக்க நேரில் வந்ததும் கேட்டுக் கொள்ளலாமென்று அத்தோடு அதை மறந்தும் விட்டிருந்தாள்

தொடர்ந்து வந்த சில வேலைகளில் சிறிது நேரம் தன்னை மறந்திருந்தவளுக்கு மீண்டும் தான் ஏதோ மன்னிக்கவே முடியாத மிகப்பெரிய தவறை செய்து கொண்டிருப்பதைப் போல மனம் கிடந்து அடித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தது.

சற்றும் நிம்மதியில்லாமல் தவித்தாள்.

அதன் தொடர்ச்சியாக மீண்டும் தோட்டத்திற்குள் சரணடைந்திருந்தாள்.

அந்தக் குற்ற உணர்வே மனதிற்குள் நிறைந்து வெளியே வரவும் துடித்துக் கொண்டிருந்ததோ என்னவோ, அப்பொழுது தனக்கு அழைத்த தோழியிடம் தனது மனப் போராட்டம் அனைத்தையும் கொட்டி விட்டிருந்தாள்.

ஒரு வேகத்தில் அப்படிச் செய்து விட்டு இப்பொழுது நிம்மதியின்றி தவிக்கிறேன்.

நேரடியாகவே கணவனைத் தவிர்ப்பதைப் பற்றி யோசிக்காமல் இப்படியொரு பொய்யைச் சொல்லி

விட்டு, இப்பொழுது நானும் தவறு செய்தவளாகி துளியும் நிம்மதியின்றி தவிக்கிறேன் என்று புலம்பி யிருந்தாள்.

எது எப்படியானாலும் கணவனுடன் சேர்ந்து வாழ்வது மட்டும் இந்த ஜென்மத்தில் நடக்கப் போவதில்லை என்றும்,

மேலும் சில நிமிடங்களும் பேசி விட்டுப் போனை வைத்தவளுக்கு முன்னைக்கு இப்பொழுது மனம் சற்று லேசாகி விட்டதைப் போலிருந்தது.

அதற்காக தான் செய்தது சரிதானென்றும் அவள் நினைத்து விடவில்லை. உள்ளுக்குள் மறுகவே செய்தாள்.

கணவனுக்கு இன்னொரு முறை முயன்று பார்த்தால் என்னவென்று நினைத்தவள் பிறகு வேண்டாமென்று விட்டு விட்டிருந்தாள்.

வேலையில் மும்முரமாய் இருப்பான் ஏன் தொல்லை செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள்.

வழக்கம்போல அன்றும் இரவு உணவு முடிந்து தூங்க வந்த அனுரேகா, அப்பொழுது தான் சில நிமிடங்ளுக்கு முன்பு வந்திருந்த கணவனின் முகத்தை ஏறிட்டாள்.

''கூப்புடச் சொன்னீங்கன்னு அன்னம்மா சொன்ன தால கூப்புட்...''

''வாயத் திறந்தாலே பொய், சை உங்கூடப் பேசவோ வெறுப்பா இருக்கு...''

அப்படிச் சொன்ன கணவனை ஒன்றும் புரியாமல் பார்த்தாள் அனுரேகா.

''இந்த அளவுக்கு நீ இறங்கிப் போயிடுவேன்னு நான் நினைச்சுக் கூடப் பாக்கல.''



மாலை அனுரேகா அவளுடைய தோழியிடம் சொன்ன தனைத்தையும் நிகிலேஷ் கேட்க நேர்ந்ததே அவ னுடைய கோபத்திற்குக் காரணம்,

முதலில் ஒன்றும் புரியாவிட்டாலும் யோசித்துப் பார்த்தபோது அனுரேகாவிற்கும் ஏதோ புரிந்தாற் போலத்தான் இருந்தது.

''இன்னும் என்னவெல்லாம்...''

''நான் என் ஃப்ரண்ட் கூடப் பேசினதக் கேட்டிருக் கீங்க'' அனுரேகா கேட்க,

''ஏன் ரெண்டு காதும் இருக்கற யாருக்கும் கேக்கற மாதிரி தான நீ பேசின...''

''ஒட்டுக் கேக்கறது கேவலமில்ல?''

''அது இரகசியம் பேசும்போது, நீ அப்படியா பேசின?''

''என்ன நியாயம் சொன்னாலும் நீங்க செஞ்சது தப்புதான்...''

''நியாய அநியாயத்தப் பத்தியெலலாம் பேச உனக்கு என்ன தகுதியிருக்கு?''

''அதெல்லாம் உங்கள விடவும்...''

''நாக்க அடக்கிப் பே...''

''ஏன், என்ன இவ்வளவு சொல்றீங்...''

''நல்லவேள நான் கேட்க நேர்ந்தது இதுவே வேற யாராவது கேட்டிருந்தா, அப்பிடி நீதான் என்ன பெருமைக் குரிய விஷயத்தையா பேசிட்டிருந்த? அசிங்கத்த அல்லவா பெருமையடிச்சுட்டிருந்த...''

''அப்பிடி அந்த அசிங்கத்தச் செய்ய வெச்சதே நீங்க தானே?''

''ஓ தப்புப் பண்ணினது மட்டுமில்லாம அத மத்தவங்க மேல வேற போடப் பாக்கறியா... சீ பேசாத, மேல மேல உன்ன நீ தாழ்த்திக்கிட்டே போறத உனக்கு எப்பிடியோ என்னால சகிச்சுக்க முடியல.''

''ஏன் இவ்வளவு பேசறீங்களே, அப்பிடி என்னையே நான் தாழ்த்திக்கிட்டது கூட உங்கள சகிச்சுக்க முடியாம தான்...''

அப்படிச் சொன்ன மனைவியை நீ இவ்வளவு தானா என்பதைப் போலப் பார்த்த நிகிலேஷ் ''உன்னை விரும்பினதத் தவிர அப்படி வேறென்ன தப்ப நான் செஞ்சேன்?'' என்று கேட்டான்.

''உங்களுக்கு இன்னும் பேஸிக்கே புரியலையா. எனக்கு உங்களப் புடிக்கல. உங்ககூட வாழப் புடிக்கல, ஏன் உங்களப் பாக்கக் கூடப் புடிக்கல... என்ன விட்டுடுங்க ப்ளீஸ் என்ன விட்டுடுங்க...'' என்றவளுக்கு அதற்கு மேல் பேச முடியாமல் அழுகை வந்து விட்டிருக்க, உதட்டைக் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

தொடர்ந்து சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன.

அதற்குப் பிறகு பேசியது நிகிலேஷ்,

ஏன் அவன் மட்டுமே.

''இந்தக் குடும்பத்துக்குன்னு காலங்காலமா ஒரு மரியாதையிருக்கு எங்களப் பாத்து மத்தவங்க கை கட்டி நின்னு தான் பழக்கம், ஆனா நீ அத மாத்திடாத, வேலக்காரங்க எல்லாரும் பாத்து சிரிக்கற மாதிரி செஞ்சுடாத.''

''தாலி கட்டின காரணத்துக்காகவும் உன்ன விரும்புன பாவத்துக்காகவும் நான் வேணும்னா சகிச்சுக்கலாம். மத்தவங்க தாங்க மாட்டாங்க.''



''விளக்கேத்த வந்த வீட்ட விளங்க வைக்கலேன்னாலும் பரவாயில்ல, இந்தக் குடும்பத்துக்குன்னு இருக்கற மரியாதையக் கெடுத்துடாத. உன்னைக் கையெடுத்துக் கேட்டுக்கறேன். எங்கள நாலு பேர் பாத்து கைகொட்டி சிரிக்கற நிலைமைக்குக் கொண்டு வந்துடாத.''

''ஆமா என்னவோ நான் உன் கழுத்துல கத்தி வெச்சு மிரட்டிக் கல்யாணம் பண்ணிக்கிட்ட மாதிரியே பேசறையே, ஏன் நான் என் விருப்பத்த சொன்ன மாதிரி நீ உன் விருப்பத்த உங்க வீட்ல சொல்லியிருக்க வேண்டியது தான?''

''ஒருவேள உன் வார்த்தையக் கூட ஒரு பொருட்டா மதிச்சு உங்க வீட்ல ஏத்துக்க மாட்டாங்களா.''

''என்னவோ வேண்டவே வேண்டாம்னு மறுத்த உன் கழுத்துல கத்திய வெச்சுக் கொண்டு வந்து ஸ்டேஜ்ல நிறுத்திட்ட மாதிரியில்ல பேசிட்டே போற. அத்தையையும் மாமாவையும் சேத்து தான் நீ இன்சல்ட் பண்ணிட்டிருக்க. அவங்க ரொம்ப நல்ல டைப்னு நல்லவேள எனக்குத் தெரியும் இல்லேன்னா.''

''ஏதோ பாவமேன்னு கொஞ்சம் பொறுத்துக்கிட்டா நீ உன் எல்லையை மீறிப் போயிட்டிருக்க, இனியும் நான் பேசாம இருந்தா அப்புறம் குடும்ப மானத்தக் காத்துல பறக்க விட்டாலும் விட்டுடுவ.''

கணவனின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் ஈட்டியாய் நெஞ்சிலேயே குத்த துடித்துப் போனாள் அனுரேகா.

இதோ இதோ என்று கதறத் துடித்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு நின்றிருந்தவளால், என்ன முயன்றும் ஆதங்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

மிகவும் பொங்கிக் கொண்டு வந்தது.

''எல்லாத்துக்கும் மேல என் அம்மா, அப்பாவுக்குத் தெரிஞ்சாலும் தாங்கிக்க மாட்டாங்க.''

''உன்னைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன்னு சொன்னதுமே பொண்ணு நீங்கற ஒரு காரணத்துக்காக வினாடி கூட யோசிக்காம சம்மதம் சொன்னாங்க.''

''மத்தபடி அவங்க எதிர்பார்ப்பு என்னங்கறது ஒரு மகனா எனக்கும் தெரிஞ்சு தான் இருந்தது.''

''அத எடுத்துச் சொன்னாக்கூட புரிஞ்சுக்கறது உனக்குச் சிரமமான விஷயம்.''

''என்னவோ நீ பெரிய தியாகம் பண்ணிட்ட மாதிரி காட்டிக்கிட்டது போதும்.''

''உண்மையா தியாகம் பண்ணினவங்கெல்லாம் அடக்கமா தான் இருக்காங்க.''

''இத்தோட இந்தப் பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வெச்சுடுவேன்னு நினைக்கறேன். இல்ல முடியாதுன்னு தொடர்ந்தா அப்புறம் தாங்க மாட்ட.''

கணவன் அவன் பாட்டுக்கு வெகு சுலபமாக அனைத்தையும் பேசி விட்டிருக்க, நூறில் ஒரு பங்காகக் கூட அதை அனுரேகாவால் ஜீரணித்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

## 12



இப்படியெல்லாம் கூடப் பேச முடியுமா? என்று விக்கித்துப் போயிருந்தாள்.



கணவனின் வார்த்தைகள் தந்த வலி நெஞ்சை ரணமாக்கியிருக்க, இரவு முழுவதும் கண்ணீரிலேயே கரைந்தாள்.

ஒரு வழியாக அழுகை குறைந்து தூங்கத் தொடங்கியிருந்தபோது அதிகாலை நேரமாகி விட்டிருந்தது.

மீண்டும் காலையில் விழித்து எழுந்தவளுக்கு இரவெல்லாம் அழுததன் பயனாக வலியில் தலை விண்விண்ணென்று தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

அந்த வலியினூடே சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்தாள்.

சூடாக ஒரு காபியை வாங்கிக் கொண்டு தோட்டத்திற்குள் சென்றாள் மனம் சற்று அமைதியடையுமென்று தோன்ற, வெளியே வந்தாள்.

வெளியே வந்தவள் அந்த அறை வாயிலில் கணவனை எதிர்கொண்டாள்.

கண்கள் சிவந்து முகம் வீங்கிப் போயிருக்க, என்னவெல்லாம் சொல்லி விட்டாய் என்பதைப் போலத் தன்னைப் பார்த்த மனைவியின் பார்வையில் உள்ளம் உருகிப் போய் விட்டிருந்தது நிகிலேஷிற்கு.

அப்படியே அணைத்து ஆறுதல் சொல்ல வேண்டும் போல தீவிரமாகத் தோன்றிய எண்ணத்தைக் கட்டுப் படுத்திக் கொள்ள சற்று சிரமப்பட்டுத் தான் போனான்.

இரவெல்லாம் அவனும் ஒன்றும் நிம்மதியாக உறங்கி விடவில்லை.

ஏன் உறங்கவே இல்லையெனலாம்.

தவிர மனைவியின் கண்ணீர் அவனைத் துளியும் நிம்மதியின்றி தவிக்கவும் வைத்திருந்தது, யோசிக்கவும்.

அப்படி யோசித்ததில் அவனுக்கும் சில விஷயங்கள் புரிந்தன.

மிகுந்த தன்மானம் உடையவள் தனது மனைவி.

அதனால் அவளுடைய மனதை அறிந்து கொள்ளாமல், முக்கியமாக அவளுடைய விருப்பத்திற்கு மாறாகத் தான் அவளை மணந்து கொண்டதாக நினைக்கிறாள்.

மனதில் விழுந்த அந்த விதையே இப்பொழுது செடியாக வளர்ந்து நிற்கிறது. ஆனால் அது இனி விருட்சமாக மாறி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அதற்காகத் தான் என்ன செய்ய நேர்ந்தாலும் சரிதான்.

எது எப்படியானாலும் இனி மனைவியின் மனதைத் தான் எள்ளளவும் புண்படுத்தி விடக் கூடாது.

அது மட்டுமல்லாமல், தான் இரவு பேசியதற்கும் சேர்த்து அவள் எவ்வளவு முகத்தைத் திருப்பிக் கொண்டாலும் சரிதான் மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டுமென்று நினைத்துக் கொண்டான்.

அதே சமயம் தனது மொபைல் ஒலிக்க எடுத்துப் பேசினான்.

''சொல்லுங்கம்மா.''

''என்ன திடீர் சர்ப்ரைஸ்?''

''சரிமா, கார் அனுப்பறேன்.''

................

''சரி வர்றேன்'' என்றவன் தனது மனைவியை நாடிச் சென்றான்.

அவ்வளவுதான் அனைத்துமே முடிந்து விட்டது என்பதைப் போல அமர்ந்திருந்த மனைவியை மெல்லிய குரலில் அழைத்தான்.



உடனே திரும்பிப் பார்த்தவளை உணர்ச்சி துடைக்கப் பட்ட முகத்துடன் சில வினாடிகள் பார்த்தவன் பிறகு ''ஊர்ல இருந்து அம்மா வர்றாங்க, இன்னும் ஒரு மணி நேரத்துல அவங்கள அழைச்சுட்டு வர நாம ரெண்டு பேரும் ஏர்போர்ட்டுக்குக் கிளம்பணும்'' என்றான்.

பதில் சொல்லாமல் பார்த்தவளிடம், ''நான் மட்டும் போய்ட்டு வந்திருப்பேன், இல்ல டிரைவர மட்டும் கூட அனுப்பியிருக்கலாம். ஆனா அம்மா நாம ரெண்டு பேரும் தான் வரணும்னு சொல்லிட்டாங்க'' என்றான்.

தாயின் வார்த்தையைத் தட்டாத பிள்ளையாகப் பேசிய கணவனைப் பார்த்தவளுக்கு மீண்டும் கண்களை கரித்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் உதட்டைக் கடித்துத் தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள்.

சரிதான் கட்டிய மனைவியிடம் போலவா மற்றவர் களிடமும் நடந்து கொள்ள முடியும். அதிலும் தான் மிகவும் மோசமான பெண்ணும் கூட அல்லவா...

மனைவியின் நிலை புரிய ''நைட் அப்பிடிப் பேசினதுக்கு நானும் ரொம்ப வருந்தறேன்'' என்று உணர்ந்து சொன்னான்.

''உன் ஆதங்கம் புரியுது, பொது இடத்துல வெச்சுப் பேசக்கூடிய விஷயமான்னு நினைச்சப்ப தான் கொஞ்சம் தாங்கிக்க முடியாமப் போயிடுச்சு.''

''மத்தவங்க காதுல விழுந்திருந்தா தலைகுனிவாகியிருக்கும். அது மட்டுமில்லாம நம்ம வீட்டுப் பெரியவங்களும் மனசொடிஞ்சு போயிருப்பாங்க...''

மிகவும் தாழ்ந்த குரலில் கணவன் பேச, தானும் அப்படித்தான் பேசியிருக்க வேண்டுமோ என்று நினைக்கத் தோன்றியது.

எது எப்படியானாலும் இரவு இவன் பேசிய வார்த்தைகள், என்னதான் வருத்தப்படுகிறான் என்றாலும் பேசிய தனைத்தும் இல்லையென்றாகி விடுமா.

''என்னதான் வருந்தினாலும் பேசினது மாறிடாதுன்னு எனக்கும் புரியுது, யாரா இருந்தாலும் வார்த்தைகள யோசிச்சுப் பேசறது நல்லது, மத்தவங்களும் சங்கடப்பட வேண்டியதில்ல பாரு.''

முதலில் நீ பேசியதால் தான் நான் பேச வேண்டி வந்தது என்று சொல்லாமல் சொன்ன கணவனுக்கு ஏனோ அனுரேகாவால் இரவு போல பட்டென்று பதில் சொல்ல முடிந்திருக்கவில்லை.

எதுவோ தடுத்தது.

''சரி ஒன் அவர்ல கிளம்பணும்'' என்று கணவன் திரும்பிச் செல்ல, மற்றது எப்படியானாலும் அத்தை வருகிறார்கள் சென்று அவர்களை அழைத்து வர வேண்டுமென்ற உற்சாகம் அவளைப் பற்றிக் கொண்டு விட்டிருந்தது.

சற்றும் ஈடுபாடோ பிணைப்போ இல்லாத வீட்டில் அவர்களாலாவது கொஞ்சம் சந்தோஷம் வந்தால் சரிதானென்று சென்று குளித்துக் கிளம்பினாள்.

# 13



''ஹாய் அனும்மா...''



''அத்தை... வாங்க அத்தை எப்படியிருக்கீங்க?''

''நான் நல்லார்க்கேன் கண்ணம்மா, நீ எப்படியிருக்க?''

''நல்லார்க்கேன் அத்தை. ஊர்ல மாமா எல்லாரும் எப்படியிருக்காங்க?''

''எல்லாரும் நலம், நீ ஏன் இவ்வளவு டல்லார்க்க?''

''அதெல்லாம் இல்லையே...''

''வாங்கமா'' நிகிலேஷ் தாயை வரவேற்க,

''வர்லாம்பா'' என்றார் விசாலாட்சி.

''அப்பா வரலையா?''

''ம்கூம், அவருக்கு திடீர்னு ஏதோ வேல வந்துடுச்சு. ரெண்டு நாள் கழிச்சு வருவார்'' என்றவர் தனது மருமகளிடம் ''என்னமா உங்க அம்மா அப்பாவப் பத்திக் கேக்க மாட்டியா?'' என்று கேட்டார்.

''எப்படியிருக்காங்க அத்தை?''

''நல்லார்க்காங்கமா, உன்ன ரொம்பக் கேட்டதா சொல்லச் சொன்னாங்க. உன் தம்பி பவனும்.''

பேசிக் கொண்டே கார் அருகில் வந்திருந்தவர்கள் கையிலிருந்த லக்கேஜ்களையெல்லாம் கார் டிக்கியில் போட்டு விட்டுக் காரில் ஏறிக் கிளம்பினர்.

''என்ன பொண்ணுடியம்மா நீ உன் வீட்டுக்காரர் பக்கம் நீ உக்காராம மத்தவங்கள உக்காரச் சொல்ற'' என்று முன் பக்கம் தன்னை அமரச் சொன்ன மருமகளைக் கிண்டலடித்த விசாலாட்சி பிறகு மகனுடன் பேசத் தொடங்கி விட்டிருந்தார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் மூவரும் வீடு வந்து சேர்ந்திருக்க, ''வாங்கமா'' என்று சந்தோஷமாக முன்

வந்து அந்த வீட்டுப் பெரிய எஜமானியம்மாவை வரவேற்றாள் அன்னம்மாள்.

"எப்படியிருக்க அன்னம்மா?"

"சுகமா இருக்கேம்மா, ஐயா, சின்னய்யா எல்லாரும்..."

"எல்லாரும் நலம்" என்றவர் "டிபன் எடுத்து வை அன்னம்மா" என்றார்.

அடுத்த சில நிமிடங்களில் அனைவரும் சாப்பிட வந்து அமர, பரிமாற வந்த அன்னம்மாவை வேண்டாமென்று மறுத்துவிட்டு தாங்களே சுயமாகப் பரிமாறிக் கொண்டு சாப்பிடத் தொடங்கினர்.

மகன், மருமகளின் முகங்களைப் பார்த்த விசாலாட்சிக்கு எதுவோ சரியாகப் பட்டிருக்கவில்லை.

அழுது வீங்கியதைப் போலிருந்த மருமகளின் முகம், வழக்கத்திற்கு மாறாக தீவிர யோசனையுடனிருந்த மகனின் செயல்பாடு என இரண்டும் வெளிப்படையாகவே தெரிவதைக் கண்டார்.

திருமணத்திற்கு முன்பிருந்து நடந்ததனைத்தையுமே நினைவிற்குக் கொண்டு வந்து பார்த்தார்.

மகனிடம் எப்பொழுதும் ஒளிவு மறைவு கிடையாது.

மனதிற்குப் பட்டதை யாருக்காகவும் பார்க்காமல் செயல்படுத்தி விடுபவன் அவன்.

அப்படி அவன் செய்ததனைத்தும் இத்தனை நாளும் நல்ல விதமாகத் தான் முடிந்திருக்கிறது.

ஆனால் இப்பொழுது மருமகள் விஷயத்தில் மட்டும் என்னவாயிற்று.



"அப்புறம் அனும்மா, இங்க வீடு புடிச்சிருக்கா?"

"அதெல்லாம் புடிச்சிருக்கு அத்தே."

"அப்ப யாரப் புடிக்கல, உம் புருஷனையா?"

திடீரென்று இப்படிக் கேட்பாரென்று எதிர்பார்த்திராத அனுரேகா தனது அத்தையின் கேள்வியில் திகைத்து விழித்தாள்.

"என்னமா யோசிக்கற?"

"அச்சச்சோ ஏன் அத்தை இந்த மாதிரியெல்லாம் கேக்கறீங்க?"

"பின்ன? பாத்தாப் புதுசாக் கல்யாணமானவங்க மாதிரியே தெரியலையே, பிச்சுக்கிட்டு ஆளுக்கொரு பக்கம் நின்னுட்டிருக்கற மாதிரியில்ல இருக்கு..."

"அப்படியெல்லாம் இல்...."

"அட, எங்களப் பாத்தா உங்களுக்கு அப்படியாம்மா தெரியுது?" என்று கேட்ட நிகிலேஷ் தொடர்ந்து மனைவியைப் பார்த்தான்.

"ஆமான்டா அப்படித்தான் தெரியுது, உன்னப்பத்தி எனக்குத் தெரியாது. பிஸினஸ் பிஸினஸ்னு அதுலயே மூழ்கிடுவ. அதுல வீட்டு ஞாபகம் கூட வராது."

"என்னமா நீங்க, அனுவ எம் மனசுக்குப் புடிச்சு தான் கல்யாணம் பண்ணியிருக்கேன் மறந்துடாதீங்க, நீங்க நினைக்கற மாதிரி நானில்ல அவ்வளவுதான்."

மகனின் வார்த்தைகளில் பொய் இருக்கவில்லை.

அவனைப் பொறுத்தவரை அப்படிப் பொய் சொல்பவனும் கிடையாதே.

அப்படியானால்,

டிபன் முடிந்ததும் கோவிலுக்குச் சென்று வரலா மென்று மகன் மருமகள் இருவரையும் கிளம்பச் சொன் னார் விசாலாட்சி.

''கோவிலுக்கு இப்ப எதுக்குமா?''

''ஏன்?''

''வேலையிருக்கு கிளம்பணும்.''

''அது சரி, இன்னைக்கு முழுக்க நீ ஆபீஸ் போக முடியாது சொல்லிட்டேன்.''

''ம் அப்புறம்?''

''என்ன அப்புறம்? கல்யாணம் முடிஞ்ச கையோட முக்கியமான வேலையிருக்கு கிளம்பியாகணும்னு சொன்ன உனக்காக எல்லாரும் விட்டுக் கொடுத்தோ மில்ல, இப்ப நாங்க எல்லாரும் சொல்றத நீ கேளு...''

''என்ன சொல்லுங்க?''

''வர்ற சன்டே உங்க கல்யாண ரிசப்ஷன், முடிவு பண்ணியாச்சு.''

''அட, இது நல்ல விஷயந்தான!'' என்று மகன் சொன்ன தில் மனம் நிம்மதியாகிப் போனது விசாலாட்சிக்கு.

''நானே இதப்பத்தி நினைச்சுட்டு தாம்மா இருந்தேன், இங்கிருந்து கல்யாணத்துக்கு வராதவங்க கம்பெனி ஸ்டாஃப்ஸ்னு எல்லாருக்கும் ஒரு ட்ரீட் குடுக்கத்தான் வேணும்.''

மகன் அப்படிச் சொன்னதில் ''அப்பாடா இப்பதான்டா எனக்கு சந்தோஷமா இருக்கு. எங்க வேண்டாம்னு மறுத்துடுவியோன்னு பயந்துட்டே இருந்தேன்'' என்றார்.



''நான் அப்படிப்பட்டவனாம்மா?''

''அத எங்கிட்டக் கேட்டா, எம் மருமககிட்டக் கேளு'' என்றவர் ''என்ன அனும்மா நீ என்ன சொல்ற?'' என்று கேட்டார்.

தனது அத்தை கேட்க, அதற்கு என்ன பதில் சொல்வ தென்று தோன்றாமல் விழித்தாள் அனுரேகா.

''எவ்வளவு நல்லாப் பேசிட்டிருந்த பொண்ணு இப்படியாயிட்டயே நான் கிளம்பற இந்த ஒரு வாரத் துக்குள்ள உன்னப் பழையபடி மாத்திடுவேன் பாரு...''

தாயின் வார்த்தைகளில் ''அதச் செய்ங்க முதல்ல'' என்றான் நிகிலேஷ்.

அப்படிச் சொன்ன கணவனை எங்கே அனைத் தையும் சொல்லி விடுவானோ என்பதைப் போன்ற முக பாவனையுடன் கவலையுடன் பார்த்தாள் அனுரேகா.

அது விசாலாட்சியின் கவனத்தில் படத் தவறவில்லை.

ஆனால் கோபம் மகன் மீது தான் வந்தது.

''எல்லாம் உன்னச் சொல்லனுன்டா.''

''ஏம்மா நானென்ன செஞ்சேன்?''

''ஒரு பொண்ணுக்குப் புகுந்த வீட்டு சொந்தங்கறது கொஞ்சம் கொஞ்சமா பழக்கப்பட வேண்டிய ஒண்ணு. ஆனா நீ வேரோட புடுங்கிட்டு வந்த மாதிரி இப்படி அழைச் சுட்டு வந்து தனிமை சிறை வெச்சா பின்ன அவளுக்கும் தான் எப்படியிருக்கும்?''

''பழைய இடத்தையும், சொந்தங்களையும் விட்டுட்டு வந்ததே ஒரு துன்பம்னா நீ இன்னும் ஒரு படி மேல

போய் இப்படி யாருமே இல்லாத இடத்துக்கும் அழைச்சுட்டு சொந்தம்னு வந்துட்ட.''

அப்படியொரு கோணத்தில் யோசித்துப் பார்த்திருக்காத நிகிலேஷிற்கு தாயின் வார்த்தைகளில் இருந்த உண்மை புரிந்தது.

அவ்வளவு நேரமும் எதுவும் பேசாமலிருந்த அனுரேகாவிற்கு இனியும் தான் வாயை மூடிக் கொண்டிருந்தால் நன்றாயிருக்காதென்று தோன்ற, ''அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல அத்தை இப்பப் பழகிடுச்சு'' என்றாள்.

''அப்ப வந்தப்பக் கஷ்டமா தான் இருந்தது இல்லையா? அது சரிதான் இராமர் இருக்கற இடந்தான் சீதைக்கு அயோத்திங்கற மாதிரி இப்ப உன் புருஷன் இருக்கற இடம் உனக்குப் புடிச்சுப் போயிடுச்சு அப்படித்தான?''

இப்பொழுது என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தவள் அதை வெட்கம் என்னும் போர்வையில் தனது அத்தை எடுத்துக் கொண்டு விட்டதில் அப்போதைக்கு மனம் சற்று நிம்மதியடைந்தாள்.

ஆனால் அது வெளியே தான்.

உள்ளுக்குள் பயம் தொற்றிக்கொண்டு விட்டிருந்தது.

வந்த சிறிது நேரத்திலேயே இத்தனை கேள்விகளென்றால் இன்னும் ஒரு முழு வாரம் எப்படிச் சமாளிப்பது.

இப்பொழுது போல கணவன் எப்பொழுதும் ஒத்துழைப்பானென்று எதிர்பார்க்க முடியாதே.

ஏனோ முன்னை விடவும் இப்பொழுது தான் திக்குத் தெரியாத காட்டில் தனிமையில் கொண்டு வந்து விடப்பட்டதைப் போலத் திகைத்துப் போனாள்.



''சரி ரெண்டு பேரும் கிளம்புங்க கோவிலுக்குப் போய்ட்டு வரலாம்.''

''சரிதான். கோவிலுக்குப் போய்ட்டு அப்படியே ஆபீஸ் போய்க்கறேன்.''

''முடியாதுப்பா, இன்னைக்கு முழுக்க நீ ஆபீஸ் போறது கொஞ்சம் சிரமம்தான்.''

''ஏம்மா?''

''ரிசப்ஷனுக்கு உங்க ரெண்டு பேருக்கும் தேவையானதையெல்லாம் வாங்கணும், அதுவே துணி நகைன்னு எத்தனையோ இருக்கு. அப்புறம் எல்லாரையும் ஃபங்ஷனுக்கு அழைக்கணும். அதுக்கு லிஸ்ட் போடணும். அதுக்கு மேல வர்றவங்களுக்கு விருந்து அது இதுன்னு செய்ய இன்னும் எத்தன வேலையிருக்கு. நீ ஒண்ணு பண்ணுப்பா பேசாம ஆபீஸ்க்கு ஒரு வாரத்துக்கு லீவு போட்டுக்கோ.''

வெகு சீரியசாகத் தனது அத்தை சொன்ன வார்த்தைகளில் நன்றாகவே சிரித்து விட்டிருந்தாள் அனுரேகா.

அவளையே அறியாமல் தான்.

மனைவியின் சிரிப்பைத் தொடர்ந்து நிகிலேஷ் அவளைப் பார்க்க அதே நேரம் யதேச்சையாகத் தானும் கணவனைத் திரும்பிப் பார்த்த அனுரேகாவிற்கு மனதிற்குள் படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் கணவனின் அந்தப் பார்வையில் என்ன இருந்தது என்பதை மட்டும் அவளால் கண்டு கொள்ள இயலவில்லை.

"ஆபீஸ்க்குப் போகாமலே இருந்துட முடியாது. மேக்ஸிமம் டைம் வீட்ல இருக்கப் பார்க்கறேன். ஆனா அதுக்கு ஒரு கண்டிஷன்."

"என்ன கண்ணா சொல்லு?"

"அனு இப்ப மாதிரியே எப்பவும், சிரிச்சுட்டே இருந்தா நான் இருப்பேன்."

தனது அத்தைக்கு முன்பாகவே கணவன் சொன்ன அந்த வார்த்தைகளில் இப்பொழுது திகைப்பின் உச்சத்திற்கே அனுரேகா சென்றிருக்க, "பின்ன தொழில் வேலைன்னு அதுலயே மூழ்கிப் போகாம இருந்தா எம்மருமகளுக்கென்ன நல்லா சந்தோஷமா சிரிச்சுட்டே இருக்கப் போறா" என்றார் விசாலாட்சி.

ஏன் எதற்கென்று தூண்டித் துருவாமல் கணவனின் வார்த்தைகளைத் தனது அத்தை சாதாரணமாக எடுத்துக் கொண்ட பிறகு தான், அவளால் மீண்டும் இயல்பாக சுவாசிக்க முடிந்ததெனலாம்.

"சரி பத்து நிமிஷத்துல வந்துட்றேன். ரெடியா இருங்க" என்று பதிலுக்காகக் காத்திருக்காமல் நிகிலேஷ் வெளியே சென்றிருக்க திரும்பித் தனது மருமகளைப் பார்த்தார் விசாலாட்சி.

"வாம்மா உக்காரு."

"இல்ல அத்தெ..."

"அட வந்து உக்காரு முதல்ல" என்று அவர் அதட்டியதில் உடனே அமர்ந்து விட்டிருந்தாள்.

"சொல்லு என்ன பிரச்சன?"



..............

"என்ன பேசு" என்றவரை இப்பொழுது மிரட்சியுடன் பார்த்தாள்.

"என்னடாம்மா, ஏதாவது பேசு..."

"நீங்க என்ன கேக்கறீங்க அத்தெ, எனக்கு ஒண்ணும் புரியல."

"காலைல ஏர்போர்ட்ல உன்னப் பார்த்ததும் கொஞ்சம் ஆடிப் போய்ட்டேன். என்னவோ சரியில்லேங்கறது மட்டும் நல்லாத் தெரியுது..."

"அப்பிடியெல்லாம் எதுவுமில்ல அத்..."

"என்ன அந்தளவுக்கு முட்டாள்னு நினைச்சுட்டியாம்மா?"

"ஐயோ அத்தெ..."

"பின்ன?"

"இல்ல வீட்டு ஞாபகம் அதான்... இப்ப நீங்க வந்துக்கப்புறமே எவ்வளவோ பரவாயில்ல அத்தெ..."

மனதிற்குப் பிடித்த கணவன் அருகில் இருக்கும் பொழுது மற்ற எதுவுமே பெரிதாகத் தெரியாதே,

அப்படியானால்,

கணவன், மனைவிக்கிடையில் எதுவோ சரியில்லையென்று தான் பொருள்.

மனதிற்குள் நினைத்தவரால் அதை அப்படியே கேட்க முடிந்திருக்கவில்லை.

பாவம் ஏற்கனவே எதற்கோ குழம்பிப் போயிருப்பவளைத் தான் மேலும் வதைக்க வேண்டாமென்று விட்டு விட்டிருந்தார்.

"உம் புருஷனைப் பொறுத்த வரைக்கும் கோபக்காரன் தாம்மா, ஆனா ரொம்ப நல்லவன்."

"அப்படி அவன் ஏதாவது சொல்லிட்டாக் கூட நீ கொஞ்சம் விட்டுக் குடுத்துப் போயிடுமா..."

"ஐயோ அத்தெ அவர் ரொம்ப நல்லவர், அவர் மேல எந்தத் தப்புமில்ல. நாந்தான் புரிஞ்சுக்காம ஏதேதோ பேசிட்டேன்..."

"நீ நல்ல பொண்ணு அனும்மா, நீ பேசறதுக்கும் ஏதாவது காரணமிருக்கும். ஆனாலும் உன் புருஷனைப் பத்தி நீ கொஞ்சம் தெரிஞ்சுக்கறது நல்லது."

"நிகிலேஷப் பொறுத்த வரைக்கும் அவனோட கருத்து தான் எப்பவும் முடிவா இருக்கணும்னு நினைப்பாம்மா, அதுக்காக மத்தவங்கள மதிக்க மாட்டான்னு இல்ல..."

"புரியுது அத்தெ."

"அவனோட படிப்புலிருந்து அப்பாவோட பிஸினஸ் ஏன் அவனே இப்ப சொந்தமாத் தொடங்கி நடத்திட்டிருக்கற பிஸினஸ் வரைக்கும் எல்லாத்தையுமே அவன் வெற்றிகரமா தான் பண்ணிட்டிருக்கான்."

"ஓரளவுக்கு இருந்த நாங்க இன்னைக்கு இந்த அளவுக்கு இருக்கோம்னா அதுக்கு நிகிலேஷோட உழைப்பும் திறமையும் தான் காரணம்."

"அவனப் பத்தி இன்னும் சிறப்பா சொல்லிட்டுப் போக எத்தனை எத்தனையோ விஷயங்கள் இருக்கு. இப்படியிருக்கற அவங்கிட்ட சில குறைகளும் இருக்கு, அதக் குறைகளாப் பாக்கறத விடவும் புரிஞ்சு நடந்துக் கிட்டா உங்க வாழ்க்கை நல்லார்க்கும்."



"நிச்சயம் செய்வேன் அத்தை..."

"அதக் குறைகள்னு கூட சொல்லிட முடியாது. தப்புகள சகிச்சுக்க மாட்டான். ரொம்பத் தன்மானம் பாப்பான் திடீர் திடீர்னு கோபம் வந்துடும். ஆனாலும் குணம் நிறையவே இருக்கும்மா."

"நிகிலேஷப் பத்தி உனக்கு அவ்வளவா எதுவும் தெரியாதுங்கறதால தான் உங்கிட்ட இதையெல்லாம் சொல்றேன்..."

"சரிதான் அத்தெ, நீங்க சொன்னது எல்லாத்தையும் நான் மனசுல வெச்சுக்கறேன்."

"இதக்கூட நான் ஏன் சொன்னேன்னா நீங்க நல்லா இருக்கணும், முக்கியமா நீ சந்தோஷமா இருக்கணும்னு தாம்மா சொல்றேன்..."

தனது அத்தை அவர் பாட்டுக்குக் கணவனைப் பற்றி சொல்லிக் கொண்டே போக அவற்றில் ஒன்றைக்கூட மனதளவிலும் அனுரேகாவால் மறுக்க முடிந்திருக்க வில்லை.

ஏன் அவர் சொல்லக் கேட்டவளுக்கு மலைப்பாகக் கூட இருந்தது, ஆச்சரியமாகவும்,

இத்தனை சிறப்புகளும் ஒருங்கே அமையப் பெற்றவன் தன் விஷயத்தில் மட்டும் ஏன் அப்படி நடந்து கொண் டான் என்று மனம் கேள்வி கேட்டது.

அதுவே திரும்பத் திரும்ப தோன்றிக் கொண்டே இருக்க, அதை ஒரு கொட்டு வைத்து அடக்கினாள்.

கணவன் மீது தவறே இருந்தாலும் அத்தையிடம் வாக்குக் கொடுத்ததைப் போல இனி நடந்ததை மறந்து

கணவனுடன் மனமொன்றி வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

அதற்குத் தான் கொஞ்சம் முயன்றால் போதும் கணவனும் ஒத்துழைப்பானென்று தோன்றியதில் மனமும் கூட லேசாகி விட்டதைப் போல உணர்ந்தாள்.

அதிலும் இந்த நல்ல பெண்மணியின் மனதை நோகச் செய்வதும் தவறுதான் இல்லையா?

''என்னமா தீவிர யோசனைல இருக்க?''

''அப்பிடியெல்லாம் ஒண்ணுமில்ல அத்தெ.''

அதே நேரம் ''அம்மா கிளம்பலாமா?'' என்று நிகிலேஷ் வர, ''ம் நாங்க ரெடி'' என்று தனது மருமகளுடன் வெளியே வந்தார் விசாலாட்சி.

கோவிலுக்குச் சென்று வழிபாட்டை முடித்துக் கொண்டு, அப்படியே சென்று மதிய உணவையும் ஒரு பெரிய ஹோட்டலில் உண்டு முடித்து பர்ச்சேஸையும் முடித்துக் கொண்டு அவர்கள் வீடு திரும்பியபோது மாலையாகி விட்டிருந்தது.

# 14



''அம்மா.''

''சொல்லுப்பா.''

''ஒரு கப் டீ கிடைக்குமா?''

''இதோ தர்றேன். அதுக்கு முன்னாடி சூடா கொஞ்சம் டிபன் எடுத்துக்கோயேன்.''



''சரிதான், ஆனா கொஞ்சம் சீக்கிரம் வேணும்.''

''என்ன அவசரம்?''

''ஆபீஸ்க்குப் போய்ட்டு வரணும்.''

''சரி இதோ எடுத்துட்டு வர்றேன்'' என்று சென்றார் விசாலாட்சி கூடவே அனுரேகாவும்,

டிபன் முடிந்ததும் நிகிலேஷ் கிளம்பத் தயாராக, ''அனுவையும் கூட அழைச்சுட்டுப் போலாமே கண்ணா, அவ மட்டும் தனியா போரடிச்சுட்டு இருக்கறதுக்கு நீயும் போனதும் திரும்பறது தானே, அழைச்சுட்டுப் போய்ட்டு வாயேன்'' என்றார்.

மறுக்க நினைத்தவன் ஆவலுடனான மனைவியின் பார்வையில் சரியென்றான்.

மனைவி ஏதோ சொல்லு வருவது புரிய என்னவென் பதைப் போலப் பார்த்தான்.

''இல்ல வெளிய போய்ட்டு வந்ததுல கசகசன்னு இருக்கு. பத்து நிமிஷம் வெயிட் பண்ண முடியுமா நான் குளிச்சுட்டு வர்றேன்'' என்று கேட்டாள்.

''சரிதான் மெதுவாவே வா அதுக்குள்ள எனக்கும் ஒரு சின்ன வேலையிருக்கு முடிச்சுட்றேன்'' என்றான்.

தொடர்ந்து வந்த சிறிது நேரத்தில் கணவனுடன் காரில் கிளம்பினாள் அனுரேகா.

ஏதேதோ எண்ண ஓட்டங்கள் மனதை நிரப்பியிருக்க ஏனோ இருவருக்குமே பேசத் தோன்றவில்லை.

அமைதியே பிடித்திருந்தது.

முக்கியமாகக் கணவனின் அருகில் அமர்ந்திருந்த அனுரேகாவிற்குத் தான் செய்த முட்டாள்த்தனங்கள் தான் அப்போது நினைவிற்கு வந்தன.

அத்தை மட்டும் வராமலிருந்தால் அவருடைய அறிவுரைகளைக் கேட்க நேராமல் இருந்திருந்தால் இன்னும் கூட முட்டாளாகத்தானே இருந்திருப்போமென்று வெட்கத்துடன் நினைத்துக் கொண்டாள்.

அனுரேகா இப்படி நினைத்துக் கொண்டிருக்க, "அம்மா கிளம்பற வரைக்கும் கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கே" என்றான் நிகிலேஷ்.

அப்படிச் சொன்ன கணவனை அனுரேகா புரியாமல் பார்க்க, "அம்மா ஏதேதோ சொல்லி உன்னக் குழப்புவாங்க. அவங்க இங்கிருந்து புறப்பட்ற வரைக்கும் எப்படியோ சிரமப்பட்டாவது எங்கிட்ட நல்லாப் பேசற மாதிரி காட்டிக்கோ" என்றான்.

"நான்..."

என்னென்னவோ சொல்லத் தோன்றினாலும் ஏனோ வார்த்தைகள் வந்திருக்கவில்லை அனுரேகாவிற்கு.

"என்ன மன்னிச்சுக்கோங்க."

அப்படிச் சொன்ன தன்னைக் கணவன் பார்க்க, "அதக் கேக்கற தகுதி கூட எனக்கு இல்லேன்னு தெரியும். அந்த அளவுக்கு பைத்தியக்காரத்தனமா ஏதே..."

"சிரமப்படாத விட்ரு."

கணவனின் ஒற்றை வார்த்தையில் அவனுடைய கோபம் தெளிவாகப் புரிய, அவளையறியாமலேயே கண்கள் கலங்கி விட்டிருந்தன அனுரேகாவிற்கு.

சரிதான், தான் பேசிய வார்த்தைகளுக்குக் கணவன் நல்லவனாகப் போய் இந்த அளவிற்குப் பெருந்தன்மையுடன் நடந்து கொள்கிறான்.



இதுவே வேறு யாராவதென்றால்...

அதிலும் நித்தமொரு நிறம் மாறுவதாக எண்ணிக் கொண்டு ஏளனமாகத் தான் நடத்துவார்கள்.

நினைக்க நினைக்க கடவுளே எவ்வளவு பெரிய தவறை எவ்வளவு சாதாரணமாக செய்து விட்டிருக்கிறேனென்று உள்ளுக்குள் குறுகிப் போனாள்.

அடுத்த பதினைந்து நிமிடங்களில் இருவரும் கம்பெனியை வந்தடைந்திருக்க, தங்களுடைய நிறுவனம் தான் முன்பு வேலை செய்து கொண்டிருந்த நிறுவனத்தின் அளவே எதிர்பார்த்திருக்காத அனுரேகா, அதைவிடப் பல மடங்கு பெரிதாக இருந்ததைக் கண்டு மலைத்துப் போனாள்.

அதே போல வேலை செய்பவர்களின் எண்ணிக்கையும்,

மணி இரவு ஏழாகியிருந்தாலும் ஷிஃப்ட் முறையில் வேலை நடக்கும் என்பதால் அந்த நேரத்திலும் நிறுவனம் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருப்பதைக் கண்டாள்.

"ஒருநாள் பகல்ல வரும்போது கம்பெனிய சுத்திப் பாக்கலாம்" என்ற கணவனின் வார்த்தைகளில் நடப்பிற்கு வந்தவள், "சரிதான் நீங்க வேணும்னா உங்க வேலயப் பாருங்களேன். நான் அப்பிடியே நடந்துட்டு வர்றேன்" என்றாள்.

"தனியாவா..."

"ஏன் என்ன பயம், ஜேஜேன்னு நடமாட்டம் இருக்கு தான..."

"நான் அதுக்காக சொல்ல, சரி போய்ட்டு வா. நீ யாருன்னு தெரியாதுங்கறதால செக்யூரிட்டிஸ் அங்கங்க

கேப்பாங்க. சரிதான் பாத்துப் போய்ட்டு வா. எது வானாலும் என் மொபைலுக்குக் கூப்புடு'' என்று தனது அறையை நோக்கி நடந்தான் நிகிலேஷ்.

எதிர்ப்பட்ட ஊழியர்கள் பணிவுடன் மாலை வணக்கம் சொல்ல சிறு புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டான்.

இவ்வளவு பெரிய கம்பெனியின் எம்.டி.யா தன் கணவன் என்னும் ஆச்சரியத்திலிருந்து இன்னும் கூட அனுரேகா மீண்டிருக்கவில்லை.

அது மட்டுமல்லாமல் இன்னும் அவர்களுடைய குடும்பத் தொழிலையும் கணவனே பார்த்துக் கொண் டிருப்பதாக அத்தை சொன்னதும் நினைவிற்கு வந்தது.

கூடவே கணவனைப் பற்றி அத்தை சொன்ன அனைத்தும்,

கணவனின் நினைவில் ஏதோ ஒருவித இனம் புரி யாத தவிப்பும் சந்தோஷமும் வந்து நெஞ்சை நிரப்பி யிருக்க, அப்படியே கால்போன போக்கில் நடந்தாள்.

ஓங்கி வளர்ந்திருந்த மரங்களும், பச்சைக் கம்பளம் விரித்தாற் போல மெத்தென்று கீழே வளர்க்கப்பட்டிருந்த புல்வெளியும், வேலிபோல நேர்த்தியாகவும் வெகு அழகாகவும் வெட்டி விடப்பட்ட செடிகளும் மனதைக் கொள்ளை கொள்ள நன்கு பராமரிக்கப்படும் குளுமை நிறைந்த பூங்காவிற்குள் நடப்பதைப் போலிருந்தது.

''ஹலோ மேடம்.''

திடீரென யாரோ அழைப்பதைப் போலிருக்க நின்ற வள், சுற்றிலும் பார்த்தாள்.

அங்கிருக்கும் ஒரு பெரிய அறையிலிருந்து இளைஞன் ஒருவன் வெளியே வர, என்னவென்பதைப் போலப் பார்த்தாள் அனுரேகா.



''குட் ஈவினிங் மேடம்.''

''நீங்க?''

''என்னத் தெரியலையா?''

அவன் அப்படிக் கேட்ட பிறகு தான் அவனை எங்கோ பார்த்ததைப் போலிருந்தது.

ஆனாலும் எங்கே, எப்போது என்றெல்லாம் சுத்தமாக நினைவிற்கு வரவில்லை.

''என்ன மேடம், இன்னும் ஞாபகத்துக்கு வரலையா?''

அவன் மீண்டும் கேட்க, இல்லையென்பதைப் போலத் தலையை ஆட்டினாள் அனுரேகா.

''நான் தான் பாஸ்கர்.''

பந்தாவாக அவன் தனது பெயரைச் சொல்ல சரி அதற்கென்ன என்று வாய் வரை வந்திருந்த வார்த்தை களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''சரி நேரா விஷயத்துக்கே வர்றேன். நீங்க முன்னாடி வேல செஞ்சுட்டிருந்த சாதனா இன்டஸ்ட்ரீஸ்ல சூப்பர் வைஸரா இருந்தாரே வினய் அவரோட ஃப்ரண்ட். நான், எப்பவும் அவர் கூட தான் இருப்பேன், அப்ப நீங்க என்ன நிறைய முறை பாத்திருக்கீங்க. ஆனா இப்பத் தெரியாத மாதிரி காட்டிக்கறது தான் ஏன்னு புரியல'' என்றான்.

அவன் அவ்வளவு சொன்ன பிறகும் கூட அனுரேகா விற்கு அவனை நினைவிற்கு வரவில்லை.

தெரிந்தால் ஆமாமென்று சொல்லிவிட்டுப் போகப் போகிறோம், இந்த சிறிய விஷயத்திற்கு ஏன் இவ்வளவு பேசுகிறான் என்று எரிச்சல் கூட வந்திருந்தது.

''சரி என்னத்தான் ஞாபகமில்ல விடுங்க, ஸார ஞாபகமிருக்கா?''

என்ன இவன்,

ஏதோ கம்பெனியின் எம்.டி.யை ஞாபகமிருக்கிறதா என்பதைப் போலல்லவா கேட்கிறான்.

''என்ன மேடம்?''

''இப்ப உங்களுக்கு என்ன பிரச்சன?'' - அனுரேகா.

''அச்சச்சோ தப்பா எடுத்துக்காதீங்க மேடம் நல்லாத் தெரிஞ்ச உங்கள திடீர்னு இங்க பாத்ததும் ஒரு சந்தோஷம். அதான் இப்பிடியெல்லாம் கேட்டேன் வேறொன்னுமில்ல.''

அவனுடைய விளக்கத்தில் மனம் சற்று சமாதானப் பட்டிருக்க, ''சரிதான் போய் வேலயப் பாருங்க'' என்று நடையைத் தொடர்ந்தாள்.

சரியாக அதே நேரம் கம்பெனியின் பி.ஆர்.ஓ. அதாவது பப்ளிக் ரிலேஷன்ஸிப் ஆபீஸர் அங்கே வர இப்பொழுது நெளியத் தொடங்கி விட்டிருந்தான். அந்த பாஸ்கர்.

''என்ன, இங்க என்ன பண்ணிட்டிருக்க?''

''ஸார்...''

''வாய் நீளம் அவ்வளவு அதிகமாயிடுச்சோ...''

................

''என்ன முழிக்கற? இவ்வளவு நேரமும் நீ யார் கூடப் பேசிட்டிருந்த தெரியுமா?''

''அவங்கள எனக்கு நல்லாத் தெரியும் ஸார்.''



''அதத்தான் பாத்துட்டிருந்தேனே, அவங்க எம்.டி.'' ஸாரோட மிஸஸ். அவங்க நினைச்சிருந்தா இந்நேரம் உன் ஸீட்டக் கிழிச்சிருக்கலாம். ஏதோ உன் நல்ல நேரம், அவங்களும் நல்லவங்களா இருக்கப் போய்த் தப்பிச் சுட்ட. இனியாவது பாத்து நடந்துக்கோ'' என்று விட்டுப் பி.ஆர்.ஓ. அங்கிருந்து நகர ''அது எனக்குத் தெரியாதா என்ன'' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் பாஸ்கர்.

பழைய கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த போது அவன் அனுரேகாவைப் பார்த்திருக்கிறான்.

இவ்வளவு அழகா என்று அவளுடைய அழகைப் பார்த்து வியந்தவர்களுள் இவனும் ஒருவன்.

ஒரு வருடம் முன்பு வரை அங்கே கோயம்புத்தூரில் வேலை செய்தவன் பிறகு இப்பொழுது வேலை செய்து கொண்டிருக்கும் கம்பெனியின் மேனேஜர் தெரிந்தவர் என்பதால் அவருடைய சிபாரிஸில் சொந்த ஊரான சென்னைக்கே வந்து விட்டிருந்தான்.

என்னதான் கம்பெனியே வியந்து பார்க்கும் பேரழகியாக இருந்தாலும் இந்த அனுரேகாவிற்கு இப்படியொரு வாழ்வா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மற்றது எப்படியோ பழைய கம்பெனியின் சூப்பர் வைஸரான வினய் இவள் மீது பைத்தியமாக இருந்ததை மட்டும் அவன் நன்கறிவான்,

தெரிந்து வினய், தெரியாமல் இன்னும் எத்தனை பேரோ,

ஆனாலும் இப்படியொரு புளியங்கொம்பைப் பிடிக்க இருந்தவள் அந்த ஒரு வினய் என்ன இன்னும்

எத்தனையெத்தனை வினய்கள் இருந்திருந்தாலும் கண்டு கொண்டிருக்க மாட்டாள்தான் ஏன் அதில் ஆச்சரியமும் ஒன்றுமில்லை தான்.

சும்மாவே இங்கே சென்னைக்கே வந்து விடத் துடித்துக் கொண்டிருக்கும் வினய், இந்த விஷயத்தை மட்டும் கேட்டால் அவ்வளவுதான்.

சரிதான் அவனுக்குப் பேசும் பொழுது சொல்லி விட்டால் போயிற்று என்று மனதிற்குள் குறித்து வைத்துக் கொண்டான்.



# 15

ஏனோ அப்படியே நடந்து கொண்டே இருக்க வேண்டும் போலிருந்தது அனுரேகாவிற்கு.

அந்த அளவிற்குக் குளுகுளுவென்று வீசிக் கொண்டிருந்தது தென்றல் காற்று.

அதிலும் ஆங்காங்கே ஒளி வீசிக் கொண்டிருந்த உயர்ந்து நின்ற மின்சார விளக்குகள் இரவைப் பகலாக்கிக் கொண்டிருக்க, கணவனின் நினைவு மனதைத் தாலாட்டிக் கொண்டிருந்தது.

ஆங்காங்கே வழியில் தென்பட்ட ஊழியர்களின் வியந்த பார்வையைக் கண்டும் காணாதது போல தொடர்ந்து நடந்தாள்.

அப்படியே எண்ணங்கள் சற்று முன்பு பார்த்த அந்த பாஸ்கரிடம் சென்று நிற்க, அவன் சொன்னதையெல்லாம் இப்பொழுது நினைவுபடுத்திப் பார்த்தாள்.



ஆனால் பலன் தான் பூஜ்யமாக இருந்தது.

என்ன யோசித்தும் பாஸ்கர் சொன்ன அந்த வினய்யை சற்றும் நினைவிற்கு வரவில்லை.

அதெல்லாம் சரிதான். ஆனால் எதற்கு அத்தனை ஆர்வமாகத் தன்னை அவ்வளவு கேள்விகள் கேட்டானென்று நினைத்ததில் சிரிப்புக் கூட வந்து விட்டிருந்தது.

அனுரேகாவைப் பொறுத்த வரை என்னதான் அவள் சிறந்த அழகியென்பது அவளுக்கே தெரியுமென்றாலும் அந்த கர்வமோ, திமிரோ ஏன் அதைப் பெரிய விஷயமாகக் கூட அவள் ஒரு நாளும் எண்ணியதில்லை.

அழகு என்பது பார்ப்பவர்களின் கண்களில் தான் இருக்கிறது என்பதை அவள் உறுதியாக நம்பினாள்.

அதற்காக அழகு ஒரு பொருட்டே அல்ல என்றும் சொல்லி விடுபவளல்ல.

என்னதான் வெளியே காட்டிக் கொள்ளா விட்டாலும் உள்ளுக்குள் தனது அழகில் அவளுக்கும் சற்று பெருமையே.

ஆனாலும் அதை மற்றவர்கள் பாராட்ட வேண்டும். பெருமையாகப் பேச வேண்டும் என்றெல்லாம் அவள் மனதளவில் கூட எண்ணியதில்லை.

அப்படி யாராவது பேசினாலும் சிரித்த முகத்துடன் பேச்சை திசை திருப்பி விடுவாள்.

அனுரேகாவைப் பொறுத்தவரை அவள் எப்பொழுதும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதிப்பவள்.

தனக்கென வரப் போகிறவனுக்காக மனதையும் சுத்தமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று அப்படியே வைத்துக் கொண்டும் இருந்தவள்.

அப்படி இருந்தவளுக்கு அந்த பாஸ்கரே சொன்னதைப் போல ஒரு வினய் என்ன இன்னும் அவனைப் போல எத்தனை பேர் இருந்திருந்தாலும் ஒன்றுமில்லை தான்.

தொடர்ந்து வந்த சில வினாடிகளிலேயே மற்ற அனைத்துமே மறந்து போய் விட்டிருந்தது அனுரேகா விற்கு, அதாவது அவளுடைய மன சிம்மாசனத்தில் மீண்டும் அவளுடைய கணவன் வந்து அமர்ந்து ஆட்சி புரியத் தொடங்கி விட்டிருந்தான்.

அப்படியே இல்லாவிட்டாலும் வேறு எந்த ஒரு ஆண் மகனாலும் லட்சத்தில் ஒரு பங்காகக் கூட அவளுடைய கவனத்தைக் கவரவோ அல்லது திசை திருப்பவோ முடியாதென்பதைப் பாவம் அந்த பாஸ்கர் உட்பட யாரும் அறிந்திருக்கவில்லை.

அதை மட்டும் அவர்கள் அறிந்திருந்தால் ஒருவேளை அவர்களுக்குப் பைசா பிரயோஜனமில்லாத செயல் களை அவர்கள் செய்திருக்க மாட்டார்களோ என்னவோ,

பின்னாளில் எத்தனை எத்தனையோ பிரச்சனைகள் அனுரேகாவின் வாழ்க்கையிலும் வராமல் இருந்திருக் குமோ என்னவோ,

நடந்தது போதுமென்று தோன்ற திருப்பி வந்த வழியில் நடந்தாள் அனுரேகா.

அதே நேரம் தனது மொபைலுக்கு அழைப்பு வர எடுத்து அட்டெண்ட் செய்து பேசினாள்.

கணவன் அழைத்திருக்க, ''இதோ இப்ப அங்க தான் வந்துட்டிருக்கேன்'' என்று போனை வைத்தாள்.

அடுத்த சில நிமிடங்களில் நிகிலேஷ் மேனேஜிங் டைரக்டர் என்று எழுதப்பட்டிருந்த அறையின் கதவை



அடைந்தவள், அனுமதி வாங்கிக் கொண்டு உள்ளே சென்றாள்.

கம்பெனியைப் போலவே அந்த அறையும் பிர மாண்டமாக இருப்பதைக் ண்டாள்.

''வா உக்காரு.''

''ஏன் வரச் சொல்லிட்டிங்க, கிளம்பப் போறமா?''

''ரொம்ப நேரமா நடந்துட்டிருக்கையேன்னு தான் கூப்புட்டேன்.''

''பசுமையா குளுகுளுன்னு நடக்கறதுக்கு ரொம்ப நல்லார்க்கு.''

''யாராவது, ஏதாவது கேட்டாங்களா?''

''ம்கூம், இல்ல.''

அதே நேரம் யாரோ உள்ளே வர அனுமதி கேட்க, வரச் சொன்னான் நிகிலேஷ்.

''குட் ஈவினிங் ஸார்.''

''வா மாயா, என்ன இந்த நேரத்துக்கு.''

''என் ஸிஸ்டருக்கு மேரேஜ் பிக்ஸ் ஆகியிருக்கு ஸார். அதான் இன்விடேஷன் குடுத்துட்டுப் போலாம்னு வந்தேன் ஸார்.''

''அத நீ நாளைக்குக் கூடக் குடுத்திருக்கலாமே.''

''ஷ்யூர் ஸார். ஆனா இப்ப மேடமும் இருக்காங்கன்னு போர்ட்டுக்கு போன் பண்ணிப் பேசினப்பத் தெரிஞ்சது அதான்...'' என்ற மாயா சற்றே திரும்பி அனுரேகா விற்கும் மாலை வணக்கம் சொன்னாள்.

''அப்புறம் அனு இவங்க மாயா என் செக்ரட்டரி'' என்று மனைவிக்கு அறிமுகப்படுத்தினான் நிகிலேஷ்.

''எனக்கு மேடம நல்லாவே தெரியும் ஸார். கல்யாணத்துக்கு வந்திருந்தேனே'' என்றவள் கணவன் மனைவி இருவரையும் தனது தமக்கையின் திருமணத் திற்கு வருமாறு மிகவும் வேண்டி அழைத்தாள்.

மீண்டுமொரு முறையும் சொல்லிவிட்டு அவள் விடைபெற்றுக் கொண்டு கிளம்ப, திரும்பிக் கண வனைப் பார்த்தாள் அனுரேகா.

''கல்யாணத்துக்குப் போகணுமில்லையா?'' என்று கேட்டாள்.

''ம்கூம் இல்ல.''

''ஏன்?''

''மாயாவுக்குக் கல்யாணம்னா போறதுதான். கூடப் பிறந்தவங்களுக்கெல்லாம் போயிட்டிருக்க முடியுமா?''

''அப்புறம் வர்றதா சொன்னீங்க.''

''சரிதான் சரியா கல்யாண நேரத்துக்கு நம்ம கம்பெனி கிஃப்ட்டும், வாழ்த்து அட்டையும் போய் சேர்ந்துடும்...''

''ஆனாலும் உங்கள எதிர்பார்க்க மாட்டாங்களா?''

மனைவி திருப்திப்படாதது தெரிய, ''இங்க மொத்தம் எத்தன பேர் வேலை செய்யறாங்கன்னு தெரியுமா?'' என்று கேட்டான்.

''தெரியலையே...''

''ஆயிரம் பேருக்கு மேல வேலை செய்யறாங்க.''

''ஓ...''

''சொல்லு. நாம பண்றது சரிதான?''

கணவன் கேட்பதிலிருக்கும் நியாயம் புரிந்தது.



சிறு புன்னகையுடன் சரியென்பதைப் போலத் தலையை ஆட்டினாள்.

மனைவியின் அழகிய புன்னகை தன்னை என்னவோ செய்ய, மிகவும் முயன்றே தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள நிகிலேஷால் முடிந்தது.

ஆனால் மனைவியிடம் அந்த மாதிரி எந்தவொரு உணர்ச்சியும் இல்லாததும் கூட அவனுடைய கவனத்தில் படத் தவறவில்லை.

இரவு ஒன்பது மணிக்கு மேல் வீடு திரும்பிய மகனை யும் மருமகளையும் சந்தோஷமாக வரவேற்றார் விசாலாட்சி.

''வாங்க, என்ன அனும்மா ஆபீஸ் எப்படியிருக்கு?''

''ரொம்ப பிரமாண்டமா பிரமாதமா இருக்கு அத்தெ, எனக்கு ரொம்பப் பிடிச்சிருக்கு...''

''என்ன பிடிச்சிருக்கு பாக்கறதுக்கா இல்ல நிர்வாகம் பண்றதுக்கா.''

''அச்சச்சோ நான் பொதுவா சொன்னேன். அத்தெ'' என்று அனுரேகா சொல்ல, ''சரி வாங்க சாப்புட்லாம்'' என்று அழைத்தார்.

''இதோ அஞ்சு நிமிஷத்துல வர்றேன்'' என்று நிகி லேஷ் நகர, தானும் தனது அத்தையுடன் சேர்ந்து அனைத் தையும் எடுத்து வைப்பதில் உதவினாள் அனுரேகா.

சில நிமிடங்களில் மூவரும் சாப்பிட அமர்ந்திருக்க, முதலில் பேச்சைத் தொடங்கியவர் விசாலாட்சி.

''உங்க ரெண்டு பேரையும் பெரியம்மா விருந்துக்கு அழைச்சிருக்காங்க நிகில்.''

"எனக்கும் கூப்புட்டிருந்தாங்கமா, நாளைக்கு நைட் டின்னருக்கு வர முடியுமான்னு கேட்டாங்க."

"நீ என்ன சொல்ற, போலாம் தான?"

"போகலாம்னு தான் நினைக்கறேன். எதுக்கும் காலைல கூப்புட்றதா சொல்லியிருக்கேன்."

"நாளைக்கே போய்ட்டு வாங்க கண்ணா, ஏன் சொல்றேன்னா இப்ப அங்க வீட்ல அர்விந்த், பூஜா, விக்னேஷ்னு எல்லாருமே இருக்காங்க..."

"சரிதான் நாளைக்கு ஈவினிங் ரெடியா இருங்க போய்ட்டு வந்துடலாம்."

"நான் எதுக்குப்பா, நீங்க ரெண்டு பேர் மட்டும் போய்டடு வாங்க."

"ஏம்மா, நீங்களும் வாங்களேன்."

"ம்கூம், நான் ஒரு நாள் இருக்கற மாதிரி போகணும். அடுத்த வாரம் உங்க அப்பா வந்ததும் போய்க்கறேன்."

"சரிதான், உங்க இஷ்டம்."

இரவு உணவு முடிந்ததும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுப் பிறகு படுக்கைக்கு வந்த அனுரேகாவிற்கு ஏனோ மனம் நிலை கொள்ளாமல் தவித்தது.

முன்பு ஒருமுறை கணவன் தன்னிடம் எதிர்பார்த்தது போலெல்லாம் இப்பொழுது நடக்காது என்பது அவளுக்கும் தெரிந்தே இருந்தது.

ஆனாலும் சாதாரணமாகவாவது பேசுவானென்று மிகவும் எதிர்பார்த்தாள்.

உன்மேல் எனக்கொன்றும் வெறுப்போ கோபமோ இல்லையென்று சொல்லி விட்டால் கூடப் போதுமென்றிருந்தது.



நிம்மதியாகிப் போய் விடும்.

ஆனால் சொல்வானா.

முதலில் தன்மேல் அவனுக்குக் கோபமில்லையென்று என்ன நிச்சயம்.

சற்றே திரும்பியவள் குட்நைட் என்ற ஒற்றை வார்த்தையுடன் தனக்கு முதுகு காட்டிப் படுத்து விட்டிருந்த கணவனைக் கண்டாள்.

தன் மேல் இன்னும் கோபமோ,

சரிதான், தான் பேசிய வார்த்தைகளுக்குப் பிறகு இல்லாமலா இருக்கும்.

என்னதான் கணவனின் வார்த்தைகளிலும், அத்தையின் அறிவுரையிலுமாக இப்பொழுது தெளிந்திருந்தாலும் கூட, பேசியதனைத்தும் இல்லையென்றாகி விடுமா என்ன.

இனிமேல் கணவன் தன்னிடம் பழையபடி நடந்து கொள்வானா.

ஏனோ சந்தேகமாகத் தான் இருந்தது அனுரேகாவிற்கு.

## 16



முடிவு செய்தது போலவே மறுநாள் மாலையில் கணவன் மனைவி இருவரும் விசாலாட்சியின் அக்கா மீனாட்சியின் வீட்டிற்கு விருந்துக்குப் புறப்பட்டனர்.

கணவனுடன் வெளியே செல்வது மிகவும் பிடித்திருந்தது அனுரேகாவிற்கு.

கிளம்பித் தயாராக இருந்தவள் கணவன் அலுவலகத்திலிருந்து வந்ததும் அவனுடன் கிளம்பி விட்டிருந்தாள், விசாலாட்சி கிளம்ப வைத்திருந்தார்.

அடுத்த அரை மணி நேரத்தில் இருவரும் மீனாட்சியின் வீட்டைச் சென்றடைந்திருக்க, அவர்கள் எதிர்பார்த்ததை விடவும் குறிப்பாக அனுரேகா எதிர்பார்த்ததை விடவும் வரவேற்பு தடபுடலாகவே இருந்தது.

திருமணத்திற்குப் பிறகு அவள் பார்க்கும் கணவனின் முதல் சொந்தமும் அதுவே என்பதால், மனதிற்குள் சற்று படபடப்பாக உணர்ந்தாள்.

பார்ப்பதற்கு கணவனின் வீட்டை விடவும் கூட அவர்கள் செல்வச் செழிப்புடன் இருப்பது தெரிந்தது.

தொடர்ந்த பேச்சில் அது உறுதியும் ஆனது.

வந்ததும் சிறிது நேரம் அனைவரிடமும் பொதுவாகப் பேசிக் கொண்டிருந்த கணவன் பிறகு ஆண்களுடன் தொழில் விஷயமாகப் பேசிக் கொண்டே எங்கோ வெளியே செல்ல, தான் பெண்களுடன் இருந்தாள் அனுரேகா.

''ஹாய் அனுரேகா, நான் பூஜா நிகிலோட பெரியம்மா பொண்ணு'' என்று தன்னைத்தானே அறிமுகப் படுத்திக் கொண்ட பூஜா இனிமையாகப் பேசிக் கொண்டே போக, அனுரேகாவிற்கும் அது புது இடம் என்னும் தயக்கம் மறைந்து காணாமல் போய் விட்டிருந்தது.

''சரிமா நான் போய் நிகிலண்ணா கூடப் பேசிட்டிருக்கேன். அவரு வர்றதே உலக அதிசயமாச்சே'' என்று மகள் அங்கிருந்து செல்ல ''சரிதான் வாயாடி அவனுக்கும் உன்ன மாதிரி ஒருத்தி தான் சரி போ'' என்று சிரித்தார் மீனாட்சி.



மகள் சென்றதும் அவருடைய கவனம் முழுவதும் தன் மீது விழ பதட்டத்தை மறைத்துக் கொண்டு அவரைப் பார்த்தாள் அனுரேகா.

''அத்தை நல்லார்க்காங்களா?''

''நல்லார்க்காங்கமா.''

''என்னையும் அத்தைண்ணே கூப்புடு.''

''சரிங்கத்தெ.''

''விசாலாட்சி சொன்னதும் முதல்ல நம்ம அந்தஸ்த்துக்கு சுத்தமாப் பொருத்தமில்லையேன்னு ரொம்பவும் கவலைப்பட்டேன். ஆனா மணவறைல வெச்சு உன்னப் பாத்ததுமே சந்தோஷமாயிடுச்சு. பையன் தடுக்கி விழுந்ததுக்கான காரணமும் புரிஞ்சது.''

............

''அதுக்கும் மேல நிகிலேஷ். ஒன்ன முடிவு பண்ணிட்டா அதப் பின்ன மாத்தவும் முடியாதே.''

''சாதாரண விஷயத்துலயே அப்பிடிங்கும் போது இது அவனோட வாழ்க்கை விஷயம்.''

மீனாட்சி அவர் பாட்டுக்கு உணர்ந்து அனைத்தையும் சொல்லிக் கொண்டே போக, அவரையே பார்த்தாள் அனுரேகா.

அங்க தங்கச்சி வீட்லன்னு மட்டுமில்லமா, இங்க நம்ம வீட்ல, அப்புறம் எங்க அண்ணனுங்க வீட்லன்னு எல்லா இடத்துலயுமே உன் புருஷனோட வார்த்தைகளுக்கு எதிர் வார்த்தை கிடையாது.''

''அந்த அளவுக்கு எல்லாருக்குமே அவன் மேல ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை.''

''ஒவ்வொரு விஷயத்துலயும் அத நிரூபிச்சுட்டும் வர்றான்.''

''யாருக்கு என்ன பிரச்சனைன்னாலும் முன்னாடி நின்னு உதவி செய்வான்.''

''நல்ல உழைப்பாளிமா, திறமைசாலியும் கூட...''

''விட்டா அவனப்பத்தி இன்னும் சொல்லிகிட்டே போகலாம். ஆனா ஒண்ணு பாரு இதையெல்லாம் அவனுக்கு முன்னாடி சொல்லிப்பாரு காதுல கூட வாங்கிக்க மாட்டான்.''

''ஒண்ணுமே இல்லாத சப்ப விஷயத்தப் போய்ப் பெரிசு பண்றீங்களேன்னு சிரிச்சுட்டே பேச்ச மாத்திடுவான்...''

அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பேச்சுக் குரியவனே வர இருவரும் நிமிர்ந்து பார்த்தனர்.

''என்ன பெரியம்மா, திடீர்னு விருந்தெல்லாம் தட புடல் படுது.''

''வாடாப்பா, என்ன பண்றது இப்பிடியெல்லாம் கூப் புட்டா தான நீயும் எட்டியாவது பாக்கற. சும்மாவே இந்தப் பெரியம்மா குடும்பத்தப் பாக்கலாம்னு நீயும் வந்தா எவ்வளவு நல்லார்க்கும்னு நினைச்சுப் பாத்தேன்...''

''சரிதான் இனிமேல் வந்துட்டாப் போயிடுச்சு...''

''பாக்கலாம்.''

''அதுவும் இந்த மாதிரி விருந்தே கிடைக்குதுன்னா வர மாட்டமா பெரியம்மா.''

''இதையெல்லாம் நம்பாதீங்கண்ணா ஏதோ கல்யாண மான ஒரு மாசம் ரெண்டு மாசத்துக்குத் தான் இந்தத் தடபுடலான வரவேற்பெல்லாம் அப்புறம் பழையபடி



தான்'' என்று அப்பொழுது அங்கு வந்த பூஜா சொல்ல, அனுபவம் பேசுதாக்கும் என்றான் நிகிலேஷ்.

''பின்ன பேசித்தான ஆகணும், என்னோட அண்ணா ஆயிட்டிங்களே. அப்புறம் அண்ணா...''

''ம் சொல்லு.''

''உண்மையச் சொல்லுங்க அண்ணியோட அழகுல தான விழுந்தீங்க...''

''அப்ப ஐயா பாக்க ஸ்மார்ட்டா இல்லையா?''

''நீங்களும் ஸ்மார்ட் தான். நான் கேட்டதுக்கு முதல்ல பதில் சொல்லுங்க...''

''சரி அப்படியே வெச்சுக்கோ...''

''இப்படிச் சொன்னா எப்படி, உண்மையச் சொல்லுங்க.''

''உண்மைய சொல்லணும்னா அப்படியில்ல.''

''பின்ன?''

''அதத் தாண்டியும் எத்தனையோ இருக்கு.''

''ஓஹோ... அது என்ன...''

''அதெல்லாம் சொல்ல முடியாது வாயாடி.''

''சொல்லலேன்னா எங்களுக்குப் புரியாதாக்கும்...''

''உனக்குப் புரியாம என்ன இருக்க முடியும். அப்புறம் எங்க உன் வாண்டு?''

''ம், தூங்கறான்.''

''இந்த நேரத்துக்கா?''

''இப்ப எழுந்துடுவான், இருங்க எழுந்ததும் உங்க காதப் புடிச்சுத் திருகச் சொல்றேன்.''

''அது சரி, அம்மாவும் மகனும் இப்படிச் செய்யறதால தான் உன் வீட்டுக்காரர் பயந்துட்டு இந்தியாவுக்கே வர மாட்டேங்கறார்.''

''அவரு வர்லேன்னா என்ன நாங்க போறோமில்ல.''

''அது எப்ப?''

''வர்ற மாசம் பதினஞ்சாம் தேதி, இன்னும் இருபது நாள் தான் இருக்கு.''

''அச்சோ பாவம்.''

''யாரு.''

''அவருதான்.''

''வேண்டாம்.''

''நானும் அதத்தான் சொல்றேன். பாவம் மனுஷன் விட்ரு அங்கயாவது நிம்மதியா இருக்கட்டும்.''

''இங்க பாருங்கம்மா இந்த அண்ணன...''

மகள் சொல்ல ''உன்னால பதில் சொல்ல முடிஞ்சா சொல்லு என்னையேன் கூப்புட்ற?'' என்று கேட்டார் மீனாட்சி.

''அப்படிச் சொல்லுங்க பெரியம்மா'' என்று தங்கை மகன் சொல்ல, ''ஆனாலும் உன் கூட வார்த்தைல ஜெயிக்க முடியுமாப்பா?'' என்றார்.

''அப்படிச் சொல்லுங்கம்மா'' என்று பூஜா சொல்ல,

''அது ஏன் பெரியம்மா அப்பிடி?'' என்று கேட்டான் நிகிலேஷ்.

''ஏன்னு கேட்டா, உன் அளவுக்கு யாருக்கும் திறமையில்லேன்னு தான் சொல்லணும் வேறென்ன?''



''ஓ, பதில் சொல்ல முடியலேன்னா இப்பிடி சொல்லித் தப்பிச்சுக்கலாமா...''

''அப்படியெல்லாம் ஒண்ணுமில்லையே, ஆமா நீங்க மட்டும் பேசிட்டே இருக்கீங்க. அண்ணிக்கும் சேத்து வெச்சு. ஏன் அவங்க பேச மாட்டாங்களா?''

''பின்ன உன்ன மாதிரியா, நான் சரியாத்தான் பேசு வேன்னு அவ்வளவு நம்பிக்கை.''

''அத அண்ணி சொல்லணும்'' என்ற பூஜா, ''அப்பிடியா அண்ணி?'' என்று அனுரேகாவைப் பார்க்க, ''ஏங்க நான் என்ன சொல்லட்டும்?'' என்று அப்பாவியாய்க் கணவனைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

அவள் கேட்டுக் கூட முடித்திருக்கவில்லை. அங்கே ஒரு சிரிப்பொலி வெடித்தது.

''பாத்தீங்களா உங்க மேல எவ்வளவு பயமிருந்தா ஆமா இல்லன்னு கூட சொல்ல முடியாம உங்களக் கேப்பாங்க.''

''அது சரிதான், இன்னும் கொஞ்ச நேரம் உனக்கு மத்தியில அவ இருந்தா அப்புறம் அவளும் உன்ன மாதிரி பேச ஆரம்பிச்சாலும் ஆச்சரியப்பட்றதுக்கில்ல.''

அதற்குப் பிறகு அவ்வப்பொழுது தானும் சில வார்த்தைகள் பேசினாள் அனுரேகா.

சூழ்நிலைக்குத் தக்கவாறு ரசனையுடன் தான்.

சிறிது நேரத்தில் விருந்து முடிய, அதற்குப் பிறகும் ஒரு மணி நேரம் இருந்து பேசிக் கொண்டிருந்துவிட்டு அதற்குப் பிறகே புது மணத் தம்பதி கிளம்பினர்.

அங்கு வந்து சென்றதற்குப் பிறகு மனதளவில் கணவனுடன் நெருங்கி விட்டதைப் போல உணர்ந்து சந்தோஷப்பட்டாள் அனுரேகா.

ஒரு பக்கம் அப்படி எண்ணியவள், இன்னொரு பக்கம் கணவன் என்ன சொல்லி விடுவானோ என்று அஞ்சவும் செய்தாள்.

அவளுடைய அச்சத்திற்கான காரணமும் வேறு ஒன்றுமில்லை.

அனைவரும் ஊக்குவிக்கிறார்களே என்று சற்று அதிகப் பிரசங்கித்தனமாக நடந்து கொண்டோமோ என்பதே அது.

அனுரேகா அப்படி நினைத்துக் கொண்டிருக்க, ''நன்றி'' என்றான் நிகிலேஷ்.

அப்படிச் சொன்ன கணவனை அவள் புரியாமல் பார்க்க, ''எங்க பேசாமலே இருந்திடுவியோன்னு இருந் தேன். ஏன் சொல்றேன்னா பெரியம்மா அம்மா மாதிரி யில்ல. எதையும் உடனே கண்டு பிடிச்சுடுவாங்க. ஆனா லும் உன் நடிப்பு அவங்களையே நம்ப வெச்சுடுச்சுன் னாப் பாரு... பிரமாதம்'' என்றான்.

நடிப்பா.

கணவனின் அந்த வார்த்தையில், இருந்த சந்தோஷ மல்லாம் போய் நொந்து போனாள் அனுரேகா.

''இல்ல... நான் நிஜமா தான்...''

''அவங்க எல்லாரும் என்ன வேணும்னாலும் சொல்லிக் கு ழப்பியிருப்பாங்க. ஆனா அதையெல்லாம் விட்டுட்டு நீ நீயா இரு.''

நீ, நீயாக இரு என்றால்,

அதற்கு என்ன பொருள்.

அதையும் கணவனே சொல்ல, இப்பொழுது சுத்த மாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.



''நீயே சகிச்சுக்கிட்டுத்தான் பாவம் எல்லாத்தையும் பண்ணிட்டிருக்க, இப்ப பெரியம்மா வீட்ல இருந்து வெளிய வந்தாச்சு. இனி நீ பழையபடி இருக்கலாம்.''

கடவுளே,

இப்படிச் சொன்னால் எப்படி.

பழையபடி முட்டாள்த்தனமாக இப்பொழுது தன்னா லுமே இருக்க முடியாதே,

இதை எப்படிக் கணவனுக்குப் புரிய வைப்பது.

''இல்ல நான்...''

''ஆனா அதுக்கும் வழியில்லையே, வீட்ல அம்மா தொல்ல இல்லையா?''

''இல்ல......''

''நீயும் பாவம் தான்.''

ஐயோ இல்ல, இல்லவே இல்ல என்று மனம் ஊமை யாய் அழுதது.

ஆனாலும் வாயைத் திறந்து ஆதங்கத்தை வெளிப் படுத்த முடிந்திருக்கவில்லை.

அப்படி தான் சொன்னால் கூட அதைக் கணவன் நம்புவானா என்று சந்தேகமாக இருந்தது.

நிச்சயம் நம்ப மாட்டான்.

அதையும் நாடகமென்று தான் சொல்வான்.

சிரமப்படாதே இயல்பாக இரு என்பான்.

சரிதான் தன் முட்டாள்த்தனத்தினால் செய்த செயல் களைத் தான் தானே அனுபவித்தாக வேண்டும்.

அது எவ்வளவு சிரமமென்றாலும்,

அதற்குப் பிறகு முயன்று மனதை வேறு விஷயங்களில் திசை திருப்பியிருந்தாள் அனுரேகா.



# 17

அனுரேகாபைப் பொறுத்தவரை அவள் முன்னைக்கு இப்பொழுது எவ்வளவோ மாறிப் போயிருந்தாள்.

ஆம், யாருடைய உந்துதலும் இல்லாமலேயே அவளும் கணவனை மனதார விரும்பத் தொடங்கியிருந்தாள்.

ஒரு சில நாட்களுக்குள் தனக்குள் நிகழ்ந்திருந்த இந்த மாற்றம் அவளுக்கே மிகுந்த ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருந்தது.

ஆனாலும் அதைப் பற்றி ஆராய அவள் விரும்பவில்லை.

அவள் செய்தது ஒன்றே ஒன்று தான்.

கண்களையும், காதுகளையும் இறுக மூடிக் கொண்டு தான் நினைப்பது தான் சரியென்று எண்ணும் எண்ணத்தை மட்டும் கை விட்டிருந்தாள் அவ்வளவே,

என்ன அதை அவளாகச் செய்திருக்கவில்லை. அதற்கு அத்தை என்னும் ஒரு கருவி தேவைப்பட்டது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அனுரேகாவின் நிலை இப்படியிருக்க, நிகிலேஷ் அவனோ தனக்குள் இறுகத் தொடங்கியிருந்தான்.



தொடக்கத்தில் மனைவியின் கோபம் நியாயமானது தான் என்பதை அவனாலும் புரிந்து கொள்ள முடிந்தது.

ஆனால் போகப் போக எப்படி அவள் தன்னை தொடர்ந்து வெறுத்து ஒதுக்கிக் கொண்டே இருக்கலாம் என்று எண்ணாதிருக்க முடியவில்லை.

அதிலும் தொழில், குடும்பம், சமுதாயம் என அனைத்து விதங்களிலும் உயர்ந்த நிலையில் இருந்து கொண்டு அவன் சொல்ல மற்றவர்கள் அதைக் கேட்டே நடக்கப் பழகி விட்டதாலோ என்னவோ மனைவியின் தொடர்ந்த உதாசீனத்தை அவனால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடியாது போயிற்று.

எத்தனையோ வழிகளில் இறங்கிப் போயும் ஆயிற்று.

எவ்வளவோ விஷயங்களில் விட்டுக் கொடுத்தும் ஆயிற்று.

இனியும் தான் என்ன தான் செய்ய முடியும்.

நினைக்க நினைக்க மனம் மேலும் இறுகிப் போனது தான் மீதியாயிற்று.

அதிலும் முகத்தைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை. சேர்ந்து வாழ்வதென்பது இந்த ஜென்மத்தில் முடியாது என்று என்னவெல்லாம் சொல்லி விட்டாள்.

அவ்வளவு தீவிரமான முடிவுடன் இருப்பவள். தானாக மாறுவாள் என்று எண்ணுவதும் நடக்கக் கூடிய ஒன்றாக அவனுக்குத் தோன்றவில்லை.

அப்படி அவளாக மாறாமல் மற்றவர்கள் எடுத்துச் சொல்லி அது தாயாக இருந்தாலும் நிகிலேஷ் அதை விரும்பவில்லை.

ஏன் அப்படியொரு நிலையை அவனால் எண்ணிக் கூடப் பார்க்க முடியவில்லை.

அவனுடைய நிலை இப்படியிருக்க, மனைவியிடம் சில நாட்களாகத் தெரியும் மாற்றம் அவனுக்கு சந் தோஷத்தை அளிக்கக் கூடியதாக.இருக்கவில்லை.

மாறாக அது அவனை மேலும் காயப்படுத்திய தென்றே சொல்லலாம்.

இதுவே அவனுடைய இடத்தில் வேறு ஒரு சராசரி ஆண் மகன் இருந்திருந்தால் 'எப்படியோ மனைவி மாறி னாளே அதுவே போதுமென்று கூட எடுத்துக் கொண்டு போயிருப்பானோ என்னவோ, ஆனால் நிகிலேஷால் அப்படி எடுத்துக் கொண்டு போய்விட முடியவில்லை.

அது மட்டுமல்லாது மனதளவில் மேலும் கீழிறங்கிப் போய் விட்டாற் போலவும் உணர்ந்தான்.

இப்படிப்பட்ட எண்ண ஓட்டங்களால் இரவெல்லாம் அவனால் சரியாக உறங்கக் கூட முடிந்திருக்கவில்லை.

அதனாலோ என்னவோ அன்று காலையில் எழுந்த போதே அவனுக்குத் தலையை வலிக்கத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் அதைப் பொருட்படுத்திக் கொண்டிருக்க அவனுக்கு நேரமிருக்கவில்லை.

அந்த அளவிற்கு உடனே போய் செய்தாக வேண்டிய அலுவலக வேலைகள் அன்று நிறைய இருந்தன.

அதிலும் சில வேலைகள் முக்கியமானவையும் கூட என்பதால் வேகமாகக் கிளம்பி வந்தான்.

அவ்வளவுதான்.



இனி சென்று காலை உணவை முடித்துக் கொண்டு கிளம்பினால் சரியாக இருக்குமென்று கீழே வந்த தன்னைத் தாய் அழைக்க அவரைப் பார்த்தான்.

"உன்னைத்தான் நிகில்."

"சொல்லுங்கமா?"

"எங்க கிளம்பிட்ட?"

"ஆபீஸ்க்கு."

"போற வழில அனுக்கு ஒரு சின்ன வேலையிருக்கு. அதனால இப்ப உன் கூட அழைச்சுட்டுப் போய்ட்டு அப்படியே நீ ஆபீஸ்ல இருந்து வரும்போது அழைச் சுட்டு வந்துடேன்..."

"இல்லமா என்னால முடியாது."

"ஏன்?"

"ஏன்னு கேட்டா என்ன சொல்றது, டிரைவர் செய்யற வேலைய என்ன செய்யச் சொல்றீங்க. சரி அது கூடப் போகட்டும். அதுக்கும் மேல காரணத்தையும் சொல்லித் தான் ஆகணுமா?"

"என்னப்பா இப்பிடியெல்லாம் பேசற..."

"பின்ன?"

"ஏன் கண்ணா ஏதாவது முக்கியமான வேலையா?"

"ஆமாம்மா, அத நின்னு சொல்லிட்டிருக்கக் கூட இப்ப எனக்கு நேரமில்ல..."

"அச்சச்சோ, உன் நிலம புரியாம நான் பாட்டுக்குப் பேசிட்டிருக்கேன் பாரு. வாப்பா வந்து சாப்டுட்டு நீ கிளம்பறதப் பாரு" என்றவர் உடனே சாப்பிட வந்து அமர்ந்த மகனுக்குப் பரிமாறினார்.

மீண்டும் பரிமாற வந்த தாயைத் தடுத்து விட்டு வேக மாக உண்டு முடித்து எழுந்தான், அவருடைய முகத்தை கவனித்து விட்டு ''என்னம்மா சொல்லுங்க?'' என்றான்.

''ஒரு முக்கியமான வேலையா அனு வெளிய போய்ட்டு வரணும். கார் இருக்கு டிரைவர மட்டும் அனுப்பி வையேன் கண்ணா...''

மிகவும் வேண்டி அத்தை கேட்க, அப்பொழுது தான் கீழே இறங்கி வந்து கொண்டிருந்த அனுரேகாவிற்கு மற்றவர்களுக்கு எதற்கு வீண் சிரமம் வேண்டாம் அத்தை என்று சொல்லி விடலாம் போலிருந்தது.

ஆனாலும் அதற்கு முன்பாகவே ''அட என்னமா நீங்க விட்டா அனு அனுன்னு உருகிடுவீங்க போலிருக்கு. இத்தனை நாளும் டிரைவர வெச்சா எல்லா இடத்துக்கும் போயிட்டிருந்தா. விடுங்க கல்யாணத்துக்கு முன்னாடி எப்படியிருந்தாளோ அதே மாதிரி இப்பவும் அவ வேலைய அவளே பாத்துக்கட்டும்'' என்றான்.

மகனின் பேச்சால் ஏற்கனவே மனம் நொந்து போயி ருந்தவர், அதே சமயம் மருமகளும் வந்து விட்டதில் செய்வதறியாது நின்று விட்டிருந்தார்.

ஆனால் அத்துடனாவது மகன் விட்டிருந்தால் அல்லவா.

''மத்தவங்களுக்காகவெல்லாம் நீங்க ஏம்மா உங்க மனசையும் உடம்பையும் கெடுத்துக்கறீங்க. நீங்க ஃப்ரீயா இருங்கமா சம்பந்தப்பட்டவங்களே யாருக்கு வந்த வினையோன்னு இருக்கும்போது உப்புப் பெறாத விஷ யங்களுக்காக நீங்க அலட்டிக்கறது எனக்கு அநியாயமாப் படுது.''



மகனின் வார்த்தைகள் தான் அப்போதைக்கு அநியாய மாகப் பட்டன விசாலாட்சிக்கு.

அதிலும் அவனுடைய இயல்புக்கு மாறாக அவன் பேசப்பேச அதை அவரால் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

முக்கியமாக மருமகளின் முகத்தை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தவித்தார். கூடவே தனக்கே இப்படி யிருக்கும் பொழுது அவளுக்கு எப்படியிருக்கும் என்றும்,

தொடர்ந்து சில வினாடிகளில் ''சரி நான் கிளம்ப றேன்'' என்று பொதுவாகச் சொல்லிவிட்டு மகன் கிளம்பி விட்டிருக்க, திரும்பி அனுரேகாவைப் பார்த்தார்.

தன்னை இயல்பாகக் காட்டிக் கொள்ள அவள் படும் சிரத்தை புரியாமலில்லை.

ஆனாலும் அதைக் கண்டு கொண்டதாகக் காட்டிக் கொள்ளாமல், ''இவன் எப்பவும் இப்படித்தாம்மா, அவ னோட வேலைக்கு இடைஞ்சல்னு வந்துட்டா தேவை யில்லாததுக்கெல்லாம் மூக்க நுழைச்சு கருத்து சொல் வான். நேத்து அவங்கப்பாவ ஏதோ சொன்னான். இனி நாளைக்கு யாரோ...''

அத்தையின் வார்த்தைகள் காதுக்குள் கூடச் சென் றிருக்கவில்லை அனுரேகாவிற்கு. அந்த அளவிற்குக் கணவனின் வார்த்தைகள் அவளை அதிர்ச்சியடையச் செய்திருந்தன.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அந்த இடைவெளியில் ஓரளவு தன்னை சமாளித்துக் கொண்டவள் பிறகு இயல்பான புன்னகையுடன் அவரைப் பார்த்தாள்.

"நீங்க சொல்றது சரிதான் அத்தெ, உரிமையிருக்கறவங்க மேல தான கோபத்தக் காட்ட முடியும். பாவம் நேத்தே முக்கியமான வேலைன்னு யார் கூடவோ தீவிரமா டிஸ்கஸ் பண்ணிடிருந்தார். அதுக்காகத் தான் இப்ப அவசரமா கிளம்பிட்டிருந்ததும் கூட, இந்த நேரத்துல போய் என்னதான் அது நமக்குப் பெரிய விஷயமாகவே இருந்தாலும் அத அவருகிட்ட நாமும் சொல்லியிருக்க வேண்டாம் தான்."

அனுரேகா சொல்லச் சொல்ல, நிஜமாகவே அப்படித் தானோ என்று தோன்றத் தொடங்கி விட்டிருந்தது விசாலாட்சிக்கு.

ஆனாலும் அவன் பேசியது எந்த விதத்தில் நியாயம்.

வேலையிலிக்கிறது சாத்தியப்படாது என்று விட்டுப் போயிருந்திருக்கலாமே.

"அதுவும் நீங்க வேற ரிசப்ஷனுக்குன்னு நாலு நாளா அவர வேல செய்யவே விடலையே அத்தெ..."

"அது சரிதான் நீயும் உம் புருஷனுக்குத் தான் சப்போர்ட் பண்ற இல்ல..."

"ஐயோ அத்தெ..."

"நீ சொல்றதெல்லாமே சரிதான்டாம்மா, ஆனாலும் அந்த தடியன் அப்படிப் பேசியிருக்க வேண்டாம்."

அப்படிச் சொன்ன அத்தையைப் புன்னகையை மறைக்க முயன்றபடி பார்த்தாள் அனுரேகா.

"என்ன சிரிப்பு" என்று விளையாட்டுக்கு அதட்டியவரிடம், "என் வீட்டுக்காரர் ஒண்ணும் நீங்க சொல்ற மாதிரியில்ல அவர் ரொம்ப ஸ்மார்ட்" என்றாள்.



"ஓஹோ தடியன்னு சொன்னதுக்கா இப்படி வரிஞ்சு கட்டிட்டு வர்ற" என்றவருக்கும் இப்பொழுது மனம் லேசாகி விட, "அதெல்லாம் சரிதான்டாம்மா முதல்ல உன் ரிசப்ஷன் பிளவுஸ்ல இருக்கற ஆல்ட்ரேஷன கரெக்ட் பண்ணியாகணுமே. நாளைக்கு மறுநாள் ஃபங்ஷன வெச்சுட்டு இன்னும் முக்கியமான வேலையே பென்டிங்ல இருக்கு..."

"அது ஒண்ணும் பிரச்னையில்ல அத்தெ, இப்பவே நான் போய் அதென்னன்னு பாத்துட்டு வந்துட்றேன்."

"தனியா எப்படிப் போவ?"

"கார எடுத்துட்டு தான் அத்தெ."

"போய்ட்டு வந்துடுவியாம்மா, புது இடம் வேற..."

"அதெல்லாம் பிரச்சனையில்ல அத்தெ ஒரு தடவ போன இடம் தான்."

"இன்னைக்குன்னு பாத்து டிரைவர் ரெண்டு பேரும் லீவ் போடணுமா, இல்லன்னா இரு கூட நானும் வர்றேன்..."

"அச்சச்சோ அதெல்லாம் வேண்டாம், உங்க பிரெண்ட் பேமிலி இன்னும் கொஞ்ச நேரத்துல வந்துடுவாங்க. நீங்க இருந்து அவங்கள கவனிங்க."

சொன்னது போலக் காரை எடுத்துக் கொண்டு கிளம்பியவள், அடுத்த இரண்டு மணி நேரங்களில் அனைத்து வேலைகளையும் முடித்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்திருந்தாள்.

காரை அதனிடத்தில் பார்க் செய்து விட்டு அதன் சாவியை ஆட்காட்டி விரலால் சுழற்றிக் கொண்டு அது கீழே விழுந்து விடாமல் அதே கவனத்துடனேயே வீட்டில் படியேறியவள் அங்கு வந்த கணவனின் மீது நேருக்கு நேராக மோதிக் கொண்டாள்.

அப்படி மோதிக் கீழே விழப் போன மனைவியைப் பிடித்து நிறுத்தியிருந்த நிகிலேஷ், அவளை நேருக்கு நேராகப் பார்த்தான்.

''எங்க போய்ட்டு வர்ற?''

பதில் சொன்னாள் அனுரேகா.

''தனியா எப்பிடி?''

''ஏன் நான் தனியா கார எடுத்துட்டுப் போக மாட்டேனா, கல்யாணத்துக்கு முன்னாடி என்ன செஞ்சேனோ அதே மாதிரிதான் இப்பவும் செஞ்சேன். என்ன அங்க வீட்ல ஒரு லட்சம் ரூபாய் கார் இருக்கும். இங்க ஒரு கோடி ரூபாய் கார். அது மட்டும் தான் வித்யாசம்'' என்று ஓரக் கண்ணால் கணவனைப் பார்த்தாள்.

மனைவியின் பதிலில் தோன்றிய லேசான சிரிப்பைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''காலைல நான் அப்பிடிப் பேசியிருக்கக் கூடாது'' என்று உணர்ந்து சொன்னான்.

''அப்பிடி தப்பா என்ன சொல்லிட்டிங்க, அவங்கவங்க வேலைய அவங்கவங்க பாத்துக்கணும்னு சொல்றது நியாயம் தான'' என்ற தன்னைக் கணவன் எதுவும் பேசாமல் பார்த்துக் கொண்டே இருக்க, ''உங்க வேல நல்லபடியா முடிஞ்சதா?'' என்று கேட்டாள்.

''முடிஞ்சது. அதனால தான் கிளம்பி வந்துட்டேன். அதுவும் குறைஞ்சது இனி ரெண்டு நாளைக்கு ஆபீஸ் பக்கம் போனேன்னா அப்புறம் அவ்வளவு தான் அம்மா டென்ஷனாயிடுவாங்க.''

''அதெல்லாம் அம்மா பேச்சக் கேக்கறவங்களுக்கு.''

கண்களில் லேசான புன்னகையுடன் அப்படிச் சொன்னவளைப் பார்த்தவன், ''என்ன பண்றது மனுஷங்க எப்ப



எந்தக் காரணத்துக்கு என்ன செய்றாங்கன்னு யாருக்கும் புரியறதே இல்லையே'' என்றான்.

''புரியல.''

''புரிய வேண்டியவங்களுக்கே புரியலேன்னா இனி நான் என்ன செய்ய முடியும்'' என்றவன், ''ஆனா என்னைக்குப் புரிஞ்சது இன்னைக்குப் புரியறதுக்கு'' என்று விட்டுப் போனான்.

தன்னைத் தான் சொல்லி விட்டுப் போகிறான்,

ஆனால் அப்படிச் சொன்ன கணவனின் குரலில் என்ன அவ்வளவு விரக்தி.

கூடவே கோபமும் இருந்ததோ,

ஆனால் தான் தான் இப்பொழுது பழைய அனுரேகா இல்லையே.

கணவனுடைய ஒற்றைக் கண் பார்வை போதுமே,

அவன் எதிர்பார்ப்பது போலெல்லாம் கூட ஆடத் தயாராக இருக்கிறாளே.

ஆனால் இப்போதைய தனது மனநிலை அவனுக்குத் தெரியுமா?

ம்கூம்,

தெரிந்திருந்தால் இப்படி பேசிவிட்டுப் போக மாட்டானே.

முதலில் கணவனிடம் தான் மனம் விட்டுப் பேச வேண்டும்.

தொடக்கத்தில் அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளாமல் ஏன் அதற்கு மேலும் தான் நடந்து

கொண்ட விதத்திற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஆனால் கணவன் அதை ஏற்றுக் கொள்வானா,

ஏற்றுக் கொள்வானென்று தான் தோன்றியது.

''வாடாம்மா, எப்ப வந்த?''

''இப்பதான் அத்தெ'' என்றவள் மேலும் அவர் கேட்டவற்றிற்கு பதில் சொன்னாள்.

''சந்தோஷம் அனும்மா, நிகிலும் வந்துட்டான் பாத்தியா?''

''ஆமா அத்தை.''

''உன்ன அழைச்சுட்டுப் போறதுக்காகத்தாம்மா வேலைய சீக்கிரம் முடிச்சுட்டு வந்திருக்கான். என்னமா பாக்கற நம்ப முடியலையா?''

''அச்சச்சோ அப்படியெல்லாம் இல்ல அத்தெ.''

''நீ இங்கிருந்து கிளம்பின கொஞ்ச நேரத்துக்குள்ளேயே மதியத்துக்குள்ள வந்துட்றேன். கிளம்பியிருக்கச் சொல்லுங்கன்னு போன் பண்ணிட்டான், நான் விஷயத்தைச் சொல்ல தனியா ஏன் விட்டீங்கன்னு ரொம்பவும் கோபப்பட்டான்.''

''நீதானப்பா சொன்னேன்னு கூட கேக்கலாம்னு தோணிடுச்சு. ஆனா பாவம் அக்கறைல பேசறவங்க கிட்ட ஏன் அப்படிப் பேசணும்னு விட்டுட்டேன்.''

''ஏன் அத்தெ நான் தனியா போனது தப்பா?''

''அது பிரச்னையில்லடாம்மா. அங்க ஊர்ல உங்க வீட்ல இருக்கற கார் மாதிரி இதையும் நினைச்சுக் கிளம்பிட்டையோன்னு பயந்துட்டான்.''



''நிகிலப் பொறுத்த வரைக்கும், இதுநாள் வரைக்கும் எந்தவொரு விஷயத்துக்கும் அவன் டென்ஷனாகி நான் பாத்ததே இல்லமா. ஆனா அவனே இன்னைக்குக் கோபப்பட்டான்னாப் பாரு. எல்லாம் உம்மேல இருக்கற அக்கறையில்லாம வேறென்ன?''

தனது அத்தை சொல்வதை ஏனோ அனுரேகாவால் நம்ப முடிந்திருக்கவில்லை.

அவ்வளவு அக்கறை இருந்திருந்தால் உடனே தனக்கு போன் செய்திருக்க மாட்டானா என்ன.

அப்படி நினைத்தவளால் அதை அப்படியே கேட்க முடிந்திருக்கவில்லை, பாவம் அத்தையின் மனதை நோகடிக்க வேண்டாமே என்று பேசாமல் இருந்து விட்டிருந்தாள்.

# 18



தொடர்ந்து சிறிது நேரத்தில் மதிய உணவு முடிய ''சரிமா நான் தூங்கப் போறேன்'' என்று வழக்கம் போல மதிய ஓய்விற்காகப் படுக்கைக்குச் சென்றார் விசாலாட்சி.

அதற்குப் பிறகு என்ன செய்வதென்று தெரியாமல் விழித்த அனுரேகா தனது வழக்கம் போல ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு தோட்டத்தைச் சரணடைந்திருந்தாள்.

அப்படித் தோட்டத்திற்குள் வந்தவள் அதற்குப் பிறகு தான் அங்கிருந்த கணவனைக் கண்டாள்.

தோட்டத்திற்குள் இருந்த பெரிய மாமரங்களின் அடியில் திருமண வரவேற்பிற்கு வீட்டிற்கு வரப் போகிற வர்களுக்காகப் பெரிய பந்தல் ஒன்று போடப்பட்டிருக்க அதைப் பார்த்துக் கொண்டிருந்தான் நிகிலேஷ்.

அரவம் கேட்டுத் திரும்பியவன், அங்கு வந்த மனைவியைக் கண்டான்.

என்னவென்பதைப் போலப் பார்த்த கணவனிடம் ''உங்ககிட்டக் கொஞ்சம் பேசணும்'' என்றாள்.

''சொல்லு.''

''எங்காவது உக்காந்து பேசலாமா?''

''ஷ்யூர் இங்க வா'' என்றவன் அந்தப் பந்தலுக்கடியில் போடப்பட்டிருந்த சேரிலேயே ஒன்றில் அமர்ந்து கொண்டு மனைவியையும் அமரச் சொல்லி தமக்கு அருகிலிருக்கும் சேரைக் காட்டினான்.

ஏதோ தைரியத்தில் வந்து விட்டவளுக்கு இப்பொழுது மனம் படபடவென்று அடித்துக் கொள்ளத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் ''என்ன மன்னிச்சுடுங்க'' என்றாள்.

மனைவியின் வார்த்தைகள் அவனுக்குப் புரிந்திருக்க வில்லை, ஏன் திடீரென்று இப்படிச் சொல்கிறாளென்று பார்த்தான் நிகிலேஷ்.

சில வினாடிகள் அமைதியில் கழிந்தன.

மீண்டும் அனுரேகாவே பேசினாள்.

''உங்களத்தான்...''



''ம் சொல்லு, என்ன சொன்ன...''

''என்ன உங்களால மன்னிக்க முடியுமா?''

''எதுக்கு?''

''ஆரம்பத்துலிருந்தே உங்களப் புரிஞ்சுக்காம முட்டாள்த்தனமா நடந்துக்...''

''சிரமப்படாத விட்ரு.''

''இல்ல...''

''மத்தவங்க என்ன வேணும்னாலும் சொல்லிக் குழப்புவாங்க, அதுக்காக நீ...''

''கடவுளே இல்ல, நானாத்தான் பேசறேன் என்ன யாரும் குழப்பல. அப்பிடி மத்தவங்களே சொன்னாக் கூட எனக்கும் சுயமா யோசிச்சு தப்பு சரி கண்டுபிடிக்கற அளவுக்கு மூளையிருக்கு...''

''என்ன திடீர்னு?''

''கல்யாணத்துல என் விருப்பத்தக் கூட நீங்க கேட்டுத் தெரிஞ்சுக்கலேன்னு தொடக்கத்துல எனக்கு வருத்தம் இருந்ததென்னவோ உண்மை தான், ஏன் கோபமும்.''

''அந்தக் கோபத்துல யோசிக்காம ஏதேதோ பேசிட் டேன்.''

கணவனின் பார்வை சரிதான் சொல் என்பதைப் போலிருக்க சற்றுத் தயங்கி விட்டுப் பின் மீண்டும் தொடர்ந்தாள்.

''ஆனா அப்பிடிப் பேசிட்டு அதுக்கப்புறம் நான் எவ்வளவு வருத்தப்பட்டேன்னு எனக்குத் தான் தெரியும்.

அதுக்கப்புறம் நீங்களும் வருத்தம் தெரிவிச்சதுல நூறு சதவிகிதம் தெளிஞ்சுட்டேன்.''

''நீங்களே சொன்ன மாதிரி நான் அப்பிடிப் பேச போய் தான் நீங்களும் அதையெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமே வந்ததுங்கறதையும் புரிஞ்சுக்கிட்டேன்.''

..................

''அதனால தான் கேக்கறேன். என்ன மன்னிச்சுடுங்க'' என்றாள்.

''இத நான் தான் பேசறேனே தவிர, மத்தவங்க சொல்லி இல்ல.''

''சரிதான் நம்பிட்டேன்.''

கணவனின் ஏளனத்தில் ''நிஜம்'' என்று தவிப்புடன் சொல்லியிருந்தாள் அனுரேகா.

''வேறென்ன?''

கணவன் கேட்டது 'சரிதான் இனியும் என்ன எழுந்து செல்' என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருக்க, முகத்திலேயே அறை வாங்கிக் கொண்டதைப் போலானாள்.

''இல்ல... வேறொன்றுமில்ல'' என்று எழுந்தும் இருந்தாள்.

கணவனுக்கு முன்பாக இயல்பாகக் காட்டிக் கொண்டு தன் அறையை வந்து அடைந்திருந்தவளுக்கு அதற்கு மேல் முடியாமல் கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது.

பின்னர் அதுவே அழுகையாகவும்,



படுக்கையில் விழுந்து ஒரு மூச்சு அழுது தீர்த்தவள், பிறகு தெளிந்து எழுந்து அமர்ந்தும் இருந்தாள்.

சில வினாடிகள் யோசித்துப் பார்த்தவளுக்கு இம் மெனும் முன் உணர்ச்சி வசப்படும் தன்னை நினைத்துக் கோபம் தான் வந்தது.

முதலில் கணவனின் மனதைப் புரிந்து கொள்ளாமல் தன்னளவில் மட்டும் யோசித்து முட்டாள்தனமாகப் பேசியது ஒரு தவறென்றால் இப்பொழுது தான் மன் னிப்புக் கேட்டதும் அடுத்த வினாடி கணவன் அனைத் தையும் மறந்து விட வேண்டுமென்று எதிர்பார்ப்பது இன்னொரு விதத்தில் பேராசையாகத் தோன்றியது.

பட்டனைத் தட்டியதும் நினைப்பது நடப்பதற்கு மனிதனின் மனமென்ன இயந்திரமா எதையும் மனதள வில் உணர்ந்து தெளிய ஒரு சிறிய அவகாசமாவது வேண்டாமா என்ன,

''அனு.''

''அத்தெ.''

''என்ன பண்ணிட்டிருக்க?''

''சும்மா தான் போரடிச்சுட்டு உக்காந்திருக்கேன் அத்தெ...''

''போரடிச்சுட்டா, ஏன் நிகில் எங்க?''

''அவர் ஆபீஸ்க்கு கிளம்பிப் போய்ட்டார்.''

''ஏன், என்னவோ இனி ரெண்டு நாளைக்கு முடிஞ்ச அளவுக்கு வீட்ல இருக்கப் பாக்கறேன்னு சொன்னான்!''

''சரிதான் அத்தெ, போன் ஒண்ணு வந்தது உடனே இதோ இப்பவே வர்றேன்னு அவசரமாக கிளம்பிப் போனார் அத்தெ.''

"என்னவோ, இவனும் இவனோட தொழிலும்..."

அத்தை சலித்துக் கொள்ள அதற்கு அனுரேகாவாலும் ஒன்றும் சொல்ல முடிந்திருக்கவில்லை.

தொடர்ந்து அவர் தனது முகத்தை ஆராய்வதைப் போலிருக்க, அழுததின் அறிகுறிகள் தெரிகிறதோ என்று தவித்துப் போனாள்.

"என்னமா?"

"அத்தெ..."

"நிகில் ஏதாவது சொன்னானா?"

"அதெல்லாம்..."

"பின்ன ஏன் ஒரு மாதிரியிருக்கு உன் முகம்?"

அத்தெ கேட்க பதில் சொல்ல முடியாமல் பார்த்தாள் அனுரேகா.

"என்னவோ போம்மா அந்த அழுத்தக்காரனும் எதுவும் சொல்ல மாட்டேங்கறான், நீயும் ஒண்ணுமே இல்லேங்கற. ஆனா பாத்தா அப்பிடித் தெரியல என்னவோ அந்தக் கடவுளுக்குத்தான் வெளிச்சம் போ."

..........

"அது சரி ஏன் இப்பிடி உக்காந்திருக்க, மதிய நேரம் கொஞ்சம் படுத்துத் தூங்கியிருக்கலாமே."

"மதியம் தூங்கிப் பழக்கமில்ல அத்தெ..."

"சரி வா தோட்டத்துக்குள்ள கொஞ்சம் போய்ப் பாக்கலாம்" என்றவர் அப்பொழுது அங்கு வந்த அன்னம்மாவிடம் "டீயும் டிபனும் இன்னும் பத்து நிமிஷம் கழிச்சு



தோட்டத்துக்கே அனுப்பிடு" என்று மருமகளுடன் நடந்தார்.

அதற்குப் பிறகு மகன் மருமகளை அவர்களறியாமல் கவனித்துப் பார்த்தார் விசாலாட்சி.

பார்த்த அளவில் ஒன்றும் சரியாகப் பட்டிருக்கவில்லை.

அவருடைய கண்களுக்கு அனுரேகாவிடம் எந்த வித்தியாசமும் இல்லையென்பது தெளிவானது. அவள் மிகுந்த எதிர்பார்ப்புடன் மகனிடம் அவனுடைய இதம் பார்த்து நல்ல விதமாக நடந்து கொள்வதைப் போலத் தான் பட்டது.

அப்படியானால் பிரச்சனை மகனிடம் தானா.

ஏனோ அதை அவரால் நம்ப முடியவில்லை.

தான் வந்த நாளன்று கூட நான் அனுவை விரும்பித் தான் திருமணம் செய்திருக்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள் என்று கூடச் சொன்னானே.

அப்படிச் சொன்னவனுக்கு இப்பொழுது மட்டும் என்ன ஆயிற்று,

சரிதான் இது கணவன் மனைவிக்குள் இருக்கும் கருத்து வேறுபாடு.

அதுவாகத் தான் நேராக வேண்டும்.

மற்றவர்கள் கருத்து சொல்லவோ அல்லது எடுத்துச் சொல்லவோ இதில் ஒன்றுமில்லை.

அதை மகனும் விரும்ப மாட்டான் என்பதோடு அப்படியே சொன்னாலும் அதற்குப் பலனிருக்கப் போவதில்லை என்பதும் அவருக்குத் தெரிந்தே இருந்தது.

# 19



அன்று தான் திருமண வரவேற்பு நாள் என்பதால் சொந்தங்கள், நட்பு, தொழில் வட்டம் என வீடு நிறைந் திருந்தது.

தனது வீட்டிலிருந்தும் முதல் நாளே தாய், தந்தை, தம்பி என அனைவரும் வந்திருக்க, அனுரேகாவும் தன்னளவில் மிகவும் சந்தோஷமாக இருந்தாள்.

திருமண வரவேற்பிற்கு எதிர்பார்த்ததை விடவும் கூட அதிகம் வந்திருந்தனர்.

விசேஷமும் வெகு விமரிசையாகவும், மிகவும் சிறப்பாகவும் பிரமாண்டமாக நடந்தேறியது.

திருமணத்திற்குப் போலல்லாமல் வரவேற்பிற்கு வந்திருந்தவர்கள் அனைவருமே கணவனின் பக்க மிருந்து என்பதால் வந்திருந்த கூட்டத்தைப் பார்த்துத் திகைத்து விட்டிருந்தாள் அனுரேகா.

கணவன் வீட்டு செல்வாக்கு அப்பொழுது முழுமை யாகத் தெரிய வர, அது தந்த ஆச்சரியத்தில் அப்படியே வாயடைத்து நின்று விட்டிருந்தாள்.

விசேஷத்திற்கு வந்திருந்தவர்களில் கடைசியாக இருந்தவர்கள் கூட அன்று மதிய வேளையில் கிளம்பி யிருக்க, வழக்கம் போலக் கணவனும் அன்று காலையி லேயே அலுவலகம் கிளம்பியிருக்க, தான் மட்டும் தனியாகத் தன்னியல்பாய்த் தோட்டத்திற்குள் தஞ்சம் புகுந்திருந்தாள் அனுரேகா.



அனைவரும் வந்து சென்றதற்குப் பிறகு புத்தகமும் பிடிக்காமல் போய் விட்டிருக்க, என்ன செய்வதென்று தெரியாமல் தோட்டத்தை சுற்றத் தொடங்கி விட்டிருந் தாள்.

என்னதான் மரம் செடி கொடிகள் பூக்கள், புல்வெளி என கண்களுக்கும் மனதிற்கும் நிறைவையே. கொடுத் தாலும் கூட ஒரு கட்டத்திற்கு மேல் அதுவும் பிடிக்காமல் போய் விட்டிருந்தது.

அதை விட அலுத்துப் போய் விட்டிருந்ததென்று சொல்வது சரியாக இருக்கும்.

ஒன்றும் பிடிக்காமல் வீட்டிற்குள் வந்தவளுக்கு அங்கும் செய்ய எதுவும் இருக்கவில்லை.

இதென்ன இப்படியொரு தனிமை என்று எரிச்சல் தான் வந்தது.

''அம்மா.''

அன்னம்மா அழைக்கத் திரும்பினாள்.

''நீங்க இன்னும் டிபன் காபி எடுத்துக்கலையே கொண்டு வரட்டுங்களா?''

''ம்கூம் வேண்டாம்.''

''ஏம்மா?''

''பசியில்ல அன்னம்மா.''

''எல்லாரும் வந்துட்டுக் கிளம்பினதுக்கப்புறம் வீடே வெறிச்சோடிக் கிடக்கு இல்லையாம்மா?''

''ஆமாம் அன்னம்மா'' என்றவளால் உண்மையான காரணம் அது இல்லையே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

கணவனின் பாராமுகம் தான் என் எரிச்சலுக்கும் கோபத்திற்கும் காரணமென்று சொல்ல முடியாமல் பார்த்தாள்.

"சரிதான்மா நான் போய் நைட் டிபனுக்குப் பாக்க றேன், உங்களுக்கு எப்ப என்ன வேணும்னாலும் கூப் புடுங்க" என்று அன்னம்மா நகர, தொப்பென்று இருக் கையில் அமர்ந்தாள்.

இப்பொழுது சில நாட்களாக அனுரேகாவின் மனம் கணவனின் பிரியத்திற்காக ஏங்கத் தொடங்கி விட் டிருந்தது.

அவனுடைய அன்பிற்காகவும், அரவணைப்பிற் காகவும் மிகவும் ஏங்கினாள்.

சிரித்து ஒரு வார்த்தை பேச மாட்டானா என்று எந் நேரமும் ஆவலுடன் அவன் முகம் பார்த்துப் பிறகு அது கிடைக்காமல் ஏமாந்து போனாள்.

இப்படி இன்னும் எத்தனையோ விஷயங்களில் ஏமாற்றம் மட்டுமே மிகுதியாய்க் கிடைக்க ஒரு கட்டத் தில் மிகவும் சோர்ந்து போனாள்.

வெகுநேரம் தன்னறையில் எதுவும் செய்யத் தோன் றாமல் அமர்ந்திருந்தவள் பிறகு மீண்டும் தோட்டத் திற்குள் சென்று விட்டிருந்தாள்.

மாலை மறைந்து இரவும் வந்துவிட, ஆங்காங்கே இருந்த மின்சார விளக்குகள் தந்த ஒளி வெளிச்சத்தைக் கொண்டு வர முயன்று தோற்றன.

அப்படியே எவ்வளவு நேரம் சென்றதோ, அந்த நேரத்தில் தோட்டத்துக்குள் அமர்ந்திருக்க பயமாகவும் இருந்தது.



ஆனாலும் அன்று கணவன் தன்னைத் தேடி வரும் வரை வீட்டிற்குள் செல்லவே கூடாதென்பதில் மட்டும் அனுரேகா உறுதியாக இருந்தாள்.

ஆனால்...

அன்னம்மா தேடி வந்து விடுவாரே.

இன்னும் எப்படி விட்டு வைத்திருக்கிறார்...

திடீரென ஏதோ தோன்ற வீட்டிற்குள் வந்திருந்தாள்.

"அம்மா..."

"என்ன அன்னம்மா, ஏன் பதட்டமா இருக்கீங்க?"

"மகனுக்கு முடியாம ஆஸ்பத்திரில சேத்திருக்காங் களாம்மா..."

"என்னாச்சு அன்னம்மா..."

"வண்டில இருந்து கீழ விழுந்துட்டானாம். நான் கிளம்பணுங்கம்மா..."

"சரிதான் அன்னம்மா போய்ட்டு வாங்க, எப்படிப் போவீங்க?"

"பேரன் வந்திருக்காம்மா, அவங்கூடவே கிளம்பறேன்."

"சரிதான் டிரைவர் கொண்டு வந்து விட்டுட்டு வந்துடட்டும் இருங்க நான் வந்து சொல்..."

"வேண்டாங்க. நானே பைக்ல தான் வந்திருக்கேன். நாங்க ரெண்டு பேரும் அதுலையே போய்க்கறோம்" என்று அன்னம்மாவின் பேரன் சொல்ல, அவனிடம் அவ னுடைய தந்தையின் உடல்நலம் பற்றி விசாரித்தாள்.

"பயம் இல்லங்க, நல்லா தான் இருக்கார். ரெண்டு நாள் ஆஸ்பத்திரில இருக்க வேண்டியது வரும் அவ்வளவுதான்!"

''சரிங்கம்மா நாங்க வர்றோம்'' என்று அன்னம்மா சொல்ல, ஒரு ஐயாயிரம் ரூபாய் பணத்தை எடுத்து வந்து அவருடைய கையில் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

அன்னம்மாவும் சென்று விட, வரவேற்பறைக்கு வந்தாள்.

கணவனை ஏன் இன்னும் காணவில்லை.

கடிகாரத்தில் நேரம் பார்த்தாள்.

மணி இரவு ஏழாகியிருந்தது.

நேரத்திற்கு வர முடியாவிட்டாலும் கூடப் பரவா யில்லை. ஒரு போனாவது செய்ய வேண்டியது தானே என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.

மேலும் ஒரு இரண்டு மணி நேரங்களும் கணவனின் வரவுக்காகக் காத்திருந்தவள், பிறகு மாலையில் தான் நினைத்ததைச் செயல்படுத்தத் துணிந்தாள்.

அந்த வீட்டின் வரவேற்பறையே பரந்து விரிந்து பார்ப்பதற்கு விஸ்தாரமாய் பயமுறுத்துவதாய் இருக்க, அந்த நேரத்தில் தோட்டத்தில் தனியாக செல்வதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

செல்வதற்கே அப்படியென்றால் அங்கேயே இருப்ப தற்கு,

நினைத்தது தான் தாமதம்.

அதற்கு மேல் எதைப் பற்றியும் யோசிக்காமல் தோட் டத்து செய்குளத்தின் அருகேயிருந்த அந்தப் பரந்து விரிந்திருந்த மாமரத்தடியில் சென்று அமர்ந்து விட்டிருந் தாள்.



முட்டாள்த்தனமென்று ஏளனம் செய்த மனதை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவள், கணவன் தன்னை ஒரு பொருட்டாகவாவது மதிக்கிறானா என்பதை இதன் மூலம் தான் கண்டு கொள்ள வேண்டுமென்று தனக் குத்தானே சொல்லிக் கொண்டாள்.

அப்பொழுதே குளிர் உடலுக்குள் ஊடுருவ இரண்டு கைகளையும் மார்பின் குறுக்கே கட்டிக் கொண்டு அந்த சிறு திண்ணையில் கால்களைக் கீழே தொங்க விட்ட வாறு அமர்ந்திருந்தாள்.

அப்படியே வெகு நேரம் சென்றிருக்கக் குனிந்து கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.

மணி இரவு பத்தாகியிருக்க, வழக்கம் போல அந்த நேரத்தில் தோட்டத்து விளக்குகள் அனைத்தும் செக் யூரிட்டியால் அணைக்கப்பட்டு விட்டது தெரிந்தது.

இரவு ஏழு மணிக்கு முன்னரே தோட்டக்காரனும் கிளம்பி விடுவான் என்பதால் அதற்குப் பிறகு தோட் டத்திற்கு யாரும் வருவதில்லை.

அதற்கு மேலும் பகலில் ஒரு செக்யூரிட்டி இரவில் இரு செக்யூரிட்டிகள் என இருந்தாலும் அவர்களும் தோட்டத்திற்குள் அவசியமில்லாமல் வருவதில்லை. முக்கியமாக இரவு நேரங்களில் வருவதே இல்லை.

தோட்டத்திற்குள் செல்லும் ஒரு வழி வீட்டிற்குள் ளிருந்து என்றால், மற்றொரு வழி வெளியே இருந்து காம்பவுண்டின் வழியாக உள்ளே வருவதாக இருந்தது.

விளக்குகள் அணைக்கப்பட்டு விட்டதில் ஓரளவு இருந்த வெளிச்சம் இப்பொழுது காணாமல் போயிருக்க

உள்வரை ஊடுருவிச் சென்ற குளிரில் இப்பொழுது உடல் நடுங்கவே தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் ஒரு வைராக்கியத்துடன் முழங்கால்களை நெஞ்சோடு சேர்த்துக் குறுக்கி வைத்து அதில் முகத்தைப் புதைத்தவாறு கண்களை மூடி அமர்ந்து விட்டிருந்தாள்.

காற்றில் ஆடிய மரங்களின் ஒலி ஒருவித பீதியை உருவாக்க, கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கணவனின் நினைவில் இன்னும் கூட அவன் தன்னைத் தேடி வரவில்லையே என்று கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது.

ஒருவேளை இன்னும் கூட வந்திருக்க மாட்டானோ.

அப்படித்தான் இருக்க வேண்டும்,

இல்லையென்றால் இந்நேரம் தன்னைத் தேடிக் கொண்டு இங்கேயும் வந்திருக்க வேண்டுமே.

மேலும் சில மணி நேரங்களும் கூட சென்றிருக்க வேண்டுமென்று தான் தோன்றியது.

அல்லது அதற்கு மேலும் இருக்குமோ,

திடீரென மண் வாசனையும் ஈரக்காற்றும் அதிகமாக வீச, மழை வருமோ என்ற எண்ணமும் தோன்றி பய முறுத்தத் தொடங்கி விட்டிருந்தது.

நினைத்தது தான் தாமதம் அடுத்த வினாடியில் மழை பெய்யவே தொடங்கி விட்டிருக்க ஏற்கனவே இருந்த குளிரில் இப்பொழுது மேலும் அதிகமாக நடுங்கிப் போனாள்,

ம்கூம் இனி தாங்காது எழுந்து வீட்டிற்குள் சென்று விட வேண்டியது தானென்று அவள் நினைக்கவும்



வீட்டு கேட்டுக்குள் கார் ஒன்று வரும் ஒளியும் ஓசையும் கேட்கவும் சரியாக இருந்தது.

சரிதான் கணவன் இப்பொழுதுதான் வருகிறான்.

அந்த வினாடியில் அவன் தேடி வரும் வரை அந்த இடத்தை விட்டு எழக் கூடாதென்ற முடிவுக்கு வந்து விட்டிருந்தாள் அனுரேகா.

செக்யூரிட்டி கேட்டைத் திறந்துவிட காரை உள்ளே விட்டிருந்த நிகிலேஷ் இப்படிக் குளிருகிறதே என்று நினைத்துக் கொண்டே காரைப் பார்க் செய்து விட்டு கையிலிருந்த சாவியால் கதவைத் திறந்து கொண்டு வீட்டிற்குள் வந்திருந்தான்.

உள்ளே வந்தவனுக்கு மனைவியின் நினைவு தான் வந்தது.

அவள் பாவம் எப்பொழுது தூங்கச் சென்றாளோ என்னவோ,

முதலில் சாப்பிட்டு விட்டு தூங்கச் சென்றிருப்பாளா,

சரிதான் அந்தப் பொறுப்பைத் தான் அன்னம்மா விடம் ஒப்படைத்திருக்கிறோமே,

மனைவி வேண்டாமென்று சொன்னால் ஊட்டி விடக் கூடத்தயங்க மாட்டார்களே என்று புன்னகையுடன் நினைத்துக் கொண்டே படுக்கையறைக்கு வந்தான்.

வரத் தாமதமாகுமென்று மாலை ஆறு மணிக்கு போன் செய்தவனுக்கு மனைவியுடன் பேச முடிந்திருக்க வில்லை.

அன்னம்மா போனை எடுத்திருக்க மனைவியிடம் சொல்லச் சொன்னவன், மீண்டுமொரு முறையும்

அழைத்து அம்மாவிடம் பேசிக் கொள்கிறேன் என்றிருந்தான்.

ஆனால் வேலை மும்முரத்தில் மீண்டும் அழைக்க முடியாது போயிருக்க பாவம் மனைவி தன்னுடைய அழைப்புக்காகக் காத்திருந்தாளோ என்னவோ என்று நினைத்துக் கொண்டே படுக்கையறைக்குள் வந்திருந்தான்.

உள்ளே வந்து மனைவியின் தூக்கம் கெட்டு விடக் கூடாதென்று ஒளவு வெளிச்சம் தரக்கூடிய படுக்கையிலிருந்து தள்ளி இருந்த டேபிள் லேம்ப்பை சத்தம் வராமல் ஆன் செய்தவன், அது தந்த வெளிச்சத்தில் மனைவியைப் படுக்கையில் காணாது திகைத்தான்.

சரிதான் என்று சில வினாடிகள் பொறுத்துப் பார்த்தவன் பிறகு வீடெங்கும் தேடினான், குளியலறை உட்பட.

எங்கும் காணாது போக பொறுமையாக மீண்டுமொரு முறையும்,

இப்பொழுது மனம் பதறத் தொடங்கி விட்டிருக்க, வெளியே தோட்டத்திற்குள் சென்று தேடுவதற்காக அந்தக் கதவையும் திறந்திருந்தான்.

ஆனால் வெளியே மழை சக்கை போடு போட்டுக் கொண்டிருக்க, இப்பொழுது மேலும் மனம் பதறத் தொடங்கி விட்டிருந்தது.

எங்கேயும் விடக் கூடாதென்று தோட்டத்திலும் சென்று தேடினான்.

தோட்டத்தின் தொடக்கத்திலிருந்து தேடிக் கொண்டு வந்தவன், அதற்குப் பிறகு அங்கு மாமரத்தடியில் குறுகி அமர்ந்திருந்த மனைவியைக் கண்டு கொண்டான்.



போன உயிர் திரும்பி வந்ததைப் போலிருக்க, மனைவியை அங்கு கண்டு கொண்ட நிம்மதியில் மனம் லேசாகிக் கை கால்களும் விட்டுப் போயின.

ஆனால் அதெல்லாம் சில வினாடிகள் தான்.

அடுத்த வினாடி வந்த கோபத்தில், மனைவியைப் பளாரென்று கன்னத்தில் அறைந்திருந்தான்.

''இங்க என்ன பண்ணிட்டிருக்க?'' என்று அடிக் குரலில் உறுமியவன், ''வா முதல்ல'' என்று கையைப் பிடித்து இழுத்து வராத குறையாக வீட்டிற்குள்ளும் அழைத்து வந்திருந்தான்.

வீட்டிற்குள் வந்திருந்த மனைவி அங்கே உள்பக்க வாசலருகிலேயே நிற்க, இன்னும் என்ன என்பதைப் போலப் பார்த்தான்.

''என்ன?'' நிகிலேஷ்.

''நான் வரமாட்டேன்'' - அனுரேகா.

''ஏன்?''

''வரமாட்டேன் அவ்வளவுதான்.''

''அது தான் ஏன்?''

''நான் எதுக்கு வரணும்?''

''ஏய் நீ என்ன பைத்தியமா? தலையிலிருந்து தண்ணி வடியுது பாரு. முதல்ல வந்து ஈரத்தத் துடைச்சுக்கோ என்ற கணவனின் குரலில் தெரிந்த கோபதிலும் எரிச்சலிலும் மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது. மனைவியின் குற்றம் சொல்லும் பார்வை தன்னை என்னவோ செய்தாலும் வலுக்கட்டாயமாக

உள்ளே அழைத்துச் சென்று தலையைத் துவட்ட வைத்திருந்தான்.

அப்படியே சுடுநீரில் உடலுக்குக் குளித்து விட்டு வேறு உடையை மாற்றி வரச் செய்தவன், தானும் சென்று குளித்து விட்டு வந்திருந்தான்.

''வா சாப்பிடலாம்'' - நிகிலேஷ்.

''வேண்டாம்.''

''இல்ல நீ வந்து தான் ஆகணும்.''

கணவனின் உரிமையில் எரிச்சல் வந்திருக்க எங்கோ பார்த்தாள்.

''அனு...''

மனைவியின் அருகில் வந்து அவளுடைய முகவாயைத் தொட்டு நிமிர்த்தியவன், அவளுடைய கண்களைப் பார்த்தான்.

ஆனால் அதற்குள் கணவனிடமிருந்து விடுபட்டு அவனைச் சுற்றிக் கொண்டு படுக்கைக்கு வந்திருந்தாள் அனுரேகா.

ஆனால் விடாமல் படுக்கையில் மனைவியின் அருகில் சென்று அமர்ந்திருந்த நிகிலேஷ் ''அனு'' என்றழைத்தான்.

''அனு உன்னத்தான்.''

..........

''என்னடா?''

............

''என்னாச்சுமா, என்ன மன்னிச்சிடு உன்ன எங்கயும் காணாததுல ரொம்பவும் பதறிப் போயிட்டேன். அந்த கோபத்துல என்னையே அறியாம அடிச்சுட்டேன்...''



அப்பொழுதும் மனைவி எதுவும் பேசாமலிருக்க சில வினாடிகள் பார்த்தவன் சென்று உணவைத் தட்டில் பரிமாறிக் கொண்டு வந்திருந்தான்.

''வா அனு சாப்பிடு.''

........

''அனு...''

.........

''சரிதான், நானும் இன்னும் சாப்பிடல. நீ வந்தா சாப்பிடலாம் இல்லன்னா எனக்கும் வேண்டாம்.''

''அனு... சரி எழுந்து உக்காரு நானே ஊட்டி விடறேன்'' என்று அவனே மனைவிக்கு ஊட்டப் போகத் திரும்பிப் படுத்து விட்டிருந்தாள், அனுரேகா.

அதே போல மேலும் சிறிது நேரமும் அமர்ந்திருந்தவன் உணவு தட்டை அப்படியே வைத்து விட்டுப் போய் கைகளைக் கழுவிக் கொண்டு வந்து தானும் சாப்பிடாமல் படுக்கையில் விழுந்திருந்தான்.

# 20



மணி காலை ஐந்தரை ஆகியிருந்தது.

படுக்கையை விட்டு எழுந்திருந்த நிகிலேஷ் மனைவி அருகில் இல்லாததைக் கண்டான்.

இரவு ஒரு மணிக்குப் படுத்திருந்தும் கூட காலையில் நேரத்திலேயே எழுந்து விட்டாளே என்று நினைத்துக்

கொண்டே படுக்கையை விட்டு இறங்கியவன் சென்று காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தான்.

ஹாலுக்கு வந்தவன் அங்கு எப்பொழுதும் போல டேபிளின் மீது வைக்கப்பட்டிருந்த ப்ளாஸ்க்கிலிருந்து காபியை கப்பில் ஊற்றி எடுத்துக் கொண்டான்.

வழக்கம் போல வேலைகள் நடந்தாலும் இரவு மனைவி செய்திருந்த முட்டாள்தனம் தான் அப்பொழுது அவனுடைய மனதிற்குள் ஓடிக் கொண்டிருந்தது.

ஏன் அப்படிச் செய்தாள்.

திடீரென்று என்னவாயிற்று.

சரிதான்.

அவளிடமே கேட்டு விட வேண்டியது தான்.

தொடர்ந்து சிறிது நேரம் அன்றைய நாளிதழை வாசித்தவன், பிறகு எழுந்து உடற்பயிற்சி செய்யச் சென்றான்.

அப்படியே குளித்துக் கிளம்பி வெளியே வந்தவன், அலுவலகத்திற்குக் கிளம்ப இன்னும் நேரமிருப்பதைக் ...ண்டான்.

உடனே மனைவியைத் தேடி தோட்டத்திற்கு வந்தவன் நினைத்தது போலவே அவள் அங்கே இருக்க, தானும் சென்று அருகில் அமர்ந்தான்.

அந்த நேரத்தில் கணவனை அங்கு எதிர்பார்த்திருக்காத அனுரேகா அந்த இடத்தை விட்டு எழப் போக, உடனே மனைவியின் கையைப் பிடித்து எழ விடாமல் தடுத்திருந்தான்.



''உக்காரு, உங்கிட்டே கொஞ்சம் பேசணும்.''

''இல்ல....''

''உக்காரு''

சரிதான் அதட்டலுக்கெல்லாம் ஒன்றும் குறையில்லை.

''என்ன இதுக்கெல்லாம் ஒன்னும் குறைச்சல் இல்லேங்கறியா?''

கணவனின் நேரடிக் கேள்வியில் திகைத்துப் போனவள், அது வெளியே தெரியாமல் காட்டிக் கொண்டாள்.

''நைட் ஏன் அப்படி செஞ்ச?''

..........

''உன்னத்தான்....''

''ஒன்னுமில்ல.''

''சொல்லாம விட மாட்டேன்.''

........

''அனு''

''உங்களுக்கே தெரியாதா?''

''தெரிஞ்சிருந்தா ஏன் கேக்கப் போறேன்?''

''நீங்க...''

''ம்''

''இங்க... இங்க வீட்ல ஒருத்தி இருக்கான்னு நீங்க தெரிஞ்சுக்கனுங்கறதுக்காகத் தான்.''

மனைவியின் பதிலில் மனம் துள்ள அதை அப்போதைக்கு வெளியே தெரியாதவாறு காட்டிக் கொண்டு பார்த்தான் நிகிலேஷ்.

கணவனின் பார்வையில் பார் இதுதான் என்பதைப் போலத் தானும் பார்த்தாள் அனுரேகா.

உங்க கவனத்த ஈர்க்கறதுக்காகத் தான் அப்படி செஞ்சேன் என்று சொல்லாமல் சொன்ன மனைவியின் பதிலில் இளகி விட்டிருக்க ''என்னமா?'' என்றான்.

''ஒன்னுமில்ல விடுங்க'' - அனுரேகா.

''ம்கூம் மாட்டேன்'' - நிகிலேஷ்.

........

''சொல்லு அனு...''

''உங்களுக்கு தான் வீட்டு ஞாபகமே வர்றதில்லையே.''

''புரியல''

''சரிதான் விட்டுடுங்க.''

''புரியற மாதிரி பேசு அனு.''

''நீங்க தான் வீட்ல உங்களுக்காக ஒருத்தி இருக் காங்கறத எப்பவுமே மறந்துடுவீங்களே...''

''அனு...'' என்று ஏதோ சொல்ல வந்தவன் பிறகு ஏதோ எண்ணியவனாய்த் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

''நீ மனசத் திறந்து வெச்சுக் கேட்டா, நானும் பேசத் தயாரா இருக்கேன்.''

கணவனின் குரலில் தெரிந்த வித்யாசம் அதற்குள் என்னவாயிற்று என்று எண்ண வைத்திருந்தது.

ஆனாலும் உடனே நடப்பிற்கு வந்தவளாய் சரிதான் அப்படி ஏதாவது இருந்தால் சொல்ல வேண்டியது தானே என்பதைப் போலப் பார்த்தாள்.



மனைவியின் எண்ணம் புரிய மீண்டும் மனம் சலித்துப் போனது நிகிலேஷிற்கு.

சரிதான், அப்படி ஏதாவது இருந்தால் தானே சொல்ல முடியும் என்று அனுரேகா ஏளத்துடன் நினைத்துக் கொண்டிருக்கும் போதே ''கல்யாணத்துக்கு முன்னாடியும் சரி அதுக்கப்புறமும் சரி நான் என்னைக்குமே எம்மனச மறைச்சதில்லேங்கறது உனக்கே தெரியும்'' என்றான்.

''நான் உன் விருப்பத்தக் கேட்டுத் தெரிஞ்சுக்கலேங் கறது தான உன் கோபம், ஆனா அது ஏன்னு நீ யோசிச்சுப் பார்த்திருக்கியா?'' என்று மனைவியைப் பார்த்துக் கேட்டான் நிகிலேஷ்.

''உனக்கும் என்னப் பிடிச்சிருக்குங்கறதுல எனக்கு எந்த விதமான சந்தேகமும் இல்ல, ஏன் அந்த நம்பிக் கைல தான் எங்க வீட்ல சொல்லி உங்க வீட்ல பேசச் சொன்னதும்.''

''சும்மாவே காரணமே இல்லாம எம்மேல வெறுப்ப வளத்து வெச்சிருந்த உங்கிட்ட நான் என் சம்மதத்தக் கேட்டிருந்தா என்ன பண்ணியிருப்ப?''

''கண்ண மூடிட்டு வேண்டாம்னு சொல்லியிருப்ப.''

''அப்படி ஆயிடக் கூடாதுன்னு தான், உம் மறுப்ப என்னால ஏத்துக்க முடியாதுன்னு தான் நான் அப்படி செஞ்சேன்.''

''கல்யாணத்துக்கப்புறம் மாறிடுவேன்னு ரொம்ப நம்பிக்கையோட இருந்தேன்.''

''அதுக்காக எத்தன நாள் வேணும்னாலும் காத்திருக் கவும் தயாரா தான் இருந்தேன்.''

''ஆனா நீ...''

''எங்கிட்டிருந்து தப்பிக்கறதா நினைச்சுட்டு உன்ன நீயே...''

''ஆனாலும் நீ அப்படி சொன்னதுல நான் அதிர்ந்து போனதென்னவோ, உண்மை.''

''ரொம்பவுமே.''

''அதுக்கும் மேல நீ சொன்ன வார்த்தைகள்...'' என்று கணவன் யோசனையில் ஆழ்ந்திருக்க, அப்படி அதற்கு மேல் என்ன சொன்னோம் என்னும் போக்கில் எண்ணம் ஓங்கத் தொடங்கியிருந்தது அனுரேகாவிற்கு.

மனைவி நினைப்பது புரிய ''பாக்கவே பிடிக்கல. இந்த ஜென்மத்துல சேர்ந்து வாழ முடியாதுன்னு... இன்னும் கூட என்னவெல்லாம்...''

தான் ஏற்கனவே அவ்வப்பொழுது மனதில் எண்ணி மறுகிக் கொண்டிருந்ததையே கணவனும் சொல்ல, இப்பொழுது குற்றக் குறுகுறுப்பில் ஆழ்ந்து போனாள்.

''ஏன் நான் சாப்பிட்டேனா, தூங்கினேனான்னு எதையுமே கவனிக்காம சரியா சொல்லணும்னா எதுவுமே பிடிக்காம எப்பவுமே விரத்தியிலயே தான இருந்த.''

''ஏன் அதுக்கப்புறமும் கூட நீ என்னப் பாக்கறதையே கூட அவாய்ட் பண்ணத் தான பாத்த.''

''உங்கிட்டிருந்து இயல்பா ஒரு வார்த்த, சந்தோஷமான ஒரு புன்னகை, அன்பான ஒரு பார்வைன்னு எப்படியெல்லாம் எதிர்பார்த்தேன்னு உனக்குத் தெரியுமா?''

''ஏமாற்றத்தத் தாங்கிக்க முடியாம கடைசில நான் என்ன மாத்திக்க முயற்சி செஞ்சேன்.''



''ஓரளவு மாத்திக்கவும்.''

கணவன் சொல்லச் சொல்ல அப்படியே சிலை போல அமர்ந்து விட்டிருந்தாள் அனுரேகா.

என்ன பதில் சொல்வதென்று கூடத் தெரிந்திருக்கவில்லை.

ஏன் வாயைக் கூடத் திறக்க முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு சொல்ல முடியாத அதிர்ச்சியிலும், இனம் புரியாத ஆச்சரியத்திலும் நடப்பைக் கூட உணர்ந்து கொள்ள மாட்டாமல் அமர்ந்திருந்தாள்.

''அதே போல உன்ன நான் எதுவும் கேக்கறதையும் நீ விரும்பலேங்கறதும் தெரியும்.''

''அதனால தான் எல்லாப் பொறுப்பையும் அன்னம்மாகிட்ட ஒப்படைச்சுட்டேன்.''

''பெரிசா ஒன்னுமில்ல செல்லமா வளர்ந்த சின்னப் பொண்ணு, அவங்க வீட்டு ஞாபகத்துல தன்ன கவனிச்சுக்க மறந்துடுவாங்க, நேரத்துக்கு சாப்பிடவும். அதனால அப்பப்ப பாத்துக்கோங்கன்னு சொல்லி வெச்சேன்.''

''இத நானே சொல்லலேன்னாக் கூட அன்னம்மா விட்டிருக்க மாட்டாங்கன்னும் தெரியும்.''

''அப்படி அன்னம்மா கிட்ட சொன்னதுலயும் நல்ல பலன் இருந்தது.''

''அன்னன்னைக்கு உன்னபத்தி எல்லாமே சொல்லிடுவாங்க.''

''நானும் அவங்க சொல்றதுக்காகக் கேட்டுக்கற மாதிரி காட்டிக்கிட்டு, ஆனா உள்ளுக்குள்ள அக்கறையோட கேட்டுப்பேன்.''

கணவனின் வார்த்தைகளில் இப்பொழுது ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்றிருந்தாள் அனுரேகா.

தான் மட்டும் தான் சிறு பிள்ளை போல முட்டாள் தனமாக நடந்து கொண்டிருந்திருக்கிறோம் என்றும்,

கணவனைப் பொறுத்த வரை அவன் எப்பொழுதும் ஒரு பொறுப்புள்ள அன்பான, நல்ல கணவனாகத் தான் நடந்து கொண்டிருந்திருக்கிறான் என்றும்,

''அதுக்காக எம்மேல தப்பே இல்ல, நான் செய்யறதெல்லாம் சரிதான்னும் சொல்லிட முடியாதுமா.''

''வேலைன்னு வந்துட்டா, அதுலயும் சில சமயங்கள்ல எல்லாத்தையும் மறந்து முழு மும்முரமா அதுல இறங்கிடுவேன்.''

''இந்த விஷயத்துல அம்மாவுக்கு எப்பவுமே எம்மேல ஆதங்கம் தான்.''

''சொல்லிக் காட்டிக்கிட்டே இருப்பாங்க. ஏன் மாத்திக்கவும் சொல்லிட்டே இருப்பாங்க.''

''பாரு நேத்து கூட நைட் வர எவ்வளவு நேரமாகும்னு தெரியல, எப்படியும் வழக்கமான நேரத்துக்கு வர முடியாது. உன்ன சாப்பிட்டு நேரத்துக்கு தூங்கப் போகச் சொல்லிடலாம்னு ஆறு மணிக்குக் கூப்பிட்டேன்.''

ஆனா உங்கிட்டப் பேச முடியல. அன்னம்மாகிட்ட சொன்னேன். சரிதான் மறுபடியும் நான் அனுவக் கூப்பிட்டு பேசிக்கறேன்னு சொன்னது தான் அப்புறம் மறந்தே போயிட்டேன்.

''ஏன் வீட்டுக்கு வர்ற வழில தான் அடடா அப்படி சொல்லிட்டு போன் பண்ணவே இல்லையேன்னு ஆயிடுச்சு.''



கணவனின் வார்த்தைகளில். இப்பொழுது இன்னும் கூனிக் குறுகிப் போனாள் அனுரேகா.

அப்படியானால்,

கணவன் அழைத்திருக்கிறான்,

அன்னம்மா கிளம்பும் அவசரத்தில் சொல்ல மறந்து போய்த் தான் அது தெரியாமல் கணவனை தவறாக நினைத்து அதற்கு மேல் இன்னும் முட்டாள்தனங்களும் கூட செய்தாயிற்று.

கணவன் பல முறை சொன்னதனைத்தும் நூத்துககு நூறு சதவிகிதம் உண்மைதான்.

உண்மையிலேயே தான் சிறு பிள்ளைத்தனமாகத் தான் நடந்து கொண்டிருக்கிறோம்.

ஏன் கீழ்த்தரமாகவும் கூட.

அப்படியெல்லாம் நடந்து கொண்டது மட்டுமல்லாமல், அதற்கு மேலும் கணவனைத் தவறாகத் தானே எண்ணிக் கொண்டிருந்தோம்.

ஏன் கணவனே ஒரு முறை கேட்டது போல தன்னை விரும்பிய பாவத்தைத் தவிர அப்படி அவன் வேறென்ன தவறைச் செய்துவிட்டான்.

அதே நேரம் கணவனின் கைபேசி அழைக்க, எடுத்துப் பேசியவன் அரை மணி நேரத்துல அங்க இருப்பேன் என்று அழைப்பை துண்டித்திருந்தான்.

''சரிதான் நீ மனசப் போட்டுக் குழப்பிக்காத சந்தோஷமா நிம்மதியா இரு.''

''தயவு செஞ்சு நேத்து நைட் பண்ணின மாதிரி இனி எப்பவும் செஞ்சுடாத. உன்னப் பாக்கற வரைக்கும் ஆடிப் போயிட்டேன்.''

''ஏன் உயிர் போய் வந்ததுன்னு கூடச் சொல்லலாம்.''

''எதுவா இருந்தாலும் எங்கிட்ட நேருக்கு நேராவே கேக்கலாம்.''

''அப்படியும் எங்கிட்டப் பேசவே சுத்தமாவே பிடிக்க லேன்னாலும் உன்ன நீயே வதைச்சுக்காத...''

கணவன் சொல்லச் சொல்ல ஐயோ இல்லை. அப்படி யெல்லாம் ஒன்றுமே இல்லை. நான்தான் ஆரம்பத்தி லிருந்தே முட்டாள்தனமாக நடந்து கொண்டிருந்திருக் கிறேன், என்னை மன்னித்து விடுங்கள் என்றெல்லாம் கதறி விட வேண்டும் போலிருந்தது.

ஆனாலும் எதுவோ தடுத்தது.

அந்த வினாடியில் யதேச்சையாகக் கணவனைப் பார்த்தவளுக்கு அவனும் தன்னையே பார்த்துக் கொண் டிருந்தது தெரிந்தது.

அந்தப் பார்வையில் என்ன இருந்தது.

சந்தேகமே இல்லை,

என்னிடம் மனம் திறந்து பேச மாட்டாயா என்று கேட்பதைப் போல அது இருந்தது.

என்னை உன்னவனாக ஏற்றுக் கொள்ள மாட்டாயா என்று கேட்பதைப் போல அந்தப் பார்வை இருந்தது.

ஏன் இன்னும் ஏதேதோ,

''அவசர வேலையாக வெளியே செல்ல வேண்டியிருப்ப தால் நான் அங்கேயே சாப்பிட்டுக் கொள்கிறேன். நீ முதலில் போய் சாப்பிட்டு விட்டு ஓய்வெடு'' என்று சொல்லிவிட்டு அடுத்த சில வினாடிகளிலேயே கணவன்



கிளம்பியிருக்க, அப்படியே செய்வதறியாது அமர்ந்து விட்டிருந்தாள் அனுரேகா.

கணவனிடம் அவனுடைய செயல்கள் அனைத் திற்குமே விளக்கம் இருந்திருக்கிறதே,

ஏன் இன்னும் சொல்லாதவற்றிற்கும் கூட உண்மை யான காரணங்களை நிச்சயம் வைத்திருப்பான்.

ஆனால் தன்னிடம்,

அப்படியெல்லாம் ஒன்றுமே இல்லையே,

ஏன் கணவன் அவனே ஒரு முறை சொன்னதைப் போல அவனளவில் நேசத்தையும் வைத்து விட்டு மிக வும் பெருந்தன்மையாகவும் தான் நடந்து கொண்டிருக் கிறான்.

தான் தான் எதையுமே புரிந்து கொள்ள மாட்டாத முட்டாளாய்,

சுயநலவாதியாய்,

............

அந்த வினாடியில் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள் அனுரேகா.

இனியாவது நல்லவிதமாகக் கணவனைப் புரிந்து கொண்டு, அவனுடைய இதமறிந்து நடந்து கொள்ள வேண்டுமென்பதே அது.

அதற்கான அனைத்து முயற்சிகளையும் அந்த வினாடி யிலிருந்து எடுக்க உறுதி கொண்டாள்.

எண்ணியதை செயல்படுத்தவும் முனைந்தாள்.

# 21



அன்று அலுவலகத்திலிருந்து வழக்கமான நேரத்தை விடவும் முன்னதாகவே வந்து விட்டிருந்த கணவனை ஒரு நல்ல ஆசை மனைவியாக தலை வாரி பூச்சூடி இனிய முகத்துடன் வாசலுக்கே வந்து வரவேற்றாள்.

கணவனின் ஆச்சரியப் பார்வையில் சிவந்து விட்டிருந்த முகத்தை ''உங்களுக்கு டிபன் காபி எடுத்துட்டு வர்றேன். கை கால் முகம் சுத்தம் செஞ்சுட்டு வாங்க'' என்று உள்ளே ஓடி வந்திருந்தாள்.

கணவனுக்கு உண்ணக் கொடுத்து உபசரித்தவள், அவன் கேட்டுக் கொண்டதற்கிணங்க தானும் உடன மர்ந்து எடுத்துக் கொண்டாள்.

நல்ல விஷயங்களை சிரித்த முகத்துடன் பகிர்ந்து கொண்டாள்.

கணவனின் கேள்விகளுக்கும் புன்னகையுடன் பதில் சொன்னாள்.

ஆனாலும் கணவனின் பார்வையில் தெரிந்த எதையோ புரிந்து கொள்ள மாட்டாதவளாய்க் குழம்பினாள்.

அது என்ன,

தன்னுடைய அணுகுமுறையில் ஏதேனும் செயற்கைத் தனம் தெரிகிறதோ.

ஒட்டாமை இருக்கிறதோ.



அப்படித் தோன்றி விட்ட வினாடியில் ஐயோ இல்லை, இல்லவே இல்லை என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள்.

நான் முழுவதுமாக மாறிவிட்டேன்.

இல்லையில்லை.

முட்டாள்த்தனமான பிடிவாதத்தை உணர்ந்து திருந்தி விட்டேன்.

மனதார என் தவறுகளை உணர்ந்து விட்டேன்.

அதுவே உங்களின் மீது எனக்கிருக்கும் நேசத்தைப் பட்டை தீட்டிய வைரம் போலப் பிரகாசிக்கச் செய்கிறது என்று மனதார நினைத்துக் கொண்டாள்.

''அப்புறம் அனு.''

கணவன் அழைக்க ஆவலுடன் பார்த்தாள்.

''என்ன மாய மயந்திரமிது.''

''என்னால இதையெல்லாம் நம்பக் கூட முடியலையே.''

கணவனின் வார்த்தைகளில்,

''நான் மாறிட்டேன், என் தப்புகளையெல்லாம் உணர்ந்து திருந்திட்டேன்'' என்று உணர்ந்து சொல்லியிருந்தாள் அனுரேகா.

''சரிதான், ஆனாலும் ரொம்ப சிரமப்படாத விட்ரு.''

கணவனின் வார்த்தைகளில் கன்னத்திலேயே அறை வாங்கிக் கொண்டவளைப் போலானாள்.

இரவு உண்மையிலேயே அவன் அறைந்த போது கூட இந்த அளவிற்கு வலிக்கவில்லையே.

ஏனென்றால் அதில் உரிமை இருந்தது.

அக்கறை தெரிந்தது.

ஆனால் இப்பொழுது,

அப்படிச் சொன்னது மட்டுமல்லாமல் கணவன் எழுந்து சென்றும் இருக்க, இப்பொழுது அழுகையில் கண்களைக் கரித்துக் கொண்டு வந்திருந்தது.

வழக்கம் போல இரவு உணவு நேரத்திற்கு சாப்பிட வந்த கணவனுக்குத் தானே முன்னின்று பரிமாறினாள்.

நீயும் அமர்ந்து கொள் என்றவனின் வார்த்தைகளில் தானும் உடன் சேர்ந்து கொண்டாள்.

ஒரு இயந்திரம் போல அனைத்தையும் செய்தாளே தவிர, மாலை போல மனம் விட்டு எதையும் செய்ய முடிந்திருக்கவில்லை.

அதற்கான காரணமும் கணவனிடம் தெரிந்த ஒருவித இறுக்கமே,

அது தூர நில் என்று சொல்லாமல் சொல்வதைப் போலிருந்தது.

மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வர முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு, உண்பதில் முனைந்தாள்.

உணவு முடிந்து கணவன் எழுந்து சென்றிருக்க, என்ன செய்வதென்று தெரியாமல் வந்து வரவேற்பறையில் அமர்ந்திருந்தாள்.

எண்ண ஓட்டங்கள் மட்டும் சளைக்காமல் தனது வேலையைச் செய்து கொண்டிருந்தன.

நன்கு யோசித்ததில் கடைசியாக ஒரு முடிவுக்கு வர நேர்ந்தது.



கணவனுக்குத் தன்மேல் முன்பிருந்தது போன்ற நேசமோ, காதலோ இப்பொழுது இல்லையென்பது தான் அது.

ஜீரணித்துக் கொள்ள முடியாவிட்டாலும் அது தான் உண்மை.

ஏனோ அது நாள் வரை அறிந்திராத அளவுக்கு மனம் வெறுத்துக் கசந்து போக, மீண்டும் தோட்டத்திற்குள் தஞ்சம் அடைந்திருந்தாள்.

முதல் நாள் போல அதே இடத்தில் வந்து அமர்ந் திருந்தாள் அனுரேகா.

மூளையைக் கசக்கிப் பிழிந்து எடுக்க நேர்ந்த முடிவு உவப்பானதாய் இருக்கவில்லை.

மாறாக அது அவளை சொல்லனாத வேதனையில் ஆழ்த்தியிருந்ததென்றே சொல்லலாம்.

அவ்வளவுதான்.

கணவனின் நேசம் இனி தனக்கில்லை என்பதை அவளால் என்ன முயன்றும் இயல்பாக எடுத்துக் கொள் ளவே முடிந்திருக்கவில்லை.

ஏனோ அனைத்துமே முடிந்து விட்டதைப் போல.

இனி ஒன்றுமே இல்லையென்பதைப் போல,

மேலும் மேலும் தோன்றி வதைத்த எண்ண ஓட்டங் களில் மனம் மேலும் களைத்துப் போனது தான் மீதியாக இருந்தது.

'சிரமப்படாத விட்ரு.'

கணவனின் அந்த வார்த்தைகளே மீண்டும் மீண்டும் ஆயிரம் ஈட்டிகளாய் வந்து நெஞ்சைப் பதம் பார்த்தன.

திடீரென ஏதோ தோன்றியவளாய் நிமிர்ந்து அமர்ந்தாள்.

சிரமப்படாத விட்ரு.

இதைக் கணவன் சொல்வது இன்று தான் முதல் முறை என்று இல்லை.

முன்பும் கூட சில முறை சொல்லியிருக்கிறான்.

ஏன்.

எதற்காக அப்படிச் சொல்கிறான்.

குறிப்பாக அதே வார்த்தைகளை.

சிரமப்படாமல் இரு என்றால் அதற்கு என்ன பொருள்.

பிடிக்காத ஒன்றைப் போனால் போகிறது என்று செய்வது போல.

அப்படிப் பொருள் படுமா.

ஆம், அது போலத்தான்.

ஏன் இன்னும் சொல்ல வேண்டுமென்றால் முடியாத ஒன்றை வலுக்கட்டாயமாக வரவழைப்பதைப் போல.

சரிதான்.

ஆனால் தன்னிடம் ஏன் அதைச் சொல்கிறான்.

அதுவும் திரும்பத் திரும்ப.

மீண்டும் மீண்டும் அதையே யோசித்ததில் ஏதோ புரிவதைப் போலத்தான் இருந்தது அனுரேகாவிற்கு.

ஆனால் அப்படி அவன் புரிந்து கொண்டது உண்மையில்லையே.

அப்படி அவன் சொல்ல நேர்ந்த ஒவ்வொரு முறையும் கணவனிடம் தான் காட்டியது உண்மையான நேசத்தையே அல்லவா.



இதை அவனுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது.

இதை அப்படியே சொன்னாலும் அதைக் கணவனால் முழுமையாகப் புரிந்து கொள்ள முடியுமா.

முதலில் தன்னால் உள்ளதை உள்ளபடி அதை அப்படியே எடுத்துச் சொல்ல முடியுமா...

எண்ணங்களின் மோதலில் மனம் மேலும் சோர்ந்து போக கடவுளே என்னை ஏன் இப்படி சோதிக்கிறாய் என்று மனதிற்குள் ஊமையாய் அழுதாள்.

''இங்க என்ன பண்ணிட்டிருக்க?''

திடீரென்று கேட்ட குரலில் திரும்பியிருந்த அனுரேகா, அங்கே கணவன் நின்றிருக்கக் கண்டாள்.

உடனே எழுந்து நின்றும் இருந்தாள்.

''உன்னத்தான் இங்க என்ன பண்ணிட்டிருக்க?''

''சும்மாதான் உக்...''

''அதுதான் ஏன்?''

.....

''நீயென்ன பைத்தியமா?''

கணவனின் கோபம் ஏற்கனவே இருந்த வேதனையை இன்னும் அதிகப்படுத்தியிருக்க, எதுவும் பேசாமல் பார்த்தாள்.

''உன்னத்தான் அனு.''

''கொஞ்ச நேரம் தான் உக்காந்துட்டிருந்துட்டு வர்றேன். நீங்க போங்க.''

முயன்று வரவழைத்திருந்த இயல்பான குரலில் சொன்னாள் அனுரேகா.

''அதுக்கும் தான் என்ன அவசியம். அதுவும் இந்த நோத்துல?''

''ப்ளீஸ் நிகில்...''

மனைவியின் அழைப்பும் பார்வையும் தன்னை என்னவோ செய்ய, ''சரி உக்காரு'' என்று அவளை அமர விட்டுத் தானும் அருகில் அமர்ந்து கொண்டான்.

''என்ன யோசிச்சுட்டிருந்த?''

.........

''என்னமா?''

''நான்... நான்...''

''ம்''

''உங்களுக்கு எம்மேல கோபந்தான?''

''அப்படியா தெரியுது. உம்மேல நான் ஏம்மா கோபப் படப் போறேன்?''

கணவனின் வார்த்தைகள் அதற்கு எனக்கு என்ன உரிமையிருக்கிறது என்று கேட்பதைப் போலிருக்க, இப்படியெல்லாம் பேச வேண்டுமா என்பதைப் போலப் பார்த்தாள்.

''சரி அப்படி என்ன கோபம் இருக்குங்கற?''

''முன்னாடி மாதிரி நீங்க எம்மேல அன்பா இல்ல.''

''இல்லமா, முன்னாடியே சொன்ன மாதிரி எங்கிட்ட எந்த மாற்றமும் இல்ல, நான் எப்பவும் ஒரே மாதிரி தான் இருக்கேன்.''

''இல்ல... நம்ப முடியல. நீங்க...''



''சரிதான் விட்ரு சிரமப்படாத.''

மீண்டும் அதே வார்த்தைகள் கணவனிடமிருந்து வர, ''பாருங்க இது தான்'' என்றாள்.

''ஏன் இதையே திரும்பத் திரும்ப சொல்றீங்க?''

''ஏன்னா உம்மேல இருக்கற அக்கறைல தான், நீ சிரமப்படக் கூடாதுன்னு தான்.''

''நான் ஒன்னும் சிரமப்படவே இல்லையே. இயல்பா எம் மனசுக்குப் புடிச்ச மாதிரி அது சொல்ற மாதிரி தான நான் எப்பவுமே நடந்துக்கறேன்.''

''நம்ப முடிஞ்சா எவ்வளவு நல்லார்க்கும்.''

''உண்மை நிகில்.''

அப்படிச் சொன்ன மனைவியை ஏன் பொய் சொல்கிறாய் வேண்டாம் என்பதைப் போல நிகிலேஷ் பார்க்க, ''நான் உண்மையைத் தான் சொல்றேன்'' என்றாள் அனுரேகா.

''கோபம் கண்ன மறைச்சதுல முதல்ல முட்டாள் தனமா நடந்துக்கிட்டதென்னவோ உண்மை தான். ஆனா அதுக்காக நான் என் மனசுக்குள்ள எத்தனை முறை வருந்தினேன்னு எனக்கு தான் தெரியும்.''

''இப்ப நான் எந்த சிரமமும் படாம, யாருடைய உந்துதலும் இல்லாம, எம் மனசுக்குப் புடிச்சு தான்...''

''அது தான் ஏற்கனவே சொல்லிட்டேனே. நம்ப முடிஞ்சா ரொம்ப சந்தோஷப்படுவேன்.''

கணவனின் வார்த்தைகளில் வேதனையுடன் பார்த்த அனுரேகா ''நான் என்ன செஞ்சா நீங்க நம்புவீங்க? என்று சற்றும் குறைந்திராத அதே வேதனையுடன் கேட்டாள்.

''அது உனக்கு தான் தெரியணும்'' என்றவன் அதற்கு மேல் நிற்காமல் எழுந்து சென்றிருக்க மீண்டும் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது.

உடனே இதென்ன எப்பொழுது பார்த்தாலும் என்று நடப்பிற்கு வந்து யோசித்தவளுக்கு, அது உனக்கு தான் தெரியணும் என்ற கணவனின் வார்த்தைகளே மீண்டும் மீண்டும் காதுகளுக்குள் ஒலித்துக் கொண்டே இருந்தன.

அதைச் சொல்லும் போது அந்தக் குரலில் தெரிந்த எதிர்பார்ப்பு.

அதை மட்டும் நீ உண்மையாக்கினால் என்ற ஏக்கம்,

அந்த வினாடியில் கணவன் எதிர்பார்ப்பது என்ன வென்பது புரிந்து விட்டிருந்தது.

நெஞ்சு படபடவென்று தாறுமாறாய் அடித்துக் கொள்ள, அந்த வேதனை இல்லையில்லை இன்ப வேதனை உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை அலையலையாய் பரவத் தொடங்கியிருந்தது.

எதுவும் செய்யத் தோன்றாத அந்த நிலையில் எவ்வளவு நேரம் அமர்ந்திருந்தாளோ.

அடுத்த வினாடி எழுந்திருந்தாள்.

போதும்.

இத்தனை நாளும் கணவனின் அன்பைப் புரிந்து கொள்ளாமல் அவனை வதைத்தது போதும்.

மனதின் வேகமும் தீவிரமும் கால்களுக்குப் புரியவில் லையோ.

மிகுந்த தயக்கத்துடன் அறைக்குள் வந்திருந்தாள்.



கணவன் படுக்கையில் லேசாகச் சாய்ந்தவாறு அமர்ந்த படி கையிலிருந்த புத்தகத்தில் மூழ்கியிருக்க, அருகில் சென்றாள்.

கணவன் நிமிர்ந்து பார்க்க ''நான்... என்ன மன்னிச் சுடுங்க...''

மனைவியின் தயக்கம் அவள் மிகவும் முயன்று மன திற்குப் பிடிக்காததை வலுக்கட்டாயமாக வரவழைப் பதைப் போலிருக்க, ''ஏன் என் உயிர வாங்கற பேசாம போ போயிடு நீயும் கஷ்டப்பட்டு என் நிம்மதியையும் கெடுக்காத'' என்று இறுகிய குரலில் சொல்லி விட்டிருந் தான்.

கணவனின் வார்த்தைகளில் துடித்துப் போனவள், ஏன் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள் என்பதைப் போலக் கண்கள் கலங்கப் பார்த்தாள்.

மனைவியின் கண்ணீர் மேலும் தாங்க முடியாததாய் இருக்க, இறுகிய மனநிலையுடன் எங்கோ பார்த்தான்.

''ஒரு தப்புக்கு ஓராயிரம் முறை தண்டனை குடுப் பாங்களா நிகில்.''

............

''ஆனா கிட்டத்தட்ட அத்தன முறை நான் தண்டன அனுபவிச்சுட்டேன்.''

கணவனிடமிருந்து எந்த எதிரொலியும் இல்லாது போக, அவனுடைய கண்களை ஊடுருவிப் பார்த்தாள்.

''இனியும் நீங்க என்ன வதைக்கறதுல புதுசா எந்தப் பலனும் இருக்கப் போறதில்ல. ஏற்கனவே எத்தனை எத்தனையோ தடவ...''

''போம்மா. போய்த் தூங்கு. எனக்குக் கொஞ்சம் முக்கியமான வேலையிருக்கு.''

உணர்ச்சி துடைக்கப்பட்ட முகத்துடன் கணவன் சொல்லியிருக்க, சில வினாடிகள் அப்படியே நின்று விட்டுப் பிறகு வெளியே வந்திருந்தாள்.

கண்கள் அதன் பாட்டிற்குக் கண்ணீர் மழை பொழிய, வாய் விட்டு அழுதால் கொஞ்சம் பரவாயில்லாமல் இருக்குமோ என்று தோன்றியிருந்தது.

வெளியே பால்கனிக்கு வந்திருந்தவள் அப்படியே சுவர் ஓரமாய்க் குறுகி அமர்ந்து விட்டிருந்தாள்.

அப்படியே முழங்கால்களில் முகத்தைப் புதைத்து குலுங்கியவள், யாரோ தன்னைத் தொடுவதைப் போலிருக்க நிமிர்ந்து பார்த்தாள்.

கணவன் நின்றிருக்க, எதுவும் பேசாமல் பார்த்தாள்.

உள்ள வா.

''நான் கொஞ்ச நேரம் இங்கேயே உக்காந்துட்டிருந் துட்டு அப்...''

''எழுந்துரு முதல்ல.''

கணவனின் அதட்டலில் எழுந்திருந்தவள் அவனைத் தொடர்ந்து உள்ளேயும் வந்திருந்தாள்.

''போய்த் தூங்கு.''

''மாட்டேன்.''

கதவுகளைத் தாழிட்டு விட்டுத் தூங்குவதற்காக வந்தவன் மாட்டேன் என்ற மனைவியின் பதிலில் அவளருகில் வந்திருந்தான்.



''ஏன்?''

அவ்வளவுதான்.

அடுத்த வினாடி கணவனை இறுக அணைத்து அவனுடைய மார்பில் முகம் புதைத்திருந்தாள்.

அவனுடைய கணக்கு சரியாகி விட்டிருக்க, வெற்றிப் புன்னகையில் மனம் துள்ளாட்டம் போட்டது.

தானும் அணைத்துக் கொள்ள ஆவலுடன் உயரத் தொடங்கியிருந்த கரங்களை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டவன் ''அனு இங்க பாரு'' என்று அழைத்தான்.

.........

''ஏய் உன்னத்தான்...''

அவனுடைய அழைப்புகளுக்கு எந்தப் பலனும் இருக்கவில்லை. காற்றோடு கலந்திருந்தன.

மனைவியின் நிலை புரிய, எல்லையற்ற காதலில் மனம் லேசாகி எங்கோ வானில் பறக்க ''அனு'' என்று தானும் இறுக அணைத்துக் கொண்டு விட்டிருந்தான்.

அந்த வினாடியில் நிமிர்ந்து பார்த்தவளின் முகத்தைத் தனது கைகளில் ஏந்தியிருந்தவன், அவளுடைய இதழ்களைத் தன்வசப்படுத்தியிருந்தான்.

அவ்வளவுதான்.

காட்டாற்று வெள்ளம் போலப் பொங்கிப் பிரவகித்து வந்த கணவனின் அன்பில் திக்கு முக்காடிப் போனவள், தொடர்ந்த அவனுடைய தொடுகையில் முற்றிலுமாகத் தன் வசமும் இழந்து போனாள்.

# 22



"அனு"

கணவனின் குரலில் துள்ளி விழுந்து திரும்பி யிருந்தவள், எதிரே நின்றிருந்தவனை நெஞ்சு பட படக்கப் பார்த்தாள்.

"என்ன பண்ணிட்டிருக்க?"

கணவனைக் கண்ட வினாடியில் வெட்கத்தில் முகம் செங்கொழுந்தாகி விட்டிருக்க, அதை மறைக்கப் பெரும் பாடுபட்டு பின் முடியாமல் தோற்றாள்.

மனைவியின் நிலையில், நிகிலேஷ் தானும் முற்றிலு மாகத் தன் வசமிழந்து போனான்.

"அனு" என்று மனைவியை அருகில் இழுத்து அவ ளுடைய அவஸ்தையை அணு அணுவாக ரசித்தான்.

மேலும் முடியாமல் தவித்தவளை "என் அனு..." என்று இறுக அணைத்துத் தனது பிடியிலேயே வெகு நேரம் வைத்திருந்தான்.

ஒரு எல்லைக்கு மேல் முடியாமல் அனுரேகா தனது கணவனின் மார்பில் முகம் புதைத்துக் கொள்ள, அடுத்த வினாடி தனது சூடான இதழ்களை மனைவியின் கழுத்து வளைவில் பதித்திருந்தான் நிகிலேஷ்.

கணவனின் செய்கையில் சிலிர்த்து நடுங்கியவளை முதல் நாள் இரவு போல மீண்டும் எல்லையற்ற காதலுடன் தன்னவளாக்கிக் கொண்டான்.



நாட்கள் பறந்தன.

வேலை முடிந்து கணவன் எப்பொழுது வீடு வந்து சேருவது என்று மனைவியும், எப்பொழுது பார்த்தாலும் இதென்ன தொழில் என்று சலித்துக் கொண்ட கணவனு மாக அவர்களுக்கு ஒரு நாளைக்கு இருபத்தி நான்கு மணி நேரங்கள் போதவில்லை.

அதிலும் கணவனுடன், பல்லாண்டு காலங்கள் உடலும் சதையுமாக வாழ்ந்ததைப் போல உயிரோடு ஒன்றி விட்டிருந்தாள் அனுரேகா.

கணவனிடம் கோபம் கொண்டது, சண்டையிட்ட தெல்லாம் முன் ஜென்மத்தில் நடந்ததைப் போல மறந்து கூடப் போனாள்.

மூன்று மாதங்கள் ஓடிப் போயிருந்தன.

அடேயப்பா தொன்னூறு நாட்கள்!

ஆனால் அது எப்படி சாத்தியம் தொன்னூறு நிமிடங் களாகப் பறந்து போய் விட்டதே என்று மகிழ்ச்சியும் வெட்கமும் ஒன்றுக்கொன்று போட்டியிட தனக்குள் சிரித்துக் கொண்டாள்.

"அம்மா"

உல்லாசக் கற்பனைகளிலிருந்து முற்றிலுமாக நடப்பிற்கு வந்திருந்தவள் "என்ன அன்னம்மா?" என்று கேட்டாள்.

"மகனப் போய்ப் பாத்துட்டு சாயங்காலத்துக்குள்ள வந்துடட்டுங்களாம்மா?"

"தாராளமாப் போய்ட்டு வாங்கமா, பணம் ஏதாவது வேணுமா?"

''ஐயோ வேண்டாங்கம்மா, நேத்து தான ரெண்டு மடங்கு பணத்த சம்பளமா ஐயா சொல்லி நீங்க குடுத்தீங்க. மறந்துட்டிங்களாம்மா?'' என்று புன்னகையுடன் கேட்டாள் அன்னம்மா.

''அதான் நீங்களே சொல்லிட்டிங்களே சம்பளம்னு. நான் கேக்கறது மகன் வீட்டுக்குப் போய்ட்டு வரப் போறீங்க வெறும் கைய வீசிட்டுப் போகாம தாராளமா ஏதாவது வாங்கிட்டுப் போய்ப் பார்த்துட்டு வாங்க'' என்றவள் என்ன மறுத்தும் கேட்காமல் ஒரு ஆயிரம் ரூபாய் நோட்டை எடுத்து அன்னம்மாவின் கைகளில் திணித்திருந்தாள்.

''என்னங்கம்மா இது, நேத்தே...''

''அத விடுங்க அன்னம்மா. இந்த மாசம் ஐயா எல்லாத்துக்குமே அப்படிதான் குடுக்கச் சொன்னார் உங்களுக்கு மட்டுமில்ல...''

''என்ன விஷயம்மா?''

அன்னம்மாவின் கேள்வியில் ''உங்களுக்குத் தெரியாதாக்கும்?'' என்று முயன்று வரவழைத்திருந்த கோபக் குரலில் கேட்டிருந்தவள், தொடர்ந்து முடியாமல் உடனே சிரித்தும் இருந்தாள்.

''நிஜமாவே தெரியாமதாம்மா கேக்கறேன்'' என்று அன்னம்மா புன்னகையுடன் கேட்க, ''போங்கம்மா'' என்றாள் அனுரேகா.

''நல்லா வெட்கப்படறீங்கம்மா'' என்று தன்னைப் பார்த்தவளை, ''நீங்க கிளம்புங்க அன்னம்மா லேட்டாகல?'' என்றாள்.



''நீங்க ரொம்ப வெகுளியா இருக்கீங்கம்மா, அப்புறம் அனும்மா...''

''என்ன அன்னம்மா சொல்லுங்க?''

''இல்ல...''

''அட என்னமா சொல்லுங்க?''

''யாரோ ஒரு பொண்ணு நேத்து ஐயாகிட்ட ரொம்ப உரிமையோட பேசிட்டிருந்தாங்களேம்மா.''

''ஓ அவங்களா, அவங்க ஐயாவோட ஃப்ரண்ட் அன்னம்மா. காலேஜ்ல சேந்து படிச்சவங்களாம். ரொம்ப நாளைக்கப்புறம் பாத்ததுல ஒரே சந்தோஷம். அவரு கூட வீட்டுக்கே வந்துட்டாங்க.''

வெள்ளை மனதுடன் சொன்ன முதலாளியம்மாவைப் பார்க்க ஏனோ பாவமாக இருந்தது அன்னம்மாவிற்கு.

மனிதர்களின் மேல் தான் எவ்வளவு நம்பிக்கை.

யாரையும் துளியளவு கூட சந்தேகப்படத் தோன்றவில்லையே.

கணவனின் மேலிருக்கும் அபரிதமான நம்பிக்கையால் தான் அப்படி நடந்து கொள்கிறாளென்று அன்னம்மாவிற்குப் புரிந்திருக்கவில்லை.

ஆனால் நேற்று முதலாளி ஐயாவுடன் வந்திருந்த பெண்ணைப் பார்க்க ஒன்றும் சரியாகவே படவில்லையே.

முதலில் அவளுடைய பார்வையே சரியில்லையே.

ஆனால் என்ன ஒரு நாடகம்.

முதலாளி ஐயா பார்க்க மட்டும் அப்படியே எதிர்பதமாக நடந்து கொள்கிறாளே.

ஆனால் அம்மா ஏன் இவ்வளவு வெள்ளையாக இருக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் இப்படி இருப்பது வினையாக அல்லவா முடியும்.

என்னதான் முதலாளி ஐயாவும் சொக்கத்தங்கம் தான் என்றாலும், ஊர் உலகம் மிகவும் கெட்டுப் போயல்லவா கிடக்கிறது.

மற்றது எப்படியோ, ஒரு விதத்தில் நிம்மதியாக உணர்ந்தாள் அன்னம்மா.

அம்மா ஈருயிரானதற்குப் பிறகு ஐயா அவர்களைத் தரையில் கால் பாவ விடாமல் பார்த்துக் கொள்வதே அது.

இவ்வளவு அன்பையும், நேசத்தையும் தனக்குள் வைத்திருப்பவர்கள் நிச்சயம் வாழ்க்கையில் நிம்மதியாகவும், சந்தோஷமாகவும் தான் இருப்பார்கள்.

''என்ன அன்னம்மா?''

''ஒன்னுமில்லைங்கம்மா.''

''அப்ப எதுவோ இருக்குன்னு தெரியுது சொல்லுங்க.''

''இல்ல...''

''ம், சொல்லுங்க அன்னம்மா.''

''நான் சொல்றதுல ஏதாவது தப்பிருந்தா மன்னிச்சுடுங்கம்மா. அப்படியே மறந்தும் போயிடுங்க. ஆனா நான் சொல்றதுல அர்த்தம் இருக்கும்மா, அந்தப் பொண்ண ஐயா கூடப் பழக விடாதீங்க. ஏன் வீட்டுக்குள்ளயும் அடிக்கடி வர விடாதீங்கம்மா...''



''சரிதான் அன்னம்மா. நான் பார்த்துக்கறேன் நீங்க போயிட்டு வாங்க.''

''தப்பா எடுத்துக்காதீங்கம்மா. சூது வாது தெரியாம வெகுளியா இருக்கீங்க. அதத் தப்பா யாரும் பயன்படுத்திடக் கூடாதேங்கறது தான் என் கவல வேற ஒன்னுமில்ல'' என்று அன்னம்மா கிளம்ப, சிரிப்பு தான் வந்தது அனுரேகாவிற்கு.

ஆனாலும் அதை அன்னம்மா அறியாமல் மறைத்துக் கொண்டு தன்னறைக்கு வந்திருந்தவள் பொறுமையாகக் குளித்து முடித்து வெளியே வந்தாள்.

இப்பொழுதெல்லாம் மதிய உணவிற்குக் கணவன் வீட்டிற்கு வந்து செல்வது வழக்கமாகி விட்டிருக்க, பார்த்துப் பார்த்து அதே சமயம் அதிகப்படியாகவும் தெரியாத வண்ணம் தன்னை அலங்கரித்துக் கொள்வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள் அனுரேகா.

வருவது மட்டுமா.

உடனமர்ந்து பார்த்துப் பார்த்துத் தனக்கும் உணவைப் பறிமாறி, உண்டு முடிக்கும் வரை விடவும் மாட்டானே.

தன் மேல் இவ்வளவு அன்பா.

திடீரென்று அன்னம்மா எச்சரித்தது தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது அனுரேகாவிற்கு.

அந்தப் பெண் மோசமானவள் கிடையாது என்பது ஒரு பக்கமிருக்க, அதற்கு மேல் தன்னுடைய கணவனும் நல்லவனாயிற்றே.

இதை எப்படி அன்னம்மாவிற்குப் புரிய வைப்பது.

அவர்களும் தன்னுடைய நல்லதிற்கு, அதுவும் தன்னை அவருடைய மகள் போல எண்ணித்தானே சொல்கிறார்கள்.

எப்படியோ அவருடைய மனம் கோணாமல் அதே சமயம் இனிமேல் இப்படியெல்லாம் பேசக் கூடாதென்று ஒரேயடியாகச் சொல்லி விட வேண்டியதுதான்.

''அனு'' கணவன் வர, வரவேற்றாள் அனுரேகா.

''வாங்க, வாங்க. என்ன இன்னைக்கு வழக்கத்த விடவும் நேரத்துலயே வந்துட்டீங்க?''

''ஆமாம்மா. இந்தா இந்தக் கவர வாங்கி உள்ள வை...''

''வா நித்யா, ஏன் அங்கயே நின்னுட்டிருக்க?''

கணவன் அழைத்ததற்குப் பிறகு தான் அந்தப் பெண் நித்யாவும் வந்திருப்பதைக் கண்டாள்.

''வாங்க நித்யா.''

தானும் அழைத்தாள் அனுரேகா.

''அட வா'' என்று தோழியை மீண்டும் அழைத்தவன் ''அனு சாப்பாடு எடுத்து வைக்கறியா?'' என்று கேட்டான்.

''நீங்க ரெண்டு பேரும் உக்காருங்க. ரெண்டு நிமிஷத்துல எடுத்து வெச்சிடறேன்'' என்று சென்றாள்.

''நானும் வந்து உதவட்டுமா?''

நித்யா கேட்க ''நோ தேங்க்ஸ்'' என்று சிரித்தவள், ''ஏற்கனவே எல்லாம் தயார் நீங்க உக்காருங்க'' என்று சொன்னது போலவே சில வினாடிகளில் கணவனையும் நித்யாவையும் அமர வைத்துப் பரிமாறிச் சாப்பிடச் சொல்லி உபசரித்தாள்.



''நீயும் வா அனு.''

கணவன் அழைக்க,

''இல்லங்க நான் அப்புறமா சாப்பிட்டுக்கறேன்'' என்றாள்.

''ம்கூம், வந்து உக்காரு.''

''இன்னொரு முறை பரிமாறிட்டு அப்புறமா...''

''வா அனு, நான் மதியம் லஞ்சுக்கு வீட்டுக்கு வர்றதே உனக்காகத் தான்னு தெரியாதா? நீ தனியா உக்காந்து சாப்பிடறதுக்கு நானும் அங்கயே தனியா உக்காந்து சாப்பிட்டுக்குவேனே. பாத்துப் பரிமாறலேன்னா நீ வயித் துக்குக் கூட எடுத்துக்க மாட்ட'' என்று மனைவியை வலுக்கட்டாயமாக அமர வைத்திருந்தவன், தானே பரிமாறவும் செய்தான்.

கணவனின் குணம் அறிந்தவளென்பதால் அனுரேகாவும் அதற்கு மேல் எதுவும் பேசாமல் சாப்பிடத் தொடங்கி விட்டிருந்தாள்.

வழக்கம் போல அன்றும் மனைவிக்கு அனைத்தையும் தன் கையால் பரிமாறி சாப்பிடச் சொல்லி உபசரித்தவன், அவ்வப்பொழுது அக்கறையுடன் தீர்ந்தவற்றையும் பார்த்துப் பார்த்து எடுத்து வைத்தான்.

மனைவி ஒன்று விடாமல் உண்டு முடிக்கும் வரை தானும் எழாமல் அமர்ந்திருந்தவன் அப்படியே தோழியுடனும் இடையிடையில் பழைய கதைகள் பேசிச் சிரித்தான்.

தோழியையும் அவன் மறந்து விடவில்லை.

அவளையும் "உனக்கு என்ன வேண்டுமோ நீயாகவே எடுத்து வைத்து சாப்பிடு" என்று தீர்ந்தது பார்த்து அவளருகில் நகர்த்திக் கொடுத்தான்.

அதாவது அவளை மூன்றாவது ஆளாக ஒதுக்கி வைத்து விடாமல், அவளிடமும் நட்பு எனும் எல்லைக் கோட்டிற்குள் இதமாக நடந்து கொண்டான்.

கணவனைப் பார்க்கப் பார்க்க பெருமையாக இருந்தது அனுரேகாவிற்கு.

எவ்வளவு பெரிய கம்பெனிக்கு முதலாளி.

ஆனால் வீட்டில் மற்றவர்களுடைய இதமறிந்து, யாருடைய முகமும் கோணாமல் எவ்வளவு பிரியமாய் நடந்து கொள்கிறான்.

கணவனைத் தந்தையுடன் ஒப்பிட்டுப் பார்த்தாள்.

தந்தை ஒரு நாள் கூடத் தாயை இப்படியெல்லாம் கவனித்துக் கொண்டதே இல்லையென்பது நினைவிற்கு வந்தது.

உன் ஆரோக்கியம் உன் கையில்,

நீதான் அக்கறையுடன் உன் உடலைப் பேணிக் கொள்ள வேண்டும்.

மற்றபடி எனக்கு, ஏன் வீட்டில் யாருக்குமே எந்தக் குறையும் வந்து விடாமல் பார்த்துக் கொள்வதும் உன்னுடைய கடமை அவ்வளவுதான் என்னுமளவில் தானே நடந்து கொள்வார்.

"அப்புறம் அனு."

கணவன் அழைக்க "என்னங்க?" என்று பார்த்தாள்.



"ரெண்டு நாளுக்கு முன்னாடி கேக்கும் போது எடுத்துக் குடுன்னு ஒரு ஃபைல் குடுத்தேனே, அத எடுத்துத் தர முடியுமா?"

"இதோ இப்பவே..."

"மெதுவாப் போ ஒன்னும் அவசரமில்ல."

கணவன் கேட்ட ஃபைலை எடுப்பதற்காக படுக்கை அறையிலிருந்த அந்த கப்போர்டுக்கு வந்திருந்தவள், ஃபைலையும் எடுத்திருந்தாள்.

அந்த வினாடியில் பூனை போல நடந்து வந்த கணவன் பின்னாலிருந்து அணைப்பானென்று அவள் எதிர் பார்க்கவில்லை.

"என்னங்க இது" என்று சிணுங்கிக் கொண்டே திரும்பியிருந்தவள் அடுத்த வினாடி இன்னும் வசமாகக் கணவனின் அணைப்பிற்குள் வந்திருந்தாள்.

"அனு..."

"என்ன நிகில் இது... ப்ளீஸ்.. விடுங்..."

"எனக்கு ஆஃபீஸ் போகவே பிடிக்கல... வீட்லயே இருந்துடட்டுமா..."

"கடவுளே உங்கள..."

என்ன முயன்றும் மனைவியின் ஜாலமெல்லாம் நிகிலேஷிடம் எடுபட்டிருக்கவில்லை.

மேலும் சில நிமிடங்களுக்குப் பிறகே கணவனிடமிருந்து விடுபட்ட அனுரேகாவிற்கு மூச்சு வாங்கியது.

அதே நேரம் நிற்கவும் முடியாமல் தள்ளாடியவளைப் பிடித்துக் கொண்டான் நிகிலேஷ்.

''என்னாச்சு...''

''தல சுத்தல் தான்.''

''என்னது...''

''இந்த சமயத்துல இது சகஜந்தாங்க...''

''என்ன சகஜம், நான் மட்டும் இங்க இல்லேன்னா இந்நேரம் நீ விழுந்திருப்ப.''

''இல்லைங்க...''

''ஆமா, நீ வேணும்னே ஒன்னுமில்லாத மாதிரி காட்டிக்கற. ஈவினிங் ரெடியா இரு நேரத்துலயே வந்துடறேன். டாக்டர்கிட்டப் போயிட்டு வந்துடலாம்.''

எல்லாம் உங்களால் தான் என்று வாய் வரை வந்திருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

எவ்வளவு ஆசையுடன் அருகில் வருகிறான்.

பிறகு வரவும் முடியாமல் வராமல் இருக்கவும் முடியாமல் அவஸ்தைப்படுவான்.

அத்தோடு தன்னாலும் அது முடியாதே.

'என்னடா...''

அவ்வளவுதான்.

அருகில் வந்திருந்த கணவனின் கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கியவள், மீண்டும் அவனுடைய மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள்.

மேலும் சிறிது நேரமும் கழித்தே வெளியே வந்திருந்தான் நிகிலேஷ்.

''போரடிக்க வெச்சுட்டோம் போலிருக்கு?''



அப்படிக் கேட்ட தோழனைப் புன்னகையுடன் பார்த்த நித்யா ''அப்படியெல்லாம் ஒன்னுமில்லையே'' என்று சிரித்தாள்.

''ஏன் சிரிக்கற?''

''ஒன்னுமில்லேன்னு சொல்லிடுவேன். ஆனா மத்தவங்களுக்கு முன்னாடி நீ அசடு வழியக் கூடாது பாரு அதனால சொல்றேன் ஷர்ட்ல இருக்கற குங்குமத்தத் துடைச்சுக்கோ.''

தோழி சொன்ன பிறகே அதைக் கண்டவன், ''தேங்க்ஸ்'' என்று புன்னகையுடன் அதைத் தட்டி விட்டான்.

''தினமுமே இப்படிதானா? நான் குங்குமத்தக் கேட்டேன்...''

''நீ எப்படி கேட்டாலும் என் பதில் ஒன்னு தான்.''

''அது என்னவோ?''

தினமும் ஷர்ட்டக் கழட்டி வெச்சுட்டு கொஞ்ச நேரம் தூங்கி ரெஸ்ட் எடுத்துட்டு அதுக்கப்புறமாப் போவேன்.

''ஓஹோ சரி சரி'' என்று சிரித்த தோழியைப் பார்த்தவன், ''சரி நான் கிளம்பறேன்'' என்றான்.

''என்ன இவ்வளவு நேரத்துல, வழக்கம் போல கொஞ்ச நேரம் தூங்கியெழுந்துட்டே போக வேண்டியது தான?''

''ம்கூம் இன்னைக்கொரு முக்கியமான வேலையிருக்கு உடனே கிளம்பணும்'' என்றவன் அதே நேரம் வெளியே வந்த மனைவியிடமும் சொல்லிக் கொண்டு கிளம்பியிருந்தான்.

அந்த அவசரத்திலும் ''ஈவினிங் ரெடியா இரு டாக்டர் கிட்டப் போய்ட்டு வந்துடலாம்'' என்று சொல்ல அவன் மறந்து விடவில்லை.

கணவன் கிளம்பியதும் நித்யாவின் அருகில் வந்து அமர்ந்தாள்.

“போரடிக்க வெச்சுட்டோம் இல்லையா?”

கணவனைப் போலவே மனைவியும் கேட்க, “நான் வந்து உங்கள டிஸ்டர்ப் பண்ணிட்டேன் இல்லையா?” என்று கேட்டாள் நித்யா.

“அச்சச்சோ என்ன இப்படிக் கேக்கறீங்க...”

“அப்புறம் உங்க ஊரு எது? உங்க அப்பா என்ன பண்றார்...”

தன்னைப் பற்றியே மேலும் மேலும் கேட்ட நித்யாவுக்கு எதையும் மறைக்காமல் பதில் சொன்னாள் அனுரேகா.

கணவனின் தோழி என்ற ஒன்றே அப்படி அனைத்தையும் சொல்வதற்குப் போதுமானதாய் இருந்தது.

“அப்புறம் உங்களது லவ் மேரேஜா?”

“அப்படின்னு இல்...”

“அட அதுக்குள்ள என்ன வெக்கம்? நிகில் தான் முதல்ல காதல சொல்லியிருப்பார் இல்லையா?”

“எப்படி... சொல்றீங்க?”

“எப்படின்னா நிகிலோட பிடிவாத குணம் தான். ஒன்ன நினைச்சுட்டா அத முடிக்கற வரைக்கும் ஓய மாட்டார்.”

..........

“அது மட்டுமில்ல.”

“என்ன சொல்லுங்க?”

“எந்த விதத்துல ஒப்பிட்டுப் பார்த்தாலும் நீ நிகிலோட ஸ்டேட்டஸ்க்கு நூத்துல ஒரு பங்கு கூடப் பொருத்த



மில்லாதவளாச்சே, என்ன பாக்க கொஞ்சம் பரவாயில்ல அவ்வளவுதான்.”

திடீரென்று வந்த நித்யாவின் ஒருமை அழைப்பில் அவளை நிமிர்ந்து பார்த்தாள் அனுரேகா.

“நீ என்னை விட ரொம்பவுமே சின்னப் பொண்ணுங் கறதால அப்படிக் கூப்பிட்டேன். பிடிக்கலேன்னா...”

“இல்ல பரவாயில்ல.”

“அப்ப நீ முதல்ல நிகில விரும்பல அப்படித்தான?”

இந்தக் கேள்விகளெல்லாம் சற்று அதிகப்படியாய்த் தெரிய மீண்டும் பார்த்தாள் அனுரேகா.

“ஏதோ உங்களைப் பத்தித் தெரிஞ்சுக்கலாம்னு கேட்டேன். நீயும் என்ன எதுவுமே கேக்க மாட்டேங்கற பின்ன என்னதான் பேசறது?”

“அச்சச்சோ நீங்க எதுனாலும் கேளுங்க...”

இன்னும் கூட அனைத்தையும் கேட்டுத் தெரிந்து கொண்ட நித்யாவுக்கு, இயன்ற அளவு பொறுமையுடன் பதில் சொன்னாள் அனுரேகா.

அதுவே அப்படியென்னும் பொழுது பிறகு நித்யா அவளைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டிருக்க, அதைத் தான் அனுரேகாவால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள முடிந்திருக்கவில்லை.

அந்த அளவிற்கு அனைத்துமே சுயதம்பட்டமாய் இருந்தது.

மேலும் இரண்டு மணி நேரங்களும் கூட இருந்து விட்டு அதற்குப் பிறகே நித்யா கிளம்ப, இப்பொழுது

வலியில் தலை விண்விண்ணென்று தெறிக்கத் தொடங்கி விட்டிருந்தது அனுரேகாவிற்கு.

மணி மாலை நான்காகியிருக்கக் கிளம்பி கணவனுக்காகக் காத்திருந்தாள்.

மருத்துவரிடம் போக வேண்டியதே இல்லை தான்.

ஆனால் அதைக் கணவனுக்கு எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது.

அவனுடைய தோழியே சொன்னதைப் போல ஒன்றை நினைத்து விட்டால் பிறகு அதை செய்து முடிக்கும் வரை ஓய மாட்டானே.

தனது கைபேசி அழைக்க சென்று எடுத்துப் பேசினாள்.

கணவன் அழைத்திருக்க ''சொல்லுங்க'' என்றாள்.

எதிர்முனையில் கணவன் சொன்ன செய்தியைக் கேட்டவளுக்கு மனம் பதறி விட்டிருந்தது.

அவளுடைய கணவன் சொல்லியிருந்தது இது தான்.

ஒரு சிறு விபத்து, காலில் மட்டும் அதுவும் லேசாகத் தான் எலும்பு முறிவு. தவறாக வந்து மோதிய பஸ்க்காரனை போலீஸிடம் ஒப்படைத்தாயிற்று. முக்கியமான ஃபார்மாலிட்டிஸ் சிலதை முடித்துக் கொண்டு டாக்டரையும் பார்த்து விட்டு இன்னும் ஒரு மணி நேரத்தில் வேலை முடிந்து விடும். டிரைவரை அனுப்புகிறேன். நீயும் வந்தால் இருவரும் மருத்துவரைப் பார்த்து விட்டுப் போகலாம் என்றிருந்தான்.

சொன்னது போலவே கணவன் காரை அனுப்பியிருக்க, கிளம்பிச் சென்றவள் கணவனுடன் சேர்ந்து



மருத்துவரைப் பார்த்துவிட்டு வீடு வந்து சேர்ந்திருந்தாள்.

''எனக்கும் இன்னைக்கே வந்து டாக்டரப் பார்க்கணும்னு என்ன இருக்கு சரிதான் வாங்க, வந்ததுல உங்களுக்கு நல்ல விதமா எல்லாம் பாத்தாச்சே அது போதும்''என்றவள் ''வாங்க உள்ள போய்ப் படுத்துக்கோங்க. படுத்து ரெஸ்ட் எடுங்க'' என்றாள்.

''டாக்டரே பத்து நாள் சொல்லியிருக்கார்னா. நீங்க இருபது நாள் ரெஸ்ட் எடுக்கணுமாக்கும்'' என்றவள் ''வாங்க'' என்று கணவனைக் கைத் தாங்கலாக அழைத்துக் கொண்டு போய் படுக்கையில் விட்டாள்.

மனைவியின் அன்பான கவனிப்பில் ஒரே வாரத்தில் முழு ஆரோக்கியம் பெற்றிருந்தான் நிகிலேஷ்.

ஆனாலும் அந்த ஒரு வாரமும் கணவனின் அன்பில் தானும் திக்குமுக்காடிப் போனாள் அனுரேகா.

இருவரில் யாருக்கு ஓய்வு கட்டாயம் என்பதே மறந்து போய் விட்டிருந்தது.

# 23



அன்றிலிருந்து கணவன் மீண்டும் வழக்கம் போல அலுவலகம் செல்லத் தொடங்கி விட்டிருக்க, பார்க்கும் அனைத்துமே கசந்து போயிற்று அனுரேகாவிற்கு.

எதுவுமே பிடிக்கவில்லை.

அழுகை அழுகையாய் வந்தது.

விபத்து நடந்ததை யாருக்குமே தெரிவிக்கவில்லை என்றாலும் நித்யா மட்டும் விஷயமறிந்து வந்து நண்பனைப் பார்த்து விட்டுப் போனாள்.

ஒரு முறை இரு முறையல்ல. பலமுறை.

அப்படி வந்து சென்ற போதெல்லாம் அவளுடைய வயிறு எரிந்தது.

இந்த அனுரேகாவிற்கு கிடைத்த வாழ்வு தான் என்ன.

சொர்க்க போகத்திலேயே அல்லவா திளைத்துக் கொண்டிருக்கிறாள்.

கணவன் தலையிலேயே தூக்கி வைத்துக் கொண் டாடாதது ஒன்று தான் குறை.

ஏற்கனவே பொறாமையில் நித்யாவின் உள்ளம் தீயாய் எரிந்து கொண்டிருக்க. அது அதிகமாகும் வண்ணம் இன்னொன்றும் நடந்திருந்தது.

வழக்கம் போலக் கணவன் கிளம்பியதும் அறையை ஒதுக்கிவிட்டுக் குளிக்கச் செல்லலாமென்று வந்த அனுரேகா, அனைத்தையும் ஒதுக்கி வைத்தாள்.

சரிதான் இனிக் குளிக்கச் செல்லலாமென்று திரும்பிய வளுக்குத் தானும் கணவனுமாகத் திருமணத்தின் போது எடுத்துக் கொண்ட லேசாக தூசி படிந்த புகைப்படம் கண்களில் பட்டது.

அதை எடுத்துத் துடைத்தவளால் அந்தப் புகைப்படத் திலிருந்து உடனே கண்களை அகற்றிக் கொள்ள முடியவில்லை.

கணவனின் காதல் ரசம் பொங்கும் கண்கள் தன்னை என்னவோ செய்ய, உடனே அதில் தனது இதழ்களைப் பதித்திருந்தாள்.



சரியாக அதே நேரம் நித்யா அறைக்குள் வந்திருக்க, செய்வதறியாது திகைத்தாள்.

''என்ன எதிர்பாக்கல போலிருக்கு?''

நித்யாவின் கேள்வியில் நடப்பிற்கு வந்தவளாய் ''வாங்க'' என்று மெல்லிய குரலில் அழைத்திருந்தாள்.

''தப்பான நேரத்துல வந்துட்டேன் போலிருக்கு?''

அப்படிக் கேட்டவளின் குரலில் என்ன இருந்தது.

''என்ன பேச மாட்டேங்கற?''

''உங்களுக்குக் கொஞ்சம் மேனர்ஸ் இருந்திருக்கலாம்.''

அனுரேகா அப்படிக் கேட்பாளென்று நித்யா கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.

ஆனாலும் அவள் உடனே எதையும் காட்டிக் கொள்ள வில்லை.

சாதாரணமாக சில வினாடிகள் பேசியிருந்தவள் பிறகு கிளம்பியும் இருந்தாள்.

ஏற்கனவே எரிச்சலிலிருந்த அனுரேகாவும் போனால் போகட்டுமென்று கண்டும் காணாமல் இருந்து விட் டிருந்தாள்.

எதையும் கணவனிடம் மறைத்துப் பழக்கமில்லை என்பதால், அவன் மதிய உணவிற்கு வந்த போது நடந் ததை அப்படியே சொல்லியும் இருந்தாள்.

எதுவும் பேசாம பார்த்த கணவனை இப்பொழுது பயத்துடன் பார்த்தாள்.

''இல்ல நான்...''

''நேர்ல இருக்கும் போது அவ்வளவு பிகு பண்ணிட்டு இப்ப இப்படியெல்லாம் வேற நடக்குதா?''

சிரியாமல் கணவன் கேட்ட விதத்தில் அவனுக்குக் கோபமெதுவும் இல்லையென்பது தெரிந்து விட, நிம்மதியில் மனம் லேசாகிப் போனது.

''திரும்பவும் என்ன...''

''நான் அப்படி சொல்லியிருக்கக் கூடாது...''

''கூடாது தான். அந்த நேரத்துல ஏதோ யோசனைல சொல்லிட்ட பரவாயில்ல விடு.''

''அவங்க போன் நெம்பர் இருந்தாக் குடுக்கறீங்களா. ஸாரி...''

''அதெல்லாம் வேண்டாம்.''

........

''நேர்ல வரும் போது பேசிக்கோ. அப்பவும் வருத் தப்படறேங்கற மாதிரி மட்டும் காட்டிக்கோ போதும்.''

......

''என்ன பாக்கற? அவங்களுக்கும் அவங்க எல்லை தெரியறது நல்லது பாரு அதான் சொல்றேன்.''

கணவனின் கணிப்பு சரியே என்பதைப் போல அன்று மாலையே வீட்டிற்கு வந்த நித்யாவிடம் தனது பேச்சுக்கு வருத்தம் தெரிவித்தாள்.

உள்ளுக்குள் கனன்று கொண்டிருந்தாலும் வெளியே அது ஒன்றுமில்லை என்பதைப் போலக் காட்டிக் கொண்டாள் நித்யா.



இதுவே அனுரேகா மட்டும் தனியாக இருந்திருந்தால் வேறு முகத்தைக் காட்ட இருந்தவள் இப்பொழுது அப்படியே மாற்றிப் பேசினாள்.

முதலில் அனுரேகா என்ன சொல்ல வருகிறாள் என் பதே புரியாதது போல நடித்தவள், பிறகு சில வினாடிகள் கழித்து ''ஓ அதுவா?'' என்றாள்.

''அட என்ன அனுரேகா நீ, ஒன்னுமே இல்லாத விஷயத்த இன்னும் ஞாபகம் வெச்சுட்டிருக்கறதே தப்பு. ஆனா நீ அதுக்கு மேல போய் மன்னிப்பு வேற கேக்கற'' என்று பெருந்தன்மையாகப் பேசினாள்.

நித்யாவின் பாவனையில் அயர்ந்து போனாள் அனு ரேகா.

அன்று அவள் நடந்து கொண்ட விதத்திற்கும் இன்றைக்கும் தான் எவ்வளவு வித்தியாசம்.

அது கூடப் பரவாயில்லை.

அதற்கு மேலும் நித்யா சொன்னதைத் தான் அனு ரேகாவால் சுத்தமாக ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை.

''உன்னப் பாத்தா எனக்கு எப்பவுமே வெளிநாட்ல செட்டிலாயிட்ட என் தங்கை ஞாபகம் தான். என்னப் பொறுத்த வரைக்கும் அவ வேற நீ வேற இல்ல இனிமேல் இந்த மாதிரியெல்லாம் என்ன அந்நியப் படுத்தாத, அப்புறம் அதுக்கும் தான் வருத்தப்படுவேன் சண்ட கூடப் போடுவேனாக்கும்'' என்றிருந்தாள்.

''என்ன கேட்டுக்கிட்டயா, இனியாவது கொஞ்சம் நிம்மதியா இரு.''

கணவன் சொல்ல பாரம் நீங்கியவளாய் புன்னகை செய்தாள் அனுரேகா.

அதற்குப் பிறகு நித்யாவின் வரவு மேலும் அதிக மானதே தவிர சற்றும் குறைந்திருக்கவில்லை.

அப்படி வருபவள் நிகிலேஷ் இருந்தால் ஒரு முகம் இல்லாவிட்டால் வேறொரு முகமென்று நாடகமாடு வதை வழக்கமாக்கிக் கொண்டிருந்தாள்.

ஏனோ இப்பொழுதெல்லாம் நித்யாவின் வரவை நினைத்தாலே பயமாய் இருந்தது அனுரேகாவிற்கு.

அதைக் கணவன் அறிந்து விடாமல் பார்த்துக் கொண்டாள்.

சில நாட்களுக்கு முன்பு நித்யாவைப் பற்றி வேறு எதற்காகவோ என்னவோ சொல்லப் போய் அதைக் காது கொடுத்துக் கூடக் கேட்காமல் கணவன் அவளுக்கு நற்சான்றிதழ் கொடுத்தது இன்னும் அப்பொழுது தான் நடந்தது போல அப்படியே நினைவில் இருந்தது.

அதற்கும் அவள் ஒன்றும் குறை சொல்லக் கூடப் போகவில்லை.

அதற்குப் பிறகு கணவனுக்கு முன்பாக நித்யாவைப் பற்றி நினைப்பதைக் கூட விடுத்திருந்தாள் அனுரேகா.

அதிலும் அவள் எதற்காகவோ நாடகமாடுவதை அறிந்து கொண்டதிலிருந்து அவசியமின்றி அவளைப் பற்றி ஏன் அவசியத்திற்குக் கூடப் பேசுவதையே தவிர்த்திருந்தாள்.

கணவனே கவனித்து விட்டுக் கேட்கும்படியானதற்குப் பிறகு தான் அவளே அதை உணர்ந்தாள் எனலாம்.



''அனு''

''சொல்லுங்க.''

''நானொரு ரெண்டு நாள் வெளியூர் போக வேண்டி யிருக்கு...''

''அப்படியா...''

''ஆமாம்மா. முடிஞ்ச அளவுக்கு ஒரு நாள்ல வரப் பாக்கறேன்.''

''சரிதான் போய்ட்டு வாங்க.''

''நீயும் வேணும்னாக் கூட வாயேன்.''

''ம்கூம், நீங்க மட்டும் போய்ட்டு வாங்க.''

''நித்யாவும் கூட வருவான்னு நினைக்கறேன்.''

கணவன் சொல்ல, எதுவும் பேசாமல் பார்த்தாள் அனுரேகா.

''என்ன பாக்கற நான் போகப் போறது அவ ஊருக்கு தான, அதான் எங்கூடவே வந்து இறங்கிக்கறேன்னு சொன்னா.''

''சரிதான் நிகில், எப்பக் கிளம்பப் போறீங்க?''

''வர்ற சன்டே, இன்னும் மூணு நாள் இருக்கு.''

''சரிதான், சாப்பிடலாம் வாங்க.''

தொடர்ந்து சில வினாடிகளில் கணவன் வந்து சாப்பிட அமர பரிமாறி விட்டு பிறகு தானும் அமர்ந்து கொண்டாள்.

''அப்புறம் அத்தெ கூப்பிட்டிருந்தாங்க.''

''அப்படியா எப்ப?''

''மதியம்.''

''என்ன சொன்னாங்க?''

''வழக்கமா பேசற மாதிரி தான். அப்புறம் உங்களுக்குக் கால்ல அடிப்பட்டத சொன்னேன் வர்றேன்னாங்க.''

''பாரு, அதுக்குள்ள ஏன் சொன்ன? எப்படியும் அடுத்த மாசம் வரப் போறாங்களே அப்பவே வந்துடட்டுமே, சரிதான் நான் பேசிக்கறேன்.''

உணவு முடிந்ததும் கணவன் அலுவலகத்திற்குக் கிளம்ப, ''என்ன இந்த நேரத்துக்கு?'' என்று கேட்டாள்.

''ஆமாம்மா ஆபீஸ்ல ஒரு சின்ன வேல, நீ எப்பவும் போலத் தூங்கப் போயிடு. நான் வர்றதுக்கு பதினோரு மணியாகும்'' என்று கணவன் சொல்ல,

''சரிதான் போயிட்டு வாங்க'' என்றாள் அனுரேகா.

# 24



அலுவலக வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருந்த நிகிலேஷ் யாரோ உள்ளே வரும் அரவம் கேட்டு நிமிர்ந்தான்.

நித்யா வர, அனுமதி கூடக் கேட்காமல் இப்படி வருகிறாளே என்று எண்ணாது இருக்க முடியவில்லை.

''நிகில்...''

''வா நித்யா, என்ன இந்த நேரத்துக்கு?''

''இல்ல இந்த வழியா வந்தேன். அதான்...''



''நான் இங்க இருக்கறது உனக்கெப்படித் தெரியும்.''

''கொஞ்சம் முன்னாடி அனுகிட்டப் பேசினப்ப சொன்னாங்க.''

''வா உக்காரு.''

இப்பொழுது சில நாட்களாக அலுவலகத்திற்கும் வரத் தொடங்கியிருந்தாள் நித்யா.

அது மட்டுமல்லாமல் அவளும் நிகிலேசும் நெருங்கிப் பழகிக் கொண்டிருப்பதைப் போல அனுரேகாவிடம் காட்டிக் கொண்டாள்.

வேலையிருக்கிறது என்று சொன்னால் கூட நிகில் விடுவதில்லை. பார்க்க வேண்டுமென்று தோன்றிவிட்டால் போதும் உடனே கிளம்பி வா என்கிறார் என்று சற்றும் கூசாமல் பொய் சொன்னாள்.

இந்த மாதிரி இன்னும் நிறையச் சொன்னாள்.

என்னதான் நித்யா எதைஎதையோ சொன்னாலும் கணவன் மனைவிக்குள் நல்ல புரிதல் இருந்ததால் அவளுடைய வார்த்தைகளை அனாவசியம் என்று ஒதுக்கி விட இருவராலுமே முடிந்தது.

உடன் படித்த தோழி, இப்போதைக்கு இந்த ஊரில் நம்மை விட்டால் பாவம் வேறு போக்கிடமில்லை என்று நிகிலேசும், கணவனுக்காக என்று அனுரேகாவும் நித்யாவுடன் இயல்பாகப் பேசிப் பழகினர்.

நிகிலேஷிற்கு எப்படியோ, ஆனால் நித்யாவிடம் தொடர்ந்து நல்லவிதமாகப் பேசமுடியுமென்ற நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது அனுரேகாவிற்கு.

''என்னாச்சு நித்யா? என்ன பாக்கற ஏன் இந்த அளவுக்கு டல்லார்க்கன்னு கேக்கறேன்...''

..........

''அட என்ன...''

''ஒன்னுமில்ல...''

''சொல்லு என்ன விஷயம்?''

''அதெல்லாம்...''

''சரிதான் இரு எனக்கு முக்கியமான வேலைகள் சிலது இருக்கு. அத மட்டும் முடிச்சுட்டு வந்துடறேன்.''

சொன்னது போலவே சிறிது நேரத்தில் வேலைகளை முடித்து விட்டு நிமிர்ந்தவன்,

''ம் இப்ப சொல்லு. ஒன்னுமில்லன்னு சொல்லாத'' என்றான்.

''வேண்டாமே நிகில்...''

''சரி அப்ப விடு.''

''அச்சச்சோ அதுக்குள்ள என்னாச்சு. ரெண்டு நாளைக்கு முன்னாடி உங்க வீட்டுக்கு வந்திருந்தேனா...''

''சரி''

''அப்ப அனு...''

''ம்''

''இனிமேல் இங்க வராதீங்கன்னு சொல்லிட்டாங்க. ஸாரி நிகில் எனக்கு இந்த ஊர்ல உங்கள விட்டா யாரு இருக்கா? இப்ப சில மாசங்களுக்கு முன்னாடி தான் அப்பா அம்மாவையும் இழந்துட்டு ஆதரவில்லாம



தவிக்கறேன். மனசுல எதையும் வெச்சுக்காம, தப்பான எண்ணமும் எதுவுமில்லாம நல்லாப் பழகறது நீங்க மட்டும் தான்.''

''எல்லாத்துக்கும் மேல அளவுக்கதிகமா இருக்கற பணமே இன்னொரு பெரிய பிரச்சனையாவும் உரு வெடுத்திருக்கு. பணத்துக்காக வர்ற கூட்டம் போட்ற வேஷம்னு சுத்தமா நிம்மதியும் போயிடுச்சு. அதான் மனசு பாரமா இருக்கும் போதெல்லாம் உங்களத் தேடி வந்துடறேன். ஆனாலும் அதிக உரிமையெடுத்துக் கிட்டேனோன்னு சங்கடமா இருக்...''

''போதும் நித்யா, இனிமேல் இந்த மாதிரி உப்புப் பெறாத விஷயத்துக்கெல்லாம் மனசப் போட்டுக் குழப்பிக்காத.''

கண்கள் கலங்க எங்கோ பார்த்தவளிடம் ''என்னமா?'' என்று கேட்டான்.

''சரிதான், அனு இந்த மாதிரியிருக்கும் போது நீயும் அவங்ககிட்ட இதப்பத்தியெல்லாம் ஒன்னும் கேட்காத, என் கஷ்டம் என்னோடயே போகட்டும்.''

எங்கே அவனுடைய மனைவியைப் பற்றித் தான் சொன்னதை அவன் கவனிக்கவில்லையோ என்றுதான் நித்யா மீண்டும் அதைச் சொன்னதே,

நித்யாவின் நிலை இப்படியிருக்க, நிகிலேஷிற்கும் மனைவி அப்படிச் சொல்லியிருப்பாளென்று தோன்ற வில்லை.

ஏன் அந்த மாதிரி பொருள்படும் விதமாகக் கூட அவள் சொல்லியிருக்க மாட்டாளென்றே தோன்றியது.

அப்படித்தான் மனைவியிடம் கேட்கிறேனென்று ஒரு வார்த்தை சொன்னால் குறைந்தா போய் விடுவானென்று நிகிலேஷை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள் நித்யா.

அதற்கும் அனுரேகா சொன்னாளென்று அவள் சொல்லியிருந்தது முழு பொய்யையே.

அதிலும் அன்று ஒரு முறை வருத்தம் தெரிவிக்க நேர்ந்ததற்குப் பிறகு இப்பொழுதெல்லாம் அனுரேகா வின் வரவேற்பு தடபுடலாகவே இருந்தது.

குறிப்பாக எந்த விதத்திலும் குறை கண்டு பிடிக்க இயலாததாகவும்,

அதனால் தான் இப்பொழுது வேறு மாதிரி தொடங்கி யிருந்தாள்.

அது மட்டுமல்ல,

முதல் முறை சென்ற போது எதற்கு வந்தாயென்று கேட்டாள், இன்னொரு முறை பேசவேயில்லை, கடைசி யாகத் தான் இப்படி ஒரேயடியாக வரவே வேண்டாம் என்று விட்டாள்.

என்றெல்லாம் சற்றும் மனசாட்சி உறுத்தாமல் பொய் சொன்னாள்.

நித்யாவும் ஒன்றும் எடுத்தவுடன் இப்படிச் சொல்லி யிருக்கவில்லை.

தொடக்கத்தில் உன் மனைவி பிரமாதம், மிகவும் நல்ல மாதிரி, இதமாக நடந்து கொள்கிறார்கள் என்றெல் லாம் சொல்லிவிட்டுக் கடைசியாகத் தான் இப்படித் தொடங்கியிருந்தாள்.



ஏன் தொடக்கத்தில் நல்ல விதமாகச் சொன்னதே அதற்குப் பிறகு குறை சொல்ல வேண்டுமென்று தானே,

''என்ன நிகில்...''

''எனக்கொரு முக்கியமான வேலையிருக்கு நித்யா இப்பக் கிளம்பணும். நீ எதையும் மனசுல போட்டுக் குழப்பிக்காத. எல்லாம் நல்ல விதமாத் தான் நடக்கும் நிம்மதியா இரு'' என்று விட்டுத் தோழியுடன் காரை அடைந்தவன், அவள் தன் காரில் கிளம்பியதும் தானும் கிளம்பினான்.

என்ன பெண்ணிவள், இப்படியெல்லாம் கூடப் பொய் சொல்வார்களா என்று எரிச்சல் தான் வந்திருந்தது.

உண்மையிலேயே இனிமேல் வர வேண்டாமென்று சொல்லி விடுவது கூட நல்லது போலிருக்கிறதே.

சரிதான்.

இனியொரு முறை அவள் அனுவைப் பற்றி இல்லா ததைச் சொன்னால் வினாடி கூட யோசிக்காமல் சொல்லி விட வேண்டியது தான்.

## 25



தனது அறையிலிருக்கும் தொலைபேசி ஒலிக்க இந்த நேரத்தில் யாராக இருக்குமென்று நினைத்துக் கொண்டே எடுத்துப் பேசினாள் அனுரேகா.

அஞ்சியது போலவே நித்யாவாக இருக்க எரிச்சலை மறைத்துக் கொண்டு என்னவென்று கேட்டாள்.

எதிர்முனையில் நித்யா பேசுவதை சில வினாடிகள் கேட்டவள், பிறகு ''நம்பறதுக்கில்ல'' என்றிருந்தாள்.

வழக்கம் போல அவள் கணவனைத் தவறாக சித்தரிக்க அதை ஆயிரத்தில் ஒரு பங்காகக் கூட அனுரேகாவால் நம்ப முடிந்திருக்கவில்லை.

ஏன் காது கொடுத்துக் கேட்கவும்,

ஆனாலும் நித்யா பேசுவதை நிறுத்தியிருக்கவில்லை.

தொடர்ந்து பேசிக் கொண்டே போனாள்.

அதுவும் அபாண்டமான பொய்களைக் கூசாமல் சொன்னாள்.

அதிலும் அந்த நித்யா கடைசியாக சொன்னதைத் ?ான் அனுரேகாவால் சுத்தமாகத் தாங்கிக் கொள்ள (டியாது போயிற்று.

ஏன் அருவெறுப்பில் உடல் கூசிப் போனது.

அவள் சொன்னது இதுதான்.

இந்த நேரத்தில் அலுவலகத்திலிருக்கும் உன் கணவன் எனக்கு போன் செய்து அலுவலகத்தில் நான் மட்டும் தான் இருக்கிறேன் கிளம்பி வா சந்தோஷமாக இருக்கலாம் என்கிறான் என்றிருந்தாள்.

எனக்கு அதிர்ச்சியில் வார்த்தை கூட வந்திருக்கவில்லை.



உன் மனைவிக்கு மட்டும் இது தெரிந்தால், அவளுக்கு நீ துரோகம் செய்யலாமா என்று கேட்டால் தெரிந்தால் தானே யார் சொல்லப் போகிறார்கள் என்கிறான்.

அதுதான் நானே உனக்கு போன் செய்கிறேன், நான் அந்த மாதிரி பெண்ணில்லையென்று போனை வைத்து விட்டேன். ஆனாலும் நானும் ஒரு சராசரி பெண் தானே இது எத்தனை நாட்களுக்கு என்று தெரியவில்லை. உன்னிடம் இனி எவ்வளவு நேரமாகுமென்று சொன்னாரோ தெரியவில்லை. ஆனால் என் கணிப்பில் இப்பொழுது வீட்டிற்குத் தான் வந்து கொண்டிருப்பாரென்று நினைக்கிறேன் என்றிருந்தாள்.

அவ்வளவு நேரமும் முயன்று பொறுமையைக் கடைப்பிடித்து வந்த அனுரேகாவால் அதற்கு மேல் சுத்தமாக முடிந்திருக்கவில்லை.

கோபத்தில் கத்தி விட்டிருந்தாள்.

''இனிமேல் எங்க வீட்டுக்கு வராதீங்க.''

''நீங்க வர்றத, ஏன் இனியொரு தடவ உங்களப் பார்க்கறதக் கூட நான் விரும்பல.''

''சரிதான் உங்களுக்கும் கொஞ்சமாவது ரோஷமிருக்குமில்லையா.''

''திரும்பவும் சொல்ல வைக்க மாட்டீங்கன்னு நினைக்கறேன்'' என்றிருந்தாள்.

''இனிமேல் எங்க வீட்டுக்கு வராதீங்க'' என்று மனைவி சொன்ன வினாடியில் வீட்டிற்குள் வந்திருந்த நிகிலேஷ் அதிலிருந்து அவள் சொன்னதனைத்தையும் அப்படியே கேட்டிருந்தான்.

கேட்டவன் அப்படியே நின்றிருந்தான்.

அப்படியானால் நித்யா சொன்னதனைத்துமே உண்மைதானா.

அரவம் செய்யாமல் மீண்டும் ஹாலுக்கு வந்திருந்தவன் சிறிது நேரம் அமர்ந்திருந்து விட்டு அப்பொழுது தான் வந்ததைப் போல படுக்கையறைக்கு வந்தான்.

''வாங்க, இப்ப தான் வர்றீங்களா?''

''ஆமா, நீ இன்னும் தூங்கல?''

''இப்பதான் வந்து படுத்தேன். உங்களுக்கு பால் எடுத்துட்டு வரட்டுமா?''

''வேண்டாம் நீ படுத்துக்கோ. எனக்கு கொஞ்சம் ஆபீஸ் வேலையிருக்கு முடிச்சுட்டு வந்து படுத்துக்கறேன்'' என்றவன், ''அப்புறம் யாராவது போன் பண்ணினாங்களா?'' என்று கேட்டான்.

''இல்லைங்க.''

''நல்லா யோசிச்சுப் பாரு.''

நித்யா போன் செய்தாள் என்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

கணவன் காரணத்தைக் கேட்டால் என்னவென்று சொல்வது,

அவள் சொன்ன அசிங்கத்தையெல்லாம் சொன்னால் பாவம் க்ணவனால் தாங்கிக் கொள்ளக் கூட முடியாதே.

முதலில் அதை அப்படியே சொல்லத் தன்னால் இயலுமா.



''என்னமா?''

''இல்லைங்க எந்த போனும் வரல.''

இல்லைங்க எந்த போனும் வரல. மனைவியின் பதிலில் நிகிலேஷின் மனம் இறுகி விட்டிருந்தது.

நல்லவேளை,

ஒரு நல்ல பெண்ணை சந்தேகப்பட்டு எதுவும் சொல்லி விடாமல் இருந்தோம்.

தான் மட்டும் அவசரப்பட்டு எதையாவது சொல்லியிருந்தால் நித்யாவின் மனம் என்ன பாடு பட்டிருக்கும்.

ஆனாலும் தனது மனைவியா இப்படி.

ஏன் இப்படிச் செய்கிறாள்.

என்னவாயிற்று இவளுக்கு.

ஒன்றுமே புரிந்திருக்கவில்லை.

சரிதான்.

நித்யாவை எதனாலோ மனைவிக்கு பிடிக்கவில்லை என்பது மட்டும் இப்பொழுது தெளிவாகியிருந்தது.

''நிகில்''

..........

''உங்களதான் நிகில்.''

........

''என்ன நான் கூப்பிடறது கேக்கலையா உங்களுக்கு?''

மீண்டும் மனைவி அழைக்க, ''என்ன?'' என்று கேட்டான் நிகிலேஷ்.

''என்னாச்சு உங்களுக்கு?''

.........

''சரிதான் திரும்பவும் கோபப்படாதீங்கப்பா. அந்த பேப்பரை கொஞ்சம் எடுத்துத் தர்றீங்களா?''

''ஏன் உனக்குப் போய் எடுக்கக் கால் இல்லையா, இல்ல கை தான் இல்லையா?''

கணவனின் கேள்வி ஆச்சரியத்தைக் கொடுத்திருக்க புன்னகையுடன் உதட்டைப் பிதுக்கி விட்டு மீண்டும் பூஜைக்குத் தனக்கு முன்னால் பரப்பப்பட்டிருந்த மலர்களைத் தொடுக்கத் தொடங்கி விட்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் காலை டிபனுக்கு வந்து அமர்ந்த கணவனுக்குப் பரிமாறினாள் அனுரேகா.

எப்பொழுதும் போல தன்னையும் உடனமர்ந்து கொள்ளச் சொல்வானென்று மிகவும் எதிர்பார்த்து ஏமாந்து போனாள்.

ஏன் வழக்கமான இனிய பேச்சையும் தான்.

தொடர்ந்து சிறிது நேரத்தில் ''வர்றேன்'' என்னும் ஒற்றை வார்த்தையுடன் கணவன் அலுவலகத்திற்குக் கிளம்பியிருக்க, ஏன் நேற்றிலிருந்து வித்யாசமாக நடந்து கொள்கிறானென்று நினைக்காமல் இருக்க முடிய வில்லை.

சிறிது நேரம் தான்.

பிறகு சரிதான் இனி என்ன வேலைப் பளுவோ என்று அதைப்பற்றி மறந்து கூடப் போனாள்.



இரவு எட்டு மணிக்கு வீடு வந்த கணவனை சாப்பிட அழைத்தாள்.

''நான் சாப்பிட்டாச்சு.''

''நிஜமாவா?''

''ஆமாம். நித்யா கூட ஹோட்டல்ல சாப்பிட்டு வர்றேன்.''

போன் பண்ணியிருக்கலாமே என்று தொண்டை வரை வந்திருந்த வார்த்தைகளை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

''நீ சாப்பிட்டாச்சா?''

கணவனின் கேள்வி இதமாக இருக்க, ''இன்னும் இல்ல நிகில்'' என்றிருந்தாள்.

''ஏன்?''

''நீங்க வருவீங்க. உங்க கூட சேர்ந்து சாப்...''

''எனக்கு ஆயிரம் வேல. இனி இத வேற நான் சகிச்சுக்கணுமா? இனிமேல் இந்த மாதிரியெல்லாம் வெயிட் பண்ணி என் உயிர வாங்காத. உனக்குப் பசிக்கும்போது நீ சாப்பிடு.''

கணவனின் கோபத்தில் அல்லது எரிச்சலா முகம் சுருங்கி விட்டிருந்தது அனுரேகாவிற்கு.

அது நிகிலேஷிற்கும் புரியாமலில்லை.

கண்டும் காணாமல் தோளைக் குலுக்கி விட்டு சென்று விட்டிருந்தான்.

தூங்க அறைக்கு வந்த பொழுது பாலுடன் வந்தவள் வழக்கம் போல கணவன் விரும்பும் பதத்தில் ஆற்றிக் கொடுத்தாள்.

''என்ன?''

''பால்...''

''வேண்டாம்''

''ஏன், என்னாச்சு உங்...''

பாலை வாங்கி அருகிலிருந்த டேபிளின் மீது வைத் திருந்தவன், மனைவியை இழுத்துத் தன்னருகில் அமர்த்தியிருந்தான்.

வழக்கம் போல இல்லாமல் லேசாக வாடித் தெரிந்த வளின் முகம் தன்னை என்னவோ செய்ய அவளுடைய கண்களுக்குள் எதையோ ஊடுருவிப் பார்த்தான்.

எவ்வளவு அழகான வெகுளித்தனமான முகம்.

இந்த முகத்தை வைத்துக் கொண்டு எப்படி அந்த மாதிரி செய்ய முடிந்தது.

மூச்சுக் காற்று மேலே படுமளவிற்கு இருந்த கண வனின் அருகாமையில் மனம் படபடக்கத் தொடங்கி விட்டிருக்க தவிப்புடன் பார்த்தாள் அனுரேகா.

ஏற்கனவே இளகத் தொடங்கியிருந்தவன் அந்தப் பார்வையில் முற்றிலுமாகத் தன் வசமிழந்து போனான்.

''நிகி...''

அடுத்த வினாடி மனைவியை இறுக அணைத்திருந் தவன் அவளுடைய கழுத்து வளைவில் தனது சூடான இதழ்களைப் பதித்திருந்தான்.



கணவனின் அணைப்பிற்குள் அனைத்தையும் மறந்து ஒன்றி விடத் தான் அவளுடைய மனமும் ஏங்கியது.

ஏன் அது ஒன்று மட்டுமே போதும் வேறு எதுவுமே தேவையில்லையென்று கூடத் தோன்றத் தொடங்கி விட்டிருந்தது.

ஆனாலும் அப்படி இருக்க விடாமல் எதுவோ தடுத்தது.

வேறென்ன,

கடந்த இரண்டு நாட்களாகக் கணவன் நடந்து கொள்ளும் விதம்தான்.

அதற்கு மேல் முடியாமல் கணவனிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டிருந்தாள் அனுரேகா.

மனைவியின் செய்கையில் அவளைப் பார்த்தவன், மீண்டும் அணைக்கப் போனான்.

''ப்ளீஸ் வேண்டாம்'' - அனுரேகா.

''என்ன...'' நிகிலேஷ்.

''எனக்குப் பிடிக்கல?'' - அனுரேகா.

''என்ன பிடிக்கல?'' - நிகிலேஷ்.

''எதுவுமே'' - அனுரேகா.

''புரியல?'' - நிகிலேஷ்.

''நம்ப முடியல...'' என்று தொடர்ந்து ஏதோ சொல்ல வந்த மனைவியின் இதழ்களை அந்த வினாடியில் தனது இதழ்களால் சிறை பிடித்திருந்தான்.

அடுத்த நிமிடம் இருவரும் பேசும் நிலையில் இருக்க வில்லை.



# 26

''அனும்மா''

''சொல்லுங்க அன்னம்மா''

''இந்தாங்க ஜூஸ் எடுத்துக்கோங்க.''

''நன்றிமா''

''மதிய சாப்பாட்டுக்கு ஐயா வருவாராம்மா?''

தெரியவில்லையே, அவனைத் தான் கடந்த சில நாட்களாகப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே.

''என்னமா?''

அன்னம்மாவின் கேள்வியில் மீண்டும் நடப்பிற்கு வந்தவளாய் ''தெரியல அன்னம்மா இனிமேல் தான் கூப்பிடுவார்'' என்றாள்.

''ஏம்மா, ஏன் ஒரு மாதிரியிருக்கீங்க?''

''ஒன்னுமில்ல.''

''நான் ஒன்னு சொன்னா நீங்க தப்பா எடுத்துக்கக் கூடாதுமா...''

''சொல்லுங்க.''

''அந்தப் பொண்ணு எப்ப இந்த வீட்டுக்கு வந்தாங்களோ அப்பிருந்து தாம்மா நீங்க இப்படி ஆயிட்டீங்க. எப்பப் பார்த்தாலும் ஒரே சோகமா உங்கள இப்படிப் பாக்கவே கஷ்டமா இருக்குமா.''



''தயவு தாட்சண்யம் பாக்காம அந்தப் பொண்ண இனிமேல் வீட்டுக்கு வராதன்னு சொல்லிடுங்கம்மா.''

அவ்வளவுதான்.

பிறகு கணவன் தன்னைப் பார்வையாலேயே எரித்து விடுவான்.

அப்படி எண்ணியது தான் தாமதம்.

அடுத்த வினாடி அப்படியானால் அந்த நித்யா தான் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் காரணமா என்ற எண்ணம் தோன்றி வதைக்கத் தொடங்கி விட்டிருந்தது.

''எனக்கு எப்படியோ இருக்குமா நான் போய் கொஞ்சம் படுத்துக்கறேன். நீங்க போய் வேலையப் பாருங்க.''

''சரிதான்மா போய் ஓய்வெடுங்க. என்ன வேணும்னாலும் கூப்பிடுங்க'' என்று அன்னம்மா செல்ல, சொன்னது போலவே சென்று படுத்து விட்டிருந்தாள் அனுரேகா.

ஏற்கனவே முடிவு செய்திருந்தது போல நிகிலேசுடன் தனது ஊருக்குக் காரில் கிளம்பியிருந்தாள் நித்யா.

கணவன் மனைவிக்குள் விரிசலை ஏற்படுத்தும் முயற்சியை ஏற்கனவே தொடங்கியிருந்தவள், இப்பொழுது அதைச் செவ்வனே தொடர்ந்தாள்.

அழுத்தக்காரன்.

எப்படிப் பேசினாலும் பிடி கொடுக்க மாட்டானென்பது தெரிந்திருந்ததால், நேரடியாகவே விஷயத்திற்கு வந்தாள்.

''நீதான் முதல்ல அனுவ ரொம்ப விரும்பினயாம்?''

''அப்படியா...''

''ம்''

''யார் சொன்னாங்க?''

''அனுதான், அப்புறம் பொண்ணுங்க ரெண்டு பேர் சேர்ந்தா வேற என்ன பேசுவோமாம்?''

''சரிதான் ஒரு பொண்ணா இருந்தும் அத ஒத்துக் கறையே பெருமையா இருக்கு.''

''அப்புறம் என்ன சொன்னாங்கன்னு கேக்க மாட் டியா?''

''சரிதான் சொல்லு.''

''அது லேடீஸ் மேட்டர் வேண்டாம்.''

''சரி வேண்டாம்.''

''அச்சச்சோ இப்படி சொன்னா எப்படி?''

''அப்ப சொல்லு?''

''என்ன நீ, ஆனா இனி நான் சொல்லப் போறதக் கேட்டா உனக்குக் கோபம் வந்தாலும் வந்துடும்.''

''வராதே''

''எப்படி''

''அனுதான் ஏற்கனவே எங்கிட்ட சொல்லிட்டாளே.''

''அப்படியா!''

''ம்''

''சரிதான், ஆனாலும் அனு தன் லவ்வ ப்ரபோஸ் பண்ணியிருக்கலாம். எவ்வளவு பிரமாதமான லவ் ஸ்டோரி தெரியுமா?'' என்றாள் நித்யா.



''கூட இருந்து பாத்த மாதிரியே சொல்ற'' - நிகிலேஷ்.

''பின்ன, அனு லவ் பண்ணினது என் சித்தப்பா பையனான வினய். பாவம் அனு உங்கள திடீர்னு கல்யாணம் பண்ணிக்கிட்டதுல ரொம்ப அப்செட் ஆயிட்டான். பணக்கார இடம் கிடைச்சதும் உதறிட்டுப் போய்ட் டான்னு இப்பக் கூடப் புலம்பிட்டுத் திரியறான்னாப் பாருங்க.''

''அதுவும் இங்க உன் சென்னை ஆஃபீஸ்ல அனுவப் பார்த்துப் பேசினதா அவனோட ஃப்ரண்ட் வினய்க்கு சொன்னதிலிருந்து இன்னும் அதிகமாகவே புலம்ப ஆரம்பிச்சுட்டான்.''

''ஆமா அனு ஆஃபீஸ்க்குக் கூட வந்திருக்காங்களா நிகில்?''

''ஆமா''

''சரிதான், நான் கூட பையன் காதல் மயக்கத்துல எல்லையத் தாண்டிட்டான்னு நினைச்சுட்டிருந்தேன்.''

............

''ஏன் பேச மாட்டேங்கற?''

''ம் இப்ப சொல்லு'' என்று பாதை சீரானதும் திரும்பித் தன்னைப் பார்த்தவனிடம், மிகவும் முக்கியம் போல மீண்டுமொரு முறையும் அனைத்தையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தாள்.

''ஆனாலும் உனக்கு பெரிய மனசு நிகில்.''

''ஏனோ?''

"பின்ன? எத்தன கணவன்மார்கள் அவங்க மனைவி யோட பழைய காதல இவ்வளவு ஈஸியா எடுத்துக்கறாங் களாம்..."

"அதுவும் சரிதான்."

புன்னகையுடன் அப்படிச் சொன்ன தோழனை அவனறியாமல் ஆராய்ந்தாள் நித்யா.

ஆனாலும் எதையும் கண்டு கொள்ள முடியாததில் வழக்கம் போல அழுத்தக்காரனென்று மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்.

அதற்குப் பிறகு நித்யா பேசியதெல்லாம் நிகிலேஷின் காதுகளுக்குள் கூட சென்றிருக்கவில்லை.

அந்த அளவிற்கு அவனுடைய மனம் கல்லைப் போல இறுகிவிட்டிருந்தது.

நித்யா இறங்கிக் கொண்டதும் நேராக ஹோட்டல் அறைக்கு வந்திருந்தான்.

மனம் சற்றும் நிம்மதியில்லாமல் தவிக்க, எதையும் செய்யத் தோன்றாமல் அப்படியே அமர்ந்து விட்டிருந் தான்.

அப்படியானால் மணமானதற்கு மறுநாள் மனைவி சொன்ன எதுவுமே பொய்யில்லை.

உள்ளே இருந்தது தான் வெளியே வந்திருக்கிறது.

தான் தான் தொடக்கத்திலிருந்தே முட்டாளாய் இருந்திருக்கிறோம்.

அதுவும் உன் மனைவியாக உடனே எதையும் சொல்லி விடவில்லை. நான்தான் அனைத்தையும் தூண்டித்



துருவிக் கேட்டுத் தெரிந்து கொண்டேன் என்றாளே நித்யா.

அப்படி நித்யா அனைத்தையும் தெரிந்து கொண்ட தால் தான் அதை எங்கே வாய் வார்த்தையாகப் பேசி விடுவாளோ என்று அஞ்சி அவளை வீட்டிற்கு வர வேண்டாம் என்கிறாளோ,

தொடக்கத்திலிருந்து நடந்த அனைத்தையும் ஒவ் வொன்றாக நினைத்துப் பார்த்தான் நிகிலேஷ்.

முதலில் தன்னை வெறுத்தது.

பிறகு திருமணத்தை மறுக்க இருந்தது.

அவளுடைய சம்மதத்தைக் கேட்கவில்லையென்று கோபப்பட்டது.

பிறகு வேறு வழியில்லாமல் தன்னை ஏற்றுக் கொள்ள முடியாமல் உண்மையைச் சொன்னது.

பிறகு பணமோ, இனி என்ன காரணமோ அதைப் பொய்யென்று நடித்தது.

முட்டாளாகத் தான் அதை அப்படியே நம்பியது.

ஏன் அது மட்டுமா.

தாயின் வற்புறுத்தலில் ஒரு முறை மனைவியை அலுவலகத்திற்கு அழைத்துச் செல்ல நேர்ந்த அன்று அவள் சொன்ன பொய் தான் அப்பொழுது நினைவிற்கு வந்தது.

ஏன் காரில் வரும் பொழுது நித்யா கூட அதைக் குறிப்பிட்டுச் சொன்னாளே.

அதாவது மனைவி அவளுக்குத் தெரிந்த யாரிடமோ அன்று பேசினாள் என்று.

ஏன் வேறு எதற்கோ அப்பொழுது தன்னைப் பார்க்க வந்த (பி.ஆர்.ஓ) பப்ளிக் ரிலேஷ்ஸிப் ஆஃபீஸர் கூடச் சொன்னாரே.

அதாவது முன்பு வேலை செய்த நிறுவனத்தில் தெரிந்தவர்கள் யாரிடமோ மனைவி பேசிக் கொண் டிருந்ததாக,

அவர் சொன்னது யதார்த்தமாகத்தான்,

கம்பெனியின் முதலாளியம்மா என்னும் சந்தோஷத் தில் தான் கண்டதை பெருமையுடன் சொல்லியிருந்தார் அவ்வளவே.

உண்மை அப்படியிருக்க, அவரைத் தொடர்ந்து சில நிமிடங்களில் வந்த மனைவியிடம் தானும் யதார்த்தமாக அதைப் பற்றி கேட்கப் போக அதற்கு அவள் யாரிடமும் பேசவில்லையென்றாளே.

ஏன் பொய் சொல்ல வேண்டும்.

அதுவும் புது இடத்தில் எதிர்பாராத விதமாக ஏற்கனவே தெரிந்தவர்களைப் பார்க்க நேரிடுவது சந்தோஷமான, மற்றவர்களிடம் ஆசையாகப் பகிர்ந்து கொள்ளக் கூடிய ஒன்றே அல்லவா.

ஆனால் மனைவிக்கு ஏன் அப்படியிருக்கவில்லை.

சரிதான்.

குற்றமுள்ள மனது குறுகுறுத்திருக்கிறது.

ஏன் அவ்வளவாக விருப்பப்பட்டுப் பழகாத நித்யா விடமே அவ்வளவு சொன்னவள், தன்னிடம் அதைப் பற்றி மூச்சுக் கூட விடாததிலேயே அது தெளி வாகிறதே.



ஒருவேளை நித்யா சொன்னதைப் போலப் பணத் திற்காக மனதை மாற்றிக் கொண்டாளோ,

போனால் போகிறதென்று தன்னுடன் சகித்துக் கொண்டு வாழ முனைந்து விட்டாளோ,

இருக்காது.

அப்படி இருக்கவே இருக்காது.

தன்னுடைய மனைவி அப்படிப்பட்டவள் அல்ல.

மற்றது எப்படியோ, ஆனால் பணத்திற்காக வேஷம் போடுவதாகத் தோன்றவில்லை.

பிறகு வேறு எதற்காக...

மற்றது எப்படியோ, மனைவியின் காதல் விவகாரம் நிகிலேஷை சுத்தமாகத் தூங்க விட்டிருக்கவில்லை.

சரிதான் திருமணத்திற்கு முன்பு என்னவோ நடந்து விட்டதென்று அவனால் அதை ஒதுக்கி விடவும் முடியவில்லை.

அப்படி மனைவியால் ஒதுக்க முடிந்திருந்தால் நித்யாவிடம் அதைச் சொல்லியிருக்கவே மாட்டாளே,

முடிந்து போன பழைய கதையென்று மனதிலிருந்து ஒதுக்கித் தள்ளியிருப்பாளே.

ஆனால் மனைவி அப்படி செய்யவில்லையே.

ஏன் அதை மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளுமள விற்கு அதை இன்னும் மனதில் வைத்திருக்கிறாளே.

ஏனோ வாழ்க்கையில் தோற்றுவிட்டதைப் போல உணர்ந்தான் நிகிலேஷ்.

எதுவுமே பிடிக்கவில்லை.

வெறுப்புத் தான் மிஞ்சியது.

பார்க்கும் அனைத்துமே பொய்யாகி விட்டதைப் போல, தவறாகிவிட்டதைப் போல மனம் வெறுமையாகி விட்டிருந்தது.

# 27



வெளியூரில் வேலையென்று சென்றிருந்த கணவனை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்தாள் அனுரேகா.

மணமானதற்குப் பிறகு எதிர்கொள்ள நேர்ந்த முதல் பிரிவு என்பதாலோ என்னவோ அந்தப் பிரிவை அவளால் தாங்கிக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை.

எந்நேரமும், எதற்கெடுத்தாலும் அழுகையும், கோபமும் தான் ஒன்றுக்கொன்று போட்டி போட்டுக் கொண்டு தோன்றின.

சில நாட்களுக்கு முன்பு இயல்பாகப் பேசிக் கொண்டிருந்த அன்று அதிகபட்சம் இரண்டு நாட்களில் வந்து விடுவேன் என்றானே.

இப்பொழுது ஏன் ஒரு வாரமாகியும் இன்னும் காணவில்லை.

அவனாகவும் அழைத்துப் பேசவில்லை.

தான் அழைத்தாலும் இரண்டு வார்த்தைகளுக்கு மேல் சத்தமே இல்லை.



அது கூட கட்டாயத்தினால் வந்ததோ.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

இல்லையென்றால் தன்னுடைய நிகிலேஷால் அப்படி நடந்து கொள்ள முடியுமா என்ன.

கணவனின் கோபத்திற்கான காரணம் புரியாமல் எப்பொழுதும் போல மனதிற்குள் துடித்தாள் அனுரேகா.

மேலும் இரண்டு நாட்களுக்குப் பிறகே ஊர் திரும்பியிருந்தான் நிகிலேஷ்.

அப்படி வந்திருந்தவன் மனைவி இருக்கும் திசையில் மறந்தும் கூடப் பார்த்தான் இல்லை.

நீ இவ்வளவு செய்தால், அதில் கொஞ்சத்தைக் கூடவா நான் செய்ய மாட்டேன் என்பதைப் போல விட்டேற்றியாக நடந்து கொண்டான்.

என் தோழியை வர வேண்டாமென்று சொல்ல நீ யார் என்பதைப் போல, இப்பொழுதெல்லாம் தினமும் நித்யாவை வீட்டிற்கு அழைத்து வரத் தொடங்கியிருந்தான்.

அப்படி அழைத்து வரப்படும் தோழிக்கு மனைவியையே முன்னின்று அனைத்தையும் செய்ய வைத்தான்.

அப்பொழுது அவளுடைய முகம் போகும் போக்கை ஆசை தீரப் பார்த்து ரசித்தான்.

ஜாடை மாடையாகப் பெண்களைப் பற்றி அதிலும் ஒரு சிலர் மிகவும் மட்டம் என்றான்.

தனக்கு மிகவும் வேண்டியவர்களே இப்படி இருப்பதைத் தான் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை என்றான்.

தெரியாமல் அன்பு வைத்ததென்னவோ உண்மை தான்.

ஆனால் இப்பொழுது திருந்திவிட்டேன்.

ஆனாலும் விடுதலை கிடைக்காது போல இருக் கிறதே என்று அடிக்கடி குத்திக் காட்டினான்.

கணவன் தன்னை மனதில் வைத்துத்தான் ஏன் தன் மேலிருக்கும் ஏதோ கோபத்தினால் தான் இப்படியெல் லாம் பேசுகிறானென்பது அனுரேகாவிற்கும் புரியாம லில்லை.

என்னவோ சொல்லி விட்டுப் போகட்டுமென்று கண் டும் காணாமல் இருந்தவளால் தொடர்ந்து அப்படியே இருந்து விட முடியவில்லை.

அதுவும் நித்யா வந்து செல்லும் நாட்களில் தான் கணவன் கோபம் கொள்வது அதிகமென்பது புரிந்து விட்டிருக்க, அவள் வீட்டிற்கு வருவதையே வெறுத்தாள்.

ஆனால் அது புரிந்ததில், நித்யாவின் வரவு இன்னும் பல மடங்கு அதிகமானது தான் மீதியாயிற்று.

ஒருநாள் தாங்கி கொள்ள முடியாமல் கணவனுக்கு முன்பாக வந்து நின்றிருந்தவள் முயன்று ''ஏன் இப்படி யெல்லாம் நடந்துக்கறீங்க?'' என்று கேட்டிருந்தாள்.

கணவனின் மௌனம் எரிச்சலை இன்னும் அதிக மாக்கியிருக்க ''உங்களத்தான் காது கேக்கல?'' என்றாள்.

''திவ்யமாக் கேக்குது'' - நிகிலேஷ்.

''ஏன் இந்த மாதிரி நடந்துக்கறீங்கன்னு கேட்டேன்.''

''புரியற மாதிரி பேசினா பதில் சொல்லலாம்.''



கணவனின் வார்த்தைகளில் அந்த நேரத்திலும் சிரிப்பு வந்து விட்டிருந்தது அனுரேகாவிற்கு.

விரக்தியில் தான்.

புரியாத புதிராக இவன் நடந்து கொண்டு தன்னைச் சொல்ல வந்துவிட்டான் என்றிருந்தது.

''என்ன ஏன் ஜாடையா தினமும் ஏதேதோ பேசிட் டிருக்கீங்க?'' என்று கேட்ட மனைவியைப் பார்த்தவன் ''நேருக்கு நேர் பேசலையேன்னு சந்தோஷப்படு'' என்று எரிச்சலுடன் சொல்லியிருந்தான்.

எரிச்சலோடு கணவனின் குரலில் தெரிந்த ஏளனமும் தன்னை என்னவோ செய்ய, ''இல்ல நிகில் எது வானாலும் நீங்க நேருக்கு நேர் கேக்கலாம், உங்களுக்கு அதுதான் பொருந்தும், உங்ககிட்ட நான் எதிர்பார்க் கறதும் அதுதான்'' என்றிருந்தாள்.

''ஓ, அதுக்கெல்லாம் வேற உனக்குத் தகுதி இருக்குங் கறியா?''

கணவனின் வார்த்தைகள் பல்லாயிரம் ஈட்டிகளாகப் பாய்ந்து நெஞ்சைப் பதம் பார்க்க, அந்த வேதனையை மறைக்கக் கூட முயலாது பார்த்தாள்.

''என்ன பாக்கற, பாக்க கொஞ்சம் நல்லா இருக்கேன்னு உம்மேல விருப்பப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனா அதுக்கு நான் இப்பப் பட்டுட்டிருக்கற தண் டனையும் வேதனையும் ரொம்பப் பெரிசு. அத எடுத்து சொன்னாலும் உனக்குப் புரியாது.''

என்ன சொல்கிறான்.

அப்படியானால் தன்னுடனான வாழ்க்கையையே தண்டனை என்கிறானா?

நினைத்ததையே கேட்டாள் அனுரேகா.

நடுக்கத்துடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு தான்.

"ஆமாம், ஆமாம், ஆமாம். அது மட்டுமில்ல வேற வழி கிடைக்காதா கடவுளேன்னு பல்லக் கடிச்சுட்டு சகிச்சுட்டிருக்கேன்."

கணவனின் வார்த்தைகள் தந்த அதிர்ச்சியில் அப்படியே செய்வதறியாது திகைத்து நின்று விட்டிருந்தாள் அனுரேகா.

அப்படியே எவ்வளவு நேரம் போனதோ.

மீண்டும் நடப்பிற்கு வந்து பார்த்த போது கணவன் அங்கு இல்லாததைக் கண்டாள்.

இல்லை.

தன்னுடைய நிகிலால் இப்படியெல்லாம் பேச முடியாது.

அதற்காகத் தான் வருந்துவதோ, அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவோ கூடாது.

ஒருவேளை வேறு ஏதாவது கோபத்தில், வேலை பளுவில், ஏதோ தவறான புரிதலில் யோசிக்காமல் அப்படி சொல்லியிருப்பானோ.

ஆமாம்.

அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஏன் அப்படி மட்டும் தான் இருக்க வேண்டும்.

கணவனிடம் அளவுகடந்த நேசத்தை வைத்து விட்ட மனம் கிடைத்த துரும்பை அப்படியே உடும்பாய் பற்றிக் கொண்டு அதில் அமைதியைத் தேட முயன்றது.



இரவு வீடு வந்த கணவனை உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சென்று சாப்பிட அழைத்தாள் அனுரேகா.

"உனக்கென்ன அவ்வளவு திமிரா?"

"உனக்கு எதுவுமே ஒரு தடவ சொன்னாப் புரியாதா? "நான் ஏதோ நடமாடிட்டு இருக்கறது கூட உனக்குப் பிடிக்கலையா? இதென்ன இவனெல்லாம் சொல்லி நாம கேக்கறது'ங்கற நினைப்பு இல்ல?"

"ஏன் இப்படியெல்லாம் பேசறீ...."

"எனக்கு நல்லது பண்ண நினைச்சா இனிமேல் என் முகத்துல விழிக்காத, உன்னப் பார்க்கறதயே நான் வெறுக்கறேன். இனியொரு முறை சொல்ல வைக்க மாட்டேன்னு நினைக்கறேன். போயிடு இனியும் நிக்காம போ... முதல்ல இங்கிருந்து" என்று எரிச்சலுடன் மொழிந்தவன்,

தொடர்ந்து கலங்கிய முகத்துடன் செய்வதறியாது அப்படியே நின்று விட்டிருந்த மனைவியின் அந்த நிலையை பார்க்க இயலாது எழுந்து சென்று விட்டிருந்தான்.

அப்படியெல்லாம் சொல்லிவிட்டு வந்திருந்த நிகிலேஷாலும் ஏனோ அன்று துளியும் நிம்மதியாக இருக்க முடியவில்லை.

மனைவியின் கலங்கிய அதிர்ச்சியுடனான முகமே மீண்டும் மீண்டும் நினைவிற்கு வந்ததில் செய்வதறியாது தவித்தான்.

அப்பொழுதும் வெட்கமில்லாமல் மனைவியின் ஆசைப் பார்வைக்காவும், வார்த்தைகளுக்காகவும் ஏங்கிய மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் மனதிற்குள் துடித்தான்.

ஒட்டுமொத்தமாக அனைத்துமே கசந்து போயிற்று.

எதுவுமே பிடிக்கவில்லை.

யாரையுமே.

தன்னுடைய அனு ஏன் இப்படியாகிவிட்டாளென்று தனக்குத்தானே எப்பொழுதும் போலக் கேட்டுக் கொண்டான்.

மீண்டும்.

மீண்டும் மீண்டும்.

ஆனால் பதில் தான் கிடைத்திருக்கவில்லை.

மனைவியின் காதல் பார்வைக்காகவும், அவளுடைய இதமான அன்பிற்காகவும் ஏங்கிய மனதை ஒருநிலைப் படுத்திக் கொள்ள முடியாமல் ஏதேதோ நினைவுகளிலும், கற்பனைகளிலுமாகத் தன்னைத் தானே வருத்திக் கொண்டான்.

கால் போன போக்கில் எங்கெங்கோ சுற்றித் திரிந்து விட்டு மீண்டும் அவன் வீடு வந்து சேர்ந்த போது நடு ஜாமம் ஆகியிருந்தது.

வந்தவன் கபடமறியாத சிறு குழந்தை போலத் தூங்கிக் கொண்டிருந்த மனைவியைக் கண்கொட்டாமல் ஆசை தீரப் பார்த்தான்.

அப்படியே அள்ளி அணைத்துத் தனது மார்போடு இறுக்கிக் கொள்ள வேண்டும் போலத் துடித்த மனதை அரும்பாடு பட்டுக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

வெகுளித்தனமான பால் முகம்.

இதில் பொய் இருக்குமா.



ம்கூம்.

வாய்ப்பு குறைவு தான்.

ஆனாலும்...

முட்டாள்த்தனமாக எண்ணத் தொடங்கியிருந்த மனதை ஒரு தட்டுத்தட்டி அடக்கியவன், அடுத்த வினாடி குளிக்கச் சென்றிருந்தான்.

அப்படியே பல் துலக்கி விட்டு வந்து படுக்கையில் விழுந்தவன் தான்.

மீண்டும் அவன் கண் விழித்துப் பார்த்த போது நன்கு விடிந்திருந்தது.

படுக்கையை விட்டு இறங்கியவன், சென்று காலைக் கடன்களை முடித்து விட்டு வந்தான்.

அப்படி வந்தவனுக்கு, அங்கு டேபிளில் பேப்பர் வெயிட்டிற்கு அடியில் வைக்கப்பட்டிருந்த வெள்ளைக் காகிதம் கண்களில் பட்டது.

ஏதோ வித்யாசமாகத் தெரிய சென்று எடுத்துப் பார்த்தான்.

மனைவி எழுதியிருக்க, வேகமாகப் படித்தான்.

படித்து முடித்தவன், கோபத்திலும் எரிச்சலிலுமாக அந்தக் காகிதத்தை விசிறியடித்தான்.



# 28

அனுரேகா எழுதியிருந்தது இதுதான்.

'இனியும் உங்கள் முன் நடமாடி உங்களுடைய நிம்மதியைக் கெடுக்க நான் விரும்பவில்லை, நீங்கள் நிம்மதியாக இருங்கள்,

ஏன் சந்தோஷமாகவும், சுதந்திரமாகவும் கூட,

இன்று நீங்கள் ஒரு வேலையாகக் கிளம்பச் சொல்லியிருக்கும் டிரைவருடன் நான் ஊருக்குப் போகிறேன்.

ஊரில் நம் இரு குடும்பங்களுக்குமே இரவே நான் வருவதாக அழைத்துச் சொல்லி விட்டேன்.

எப்பொழுதோ ஒருமுறை நீங்கள் சொன்னதை இப்பொழுது நான் சொல்கிறேனென்று வருத்தப்படாதீர்கள். நம் பிரச்சனை பற்றி நான் யாரிடமும் சொல்லவும் இல்லை, சொல்லப் போவதும் இல்லை. அது யாருக்கும் தெரிய வேண்டிய அவசியம் இல்லையென்று நினைக்கிறேன். ஏனென்றால் அதைச் சொன்னால் நம் இரண்டு குடும்ப உறுப்பினர்களுமே தாங்கிக் கொள்ள மாட்டார்கள் பாருங்கள்.

உங்களுக்கு தொழிலைப் பார்க்கவே நேரம் சரியாக இருப்பதால் தனியாக இருக்கப் பிடிக்காமல் வந்திருப்பதாகக் காட்டிக் கொள்கிறேன்.

ஆனாலும்...

ஆனாலும் எனக்குப் புரியவில்லை நிகில்.

உங்களுக்காக, உங்களின் அன்பிற்காக எவ்வளவு ஏங்குகிறேனென்று வார்த்தைகளாகச் சொல்ல எனக்குத் தெரியவில்லை.

என்னை ஏன் வெறுக்கிறீர்கள்.



அப்படி நான் செய்த தவறுதான் என்ன.

அப்படியே ஏதாவது தவறு செய்திருக்கிறேன் என்றாலும் அது மன்னிக்கக் கூடிய அளவு சிறிய தவறு இல்லையோ.

ஒன்றுமே புரியவில்லையே.

யோசிக்க யோசிக்கப் பைத்தியமே பிடித்து விடும் போலிருக்கிறதே,

ஆரம்பத்தில் ஒரு பொய்யைச் சொன்னது தவிர (ஏன் அதைக் கூட மனதறிந்து செய்யவில்லை) மனதறிந்து வேறு எந்தத் தவறுமே செய்திராதபோது எனக்கு எதற்கு இவ்வளவு பெரிய தண்டனை.

ஒருவேளை அதற்குத்தான் இப்பொழுதும் தண்டித்துக் கொண்டிருக்கிறீர்களா?

கடவுளே ஏற்கனவே எத்தனை எத்தனையோ முறை வருந்தியது போல இப்பொழுதும் அதற்காக வருந்துகிறேன்.

மனதளவில் துடிக்கிறேன்.

ஏன் இனியும் எத்தனை முறை வேண்டுமானாலும்,

அதற்காக என்னை ஒரேயடியாக வெறுத்து ஒதுக்கி விடாதீர்கள் நிகில்.

உங்களைப் பிரிந்து என்னால் இருக்கவே முடியாது.

ஏன் அப்படியொரு நிலையை என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை.

ஆனாலும் உங்களுடைய நிம்மதிக்காக நெஞ்சில் உங்களையும், வயிற்றில் உங்கள் சிசுவையும் சுமந்து கொண்டு கிளம்புகிறேன்.

என்னுடைய பழைய நிகிலுக்காக ஆசையுடனும், ஆவலுடனும் ஒவ்வொரு வினாடியும் காத்திருப்பேன்.

இப்படிக்கு உயிருக்கும் மேலாக உங்களை நேசிக்கும் உங்கள் மனைவி அனுரேகா' என்றிருந்தது.

சரிதான் இந்த உருக்கத்திற்கெல்லாம் ஒன்றும் குறைவில்லை என்று நினைத்தவனால் ஏனோ தொடர்ந்து அதே போல எண்ண முடிந்திருக்கவில்லை.

உள்ளொன்றை வைத்துக் கொண்டு பேசுபவளால் இப்படித் தெளிந்த நீரோடை போல அனைத்தையுமே சொல்ல முடியுமா? என்றிருந்தது.



# 29

அனுரேகா ஊருக்குக் கிளம்பிச் சென்றும் இரண்டு மாதங்களுக்கும் மேலேயே ஆகி விட்டிருந்தன.

மனைவியில்லாமல் வாழ்க்கையே வெறுமையாகி விட்டதைப் போல உணரத் தொடங்கியிருந்தான் நிகிலேஷ்.

எதன் மீதும் உற்சாகம் வர மறுத்தது,

யாரையும் பார்க்கவும் பிடிக்காமல் வீடு அது விட்டால் அலுவலகம் என தனது வட்டத்தைச் சுருக்கிக் கொண்டான்.

தொழிலில் தலைக்கு மேல் வேலையிருப்பதால் நகரக் கூட முடியவில்லையென்று ஊருக்குச் செல்வதையும் தள்ளிப் போட்டுக் கொண்டே வந்தான்.



அது தான் உண்மையாகவும் இருந்தது.

ஆனாலும் அதை மற்றவர்களும் நம்ப வேண்டுமே.

ஏன் இப்பொழுதெல்லாம் அப்படியொரு காரணத்தைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள நினைப்பது அவனுக்கே ஒரு மாதிரியாக இருந்தது.

அதோடு மனமிருந்தால் மார்க்கமுண்டு என்பதைப் போல, தான் நினைத்திருந்தால் இந்த இரண்டு மாதங்களில் எத்தனை முறை சென்று வந்திருக்கலாமென்றும் எண்ணாதிருக்க முடியவில்லை.

எல்லாவற்றிற்கும் மேலாக நாளுக்கு நாள் மனைவியின் நினைவுகள் தன்னை அதிகம் துன்புறுத்துவதை, ஏன் அவளை உடனே பார்த்தாக வேண்டும் போலத் துடித்த மனதைக் கட்டுப்படுத்திக் கொள்ள சற்று சிரமப்பட்டுத் தான் போனான்.

ஏன் போகப் போக அதுவும் முடியாதென்றே தோன்றியது.

அதிலும் இப்பொழுதெல்லாம் மனைவியை நினைக்க நேர்ந்தாலே மனம் தன் வசம் இல்லாது போய் விடுவதையும், படபடக்கத் தொடங்கி விடுவதையும் வெளிப்படையாகவே உணர முடிந்தது.

வழக்கத்தை விடவும் நேரத்திலேயே அன்று அலுவலகத்தில் வேலை முடிந்துவிட, சரிதான் நித்யாதான் நீண்ட நாட்களாகத் தன்னை அவளுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டிருக்கிறாளே சென்று பார்த்து விட்டுப் பிறகு வீட்டுக்குப் போய்க் கொள்ளலாம் என்று கிளம்பினான்.

ஏனோ முன்பு போல இல்லாமல் இப்பொழுதெல்லாம் நித்யாவைத் தவிர்த்து விடவே மனம் விரும்பியது.

அவளிடம் இயல்பாகப் பேச முடியாமல் எதுவோ தடுத்தது.

ஏதோ செயற்கையாக, ஒட்டாமல் நடந்து கொள்வதைப் போல அவளுடைய செய்கைகள் இருப்பது புரிந்தது.

ஆனாலும் அது என்னவென்று தான் தெரிந்திருக்க வில்லை.

சரிதான்.

அவளைப் பற்றி எண்ண நேர்ந்தாலே போதுமென்று முற்றுப்புள்ளி வைத்து விடத் துடித்த மனம் அதைத் தெரிந்து கொள்ளவும் விழையவில்லை.

நித்யாவைப் பொறுத்தவரை அவள் எப்படி இருந் தாலும், ஏன் எந்த மாதிரி நடந்து கொண்டாலும் அல்லது அவள் எப்படிப் போனாலும் அது தனக்கு அனாவசியம் என்று ஒதுக்கி விட முடிந்தது.

கிட்டத்தட்ட தன்னுடைய வீட்டின் அளவே இருந்த நித்யாவின் வீட்டை அடைந்தவன், செக்யூரிட்டி கேட்டைத் திறந்து விடக் காரை உள்ளே விட்டிருந்தான்.

காலையில் முடிந்தால் நான் மாலை வீட்டிற்கு வரு கிறேனென்று அழைத்துச் சொல்லியிருந்தான் என்பதால் காரை பார்க் செய்து விட்டு வீட்டின் படியேறினான்.

ஏன் அடுத்த வினாடி வீட்டிற்குள்ளும் அதாவது வரவேற்பறைக்கும் வந்திருந்தான்.

அப்படி வந்திருந்தவன் நித்யா என்று அழைக்கவும் வாயைத் திறந்திருந்தான்.

ஆனால் சரியாக அதே வினாடியில் தனது மனைவி அனுரேகாவின் பெயரை உள்ளேயிருந்த நித்யா



உச்சரித்துக் கொண்டிருக்க அப்படியே நின்று விட்டிருந் தான்.

தனது மனைவியின் பெயரைச் சொல்லும் போது நித்யாவின் குரலில் ஏன் அவ்வளவு குரோதம், பொறாமை, ஏளனம்...

ஏன் இன்னும் கூட....

அப்படியே தொடர்ந்து நித்யா பேசிக் கொண்டே போக, அதை முழுமையாகக் கேட்க நேர்ந்ததில் அதே இடத்தில் கால்கள் வேரோடி விட்டாற் போல உறைந்து போய் நின்று விட்டிருந்தான் நிகிலேஷ்.

அப்படி அவள் தொலைபேசியில் எதிர்முனையி லிருக்கும் யாருடனோ பேசியதும் இதைத்தான்.

அதிலும் அந்தக் குரலில் தான் எவ்வளவு ஆக்ரோஷம், அவள் பேசியதும் இதுதான்.

"ஆமாம் வினய், இப்ப கணவன் மனைவி ரெண்டு பேரும் பிரிஞ்சு தான் இருக்காங்க. ஏன் இனிமேல் சேந்து வாழ்வாங்கன்ற நம்பிக்கை எனக்கில்ல.

சரிதான் அதுதான நமக்கும் வேணும்.

என்னதான் அந்த அனுவ நீ ஒன் ஸைடா லவ் பண்ணி யிருந்தாலும், ஏன் உன்ன யாருன்னு கூட அவளுக்குத் தெரியாதுன்னு நீயே சொன்னாலும் அது எல்லாத் துக்குமே காரணம் அந்த அனுரேகாவோட திமிர்தான?

அதனால்தான அவ திமிர அடக்கியே ஆகணும்னு அப்பிடியெல்லாம் செஞ்சேன். அதுவும் அவகிட்ட அவ புருஷனப் பத்தி எங்கூட இணைச்சு தப்புத் தப்பா

என்னவெல்லாம் சொன்னேன் தெரியுமா? அதுவும் எத்தன எத்தன தடவ,

ம்கூம், பலன் தான் பூஜ்யமா இருந்தது.

நான் சொல்றதையெல்லாம் காது குடுத்துக் கூடக் கேக்க மாட்டேங்கறான்னாப் பாரேன். அவ புருஷன் மேல அவளுக்கு நம்பிக்கையிருக்காம், அது மட்டுமா விட்டா என்னக் கொன்னே போட்ற அளவுக்கு வெறியா நடந்துக்கிட்டா கடைசியா தொடர்ந்து இதே மாதிரி பேசிட்டிருந்தா வீட்டுக்கே வரக் கூடாதுன்னு சொல் லிட்டா வினய்.

ஏன் அதுக்கும் மேல நிகில் கூட அவங்க வீட்டுக்குப் போனப்பவும் பேசக்கூட இல்ல, இனிமேல் இந்த மாதிரி பேசிட்டிருந்தா அப்புறம் நடக்கறதே வேறன்னு மிரட்டல் வேற. எம் புருஷன் நல்லவர் ஆயிரத்துல ஏன் கோடில ஒரு பங்காக் கூட நீ சொல்றத நம்ப மாட்டேன்னு முகத்துல உமிழாத குறையா எச்சரிக்கை வேற,

சரிதான் போடின்னு வந்துட்டேன்.

ஆமாம் அந்தக் கதைய ஏன் கேக்கற. பொண்ணாட்டி கிட்ட அதாவது அந்த அனுரேகா கிட்ட சொன்ன மாதிரியே நிகிலேஷ் கிட்டயும் அவனோட மனைவியப் பத்தித் தப்புத் தப்பா அதுதான் உங்கூட இணைச்சு தான் நல்லா ஏத்திவிட்டேன். அவன் மனைவி, மாதிரியில்லாம நம்பிட்ட மாதிரி தான் தெரிஞ்சது,

ஆனாலும் அழுத்தக்காரன் அத வெளிய காட்டிக்கல,

அப்பிடி நான் சொன்னதுக்கப்புறமே அவங்க ரெண்டு பேருக்குள்ளயும் விரிசல் ஆரம்பமாயிடுச்சு.



அதுவும் என்னை வேற விடாம தினமும் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போக ஆரம்பிச்சுட்டான் அந்த நிகிலேஷ்.

அந்த அனுரேகா ஊருக்குத் தொலைஞ்சதுலிருந்து தான் எனக்கும் விடுதலை, கொஞ்சம் கண்டுக்காம விட்டான்.

எப்பிடிப் பாத்தாலும் பொண்ணுங்க தான் எப்பவும் கிரேட் வினய்.

அவ புருஷனப் பத்தி ஏன் என்னவெல்லாம் பொய் சொல்லியும் கூட அந்த அனுரேகா அதக் கொஞ்சமும் நம்பல பாரு.

ஆனா உங்க ஆண் இனமே வேஸ்ட்ப்பா,

அழகா இருக்காங்கற ஒரே காரணத்துக்காக உன்ன யாருன்னு கூடத் தெரியாத அனுரேகாவ நீ காதலிச்சுட்டு அவளுக்கு தானா அமைஞ்சுட்ட நல்ல வாழ்க்கையைத் தாங்கிக்க முடியாம நீ பொறாமைப் பட்றதும்,

என்னதான் நான் ஃப்ரண்ட்னாலும் நான் சொல்றது உண்மையா இருக்குமான்னு கொஞ்சம் கூட யோசிக்காம அந்த நிகிலேஷ் தன் மனைவி மேல சந்தேகப்பட்டு அனுரேகாவ அவ அம்மா வீட்டுக்கு அனுப்பினதும்,

உங்க வர்க்கத்த நினச்சாலே எனக்கு சிரிப்பா வருதுடா.

ஆமான்டா அப்பிடிதான் சொல்வேன், செய்யறத செய்...''

விட்டால் அப்படியே போய் அந்த நித்யாவின் கழுத்தை நெறித்து விட வேண்டும் போலத் தோன்றி

யிருந்த கோபத்தை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டு வெளியே வந்திருந்தான் நிகிலேஷ்.

ஏன் அரும்பாடுபட்டு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டானென்று தான் சொல்ல வேண்டும்.

அந்த நேரத்தில் அவளைப் பார்த்தால் உண்மையிலே கோபத்தில் எதையாவது செய்து விடுவோமோ என்று தான் நிகிலேஷ் கிளம்பியிருந்ததும்,

சை என்ன பெண்ணிவள்,

பெண்ணினத்தைப் பற்றிப் பெருமையாகப் பேசும் முகரையைப் பார்.

இப்படிக்கூட இருப்பார்களா.

அதுவும் தான் எப்படி அவளுடைய சுயரூபத்தைக் கூடக் கண்டு கொள்ள முடியாமல் இவ்வளவு இடம் கொடுத்தோம்.

வரட்டும்,

ஏன் இனி அவளுடைய முகத்திலேயே விழிக்கக் கூடாது.

சை எந்த மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு ப்படியெல்லாம்,

ஒரு குடும்பத்தை அதுவும் மனதார நம்பிய தோழ னின் குடும்பத்தைக் காரணமே இல்லாமல் பிய்த் தெறிந்த பாதகி,

நம்பிக்கை துரோகி,

ஆனால்...



ஆனால் அவள் அந்த நித்யா சொன்னதைப் போலத் தான் ஒன்றும் மனைவியை சந்தேகப்படவில்லையே.

மற்றவர்களிடம் சொல்லிவிட்டுத் தன்னிடம் எப்படி மறைக்கலாம் என்ற ஆதங்கம் தானே.

பொய் சொல்லி விட்டாளே என்ற கோபம் தானே.

தனது உயிருக்குயிரான மனைவியின் மனம் தனக்கு மட்டுமே சொந்தமில்லையோ என்கிற பொறாமை தானே.

இன்னொருவன், அது எவனாக இருந்தாலும் எப்படி தன் மனைவியைப் பற்றி எண்ணலாமென்ற வெறி தானே.

மற்றபடி மனைவியை அவளைப் போலவே தானும் ஒன்றும் சந்தேகப்பட்டு விடவில்லையே.

ஏன் அந்த ஒரு தவறை மட்டுமே அல்லவா தான் செய்யாமல் இருந்திருக்கறோம்.

ஆனால் அதையும் கூட மனைவி அப்படி யாரிடமும் எதையும் சொல்லியிருக்க மாட்டாளென்ற நம்பிக்கை தனக்கும் இருந்திருக்க வேண்டுமல்லவா,

யார் என்ன சொல்லியிருந்தாலும் அதைத் தான் காதில் கூட வாங்கிக் கொண்டிருக்கக் கூடாதல்லவா.

எவ்வளவு பெரிய பாதகத்தைச் செய்து விட்டேன்.

பால் போன்ற வெண்மையான வெகுளித்தனமான என் அனுவை எப்படியெல்லாம் திட்டி விட்டேன்.

என்னவெல்லாம் சொல்லி விட்டேன்.

இனி எந்த முகத்தை வைத்துக் கொண்டு போய் மனைவியின் முகத்தில் விழிப்பது.

அதுவும் எந்த மாதிரி நிலையில் இருப்பவளை சந்தேகப்பட்டு விட்டேன்,

நினைக்க நினைக்க மனம் ஆற மறுத்தது நிகிலேஷிற்கு.

தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல செய்வதறியாது தவித்துப் போனான்.

சரிதான்,

நம்பக் கூடாதவளை நம்பி அதிக இடம் கொடுத்து விட்ட பாவத்திற்கு தனக்கு இது வேண்டும் தான்.

ஏன் இன்னும் வேண்டும்.

# 30



"அனு."

"அத்தை."

என்ன பண்ணிட்டிருக்க?

"சும்மா தான் அத்..."

தனது அத்தைக்கு பதில் சொல்லிக் கொண்டே அந்த அறைக்கு வந்திருந்தவள் அதற்குப் பிறகு தான் அங்கு நின்றிருந்த தனது கணவனைக் கண்டாள்.

அந்த வினாடியில் கணவன் மனைவி இருவருக்குமே பேசத் தோன்றியிருக்கவில்லை.

ஆயிரமாயிரம் வார்த்தைகளை அவர்களுடைய கண்கள் பேசிக் கொண்டன.



மௌனமே அங்கு மொழியாகியிருந்தது.

அப்பொழுதுதான். அது உறைத்திருந்தது அனுரேகாவிற்கு.

கணவனின் கண்களில் எப்பொழுதும் இருக்கும் கோபம் இப்பொழுது இல்லாததைக் கண்டாள்.

ஆனால் அதற்கு பதிலாக அதில் ஏன் இவ்வளவு வேதனை, வருத்தம்...

ஏன் இன்னும்...

"வாப்பா."

தாயின் குரலில் தான் நடப்பிற்கு வந்திருந்தான் நிகிலேஷ்.

ஏன் அனுரேகாவும்,

"வரலாம்மா."

"இப்பதான் வழி தெரிஞ்சதா? உங்கிட்டப் பேசவே கூடாதுன்னு இருந்தேன்டா. ஆனா அப்பிடிக் கோபப்பட வேண்டியவங்களே இவ்வளவு சாந்தமா இருக்கும்போது எனக்கு மட்டும் என்ன வந்தது. முதல்ல எனக்கு அதுக்கெல்லாம் என்ன உரிமையிருக்கு..."

"போதுமே அம்..."

"சரிதான், உன்னக் கேள்வி கேக்க நான் யாரு? என்னப்பா அப்படித்தான?"

தாயின் கேள்வியில் அவரைப் பார்த்தவன் பிறகு,

"இப்படியே நீங்க எல்லாரும் சொல்லிச் சொல்லி தான் என்ன மேல தூக்கி விட்டுட்டீங்கமா. எனக்கு மெத்தனமும் அதிகமாயிடுச்சு..."

''ஏம்பா இப்படி சொல்ற?''

''ஆமாம்மா, நாந்தாங்கற திமிர்தான் என் கண்ண மறைச்சு என்ன என்னென்னவோ செய்ய வெச்சுடுச்சு. கொஞ்சம் கோபத்த விட்டுட்டு யோசித்திருந்தாக் கூடப் போதும்...''

இதுவரை தான் அறிந்திராத வகையில் மகனின் குரலில் தெரிந்த வருத்தம் தாங்கிக் கொள்ள முடியாத தாய் இருக்க, ''அட நான் ஏதோ சும்மா கேட்டேன்டா. அங்க பாரு நீ வந்ததுல உன் பொண்டாட்டி முகத்துல நூறு வாட் பல்ப் போட்ட மாதிரி வெளிச்சத்த'' என்று இயல்பாகப் பேச முனைந்தார் விசாலாட்சி.

கணவனின் வருத்தம் புரிய நடப்பிற்கு வந்திருந்த அனுரேகா ''வாங்க'' என்று தானும் கணவனை வரவேற்றாள்.

மனைவியின் நன்கு மேடிட்டுத் தெரிந்த வயிறும், அதற்கு நேர் மாறாக மெலிந்து போயிருந்த தேகமும் அப்போதைய அவளுடைய நிலையைத் தெளிவாகக் காட்டியது.

''எப்பிடியிருக்கடா?''

''சரி பேசிட்டிருங்க. டிபன் எடுத்துட்டு வர்றேன்'' என்று விசாலாட்சி நகர, ''நான் நல்லார்க்கேன் நிகில் நீங்க எப்படியிருக்கீங்க?'' என்று கேட்டிருந்தாள் அனுரேகா.

அதைக் கேட்பதற்குள் அவளுடைய கண்கள் கலங்கி விட்டிருந்ததோடு குரலும் கரகரத்து விட்டிருக்க, ''அனு...'' என்று மனைவியை நோக்கி ஒரு எட்டு எடுத்து வைத்திருந்தான் நிகிலேஷ்.



ஆனாலும் மீண்டும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவன் ''என்ன மன்னிப்பியா அனு?'' என்று கேட்டான்.

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதீங்க நிகில்...''

''யாரு நானா? உன் பெருந்தன்மைக்கு முன்னாடி நானெல்லாம் தூசுமா'' என்றவன் முதல் நாள் நித்யா பேசக் கேட்க நேர்ந்ததனைத்தையும் மிகுந்த வேதனையுடன் சொன்னான்.

சில வினாடிகள் அங்கு அமைதி நிலவியது, முதலில் பேசியது அனுரேகா.

''அதெல்லாம் எனக்குத் துளிகூட வருத்தமில்ல நிகில், என்ன அவளோட சுயரூபம் தெரிஞ்சுகிட்டதுல நீங்க எவ்வளவு வேதனைப்பட்டீங்கன்றத நினைச்சா மட்டும் தாங்க முடியல. ஆனா...'',

''என்னடா?''

''இப்பக்கூட அந்த நித்யா பேசினதுல உண்மை தெரிஞ்சு தான் வந்திருக்கீங்க இல்லையா?''

மனைவியின் கேள்வியில் மனதளவில் துடித்துப் போனான் நிகிலேஷ்.

என்ன பதில் சொல்வதென்று தெரிந்திருக்கவில்லை.

''அப்ப இப்பவும் எனக்காக நீங்க வரல இல்லையா?''

''அனு...''

''என்னப் பிரிஞ்சு இத்தனை நாள் எப்பிடி நிகில் உங்களால இருக்க முடிஞ்சுது? அப்ப எம்மேல உங்களுக்கு அந்த அளவுக்குக் கோபம் இல்லையா?''

''எவளோ ஒரு நித்யா பேசினதெல்லாம் போகட்டும், அதயெல்லாம் நான் ஒரு பொருட்டாக் கூட எடுத் துக்கல. கேவலம் அவளுக்கெல்லாம் முக்கியத்துவம் கொடுத்துப் பேசறதோ, வருத்தப்பட்றதோ கூட முட்டாள்த்தனம், அதனால அத நீங்களும் மறந்துடுங்க.''

''என் வேதனையெல்லாம் உங்களால எப்பிடி ஒண்ணுமே இல்லாத, உப்புப் பொறாத விஷயத்துக்கு இத்தனை நாள் கோபத்த இழுத்து வெச்சிருக்க முடிஞ்சது அப்பிடிங்கறதுதான்.''

மனைவியின் கேள்வியில் பதில் சொல்ல முடியாமல் நின்று விட்டிருந்தான் நிகிலேஷ்.

''என்ன நிகில்...''

''அனு...''

''வேண்டாம் நிகில், தயவு செஞ்சு எதுவும் சொல்லி இனியும்... என்னால முடியலயே...'' என்று வேதனைப் படும் மனைவியை செய்வதறியாது பார்த்தபடி அப் படியே நின்று விட்டிருந்தான்.

அப்படிக் கேட்பவர்களுக்கு பதில் சொல்ல முடியாமல் அவன் நிற்க நேர்ந்தது வாழ்க்கையிலேயே அதுதான் முதல் முறையாகவும் இருக்க, அதை அனுரேகாவாலும் புரிந்து கொள்ள முடிந்தது,

உடனே ''சரிதான் சிரமப்படாதீர்கள்.''

''நடந்தனைத்தையும் மறந்து விடுங்கள்'' என்று சொல்லி விட்டிருந்தாள்.

''இந்தாங்க டிபன் எடுத்துக்கோங்க'' என்று விசாலாட் சியும் வந்து விட்டிருக்க, அதற்குப் பிறகு இரவு வரை



மீண்டும் இவருக்குமே தனித்துப் பேசும் வாய்ப்பு கிடைத்திருக்கவில்லை.

# 31



மனைவியின் கேள்வியே மனதைக் குடைந்து கொண்டிருக்க, எதையும் யோசிக்கக் கூடத் தோன்றாது அப்படியே அமர்ந்து விட்டிருந்தான் நிகிலேஷ்.

ஏதோ அரவம் கேட்கத் திரும்பிப் பார்த்தான்.

மனைவி வருவது தெரிந்தது.

''பால் எடுத்துக்கோங்க.''

''நீ ஏம்மா சிரமப்பட்றே?''

''பாருங்க...''

''என்னடா?''

''நீங்க இப்ப என் பழைய நிகில் இல்ல, இல்லன்னா இதக்கூட சிரமம்னு சொல்லுவீங்களா?''

''அனு...''

''பரவாயில்ல நிகில், நீங்க சிரமப்படாதீங்க. விட்ருங்க...''

மனைவியின் வார்த்தைகளில் அந்த நேரத்திலும் சிரித்து விட்டிருந்தான் நிகிலேஷ்.

விரக்தியில்தான்.

புரியாமல் பார்த்த மனைவியிடம் ''இந்த வார்த்தைகள நான் சொன்னேன்னு நீ முதல்ல சில முறை கோபப் பட்டது உனக்கு ஞாபகமிருக்கா அனு?'' என்று கேட் டான்.

''எப்படி மறக்க முடியும்?'' என்று கேட்டவளுக்கு ஏதோ புரிவதைப் போலத்தான் இருந்தது.

''அப்ப நீ இருந்த நிலைல தான் அனு இப்ப நான் இருக்கேன். நான் ஒண்ணும் சிரமப்படல. மனசார பிடிச்சு தான்...''

கணவனின் அந்த முயற்சியில் சிரிப்பு வந்து விட் டிருக்க, புரியாமல் பார்த்தவனிடம் ''அத நம்ப முடிஞ்சா எவ்வளவோ நல்லார்க்கும்'' என்றிருந்தாள்.

மனைவியின் வார்த்தைகள் புரிய சில வினாடிகள் ஆகியிருந்தன நிகிலேஷிற்கு,

''அனு...''

அடுத்த வினாடி அவள் பேசும் நிலையில் இருக்க வில்லை.

கணவனின் கைகளில் பச்சை மண்ணாகிப் போயி ருந்தாள்.